# முகவுரை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப வரவேண்டிய வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை அறிந்து ஏற்றுக் கொள்ளும் நற்பேற்றை நமக்கு அல்லாஹ் வழங்கியிருப்பது அவன் நம்மீது செய்துள்ள அளவற்ற அருளும் நன்மையுமாகும். அல்ஹம்துலில்லாஹி அலா தாலிக்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து பைஅத் வாங்குவதற்கான கட்டளை கிடைத்ததும் அவர்கள் பைஅத் செய்பவர்களுக்காக இஷ்திஹார் தக்மீலே தப்லீக் என்ற பெயரில் ஒரு பிரசுரத்தை 1889 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் தேதி வெளியிட்டு அதில் பைஅத்திற்கான பத்து நிபந்தனைகளை குறிப்பிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்துள்ள ஒவ்வொருவரும் இந்த நிபந்தனைகளை செயல்படுத்துவதற்காக உடன்படிக்கை செய்து கொள்கின்றனர். அவற்றை செயல்படுத்த முயற்சி செய்வது நம் எல்லாருக்கும் மிகவும் அவசியமானதாகும்.

ஐந்தாவது கலீ:பத்துல் மஸீஹான ஹஸ்ரத் அமீருல் மூ:மினீன் **மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் சாஹிப் அய்யதஹுல்லாஹுதஆலா பி நஸ்ரிஹில் அஸீஸ்** அவர்கள் நமது வழிகாட்டலுக்காக எளிதாக நாம் புரியும் வகையில் தமது பல்வேறு சொற்பொழிவுகளிலும் ஜுமுஆ குத்பாக்களிலும் திருக்குர்ஆன், நபிமொழிகள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கட்டளைகள் ஆகியவற்றின் ஒளியில் இந்த பைஅத் நிபந்தனைகளுக்கு மிகச்சிறந்த முறையில் விளக்கமளித்துள்ளார்கள். ஹுஸூர் அவர்கள் 2003 ஆம் ஆண்டு ஜுலை 27 ஆம் தேதியன்று நடைபெற்ற இங்கிலாந்தின் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்திய முடிவுரையில் பைஅத்தின் பத்து நிபந்தனைகளில் முதல் மூன்று நிபந்தனைகளை விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். இவ்வாறு இந்த தொடர் ஆரம்பமானது. 2003 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 ஆம் தேதியன்று ஜெர்மனியில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டின் முடிவுரையில் ஹுஸூர் அவர்கள் பைஅத்தின் நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது நிபந்தனைகளை விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். இதற்குப் பிறகு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதி ஜெர்மனியில் :பிராங்:பொர்ட்டிலுள்ள சுவேர்ட ஹாலே என்ற இடத்தில் நிகழ்த்திய ஜுமுஆ குத்பாவில் பைஅத்தின் ஏழாவது மற்றும் எட்டாவது நிபந்தனைகளை விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதி இலண்டனிலுள்ள :பஸ்ல் பள்ளிவாயிலில் நிகழ்த்திய ஜுமுஆ குத்பாவில் பைஅத்தின் ஒன்பதாவது நிபந்தனை பற்றியும், 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் தேதி இலண்டனிலுள்ள :பஸ்ல் பள்ளிவாயிலில் நிகழ்த்திய ஜுமுஆ குத்பாவில் பைஅத்தின் 10–வது நிபந்தனை பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

இந்த சொற்பொழிவுகளையும் குத்பாக்களையும் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பி நஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இரண்டாவது முறையாக பார்வையிட்ட பிறகு நாங்கள் சகோதரர்களின் பலனுக்காக அவற்றை புத்தக வடிவில் வெளியிடும் நற்பேற்றைப் பெறுகிறோம். நாம் இந்த நிபந்தனைகளை சரியான முறையில் புரிவதற்கும் அவற்றை சிறந்த முறையில் செயல்படுத்துவதற்கும் நமக்கு நல்வாய்ப்பை வழங்க நாம் அல்லாஹ்விடம் துஆ செய்கின்றோம். மேலும் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விரும்பியது போல் நாம் உண்மையான அஹ்மதி ஆவதற்கான நற்பேற்றை வழங்குவானாக. ஆமீன்.

இந்த நூலில் மல்:பூஸாத்திலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அந்த மேற்கோள்களில் எவற்றுடன் புதிய பதிப்பு என எழுதப்படவில்லையோ அவை ரூஹானி கஸாயினிலிருந்தும் 1984 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வெளியிடப்பட்ட மல்:பூஸாத்தின் பதிப்பில் இருந்தும் எடுக்கப்பட்டவையாகும். புதிய பதிப்பு என்பது ஐந்து பாகங்களாக வெளியிடப்பட்ட மல்:பூஸாத்தின் பதிப்பாகும்.

எளியவன்
**முனீருத்தீன் –ம்ஸ்**
கூடுதல் வகீலுத் தஸ்னீ:ப்
15 ஜுலை 2004

# பைஅத் நிபந்தனைகள்

1. நான் மரணமடைகின்ற வரை ஷிர்க் என்னும் இறைவனுக்கு இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்வேன்.

2. பொய், விபச்சாரம், தீய பார்வை, கட்டுப்படாமை, தீமை, அநீதி இழைத்தல், நம்பிக்கை துரோகம் செய்தல், குழப்பம் விளைவித்தல், கிளர்ச்சி செய்தல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வேன். மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை மேலோங்க விடாது அடக்கிக் கொள்வேன்.

3. இறைவனின் கட்டளையின்படியும், அவனுடைய தூதரின் கட்டளையின்படியும் ஐந்து வேளைத் தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன். என்னால் இயன்றவரை தஹஜ்ஜுத் என்னும் நடு இரவுத் தொழுகை, முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது சலவாத் ஓதுதல், தினமும் எனது பாவங்களுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கேட்டல் ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபடுவேன். இறைவனின் பேருதவிகளை நெஞ்சார நினைவில் கொண்டு அவனைத் தினமும் புகழ்ந்து வருவேன்.

4. அல்லாஹ்வின் அனைத்து படைப்பினங்களுக்கு பொதுவாகவும் முஸ்லிம்களுக்கு குறிப்பாகவும் எனது மனஉணர்ச்சியின் காரணமாக நாவினாலோ, கைகளினாலோ, வேறு வகையாலோ எவ்விதமான தகாத தொல்லையும் கொடுக்கமாட்டேன்.

5. துக்கம், மகிழ்ச்சி, பணக்கஷ்டம், பணவசதி, இறைவனிடமிருந்து கிடைக்கும் அருள், அவனால் தரப்படும் சோதனை ஆகிய எந்த நிலையிலும் இறைவனிடம் மனங்கோணாமல் பற்றுள்ளவனாக இருப்பேன். இறைவனின் தீர்ப்பை எந்த நிலையிலும் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வேன். அவன் வழியில் எல்லா வகையான இழிவையும் இன்னல்களையும் ஏற்கத் தயாராக இருப்பேன். எத்தகைய தொல்லைகளுக்கு ஆளானாலும் முகஞ்சுளிக்காமல் முன்னேறிச் செல்வேன்.



6. சடங்கு சம்பிரதாயங்களிலிருந்தும் மனத்தின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்வேன். திருக்குர்ஆனின் ஆட்சிக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு, இறைவனின் போதனைப்படியும் அவன் தூதரின் போதனைப்படியும் நடப்பதையே எல்லா நிலையிலும் எனது நடைமுறையாக ஆக்கிக் கொள்வேன்.

7. தற்பெருமையையும், அகம்பாவத்தையும் முற்றாக விட்டு விடுவேன். பணிவு, தன்னடக்கம், இனிய குணம், சகிப்புத்தன்மை, எளிமை இவற்றையே மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவேன்.

8. மார்க்கம், அதன் கண்ணியம், இஸ்லாத்திற்குத் தொண்டு செய்தல் ஆகியவற்றை எனது உயிர், பொருள், கண்ணியம், குழந்தைகள், உறவினர்கள் ஆகிய எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வாகக் கருதுவேன்.

9. அல்லாஹ்வின் படைப்புகளாகிய எல்லாருக்கும் தொண்டு செய்வதில் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இறைவனுக்காகவே தொடர்ந்து ஈடுபட்டிருப்பேன். அவனால் எனக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களாலும் அருள்களாலும் என்னால் முடிந்த வரை மனித குலம் பயன்பெறும் வகையில் பணியாற்றுவேன்.

10. அல்லாஹ்வுக்காக, நல்ல விசயங்களில் நான் கட்டுப்படுவேன் என இந்த எளியவனிடம் (இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம்) நான் செய்து கொள்ளும் இந்த சகோதர உடன்படிக்கையில் மரணமடையும் வரை நிலைத்திருப்பேன் என்றும் மற்றெல்லா உலகத் தொடர்புகளை விடவும் இந்த சகோதர உடன்படிக்கை மிகவும் உயர்ந்தாக இருக்கும் என்றும் நான் உறுதி கூறுகின்றேன்.

(இஷ்திஹார் தக்மீலே தப்லீக் – 12 ஜனவரி 1889)

# பைஅத் நிபந்தனைகள் மற்றும் அஹ்மதிகளின் பொறுப்புகள்

சில நண்பர்களின் கடிதங்கள் கிடைத்தன. நாங்கள் பைஅத்தைப் புதுப்பித்து விட்டோம். பைஅத் நிபந்தனைகளைப் பேணுவதாக உறுதிமொழி கூறியுள்ளோம். ஆனால் நாம் ஏற்றுக் கொண்ட பைஅத்தின் பத்து நிபந்தனைகள் யாவை என்பது எங்களுக்கு முழுமையாக தெரியவில்லை என அவர்கள் அதில் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே இன்று மாநாட்டு சந்தர்ப்பத்திலேயே இந்த தலைப்பு பற்றி கொஞ்சம் கூறுவது பொருத்தமானதும் சிறந்ததுமாகும் என உணர்கின்றேன். இது கணிசமான அளவுக்கு பெரிய தலைப்பாகும். எல்லா நிபந்தனைகளையும் இங்கு விளக்கிக் கூறுவது கடினம்தான். ஆயினும் ஒரு சில நிபந்தனைகளைப் பற்றி கொஞ்சம் விளக்கிக் கூறுவேன். பின்னர் இந்த கருத்தை குத்பாவிலோ அல்லது வேறு ஏதாவது சந்தர்ப்பத்திலோ எடுத்துரைப்பேன் – இன்சா அல்லாஹ்.

## பைஅத் என்பது என்ன?

முதலில் தெரிய வேண்டிய விசயம் பைஅத் என்பது என்ன? என்பதாகும். இதனை நபிமொழி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் மூலமாக தெளிவுபடுத்துகிறேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இந்த பைஅத் இருக்கின்றதே அதன் பொருள் உண்மையில் தன்னைத்தானே விற்றல் என்பதாகும். அதன் அருள்களும், விளைவுகளும் அந்த நிபந்தனையையே சார்ந்துள்ளது. உதாரணமாக, நிலத்தில் ஒரு விதை தூவப்படுகிறதென்றால், அதன் ஆரம்ப நிலையாவது, அது ஒரு விவசாயியின் கையால் தூவப்படுகிறது. இனி அது என்னவாகும்



என அதைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் அந்த விதை சிறந்ததாக இருக்குமென்றால், அதில் வளரக்கூடிய ஆற்றல் இருக்குமென்றால், இறையருளினாலும், அந்த விவசாயியின் முயற்சியினாலும் அது முளைத்து வருகிறது. ஒரு விதையிலிருந்து ஆயிரம் தானியங்கள் உருவாகின்றன. இவ்வாறே பைஅத் செய்த மனிதனுக்கு முதலில் பணிவையும் அடக்கத்தையும் கைக்கொள்ள வேண்டியது வருகிறது. மேலும் தனது அகந்தை, சுயநலம் ஆகியவற்றிலிருந்து விலகி இருக்க வேண்டி வருகிறது. அப்போதுதான் அது வளர்வதற்கு தகுதி வாய்ந்ததாக ஆகிறது. ஆனால் எவர் பைஅத்துடன் சுயநலத்தையும் கொண்டிருப்பாரோ அவருக்கு ஒருபோதும் அருள் கிடையாது.” (மல்ஃபூஸாத் தொகுதி 6, பக்கம் 173)

## பைஅத் என்பதன் கருத்து இறைவனிடம் வாழ்க்கையை ஒப்படைத்தலாகும்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“பைஅத் என்பதன் கருத்து இறைவனிடம் வாழ்க்கையை ஒப்படைத்தலாகும். இதன் பொருள் நாம் நமது வாழ்க்கையை இன்று அல்லாஹ்வின் கையில் விற்று விட்டோம் என்பதாகும். ஒருவர் இறைவழியில் சென்று கடைசியில் நஷ்டமடைவார் என்பது முற்றிலும் தவறாகும். உண்மையாளர் ஒருபோதும் நஷ்டமடையமாட்டார். பொய்யருக்குத்தான் நஷ்டம். எவர் பைஅத்தை மற்றும் அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கையை உலகத்திற்காக முறிப்பாரோ – எவர் உலக பயத்திற்காக மட்டும் அப்படி செய்கின்றாரோ அவரை மரண நேரத்தில் எந்தவொரு அதிகாரியும், மன்னரும் விடுவிக்க முடியாது என்பதை அவர் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும். அவர் தீர்ப்பளிப்பவர்களிலெல்லாம் சிறந்த தீர்ப்பளிப்பவனிடம் செல்ல வேண்டியதிருக்கிறது. நீ ஏன் என்னைப் பொருட்படுத்தவில்லை என அவன் அப்போது கேட்பான். எனவே வானங்கள், பூமி ஆகியவற்றின் எஜமானனாகிய இறைவன் மீது நம்பிக்கை கொள்வதும், உண்மையான பாவமன்னிப்புக் கேட்பதும் ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் அவசியமானதாகும்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 7, பக்கம் 29, 30)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த வழிகாட்டல்களிலிருந்து பைஅத் என்றால் என்ன என்பது தெளிவாகி விட்டது. நாம் எந்நிலையிலும் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பேணி அவற்றிற்கு கட்டுப்பட்டு நடப்பதுடன் நமது ஒவ்வொரு செயலும் இறைவனுடைய திருப்திக்காக இருக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டால், அது தான் பைஅத்தின் பத்து நிபந்தனைகளின் சுருக்கமாகும்.

இனி பைஅத் பற்றி பல்வேறு சொற்கள் வருகின்ற பல்வேறு ஹதீஸ்களை எடுத்து வைக்கிறேன்.

**ஆயிஸுல்லாஹ் பின் அப்தில்லாஹ் அறிவிக்கின்றார்கள்.** உபாதா பின் ஸாமித் பத்ர் போரில் கலந்து கொண்ட நபித்தோழர்களில் ஒருவராவார். மேலும் அவர்கள் 'பைஅத்தே உக்பா' -வில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ஆயிஸுல்லாஹ் பின் அப்தில்லாஹ்) அவர்களிடம் கூறியதாவது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சுற்றி தோழர்கள் அமர்ந்திருந்தபோது, அவர்களைப் பார்த்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "வாருங்கள்! நீங்கள் அல்லாஹ்வுக்கு எதனையும் இணையாக்கமாட்டீர்கள் எனவும், திருடமாட்டீர்கள் எனவும், விபச்சாரம் செய்யமாட்டீர்கள் எனவும், உங்கள் குழந்தைகளை கொலை செய்யமாட்டீர்கள் எனவும், பழிசுமத்தமாட்டீர்கள் எனவும், நன்மையான விசயங்களில் எனக்கு மாறு செய்யமாட்டீர்கள் எனவும் என்னிடம் பைஅத் செய்யுங்கள். எனவே, உங்களில் எவர் இந்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றிக் காட்டினாரோ அவருக்கு நற்கூலி கொடுப்பது அல்லாஹ்வின் பொறுப்பாகும். மேலும் எவர் இந்த உடன்படிக்கையில் கொஞ்சமாவது குறைவு செய்வாரோ அவருக்கு அதற்கான தண்டனை இவ்வுலகிலேயே கிடைத்து விட்டால், அந்த தண்டனை அவரது செயலுக்கான பரிகாரமாகி விடும். மேலும் எவர் இந்த உடன்படிக்கையில் கொஞ்சமாவது குறைவு செய்தாரோ, பின்னர் அல்லாஹ் அதனை மறைத்து விட்டால் அவருடைய விவகாரம் அல்லாஹ்வின் கையில் உள்ளது. அவன் விரும்பினால் அவருக்கு தண்டனை கொடுப்பான்; அவன் விரும்பினால் அவரை மன்னித்து விடலாம்".

(புகாரி - கிதாப் மனாகிபுல் அன்ஸார், பாபு உஃபூதில் அன்ஸாரி இலன்னபி (ஸல்) பி மக்கத்தி வபைஅத்தில் உக்பதி)



**இன்னொரு ஹதீஸ் உபாதா பின் ஸாமித் (ரலி) அறிவிக்கின்றார்கள்:**

"செழிப்பிலும், வறுமையிலும், மகிழ்ச்சியிலும், துக்கத்திலும் நாங்கள் கேட்டோம், கட்டுப்படுவோம். அதிகாரிகளுடன் நாங்கள் சண்டையிடமாட்டோம். நாங்கள் எங்கிருந்தாலும் உண்மையில் நிலைத்திருப்போம். தூற்றுபவரின் தூற்றுக்கும் அஞ்சமாட்டோம் என்ற நிபந்தனையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நாங்கள் பைஅத் செய்தோம்." (புகாரி கிதாபுல் பைஅத் பாபுல் பைஅத் அலஸ்ஸம்இ வத்தாஅத்தி)

**உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களிடம் பைஅத் வாங்கும் போது இந்த இறை வசனத்திற்கேற்ப பைஅத் வாங்குவார்கள். நபியே! நம்பிக்கை கொண்ட பெண்கள், தாங்கள் அல்லாஹ்வுக்கு எதனையும் இணையாக்கமாட்டார்; திருடமாட்டார்; விபச்சாரம் செய்யமாட்டார்; தங்கள குழந்தைகளைக் கொல்லமாட்டார்; தாங்களாகவே வேண்டுமென்று புனைந்துரைக்கும் அவதூறான எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்தமாட்டார்; நல்லவற்றில் உமக்கு மாறு செய்யமாட்டார் என்று பைஅத் (உடன்படிக்கை) செய்து கொண்டு உம்மிடம் வரும்போது, நீர் அவர்களிடம் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு, அவர்களை மன்னிக்குமாறு அல்லாஹ்விடம் வேண்டுவீராக. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனும் ஆவான்." (திருக்குர்ஆன் 60:13)

**ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பைஅத் வாங்கும் போது அவர்களின் கை தனது பெண்களைத் தவிர வேறு எந்த பெண்ணின் கையையும் தொட்டதில்லை."

(புகாரி - கிதாபுல் அஹ்காம், பாப் பைஅத்தின் நிஸா)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத் வாங்க ஆரம்பிப்பதற்கு முன்னர் நல்ல இயல்பு கொண்ட இஸ்லாத்தின் மீது இரக்க உணர்வு கொண்ட சில பெரியவர்கள் இஸ்லாம் என்ற இந்தக் கப்பலை மூழ்குவதிலிருந்து காப்பாற்றக்கூடியவர்; இஸ்லாத்திற்காக உண்மையான மனவேதனை கொண்டவர் ஒருவர் இருக்கிறார் என்றால், அது ஹஸ்ரத்

மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள்தான்; மேலும் இவர்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹும், காலத்தின் மஹ்தியும் ஆவார் என உணர்ந்தனர். அதன்படி தாங்கள் பைஅத் வாங்குங்கள் என்றும் அவர்களிடம் கூறினர். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எப்பொழுதும் **லஸ்த்து பிமஃமூரின் – நான் இறைவனால் நியமிக்கப்பட்டவன் அல்லன்** என்றே பதில் கூறி வந்தார்கள். ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீர் அப்பாஸ் அலி சாஹிப் அவர்கள் மூலமாக மவ்லவி அப்துல் காதிர் (ரலி) அவர்களுக்கு எழுதும்போது, இந்த எளியவனின் இயல்பில் தவ்ஹீதும், அல்லாஹ்விடம் தன்னை ஒப்படைத்தல் என்ற பண்பும் மேலோங்கி நிற்கிறது. ஆனால் பைஅத் பற்றி இறைவனிடமிருந்து இதுவரை எந்த ஞானமும் கிடைக்கவில்லை. எனவே செயற்கையான வழியில் காலெடுத்து வைப்பது ஆகுமானதல்ல. **ல அல்லல்லாஹ யுஹ்திஸு பஅத ஸாலிக அம்ரா** – இதற்குப் பிறகு அல்லாஹ் ஒருவேளை ஏதாவது புது விசயத்தைத் தோற்றுவிக்கலாம். மவ்லவி சாஹிப் அவர்களே! மார்க்க சகோதரத்துவத்தை அதிகமாக்க முயற்சி செய்யுங்கள். மேலும், மனத்தூய்மையுடனும் நேசம் என்ற தூய நீரூற்றினால் இந்தச் செடியை வளர்ப்பதிலும் ஈடுபடுங்கள். இந்த முறையே இன்சா அல்லாஹ் பலனுள்ளதாக இருக்கும்.

(ஹயாத்தே அஹ்மத், தொகுதி 2, எண் 2, பக்கம் 12, 13)

## அல்லாஹ்விடமிருந்து பைஅத் வாங்குவதற்கான கட்டளை

கடைசியில் 6, 7 ஆண்டுகளுக்குப் பிறகு 1888 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அதாவது, ஆரம்ப மூன்று மாதங்களில் அல்லாஹ்விடமிருந்து பைஅத் வாங்கும் கட்டளை அவர்களுக்கு வந்தது. இந்த இறைக் கட்டளை வந்த சொற்கள் இதுவாகும்.

**“இஸா அஸம்த ஃபதவக்கல் அலல்லாஹ். வஸ்னயில் ஃபுல்க்க பிஅஃயுனினா வ வஹ்யினா அல்லதீன யுபாயியூனக்க இன்னமாக யுபாயியூனல்லாஹ் யதுல்லாஹி ஃபவ்க்க அய்தீஹிம்.** (இஷ்திஹார் டிசம்பர் 1, 1888-பக்கம் 2)



பொருள் : நீர் தீர்க்கமான முடிவெடுத்து விட்டால், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பீராக. நாம் வஹீ அறிவித்தபடி நீர் நம் கண்களுக்கு முன்னால் கப்பலை உருவாக்குவீராக. உம்மிடம் பைஅத் செய்பவர்கள், அல்லாஹ்விடமே பைஅத் செய்கின்றனர். அவர்களின் கைகளுக்கு மேல் அல்லாஹ்வின் கை இருக்கிறது.”

கண்ட மக்களெல்லாம் இந்த இயக்கத்தில் நுழைவதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இயல்பு வெறுத்தது. எவர்களுடைய இயல்பிலே நன்றியுணர்வு என்ற பண்பு இருக்குமோ, குறைபாடுள்ளவர்களாக இல்லையோ அத்தகைய அருளுக்குரிய மக்கள் தான், இந்த அருளுக்குரிய இயக்கத்தில் நுழைய வேண்டும் என அவர்களின் உள்ளம் விரும்பியது. எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நல்லியல்பு கொண்டவர்களையும், நயவஞ்சகர்களையும் வேறுபடுத்திக் காட்டக்கூடிய அத்தகைய ஒரு நிகழ்வுக்காக காத்திருந்தார்கள். எனவே அல்லாஹ் ஜல்ல சானஹு தனது முழுமையான ஞானத்தாலும், கருணையாலும் அந்த நிகழ்வை அதே ஆண்டான 1888 நவம்பர் மாதத்தில் **பஷீரே அவ்வல்** அவர்களின் (இவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகன் ஆவார்) இறப்பினால் ஏற்படுத்தினான். நாட்டில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக எதிர்ப்புக்குரல் எழுந்தது. பலவீனமான நம்பிக்கை கொண்ட மக்கள் தப்பெண்ணம் கொண்டு பிரிந்து விட்டார்கள். எனவே அன்னாரின் பார்வையில் இந்த சந்தர்ப்பமே அருளுக்குரிய இந்த இயக்கத்தை தொடங்குவதற்குப் பொருத்தமானதாக ஆனது. மேலும் அவர்கள் 1888 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் தேதியில் ஒரு அறிக்கை மூலமாக பைஅத் பற்றிய பொதுவான அறிவிப்பு செய்தார்கள். சுன்னத்தான இஸ்திகாராவுக்குப் பிறகு பைஅத் செய்ய வாருங்கள் எனவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழிகாட்டி இருந்தார்கள். (இஷ்திஹார் தக்மீலே தப்லீக், 12 ஜனவரி 1889)

அதாவது முதலில் துஆ செய்யுங்கள். இஸ்திகாரா செய்யுங்கள். பின்னர் பைஅத் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

இந்த அறிக்கைக்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காதியானிலிருந்து லூதியானா சென்றார்கள்.

மேலும் முஹல்லா ஜதீதிலுள்ள ஹஸ்ரத் சூஃபி அஹ்மத் ஜான் சாஹிப் (ரலி) அவர்களின் வீட்டில் தங்கினார்கள்.

(ஹயாத்தே அஹ்மத், தொகுதி 3, முதல் பகுதி, பக்கம் 1)

## பைஅத்தின் குறிக்கோள்களும் நோக்கங்களும்

இங்கிருந்து அவர்கள் 1889 ஆம் ஆண்டு மார்ச் 4 ஆம் தேதியில் இன்னொரு அறிக்கையில் பைஅத்தின் குறிக்கோள்களையும் நோக்கங்களையும் விளக்கியவாறு எழுதியுள்ளதாவது:

“இந்த பைஅத் இறையச்சம் கொண்ட ஜமாஅத்தை, ஒன்றுசேர்ப்பதற்காகவும் அத்தகைய இறையச்சம் கொண்டவர்களின் ஒரு பெரிய கூட்டம் உலகத்தின் மீது தனது நல்ல விளைவை உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் உள்ளது. மேலும் இவர்களின் ஒற்றுமை இஸ்லாத்தின் அருளுக்கும், மகிமைக்கும், நல்விளைவிற்கும் காரணமாக அமைய வேண்டும். மேலும் அவர்கள் ஒரே கலிமாவில் ஒன்றுபட்டிருக்கின்ற பரக்கத்தினால், இஸ்லாத்தின் தூய பரிசுத்தமான சேவைகளில் சீக்கிரம் பயன்பட வேண்டும். மேலும் சோம்பேறியான, கருமியான, செலவு செய்யாத முஸ்லிமாக இருக்கக் கூடாது. எவர்கள் தமது பிரிவினை மற்றும் ஒற்றுமையின்மையின் காரணமாக இஸ்லாத்திற்கு நஷ்டம் இழைத்தார்களோ, அதன் அழகிய முகத்தை தனது தீய நிலைமைகளினால் களங்கமாக்கினார்களோ அந்த தகுதியற்றவர்களைப் போன்று ஆகி விடாதீர்கள். அவ்வாறே இஸ்லாமிய தேவைகளைப் பற்றி கொஞ்சமும் அறியாத கவனமற்றவர்களைப் போன்றும், மூலையில் உட்கார்ந்திருப்பவர்களைப் போன்றும் ஆகிவிடாதீர்கள். தமது சகோதரர்களின் மீது கொஞ்சமும் கவலைப்படாதவர்களாகவும், மனித குலத்தின் நன்மைக்காக எந்த ஆர்வமும் இல்லாதவர்களாகவும் அவர்கள் இருக்கக் கூடாது. மாறாக எந்த அளவுக்கு அவர்கள் சமுதாயத்திடம் அனுதாபம் காட்ட வேண்டுமென்றால் அவர்கள் ஏழைகளின் அடைக்கலமாகவும் அனாதைகளின் தந்தையாகவும் ஆகிவிட வேண்டும். மேலும் இஸ்லாமியப் பணிகளை நிறைவேற்ற தம்மை அர்ப்பணிப்பதற்கு தயாராக வேண்டும். அவர்களின் பொதுவான அருள்கள் உலகில் பரவ



முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். மேலும் இறையன்பு, இறைவனது அடியார்களுடன் கருணையுடன் நடந்து கொள்ளுதல் என்ற தூய நீரூற்று ஒவ்வொரு உள்ளத்திலிருந்தும் வெளிப்பட்டு அவை ஓரிடத்தில் ஒன்றுசேர்ந்து ஒரு நதியாக ஓடுவது தென்பட வேண்டும். இதற்காகவே அவர்களது எல்லா முயற்சிகளும் இருக்க வேண்டும்... இறைவன் தன் கம்பீரத்தை... வெளிப்படுத்துவதற்காகவும், தன் வல்லமையைக் காட்டுவதற்காகவும் இந்த இயக்கத்தை உருவாக்க விரும்பியுள்ளான். மேலும் முன்னேற்றத்தை தர விரும்பியுள்ளான். உலகத்தில் இறையன்பு, உண்மையான பாவமன்னிப்பு, தூய்மை, உண்மையான நன்மை, நிம்மதி, சீர்திருத்தம் மற்றும் மனித குலத்தின் அனுதாபத்தைப் பரப்புவதற்காக அவ்வாறு உருவாக்க விரும்பியுள்ளான். எனவே, இந்த பிரிவு அவனது சிறப்பான பிரிவாக இருக்கும். மேலும் அவர்களுக்கு அவன் தானாகவே தன் ரூஹைக் கொண்டு வலிமையை வழங்குவான். அவர்களை அசுத்தத்திலிருந்து தூய்மைப்படுத்துவான். அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு தூய மாறுதலை ஏற்படுத்துவான். அவன் தனது தூய முன்னறிவிப்புகளில் வழங்கியுள்ள வாக்குறுதிக்கேற்ப அவன் இந்தப் பிரிவை மிகவும் அதிகப்படுத்துவான். ஆயிரக்கணக்கான உண்மையாளர்களை இதில் இணைப்பான். அவனே இதற்கு நீர் பாய்ச்சுவான். இதனை வளர்ப்பான். எதுவரையென்றால் இது அதிகமாவதும் இதன் பரக்கத்தும் பார்வைகளுக்கு அற்புதமாகத் தெரியும். உயரமான இடத்தில் வைக்கப்பட்ட விளக்கைப் போன்று இது உலகின் நாலாப்புறமும் தனது ஒளியைப் பரப்பும். மேலும் இஸ்லாமிய பரக்கத்திற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழும். அவன் இந்த இயக்கத்தில் இணைபவர்களுக்கு எல்லா விதமான பரக்கத்துகளிலும் மற்ற இயக்கத்தினர்கள் மீது வெற்றியை வழங்குவான். இறைவனிடத்தில் ஒப்புதல், உதவியும் வழங்கப்படுகின்ற மக்கள் எப்பொழுதும் கியாம நாள் வரை இவர்களில் தோன்றிக் கொண்டேயிருப்பார்கள். கம்பீரமான இறைவன் இதைத்தான் விரும்பியுள்ளான். அவன் வல்லமையுள்ளவன்; தான் நாடுவதை அவன் செய்கின்றான். எல்லாவிதமான ஆற்றலும், வல்லமையும் அவனுக்கே உள்ளன.”

இதே அறிக்கையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத் செய்கின்றவர்கள் 1889, மார்ச் 20 ஆம் தேதிக்குப் பிறகு லூதியானா வாருங்கள் என்று கூறினார்கள்.

(தப்லீகே ரிஸாலத், தொகுதி 1, பக்கம் 150 முதல் 155 வரை)

## பைஅத்தின் துவக்கம்

இதன்படி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1889 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் தேதி, ஜதீத் மஹல்லாவில் அமைந்துள்ள சூஃபி அஹ்மது ஜான் சாஹிப் அவர்களின் வீட்டில் பைஅத் வாங்கினார்கள். ஹஸ்ரத் முன்ஷி அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்களின் அறிவிப்பின்படி பைஅத்திற்கென்று ஒரு பதிவேடு தயார் செய்யப்பட்டது. அதற்கு, 'தக்வா மற்றும் தூய்மையைப் பெறுவதற்கான, தவ்பாவிற்கான பைஅத்' என்று பெயர் வைக்கப்பட்டது.

அந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத் செய்வதற்காக ஒரு அறையில் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து பைஅத் வாங்கினார்கள். இதன்படி முதல் பைஅத் ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களிடமிருந்து வாங்கினார்கள். பைஅத் செய்தவர்களுக்கு அறிவுரை கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்.

"இந்த ஜமாஅத்தில் இணைந்ததும் முதலில் வாழ்க்கையில் மாறுதலை ஏற்படுத்த வேண்டும். இறைவன் மீதுள்ள ஈமான் உண்மையானதாக இருக்க வேண்டும். அது எல்லா துன்பத்திலும் பயன்பட வேண்டும். பிறகு இறைவனுடைய கட்டளைகளை அற்பமாகப் பார்க்கக் கூடாது. மாறாக, ஒவ்வொரு கட்டளைக்கும் மதிப்பளிக்க வேண்டும். மேலும் செயல்படுத்துவதன் மூலம் அந்த மதிப்பளித்தலுக்கு சான்று வழங்க வேண்டும்".

முழுக்க முழுக்க உலகப் பொருள்களையே சார்ந்திருப்பதும் அதன் மீதே நம்பிக்கை வைத்து இறைவன் மீது நம்பிக்கை வைப்பதை விட்டு விடுதலும் இறைவனுக்கு இணைவைப்பதாகும். மேலும் அது இறைவனை மறுப்பதற்கு சமமானதாகும். உலகப் பொருட்களை சார்ந்திருப்பது எந்த அளவு இருக்க வேண்டுமென்றால் அது இறைவனுக்கு இணைவைத்தல் வரை கொண்டு சென்றுவிடக் கூடாது. உலகப் பொருட்களைச் சார்ந்திருப்பதை நாம் தடை செய்யவில்லை. ஆனால், அதன் மீது நம்பிக்கை வைப்பதையே நாம் தடை செய்துள்ளோம். கைகள் பணியில் ஈடுபட்டிருந்தாலும் உள்ளம் தனது அன்பான இறைவனுடன் ஒன்றியிருத்தல் என்ற நிலை இருக்க வேண்டும்.

**மேலும் அவர்கள் கூறினார்கள்:**

"பாருங்கள்! நீங்கள் இப்போது பைஅத் செய்திருக்கிறீர்கள். இப்போது ஒப்புக்கொண்டுள்ளீர்கள். அதனைநாவினால் கூறுவதற்கு எளிது. ஆனால் அதை கடைபிடிப்பது கடினமாகும். ஏனெனில் மனிதனை மார்க்கத்தைப் பொருட்படுத்தாதிருக்க வைக்கும் முயற்சியிலேயே சய்த்தான் இருக்கிறான். உலகத்தையும் அதன் பலன்களையும் அவன் எளிதாகக் காண்பிக்கின்றான். மார்க்கத்தை மிக தொலைவில் இருப்பதாக காட்டுகின்றான். இவ்வாறு உள்ளம் கடினமாகி விடுகிறது. பிந்தைய நிலை முந்தைய நிலையை விட மோசமானதாகி விடுகின்றது. இறைவனை திருப்திப்படுத்த வேண்டும் என்றால், பாவத்திலிருந்து தப்பிப்பதற்காக கூறிய உடன்படிக்கையை காப்பாற்றுவதற்காக துணிவுடனும், முயற்சியுடனும் ஆயத்தமாக இருங்கள்".

**அவர்கள் கூறுகின்றார்கள்:**

"குழப்பமான எந்த விசயத்தையும் பேசாதீர்கள். தீங்கைப் பரப்பாதீர்கள். ஏச்சுக்களைக் கேட்கும்போது பொறுமை செய்யுங்கள். எவரையும் எதிர்க்காதீர்கள். எதிர்ப்பவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். இனிமையாகப் பேசும் அழகிய முன்மாதிரியைக் காட்டுங்கள். இறைவன் திருப்திப்படும் அளவுக்கு உண்மையான உள்ளத்துடன் எல்லா கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். பைஅத் செய்த பின் இந்த நபர் இதற்கு முன் இருந்த அந்த நபர் அல்ல என்பதை எதிரியும் தெரிந்து கொள்ள வேண்டும். வழக்குகளில் உண்மையான சாட்சி கூறுங்கள். இந்த இயக்கத்தில் இணைபவர்கள் முழுமனதுடன் முழுமையான தைரியத்துடன் முழு உயிருடன் நேர்வழியைப் பின்பற்ற வேண்டும்."

(திக்ரே ஹபீப் பக்கம் 436-439)

1903 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பெருநாள் வந்தது. சில சகோதரர்கள் உட்கார்ந்திருந்தனர். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

“பாருங்கள்! இப்போது எத்தனை பேர் பைஅத் செய்ய வந்துள்ளீர்களோ அல்லது முன்னர் பைஅத் செய்துள்ளீர்களோ அவர்களுக்கு அறிவுரையாக சில சொற்களைக் கூறுகின்றேன். அதனை முழு கவனத்துடன் கேட்க வேண்டும். நீங்கள் செய்த இந்த பைஅத் தவ்பாவிற்கான பைஅத் ஆகும். தவ்பா இரு வகைப்படும். ஒன்று சென்றகால பாவங்களிலிருந்து தவ்பா செய்வது, அதாவது, அவற்றை சீர்படுத்துவதற்காக முன்னர் செய்த பாவங்களை நீக்குதல்; முடிந்தவரை அந்த சீர்குலைவுகளை சீர்படுத்த முயற்சி செய்தல்; வருங்கால பாவங்களிலிருந்து விலகியிருத்தல்; அந்த நெருப்பை விட்டு தன்னைத்தானே காப்பாற்றி வைத்தல் ஆகும்.

உண்மையான உள்ளத்துடனும் தூய எண்ணத்துடனும் தவ்பா செய்தால் உள்ளத்தின் எந்த மூலையிலும் மறைமுகமாக ஏமாற்றுதல் இல்லாமலிருந்தால் தவ்பாவினால் முன்னுள்ள எல்லா பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன என்று அல்லாஹ் வாக்குறுதி கொடுக்கின்றான். அவன் உள்ளங்களில் மறைந்திருப்பதையும் இரகசியங்களையும் அறிகின்றான். அவனை யாராலும் ஏமாற்ற முடியாது. எனவே அவனை ஏமாற்ற முயற்சி செய்யக் கூடாது. நயவஞ்சகத்தால் அல்லாமல், உண்மையுடன அவனிடத்தில் தவ்பா செய்ய வேண்டும். தவ்பா என்பது மனிதனுக்கு அதிகப்படியானதோ அல்லது பயனற்றதோ அல்ல. இதன் விளைவு மறுமையில் மட்டுமல் அல்ல. மாறாக, இதன் மூலம் மனிதனுடைய உலகமும், மார்க்கமும் சரியாகின்றன. மேலும் இதன் மூலம் இவ்வுலகிலும் வரக்கூடிய உலகிலும் இரண்டிலும் அவனுக்கு சாந்தியும், வளமும் கிடைக்கின்றது.” (மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 187,188)



# பைஅத்தின் முதலாவது நிபந்தனை

**“இனி கபரில் நுழையும் வரை ஷிர்க்கிலிருந்து (இறைவனுக்கு இணைவைப்பதிலிருந்து) தவிர்ந்து கொள்வேன் என உண்மையான உள்ளத்துடன் பைஅத் செய்கின்றவர் உறுதிமொழி கூற வேண்டும்.”**

## இறைவனுக்கு இணை வைப்பதை இறைவன் மன்னிக்கமாட்டான்

**அல்லாஹ் சூரா அந்நிஸாவின் 49 -வது வசனத்தில் இவ்வாறு கூறுகின்றான்:**

தனக்கு இணை வைப்பதை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். அதனைத் தவிர மற்ற அனைத்து பாவங்களையும் தான் நாடியவருக்கு மன்னிப்பான். அல்லாஹ்விற்கு இணை வைப்பவன் மாபெரும் பாவத்தை உருவாக்கிக் கொண்டான். (4:49)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்:**

“அவ்வாறே அல்லாஹ் திருக்குர்ஆனில் வயக்ஃபிரு மா தூன தாலிக என்று கூறியுள்ளான். அதாவது எல்லா பாவங்களும் மன்னிக்கப்படலாம். ஆனால் இணைவைப்பதை இறைவன் மன்னிக்க மாட்டான். எனவே, இணை வைப்பதன் அருகில்கூட செல்லாதீர்கள். மேலும் அதனை ஹராமான மரமாகக் கருதுங்கள்.”

(ஸமீமா துஃபா கோல்ட்விய்யா ரூஹானி கஸாயின் தொகுதி 17 பக்கம் 323-324 அடிக்குறிப்பு)

**மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்:**

“ஷிர்க் என்றால் சிலைகளை வணங்குதல் என்பது மட்டும் பொருளல்ல. மாறாக, காரணிகளை வணங்குவதும் உலக வணக்கங்களை வலியுறுத்துவதும் ஷிர்க் ஆகும். இதற்குப் பெயரே ஷிர்க்”.

(அல்ஹகம் - பாகம் 7, எண் 24, தேதி: 30 ஜூன் 1903 - பக்கம் 11)

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். லுக்மான் தன் மகனுக்கு அறிவுரை கூறியபோது என் அருமை மகனே! நீ அல்லாஹ்வுக்கு இணை வைக்காதே. நிச்சயமாக இணை வைப்பது மாபெரும் அநீதியாகும் என்று கூறினார். (33:14)

ஒரு ஹதீஸ் உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தமது உம்மத்தில் ஷிர்க் பற்றிய அச்சம் இருந்ததாக அதில் வருகிறது.

“உபாதா பின் நஸீ எங்களுக்கு சத்தாத் பின் அவ்ஸ் என்பவரைப் பற்றி அவர் அழுது கொண்டிருந்ததாக கூறினார். தாங்கள் ஏன் அழுகிறீர்கள் என அவர்களிடம் கேட்கப்பட்டது. அப்போது அவர்கள் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்ட ஒரு விசயம் எனக்கு நினைவுக்கு வந்து விட்டது. எனவே எனக்கு அழுகை வந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் எனது உம்மத்தில் ஷிர்க் மற்றும் மறைமுகமான ஆசைகள் பற்றி அஞ்சுகிறேன் என்றார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தங்களுடைய உம்மத் தங்களுக்குப் பிறகு ஷிர்க்கில் ஈடுபட்டு விடுமோ? என நான் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம்! என் உம்மத் சூரியன், சந்திரன், சிலைகள், கற்கள் ஆகியவற்றை வணங்காதுதான். ஆனால், தனது செயல்களில் காட்டுதல் செய்வார்கள். மறைமுக ஆசைகளில் மூழ்கிவிடுவார்கள். அவர்களில் ஒருவர் நோன்பாளியாக இருக்கும் நிலையில் காலையைக் கழிப்பார். பின்னர் அவருக்கு ஏதாவது ஓர் ஆசை குறுக்கிட்டால் அவர் நோன்பை முறித்துவிட்டு அந்த ஆசையில் ஈடுபட்டு விடுவார்.”

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல், தொகுதி 4, பக்கம் 124 பைரூத் வெளியீடு)

## பல்வேறு வகையான ஷிர்க்

இந்த ஹதீஸிலிருந்து தெளிவாவதைப் போல வெளிப்படையாக சிலைகளை, சந்திரனை வணங்கி ஷிர்க் செய்யாவிட்டாலும் மக்களுக்கு காட்டுவதற்காக செய்யும் செயலும், மன ஆசைகளைப் பின்பற்றுவதும் ஷிர்க் ஆகும். ஒரு பணியாளர் தனது எஜமானரை அளவுக்கு அதிகமாக புகழ்ந்து அவருக்குப் பின்னாலேயே சுற்றி வருகிறார் என்றால், எனது உணவு இவரையே சார்ந்துள்ளது எனக் கருதுகிறார் என்றால், அதுவும் ஷிர்க்கின் ஒரு வகைதான். ஒருவருக்கு தன் மகன்களின் மீது பெருமையாக இருக்கிறதென்றால், எனக்கு இத்தனை மகன்கள் இருக்கின்றனர். அவர்கள்



வளர்கின்றனர். வேலையில் ஈடுபடுவார்கள். சம்பாதிப்பார்கள். என்னைக் காப்பாற்றுவார்கள். இனி நான் எனது எஞ்சிய வாழ்க்கையை ஜாலியாகக் கழிப்பேன் என்று கருதுகின்றார். இந்தியா, பாகிஸ்தான், ஏனைய மூன்றாம் வகை நாடுகளில் இந்த அசிங்கமான சம்பிரதாயம் இருக்கிறது. அவர்களுக்கு தமது மக்களின் மீதே நம்பிக்கை இருக்கிறது. பிறகு அவருடைய மகன் ஏதாவது விபத்தில் இறந்து விட்டால் அல்லது செயலிழந்து விட்டால் அப்படிப்பட்டவர்களின் எல்லா ஆதரவுகளும் முடிந்து விட்டன.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“தவ்ஹீது என்பது வாயினால் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறி உள்ளத்தில் ஆயிரக்கணக்கான சிலைகள் இருப்பதற்குப் பெயரல்ல. மாறாக, எவர் தனது ஏதாவதொரு வேலை, சூழ்ச்சி, ஏமாற்றுதல், திட்டங்கள் ஆகியவற்றிற்கு இறைவனுக்கு நிகரான மகத்துவத்தைக் கொடுக்கின்றாரோ அல்லது இறைவன் மீது வைக்க வேண்டிய நம்பிக்கையை ஏதாவதொரு மனிதன் மீது வைக்கின்றார் என்றால் அல்லது இறைவனுக்கு கொடுக்க வேண்டிய மகத்துவத்தை தனக்கு கொடுக்கின்றார் என்றால் இந்த எல்லா சூழ்நிலையிலும் இறைவனின் பார்வையில் அவர் சிலை வணங்கியாவார். தங்கத்தாலோ, வெள்ளியாலோ, பித்தளையாலோ, கற்களாலோ உருவாக்கப்படுவது மட்டும் சிலை அல்ல. மாறாக, இறைவனுக்கு கொடுக்க வேண்டிய மகத்துவத்தை ஒரு பொருளுக்கோ, சொல்லுக்கோ, செயலுக்கோ கொடுத்தால் அது இறைவனுடைய பார்வையில் சிலையாகும்...... இறைவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கின்ற உண்மையான தவ்ஹீது, எதனை ஏற்றுக் கொள்வதால் ஈடேற்றம் கிடைக்குமோ அந்த தவ்ஹீது எதுவென்றால் இறைவனை தன் தன்மையில் எல்லா இணைகளிலிருந்தும் அது மனிதனாக இருந்தாலும், சிலையாக இருந்தாலும், சூரியனாக இருந்தாலும், சந்திரனாக இருந்தாலும், தனது நஃப்ஸாக இருந்தாலும், தனது திட்டம் சூழ்ச்சியாக இருந்தாலும் அவற்றிலிருந்து தூய்மையானதாக கருதுவது, அவனுக்கெதிரில் எவரையும் வல்லமையுள்ளவராகவோ, உணவளிப்பவ -ராகவோ, கண்ணியமளிப்பவராகவோ, இழிவுபடுத்துபவராகவோ, உதவியாளராகவோ கருதாதிருப்பது, இரண்டாவது தனது அன்பை அவனிடமே சிறப்பாக வைத்தல், தனது இறை வணக்கத்தை அவனுக்காகவே சிறப்பாக வைத்தல், தனது மன்றாடுதலையும், நம்பிக்கையையும் அவனிடம் மாத்திரம் சிறப்பாக வைத்தல்.

மூன்று விதமான சிறப்பு இல்லாமல் எந்த தவ்ஹீதும் முழுமை பெற முடியாது. ஒன்று தன்மையைப் பொருத்தவரை தவ்ஹீது அதாவது அவனுடைய இருப்புக்கு முன்னால் அனைத்தையும் ஒன்றுமற்றதாகக் கருதுதல், மேலும் எல்லாவற்றையும் அழியக்கூடியவையாகவும் ஒன்றுமற்றவையாகவும் கருதுதல், இரண்டாவது பண்பைப் பொருத்தவரை தவ்ஹீது அதாவது **ருபூபிய்யத்** - படைத்துக் காத்தோம்புதல் மற்றும் **உலூஹிய்யத்** - வணக்கத்திற்குரியதாக இருத்தல் என்ற பண்புகளை இறைவனைத் தவிர இன்னொருவரிடம் இருப்பதாக கருதாதிருத்தல்; வெளிப்படையில் பலவிதமான **ரப்** - காத்தோம்புபவர்கள் அல்லது நன்மைகள் வழங்குபவர்கள் காணப்படுகிறார்கள். அது இறைவனுடைய கையினால் உருவான ஓர் அமைப்பு என உறுதி கொள்ளுதல், மூன்றாவது தனது அன்பு, உண்மை, தூய்மை ஆகியவற்றின் அடிப்படையில் தவ்ஹீது அதாவது அன்பு போன்ற இறையடியாருக்கான பண்புகளில் மற்றவர்களை இறைவனுக்கு இணையாக்காமல் இருப்பது. மேலும் இறைவனிடத்தில் மட்டுமே தன்னை மாய்த்துக் கொள்வது". (சிராஜூத்தீன் ஈஸாயீகே சார் வசாலோங்கே ஜவாப் ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 349-350) நான் சுருக்கமாக இது தொடர்பாக முதலில் விளக்கிவிட்டேன்.

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"அல்லாஹ்வைத் தவிர அவனுடைய ஏதாவது பண்பில், செயலில் வணக்கத்தில் மற்றவரை இணையாக்குதல் ஷிர்க் ஆகும். மேலும் எல்லா நல்ல செயல்களையும் அல்லாஹ்வின் திருப்திக்காகவே செய்வதற்கு இபாதத் என்று பெயர். இறைவனைத் தவிர எவரும் படைப்பவன் இல்லை என மக்கள் நம்புகிறார்கள். வாழ்வும், மரணமும் இறைவனுடைய கையிலும் அவனுடைய ஆற்றலிலும், ஆதிக்கத்திலும் தான் இருக்கின்றது எனவும் நம்புகிறார்கள். இவ்வாறு நம்பியும் மற்றவர்களுக்கு சஜ்தா செய்கின்றார்கள். பொய் பேசுகின்றார்கள். இறைவனை வணங்குவதை விட்டு விட்டு மற்றவர்களை வணங்குகின்றனர். இறைவனுடைய நோன்பை விட்டு விட்டு மற்றவர்களின் நோன்பை வைக்கின்றார்கள். மேலும் இறைவனுடைய தொழுகைகளைப் பொருட்படுத்தாமல் இறைவன் அல்லாதவர்களுடைய தொழுகைகளை தொழுகின்றனர். மேலும் அவர்களுக்காக ஸக்காத்துகளைக் கொடுக்கின்றனர். இந்த அபத்தமான சந்தேகங்களை வேரறுப்பதற்காக அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நியமித்தான்". (குத்பாத்தே நூர் - பக்கம் 7-8)



# பைஅத்தின் இரண்டாவது நிபந்தனை

**"பொய், விபச்சாரம், தீய பார்வை எல்லாவிதமான கட்டுப்படாமலிருத்தல், அநீதி இழைத்தல், நம்பிக்கை துரோகம் செய்தல், குழப்பம் விளைவித்தல், கிளர்ச்சி செய்தல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வேன். மன உணர்ச்சிகள் எவ்வளவு தீவிரமடைந்தாலும் அவை என்னை வெற்றி கொள்ளாது (அடக்கிக் கொள்வேன்) என்பதாகும்."**

இந்த ஒரு நிபந்தனையில் ஒன்பது விதமான தீமைகள் கூறப்பட்டுள்ளன. பைஅத் செய்கின்ற ஒவ்வொருவரும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்தவராக வாதிடும் ஒவ்வொருவரும் இந்தத் தீமைகளிலிருந்து தப்பிக்க வேண்டும்.

## எல்லாவற்றையும் விட பெரிய தீமை பொய் ஆகும்

உண்மையில் எல்லாவற்றையும் விட பெரிய தீமை பொய் ஆகும். எனவேதான் ஒருவர் என்னிடம் பல தீமைகள் உள்ளன. எல்லா தீமைகளையும் என்னால் ஒரே நேரத்தில் விட இயலாது. எனவே, ஒரே ஒரு தீமையை மட்டும் விடுமாறு அறிவுரை வழங்க கேட்டதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்பொழுதும் உண்மையே பேசுவேன். ஒருபோதும் பொய் பேசமாட்டேன் என்று உறுதிமொழி கூறுங்கள் என்றார்கள். இதன் காரணமாக அவரிடமிருந்து ஒவ்வொரு தீமையாக நீங்கி விட்டது. ஏனெனில் அவருக்கு ஏதாவதொரு தீமை பற்றிய சிந்தனை தோன்றும்போதெல்லாம், நான் பிடிபட்டால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கொண்டு செல்லப்படுவேன். பொய் பேசமாட்டேன் என்ற வாக்குறுதி கொடுத்துள்ளேன். உண்மை பேசினால், ஒன்று வெட்கம் ஏற்படும். அல்லது தண்டனை கிடைக்கும் என்று நினைத்தார். இவ்வாறு படிப்படியாக அவருடைய எல்லா தீமைகளும் முடிந்து விட்டன. உண்மையில் பொய்தான் எல்லா

தீமைகளுக்கும் வேர் ஆகும். இப்போது இதனை மேலும் விளக்கமாகக் கூறுகிறேன். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

“அல்லாஹ்வினால் புனிதமாக்கப்பட்டவற்றை மதிப்பவருக்கு அது அவரது இறைவனிடத்தில் சிறப்புக்குரியது. மேலும் உங்களுக்கு எடுத்துரைக்கப்பட்டவையன்றி மற்ற கால்நடைகள் உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளன. எனவே நீங்கள் சிலைகள் என்னும் அசுத்தத்திலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். மேலும் பொய் பேசுவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்.” (22:31)

இங்கு ஷிர்க் உடன் பொய்யும் சேர்த்து கூறப்பட்டுள்ளது. அடுத்து அல்லாஹ் கூறுகிறான்:

“உண்மையில் களங்கமற்ற மார்க்கமே அல்லாஹ்வின் உயர் தகுதிக்கு உகந்தது. அவனையன்றி மற்றவர்களை பாதுகாப்பவர்களாகக் கொள்பவர்கள் அவர்கள் எங்களை அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்களாக ஆக்குகின்றனர் என்பதற்காகவே நாங்கள் அவர்களை வணங்குகின்றோம் (என்று கூறுகின்றனர்). நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் கொண்டிருக்கும் கருத்து வேறுபாடு குறித்து அவர்களுக்கிடையே தீர்ப்பு வழங்குவான். நிச்சயமாக பொய்யருக்கும் நன்றி கெட்டவருக்கும் அல்லாஹ் நேர்வழி காட்டமாட்டான்.” (39:4)

ஸஹீஹ் முஸ்லிமில் ஒரு ஹதீஸ் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“நான்கு விசயங்கள் எவரிடம் காணப்படுமோ அவர் நயவஞ்சகராவார். மேலும் அவற்றில் ஒரு விசயம் காணப்பட்டால் அவர் அதனை விடாதவரை நயவஞ்சகத்தில் ஒரு பண்பு அவரிடம் காணப்படுகிறது.

1. அவர் பேசும் போது பொய் கூறுவார். (அவர் பேசும்போது அதில் பொய் கலந்திருக்கும் பொய்யான விசயங்களைக் கூறுவார்).
2. உடன்படிக்கை செய்தால் நம்பிக்கை துரோகம் செய்வார்.
3. வாக்குறுதி கொடுத்தால் வாக்கு மீறுவார். (இதுவும் பொய்யின் ஒரு வகைதான்).
4. அவர் சண்டையிடும்போது திட்டுவார்.”

இவையெல்லாம் பொய்யுடன் சம்பந்தப்பட்ட விசயங்களாகும்.



**இன்னொரு நபிமொழி ஹஸ்ரத் இமாம் மாலிக் (ரஹ்) அறிவிக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் கூறிக்கொண்டிருந்தார்கள். “நீங்கள் உண்மையை மேற்கொள்ள வேண்டும். உண்மை நன்மையின் பக்கம் வழிகாட்டுகிறது. மேலும் நன்மை சுவர்க்கத்தின் பக்கம் வழிகாட்டுகிறது. பொய்யிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். ஏனெனில் பொய் கீழ்ப்படியாமையின் பக்கம் கொண்டு செல்கிறது. மேலும் கீழ்ப்படியாமை நரகம் வரை சென்றடையச் செய்கின்றது. அவர் உண்மை பேசினார்; கட்டுப்பட்டவராகி விட்டார். அவர் பொய் பேசினார்; தீமையில் ஈடுபட்டார் என்று கூறப்படுவதை நீர் அறியமாட்டீரா?”

**(முஃத்தா இமாம் மாலிக் பாப் மாஜாஅ ஃபிஸ் ஸித்கி வல் கிஸ்ப்)**

முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலில் ஒரு ஹதீஸ் உள்ளது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“எவராவது ஒரு சிறு குழந்தையிடம், இங்கே வா. நான் உனக்கு ஒன்று தருகிறேன் எனக்கூறி, பிறகு அவனுக்கு எதுவும் கொடுக்காவிட்டால் அது பொய்யாகக் கணக்கிடப்படும்.”

**(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 452 பைரூத் வெளியீடு)**

இது தர்பிய்யத்திற்கு மிகவும் அவசியமானதாகும். குழந்தைகளின் சீர்திருத்தத்தை கருத்தில் கொண்டு விளையாட்டிற்காக கூட இப்படிப்பட்ட விசயங்களை பேசக்கூடாது. அவ்வாறு நாம் நடந்து கொள்ளாவிட்டால் பிறகு விளையாட்டு என்ற நிலையில் குழந்தைகளிடம் தவறான விசயங்களை கூறும் பழக்கம் ஏற்பட்டு விடும். எதிர்காலத்தில் இந்த பழக்கம் அவர்களிடம் உறுதியாகி விட்டால் பொய் சொல்வதைக் கூட அவர்கள் குற்றமாக கருத மாட்டார்கள். மேலும் பொய் சொல்கின்றோமே என்ற உணர்வே அவர்களிடம் இல்லாமல் அழிந்து விடும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.**

“உண்மை நன்மையின் பக்கம் கொண்டு செல்கின்றது. நன்மை சுவர்க்கத்தின் பக்கம் கொண்டு செல்கிறது. எவர் எப்பொழுதும் உண்மையே பேசுவாரோ அல்லாஹ்வின் பார்வையில் அவர் சித்தீக் என எழுதப்படுவார்.

மேலும் பொய், பாவத்தின் பக்கமும் தீமைகளின் பக்கமும் கொண்டு செல்கின்றது. தீமைகள் நரகத்தின் பக்கம் கொண்டு செல்கின்றது. அவர் எப்பொழுதும் பொய் பேசுவாரோ அவர் அல்லாஹ்வின் பார்வையில் பெரும் பொய்யன் என எழுதப்படுகின்றார்.”

(புகாரி கிதாபுல் அதப் பாபு கவ்லுல்லாஹி இத்தக்குல்லாஹ வகூனு மஅஸ்ஸாதிகீன்)

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சுவர்க்கத்திற்குரிய செயல் எது? எனக் கேட்டார். அதற்கு அவர்கள், உண்மை பேசுதல் என்றார்கள். மேலும் ஓர் அடியார் உண்மை பேசும்போது அவர் கட்டுப்பட்டவர் ஆகின்றார். அவர் கட்டுப்பட்டவராகும் போது உண்மையான நம்பிக்கை கொண்டவராகின்றார். ஒருவர் உண்மையான நம்பிக்கை கொண்டவராகும் போது அதன் விளைவாக அவர் சுவர்க்கத்தில் நுழைந்து விடுகிறார். அந்த நபர் மீண்டும் கேட்டார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நரகத்திற்கு கொண்டு செல்லும் செயல் எது? அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பொய் பேசுதல் என்றார்கள். ஒருவர் பொய் பேசும் போது கட்டுப்படாதவராகிறார். ஒருவர் கட்டுப்படாமல் இருக்கும் போது நிராகரிக்கின்றார். ஒருவர் நிராகரிப்பில் நிலைத்து விட்டால் அதன் விளைவாக அவர் நரகத்தில் நுழைந்து விடுகிறார்.”

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 176 பைரூத் வெளியீடு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“திருக்குர்ஆன் பொய்யையும் ஓர் அசுத்தம் என்றும், சிலை என்றும் குறிப்பிடுகின்றது. **ஃபஜ்தனிபுர் ரிஜ்ஸ மினல் அவ்ஸானி வஜ்தனிபூ கவ்லஸ்ஸூர்** – நீங்கள் சிலை வணக்கமான இணை வைத்தலிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள்.” (22:31)

பாருங்கள்! இங்கு பொய் சிலைக்கு எதிராக வைக்கப்பட்டுள்ளது. உண்மையில் பொய்யும் ஒரு சிலைதான். அவ்வாறில்லையென்றால்,



உண்மையை விட்டு விட்டு அவர் மறுபக்கம் ஏன் செல்ல வேண்டும்? சிலைக்குப் பின்னால் ஒன்றும் இல்லாததைப் போன்றே பொய்யிற்குப் பின்னாலும் பகட்டான மெருகூட்டலைத் தவிர வேறு எதுவும் இருப்பதில்லை. பொய் கூறுபவர்களின் மீதுள்ள நம்பிக்கை எந்த அளவுக்கு குறைந்து விடுகிறதென்றால், அவர்கள் உண்மை பேசினாலும் அதிலும் பொய்யின் கலப்படம் இருக்கக் கூடாதே என்ற எண்ணம் தோன்றுகிறது. தமது பொய் குறைய வேண்டும் என பொய் பேசுபவர்கள் விரும்பினாலும் அது விரைவில் விலகுவதில்லை. நீண்ட காலம் பயிற்சி செய்த பிறகுதான் உண்மை பேசும் பழக்கம் அவர்களுக்கு ஏற்படுகிறது.” (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 350)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“மனிதனுடைய சிறப்பான இயல்புகளில் ஒன்று உண்மை ஆகும். மனிதனுக்கு ஏதாவது மனத்தின் சொந்த குறிக்கோள் அவனைத் தூண்டாத வரை பொய் பேச அவன் விரும்புவதில்லை. மேலும் பொய்யை மேற்கொள்வதில் ஒருவகையான வெறுப்பையும், தயக்கத்தையும் தன் உள்ளத்தில் அவன் உணர்கின்றான். இதன் காரணமாகத்தான் எவருடைய அப்பட்டமான பொய் நிரூபணமாகி விடுகின்றதோ அவர் அதனால் துன்பமடைகிறார். மேலும் அதனை அற்பமாகப் பார்க்கின்றார். ஆனால் இந்த இயல்பான நிலை ஒழுக்கத்தில் அடங்காது. மாறாக, குழந்தையும் பைத்தியக்காரனும் கூட இதனைக் கடைபிடிக்கலாம். உண்மை என்னவென்றால், நேர்மையான வார்த்தையிலிருந்து மனிதனை விலக்குகின்ற மன இச்சைகளிலிருந்து அவன் விலகாதவரை உண்மையான முறையில் மனிதன் நேர்மையான பேச்சு பேசுபவனாக ஆக மாட்டான். ஏனெனில் மனிதன் தனக்கு நஷ்டம் வராத விசயங்களில் மட்டும் உண்மை பேசி விட்டு தனது கவுரவம், செல்வம், உயிர் ஆகியவற்றிற்கு நஷ்டம் ஏற்படும் நேரத்தில் பொய் கூறினால், உண்மை கூறுவதை விட்டும் மவுனமாக இருந்தால் அவருக்கு பைத்தியக்காரர்கள் மற்றும் சிறுவர்களை விட என்ன உயர்வு இருக்கின்றது? அத்தகைய உண்மையை பைத்தியக்காரரும், பருவமடையாத சிறுவர்களும் கூறுவதில்லையா? எந்தவொரு உந்துதலும் இல்லாமல் தேவையில்லாமல் பொய் கூறுபவர் உலகத்தில் யாரும்

இருக்கமாட்டார். எனவே, ஏதாவதொரு நஷ்டத்தின்போது விட்டுவிடும் உண்மை உண்மையான நல்லொழுக்கத்தில் ஒருபோதும் அடங்காது. எங்கு தனது உயிர், பொருள், கண்ணியம் ஆகியவற்றிற்கு நஷ்டம் வருமோ அந்த சந்தர்ப்பம்தான் உண்மை பேசுவதற்கான மிகப்பெரிய, கடினமான தருணமாகும். அது பற்றி இறைவனுடைய போதனை இதுவாகும்:

**“ஃபஜ்தனிபுர் ரிஜ்ஸ மினல் அவ்ஸானி வஜ்தனிபூ கவ்லஸ்ஸூர்** - நீங்கள் சிலை வணக்கமான இணை வைத்தலிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். பொய் பேசுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள்.” (22:31)

அதாவது பொய்யும் ஒரு சிலையாகும். அதன் மீது நம்பிக்கை வைப்பவர் இறைவன் மீது நம்பிக்கை வைப்பதை கைவிட்டு விடுகின்றார். எனவே, பொய் கூறுவதால் இறைவனும் நம்மை விட்டு விட்டு சென்று விடுகின்றான்.

**மேலும் இறைவன் கூறுகின்றான்:**

“நீங்கள் உண்மையான சாட்சி கூறுவதற்காக அழைக்கப்பட்டால் அதனை நீங்கள் மறுக்கக் கூடாது. (2:283) நீங்கள் உண்மையான சாட்சியத்தை ஒருபோதும் மறைக்கக் கூடாது. அதை மறைப்பவர்களின் உள்ளம் நிச்சயமாக பாவத்திற்குள்ளாகிறது. (2:284) நீங்கள் பேசும் போது உங்கள் உறவினர் குறித்து சாட்சி சொல்ல வேண்டியது வந்தாலும் முழுக்க முழுக்க உண்மையான நீதியான விசயத்தையே கூற வேண்டும். (6:153)

நீங்கள் உண்மையையும், நீதியையும் நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்களது ஒவ்வொரு சாட்சியும் அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும். உண்மை பேசுவதால் உங்களது உயிருக்கு இழப்பு ஏற்பட்டாலும் அல்லது அதனால் உங்கள் பெற்றோருக்கோ உங்களது மகன் போன்ற உங்களுக்கு மிக நெருக்கமானவர்களுக்கோ இழப்பு ஏற்பட்டாலும் பொய் பேசாதீர்கள். (4:136)

ஒரு சமுதாயத்தின் பகைமை, உங்களை உண்மையான சாட்சி கூறுவதிலிருந்தும் தடுக்க வேண்டாம். (5:9) உண்மை பேசும் ஆண்களும் பெண்களும் மாபெரும் நற்கூலியைப் பெறுவார்கள். (33:36)



மற்றவர்களுக்கும் உண்மையைக் கொண்டு அறிவுரை கூறுவது அவர்களின் பழக்கமாகும். (103:4) மேலும், அவர்கள் பொய்யர்களின் சபைகளில் அமர்வதில்லை. (25:73)”

**(இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 360-361)**

## விபச்சாரத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்

பிறகு பைஅத்தின் இரண்டாவது நிபந்தனையிலேயே விபச்சாரத்தில் இருந்து தப்பிப்பதற்கான நிபந்தனை உள்ளது. இதுபற்றி அல்லாஹ் கூறுகின்றான்: “விபச்சாரத்தின் பக்கமே அணுகாதீர்கள்; நிச்சயமாக அது பகிரங்கமான, மானக்கேடான செயலும், மிகத் தீய வழியும் ஆகும்.”(17:33)

ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வரும் விசயங்களைப் பற்றி அறிவுரை கூறினார்கள் என முஹம்மது பின் ஸிரீன் ஒரு நீண்ட அறிவிப்பை குறிப்பிட்டார்கள். அதில் ஒன்று, விபச்சாரம் மற்றும் பொய்யிற்கு எதிரில் கற்பு மற்றும் உண்மை மிகச் சிறந்ததும், எஞ்சியிருக்கக்கூடியதுமாகும்.

**(சுனன் தார குத்னி, கிதாபுல் வஸாயா, பாபு மா யஸ்தஹப்பு பில் வஸிய்யத்தி மினத் தசஹ்ஹுதி வல்க லாமி)**

இங்கு விபச்சாரம், பொய் ஆகிய இரண்டையும் இணைத்து குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதிலிருந்தும் பொய் எவ்வளவு பெரிய பாவம் என்பதும் தெரிகிறது.

**<u>ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:</u>**

“மேலும் விபச்சாரத்தின் அருகில்கூட நெருங்காதீர்கள். இந்த சிந்தனை கூட உள்ளத்தில் உருவாகும் நிகழ்ச்சிகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். மேலும் இந்தப் பாவம் நடப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்துகின்ற வழிகளை மேற்கொள்ளாதீர்கள். விபச்சாரம் செய்பவர் தீமையை அதன் எல்லை வரை எட்ட வைத்து விடுகின்றார். விபச்சாரத்தின் வழி மிக மோசமானதாகும். அதாவது அது நாம் அடைய வேண்டிய குறிக்கோளிலிருந்து நம்மை தடுக்கின்றது. மேலும் அது உங்களது கடைசி குறிக்கோளுக்கு பேராபத்தாகும். எவருக்கு திருமணம் நடக்கவில்லையோ, அவர் தனது கற்பை வேறு வழிகளில் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக, நோன்பு வைக்கட்டும்; அல்லது குறைவாக சாப்பிடட்டும். அல்லது தன் ஆற்றல்களினால் உடலை வருத்தும் வேலையைச் செய்யட்டும்.

(இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம 342)

விபச்சாரம் பற்றிய சிந்தனை கூட உள்ளத்தில் தோன்றும் விசயங்களிலிருந்து விலகியிருங்கள் என்று கூறுகிறார்கள். சில நேரங்களில் இளைஞர்களிடம் இதுபற்றிய உணர்வே இருப்பதில்லை. பார்ப்பதற்கு தகுதியற்ற திரைப்படங்களை அவர்கள் பார்க்கின்றனர். மிகவும் ஒழுக்கங்கெட்டவையாக அவை உள்ளன. அதிலிருந்தும் தப்பிக்க வேண்டும். இதுவும் விபச்சாரத்தின் ஒருவகைதான்.

## தீய பார்வையிலிருந்து விலகியிருங்கள்

பிறகு பைஅத்தின் இரண்டாவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாவது வகை தீமை தீய பார்வையிலிருந்து விலகியிருப்பதாகும். அது கண்களை தாழ்த்தி வைத்தலாகும். ஒரு நபிமொழியை அபூ ரைஹானா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்கள் ஒரு போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். ஒருநாள் இரவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறும் கூறினார்கள். “அல்லாஹ்வின் வழியில் விழித்திருந்த கண்களுக்கு (நரக) நெருப்பு விலக்கப்பட்டதாகும். மேலும் அல்லாஹ்வின் அச்சத்தினால் கண்ணீர் வடிக்கும் கண்ணுக்கு (நரக) நெருப்பு விலக்கப்பட்டதாகும்.”

அபூ சரீஹ் கூறுகிறார்கள். நான் ஓர் அறிவிப்பாளர் இவ்வாறு கூறக் கேட்டேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறும் கூறினார்கள்: “அல்லாஹ் ஹராமாக்கியுள்ள பொருள்களைப் பார்ப்பதற்கு பதிலாக குனிந்து விடும் கண்களுக்கும் அல்லாஹ் ஜல்ல சானஹுவின் வழியில் பிடுங்கப்பட்ட கண்களுக்கும் (நரக) நெருப்பு விலக்கப்பட்டுள்ளது.”

(சுனன் தாரமீ கிதாபுல் ஜிஹாத்)

**ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“நீங்கள் எனக்கு ஆறு விசயங்களில் உத்தரவாதம் கொடுங்கள். நான் உங்களுக்கு சுவர்க்கம் செல்வதற்கு நற்செய்தி கூறுகிறேன்.



1. நீங்கள் பேசும்போது உண்மை பேசுங்கள்.
2. வாக்குறுதி கொடுத்தால் நிறைவேற்றுங்கள்.
3. உங்களிடம் பொருள்கள் நம்பி ஒப்படைக்கப்பட்டால், திருப்பிக் கேட்கும் போது கொடுத்து விடுங்கள் (சாக்குப்போக்கு கூறக்கூடாது).
4. உங்கள் கற்பைக் காத்துக் கொள்ளுங்கள்.
5. கண்களை தாழ்த்தி வையுங்கள்.
6. உங்கள் கைகளை அநீதியிலிருந்து தடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 323 பைரூத் வெளியீடு)

**ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“வழியிடங்களில் கூட்டம் போட்டுப் பேசுவதை விட்டு தவிர்ந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! வழியிடங்களில் கூட்டம் போடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லையே என அவர் கேட்டார். அப்படியென்றால் வழிக்குரிய உரிமையைக் கொடுங்கள் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். வழிக்குரிய உரிமைகள் என்ன என்று அவர் கேட்டதற்கு, வரக்கூடிய போகக்கூடியவர்களின் சலாத்திற்கு பதில் கொடுங்கள். பார்வையைத் தாழ்த்தி வையுங்கள். வழிகேட்பவர்களுக்கு வழி சொல்லிக் கொடுங்கள். நல்லவற்றை ஏவுங்கள்; விரும்பத்தகாதவற்றை தடுங்கள் என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 3 பக்கம் 61 பைரூத் வெளியீடு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“மனிதனுடைய இயல்பில் எதிர்பார்ப்புகளையும், பலவீனங்களையும் கவனத்திற் கொண்டு சூழ்நிலைக்கேற்ற போதனை செய்யும் திருக்குர்ஆன் எவ்வளவு அருமையான கொள்கையை மேற்கொண்டுள்ளது! **குல் லில் முஃமினீன யகுழ்ழு மின் அப்ஸாரிஹிம் வயஹ்ஃபழு ஃபுரூஜஹும். ஸாலிக அஸ்காலஹும்** – அதாவது நம்பிக்கை கொண்டவர்களிடம் நீர் கூறுவீராக! அவர்கள் தங்கள் கண்களை தாழ்த்தி வைக்கட்டும். மேலும் தங்கள் துவாரங்களை பாதுகாத்துக் கொள்ளவும். இந்த செயலினால் அவர்களுடைய ஆன்மாக்கள் தூய்மை பெறும் (24:31). ஃபுரூஜ் என்பதன்

கருத்து, வெட்கத்தலம் மட்டுமல்ல. மாறாக, எல்லா துவாரங்களையும் குறிக்கும். அதில் காது போன்றவை அடங்கும். மேலும் இதில் அந்நியப் பெண்களின் ராகங்களைக் கேட்பதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் எவ்விசயங்களையும் விட்டும் அல்லாஹ் தடுக்கின்றானோ கடைசியில் மனிதன் அவற்றிலிருந்தும் விலகியிருக்க வேண்டியது வருகிறது என்பது ஆயிரக்கணக்கான அனுபவங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டதாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்." (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 135)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"இஸ்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டுப்பாடான சில நிபந்தனைகளை கட்டாயமாக்கி உள்ளது. பெண்களுக்கு பர்தா பற்றி கட்டளை இருப்பதைப் போன்றே ஆண்களுக்கும் கண்களை தாழ்த்துமாறு வலியுறுத்திக் கட்டளையிடப்பட்டுள்ளது. தொழுகை, நோன்பு, ஸக்காத், ஹஜ், ஹலால் – ஹராம் ஆகியவற்றை வேறுபடுத்துதல், இறைவனுடைய கட்டளைகளுக்கு எதிராக தமது பழக்கங்களையும் சடங்கு சம்பிரதாயங்களையும் விட்டு விடுதல் போன்றவை எத்தகைய கட்டுப்பாடுகள் என்றால் அதனால் இஸ்லாத்தின் வாசல் மிகவும் குறுகலாக உள்ளது. மேலும் இதன் காரணமாகத்தான் எல்லா மனிதனாலும் இந்த வாசலில் நுழைய முடிவதில்லை." (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 614 புதிய பதிப்பு)

ஆக, ஆண்களின் கண்களும் எப்பொழுதும் தாழ்ந்திருக்க வேண்டும் என அவர்களுக்கும் இதிலிருந்து தெளிவு கிடைத்து விட்டது. வெட்கம் என்பது பெண்களுக்கு மட்டுமின்றி ஆண்களிடமும் இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"கற்பு என்ற பண்பைப் பெறுவதற்கு இறைவன் உயர்ந்த போதனையை மட்டுமே கூறவில்லை. மாறாக, மனிதன் பரிசுத்தமாக இருப்பதற்கு ஐந்து வழிமுறைகளையும் கூறுகிறான். இன்னும் சொல்லப்போனால் மனிதன் கற்புள்ளவனாக இருப்பதற்கு ஐந்து சிகிச்சைகள் கூறப்பட்டுள்ளன. அதாவது,



1. அந்நியப் பெண்களைப் பார்ப்பதை விட்டும் தம் கண்களை காப்பாற்றுதல்.
2. அந்நியர்களின் குரலைக் கேட்பதிலிருந்தும் காதுகளைக் காப்பாற்றுதல்.
3. அந்நியர்களின் கதைகளைக் கேட்காதீர்கள்.
4. இந்த தீய செயல் உருவாகலாம் என்ற அச்சம் இருக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலிருந்தும் தம்மைக் காப்பாற்றுதல்.
5. திருமணம் நடைபெறவில்லையென்றால் நோன்பு வைத்தல்.

**மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்:**

"திருக்குர்ஆன் கூறுகின்ற இந்த எல்லா திட்டங்களையும் கொண்ட இந்த உயர்ந்த போதனை இஸ்லாத்தில் மட்டுமே சிறப்பாக உள்ளது. இந்த இடத்தில் இன்னொரு நுண்ணிய கருத்தும் நினைவில் கொள்ளத்தக்கது. அது என்னவென்றால் மனிதன் முழுமையான மாறுதலை ஏற்படுத்தாத வரை ஆபாசத்தின் ஊற்றாக இருக்கின்ற மனிதனின் இயல்பான நிலை, தன் ஆபாச உணர்வுகள் சந்தர்ப்ப சூழ்நிலையைப் பெறும்போது உந்தப்படாமல் இருக்க முடியாது. அல்லது அந்த உணர்வுகள் கடும் அபாயத்திற்கு உள்ளாகி விடுகின்றன என்று கூறலாம். எனவேதான் அந்நியப் பெண்களை தயக்கமின்றி பாருங்கள்; அவர்களின் எல்லா அழகுகளையும் பாருங்கள்; அவர்களின் ஆடல் பாடல்களைப் பாருங்கள்; ஆனால் தூய பார்வையுடன் பாருங்கள் என்று இறைவன் நமக்கு போதிக்கவில்லை. அவ்வாறே நாம் அந்நியப் பெண்களின் பாடல்களையும் அவர்களின் அழகு பற்றி கதைகளையும் கேட்கலாம். ஆனால் தூய சிந்தனையுடன் கேட்கலாம் என்று நமக்கு அவன் போதனை வழங்கவில்லை. மாறாக, நாம் அந்நியப் பெண்களையும் அவர்களின் அழகு வெளிப்படும் இடங்களையும் ஒருபோதும் பார்க்கக் கூடாது – தூய பார்வையுடனும் பார்க்கக் கூடாது. தூய்மையற்ற பார்வையுடனும் பார்க்கக் கூடாது. மேலும் அவர்களது இனிமையான குரலையும், அவர்களின் அழகு பற்றிய கதைகளையும் ஒருபோதும் கேட்கக் கூடாது – தூய சிந்தனையுடனும் கேட்கக் கூடாது. தூய்மையற்ற சிந்தனையுடனும் கேட்கக் கூடாது என்றே நமக்கு வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. எனவே நாம் தடுமாறாமல் இருப்பதற்காக செத்ததைப்

போன்று அவற்றைக் கேட்பதையும், பார்ப்பதையும் நாம் வெறுக்க வேண்டும். ஏனெனில் கட்டுப்பாடில்லாத பார்வைகளால் ஏதாவது ஒரு நேரத்தில் தடுமாற்றம் ஏற்பட்டு விடும். நமது கண்களும் உள்ளமும், நமது உணர்வுகளும் தூய்மையானவையாக இருக்க வேண்டும் என்று இறைவன் விரும்புவதால் இந்த உயர்ந்த போதனையை அவன் தந்துள்ளான். கட்டுப்பாடின்மை தடுமாற்றத்திற்கு காரணமாகி விடுகின்றது என்பதில் என்ன சந்தேகம் இருக்கிறது? நாம் பசியுள்ள ஒரு நாயின் முன்னால் மிருதுவான ரொட்டித் துண்டுகளை வைத்து விட்டு அந்த ரொட்டிகளைப் பற்றிய சிந்தனை கூட அந்த நாயிற்கு வராது என நாம் நம்பினால் நாம் நமது சிந்தனையில் தவறில் இருக்கிறோம். மன இச்சைகளுக்கு மறைமுகமான செயல்களுக்கான சந்தர்ப்பம் கூட கிடைக்கக் கூடாது. தீய அபாயங்கள் கிளர்ந்தெழும் எந்த நிகழ்ச்சியும் ஏற்படக் கூடாது என இறைவன் விரும்பினான்.”

(இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம், ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 343-344)

## தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்

அதே இரண்டாவது நிபந்தனையில் தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்வது பற்றி உள்ளது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். மேலும் அல்லாஹ்வின் தூதர் உங்களிடையே இருக்கின்றார் என்பதனை அறிந்து கொள்ளுங்கள். பெரும்பாலான விசயங்களில் அவர் உங்கள் விருப்பங்களை ஏற்றிருந்தால், நிச்சயமாக நீங்கள் துன்பத்திற்குள்ளாகி விடுவீர்கள். ஆனால், அல்லாஹ் நம்பிக்கையை உங்களுக்கு விருப்பம் ஆனதாகவும், அதனை உங்கள் உள்ளங்களுக்கு அழகு வாய்ந்ததாகவும் ஆக்கியுள்ளான். மேலும் அவன் நிராகரிப்பையும் தீய செயல்களையும் கீழ்ப்படியாமையையும் உங்களுக்கு வெறுப்பானவையாக ஆக்கியுள்ளான். இத்தகையோரே நேரான வழியைப் பெற்றவர்களாவர். (49:8)

**அஸ்வது அவர்கள் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களிடமிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக அறிவிப்பு செய்கின்றார்கள்:**

“உங்களில் ஒருவர் நோன்பு வைத்திருக்கும் போது ஆபாச வார்த்தையைக் கூற வேண்டாம். தீமையான விசயங்களைப் பேச



வேண்டாம். அறியாமைப் பேச்சுகளைப் பேச வேண்டாம். எவராவது அவரிடம் முட்டாள்தனமாக நடந்து கொண்டால், நான் நோன்பாளி என அவரிடம் கூறவும்.” (முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 356 பைரூத் வெளியீடு)

“நம்பிக்கை கொண்டவரை ஏசுதல் தீமையாகும். அவரை கொலை செய்வது **குஃப்ர்** – இறை மறுப்பு ஆகும்” என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 439 பைரூத் வெளியீடு)

**அப்துர்ரஹ்மான் பின் ஷிப்ல் அறிவிக்கின்றார்கள்:**

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வியாபாரிகள் தீயவர்கள் ஆவர் என்று கூறினார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ் வியாபாரத்தை ஹலாலாக்கவில்லையா? எனக் கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஏனில்லை? ஆனால் அவர்கள் விற்பனை செய்யும்போது பொய் கூறுகின்றனர். சத்தியம் செய்து விலையை உயர்த்துகின்றனர் எனக் கூறினார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மேலும் கூறினார்கள். **ஃபுஸ்ஸாக்** – தீயவர்கள் நரகவாசியாவர். அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர்களே! **ஃபுஸ்ஸாக்** – தீயவர்கள் என்பவர்கள் யார்? எனக் கேட்கப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களும் **ஃபுஸ்ஸாக்** – தீயவர்களாக இருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! (பெண்களாகிய) அவர்கள் எங்கள் தாய்மார்களும், சகோதரிகளும், மனைவிகளும் இல்லையா? என ஒருவர் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏனில்லை? ஆனால் அவர்களுக்கு ஏதாவது கொடுக்கப்பட்டால், நன்றி காட்டுவதில்லை. அவர்களுக்கு சோதனை வரும்போது பொறுமை செய்வதில்லை” என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 3 பக்கம் 428 பைரூத் வெளியீடு)

எனவே இது வியாபாரிகளும் சிந்திக்க வேண்டிய விசயமாகும். சுத்தமான வியாபாரமாக இருக்க வேண்டும். இதுவும் பைஅத் நிபந்தனைகளில் ஒன்றாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“காஃபிருக்கு முன்னர் **ஃபாஜிர்** - தீயவருக்கு தண்டனை கொடுக்க வேண்டும் எனத் திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகிறது. ஒரு சமுதாயம் தீயதாகவும் நடத்தை கெட்டதாகவும் ஆகி விடும்போது அதன் மீது இன்னொரு சமுதாயத்தை ஆதிக்கம் செலுத்த வைத்து விடுவது இறைவனுடைய வழக்கமாகும்.” (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 653 புதிய பதிப்பு)

**அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

“முஸ்லிம்கள் தீமைகளிலும் கெட்ட நடத்தைகளிலும் எல்லைமீறத் தொடங்கிய போது, மேலும் இறை கட்டளைகளை அவமதிப்பதும், அல்லாஹ்வின் அடையாளங்களை வெறுப்பதும் அவர்களிடம் தோன்றிய போது அவர்கள் உலகம் மற்றும் அதன் அழகிலேயே மாய்ந்து விடும்போது அல்லாஹ் அவர்களையும் ஹலாகூ கான், செங்கிஸ்கான் போன்றவர்களினால் நாசமடையச் செய்தான். அப்போது அய்யுஹல் குஃப்பாரு உக்துலுல் ஃபுஜ்ஜார் (காஃபிர்களே! இந்த தீயவர்களை கொல்லுங்கள்) என வானத்திலிருந்து ஓசை வந்தது என எழுதப்பட்டுள்ளது. சுருக்கமாக, தீய நடத்தையைக் கொண்ட கெட்ட மனிதன் இறைவன் பார்வையில் காஃபிரை விட இழிந்தவரும் வெறுப்புக்கு உரியவரும் ஆவார்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 108 - புதிய பதிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:**

அநியாயக்காரன், தீயவனின் துஆ கபூல் ஆவதில்லை. ஏனெனில், அவன் இறைவனை பொருட்படுத்தாமல் இருக்கின்றான். இறைவனும் அவனை பொருட்படுத்துவதில்லை. ஒரு மகன் தந்தையைப் பொருட்படுத்தவில்லையென்றால், அவன் பிரயோஜனமில்லாத மகன் என்றால், தந்தை அவனை பொருட்படுத்துவதில்லை. அப்படி இருக்கும் போது இறைவன் ஏன் பொருட்படுத்தப் போகிறான்?

(தப்ஸீர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)
தொகுதி 3, பக்கம் 611 - புதிய பதிப்பு)



## அநீதி இழைக்க வேண்டாம்

அதே இரண்டாவது நிபந்தனையில், அநீதி இழைக்கமாட்டேன் என்பதும் உள்ளது. திருக்குர்ஆனில் வருகிறது.

“கூட்டத்தினர் தமக்குள்ளேயே கருத்து வேறுபாடு கொண்டனர். எனவே அநீதியிழைத்தவர்களுக்கு, வேதனையளிக்கக்கூடிய நாளின் தண்டனை மூலம் அழிவு விதிக்கப்பட்டுள்ளது.” (43:66)

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“அநீதியிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். ஏனெனில் அநீதி மறுமை நாளில் இருள்களாக மாறி முன்னால் வந்து நிற்கும். மேலும், பேராசை, கருமித்தனம், பொறாமை ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். ஏனெனில் பேராசை, கருமித்தனம், பொறாமை முன்னவர்களை நாசமாக்கியது. இவை அவர்களை இரத்தம் சிந்தத் தூண்டியது. மேலும் மரியாதைக்குரியவற்றை அவர்கள் மூலமாக, அவமரியாதை செய்ய வைத்தது.” (முஸ்னத் அஹ்மத் தொகுதி 3 பக்கம் 323)

அடுத்து பிறருடைய உரிமையைப் பறித்தலும் அநீதியாகும். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எந்த அநீதி மிகப் பெரியது என நான் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒருவர் தமது சகோதரரின் உரிமையிலிருந்து ஒரு கையளவு நிலத்தை அபகரித்துக் கொள்வதே மிகப்பெரிய அநீதி என்று கூறினார்கள். அந்த நிலத்தின் ஒரு சிறு கல்லைக்கூட அவர் அநியாயமாக எடுத்துக் கொள்வாரென்றால், அந்த நிலத்தின் கீழ் உள்ளவை மாலையாக மாறி மறுமை நாளில் அவருடைய கழுத்தில் போடப்படும். மேலும், பூமியின் ஆழத்தை அதைப் படைத்தவனைத் தவிர எவரும் அறியமாட்டார் எனக் கூறினார்கள்.”

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 396 பைரூத் வெளியீடு)

சிலர் தமது சகோதரர்கள், சகோதரிகள் அல்லது அண்டை வீட்டாரின் உரிமைகளை நிறைவேற்றுவதில்லை. அல்லது சண்டைகளில் சொத்துக்களை அநியாயமாக அபகரித்துக் கொள்கின்றார்கள். நிலங்களை அமுக்கி விடுகிறார்கள். அத்தகையவர்கள் இதனை கவனிக்க வேண்டும்.

அநியாயம் செய்யமாட்டோம் என நாம் பைஅத் செய்து அஹ்மதியான பிறகு அதிகமாக அஞ்ச வேண்டிய வி-யமாகும்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

வறியவர் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். எவரிடம் பணம், வழிவகை இல்லையோ அவர் என நாங்கள் கூறினோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். என் உம்மத்தில் வறியவர் யார் என்றால், மறுமை நாளில் தொழுகை, நோன்பு, ஸக்காத் போன்ற செயல்களைக் கொண்டு வருவார். ஆனால் அவர் எவரையாவது திட்டியிருப்பார். எவர் மீதாவது பழி சுமத்தியிருப்பார். எவருடைய செல்வத்தையாவது விழுங்கியிருப்பார். எவரையாவது அநியாயமாக கொலை செய்திருப்பார். அல்லது எவரையாவது அடித்திருப்பார். எனவே (அநியாயம் செய்த) அவருடைய நன்மைகள் அநியாயம் செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு விடும். அவர்களுடைய உரிமைகள் நிறைவேறுவதற்கு முன் அவருடைய நன்மைகள் முடிந்து விட்டால் (எவர்கள் மீது அநியாயம் செய்யப்பட்டதோ) அவர்களுடைய பாவங்கள் (எவர் அநியாயம் செய்தாரோ) அவர் மீது போடப்பட்டு விடும். இவ்வாறு சுவர்கக்த்திற்குப் பகரமாக அவர் நரகத்தில் போடப்படுவார். உண்மையில் இவர்தான் வறியவர் ஆவார்.

(முஸ்லிம் கிதாப் அல்பிர்ரி வஸ்ஸிலா)

இப்போது கவனமாக சிந்தனை செய்யுங்கள். நம்மில் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இப்படிப்பட்ட செயல்களைச் செய்பவர்களுக்கு இது அஞ்ச வேண்டிய இடமாகும். நம்மில் எவரும் இப்படிப்பட்ட வறிய நிலையில் அல்லாஹ்வின் முன்பு ஒருபோதும் செல்லாமலிருக்கும்படி அல்லாஹ் செய்வானாக.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இங்கு வருகை தந்துள்ள அல்லது தமது இடங்களில் வாழ்கின்ற என்னுடைய ஜமாஅத்தினரும் இந்த அறிவுரையை கவனமாகக் கேளுங்கள். அவர்கள் இந்த இயக்கத்தில் இணைந்து என்னுடன் தொடர்பையும், முரீதையும் பெற்றதன் குறிக்கோள், அவர்கள் நன்னடத்தை,



நன்னெறி மற்றும் இறையச்சம் ஆகியவற்றின் உயர்ந்த படித்தரத்தை எட்ட வேண்டும். மேலும் எந்த குழப்பமும், தீங்கும், தீய நடத்தையும் அவர்களுக்கு அருகில் வர முடியாதிருக்க வேண்டும். அவர்கள் ஐவேளைதொழுகைகளை ஜமாஅத்தாகப் பேண வேண்டும். அவர்கள் பொய் பேசக்கூடாது. அவர்கள் எவருக்கும் நாவினால் துன்பமிழைக்கக் கூடாது. அவர்கள் எவ்வகையான தீய செயலிலும் ஈடுபடக் கூடாது. மேலும் அவர்கள் எந்தவொரு தொல்லை, அநியாயம், குழப்பம் ஆகியவற்றின் சிந்தனைகூட உள்ளத்தில் தோன்றவிடக் கூடாது. சுருக்கமாக, எல்லா விதமான பாவங்கள், குற்றங்கள், பேசக்கூடாத விசயங்களைப் பேசுதல், மன உணர்ச்சிகள், பொருத்தமற்ற செயல்கள் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். மேலும் தூய உள்ளத்தைக் கொண்ட, தீங்கற்ற, அடக்கமான குணத்தைக் கொண்ட இறையடியாராக மாற வேண்டும். மேலும் அவர்களிடம் வி-த்தின் எந்த தன்மையும் இருக்கக் கூடாது........

மேலும் முழு மனித இனத்திற்கும் கருணை காட்டுவது அவர்களது கொள்கையாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். அவர்கள் தங்களது நாவுகளையும், கைகளையும், தங்கள் உள்ளத்திலுள்ள எண்ணங்களையும் ஒவ்வொரு தூய்மையற்ற குழப்பத்தை தூண்டுகின்ற வழிகளிலிருந்தும், நம்பிக்கை துரோகத்திலிருந்தும் காப்பாற்றுபவர்களாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் ஐவேளை தொழுகைகளை மிகுந்த கவனத்துடன் நிலைநாட்டுபவர்களாகவும், அநீதியிழைத்தல், வரம்பு மீறுதல், பிறரது செல்வத்தை விழுங்குதல், லஞ்சம் பெறுதல், பிறரது உரிமைகளைப் பறித்தல், ஒருதலைப்பட்சமாக செயல்படுதல் போன்றவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும். அவர்கள் தீய நண்பர்களுடன் அமர வேண்டாம். உங்களிடம் வந்து போகும் நபர் ஒருவர் இறைவனது கட்டளைகளைப் பேணாதவர்....... அல்லது அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதை பொருட்படுத்தாமல் இருப்பவர் அல்லது அநீதியிழைக்கும் இயல்பை உடையவர் அல்லது தீய இயல்பும் தீய நடத்தையும் உள்ள மனிதர் அல்லது எந்த நபருடன் உங்களுக்கு பைஅத்தின் தொடர்பு உள்ளதோ அந்த நபரைப் பற்றி உண்மைக்கு புறம்பான காரணமில்லாமல் தீய வி-யங்களைக் கூறி தீய சொற்களாலும்

பழித்துரைகளாலும் அவர் மீது இட்டுக்கட்டி பொய்யான விசயங்களைக் கூறும் பழக்கமுடையவராகவும் அதன் மூலம் இறைவனது அடியார்களை ஏமாற்ற விரும்புபவராகவும் இருப்பவர் என்பது பின்னர் நிரூபிக்கப்பட்டு விட்டால் அப்படிப்பட்ட தீயவரை உங்களிடமிருந்து விலக்கி விடுவது உங்கள் மீது கட்டாயமானதாகும். அப்படிப்பட்ட அபாயகரமான மனிதரிடமிருந்தும், உங்களை காப்பாற்றிக் கொள்ளுங்கள். எந்தவொரு மதத்தை, சமுதாயத்தை, பிரிவைச் சார்ந்த மனிதனக்கும் இழப்பை ஏற்படுத்த எண்ணாதீர்கள். எல்லோருக்கும் உண்மையான போதகராக ஆகிவிடுங்கள். தீய வாழ்க்கை நடத்துபவர்களும், வி-மிகளும் குழப்பவாதிகளும் தீய நடத்தை உடையவர்களும் உங்கள் சபைகளில் ஒருபோதும் வர வேண்டாம். அவர்கள் உங்கள் வீடுகளிலும் தங்க வேண்டாம். அதனால் ஏதாவது ஒரு சமயத்தில் அவர்கள் உங்கள் தடுமாற்றத்திற்கு காரணமாகி விடலாம்.”

**மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இவை ஆரம்பத்திலிருந்தே நான் கூறிவரும் நிபந்தனைகளாகும். என் ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரும் இந்த எல்லா அறிவுரைகளின்படி செயல்படுவது கட்டாயமானதாகும். மேலும் உங்கள் சபைகளில் எந்தவொரு அசுத்தமும், கிண்டலும், எள்ளிநகையாடலும் இருக்கக் கூடாது. மேலும் நல்ல உள்ளத்துடனும், தூய இயல்புடனும், தூய சிந்தனையுடனும் பூமியில் நடங்கள். எல்லா தீங்கும் எதிர்க்கத்தக்கதல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, பெரும்பாலான நேரங்களில் மன்னிப்பையும், கண்டும்காணாதிருக்கும் பழக்கத்தையும் உருவாக்குங்கள். பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் கடைபிடியுங்கள். எவர்மீதும் அநியாயமான முறையில் தாக்காதீர்கள். மன உணர்ச்சிகளை அடக்கி வையுங்கள். மேலும் வாதம் புரிந்தால், மார்க்கக் கருத்துப்பரிமாற்றம் செய்தால் மென்மையான சொற்களிலும், நாகரிகமான முறையிலும் செய்யுங்கள். எவராவது முட்டாள்த்தனமாக நடந்து கொண்டால், சலாம் கூறி விட்டு அத்தகைய சபையிலிருந்து சீக்கிரம் எழுந்து சென்று விடுங்கள். உங்கள் மீது அநியாயம் செய்யப்பட்டால், நீங்கள் திட்டப்பட்டால், உங்களைப் பற்றி தீய சொற்கள் கூறப்பட்டால் கவனமாக இருங்கள். முட்டாள்தனத்தை



முட்டாள்தனத்தினால் நீங்கள் எதிர்க்காதீர்கள். இல்லையென்றால், நீங்களும் அவர்களைப் போன்றே ஆகி விடுவீர்கள். நன்மை, நேர்மை ஆகியவற்றிற்கு முழு உலகத்திற்கும் முன்மாதிரியைக் கொண்ட ஒரு ஜமாஅத்தாக உங்களை இறைவன் ஆக்க விரும்புகின்றான். எனவே தீமைக்கும், தீங்கிற்கும், குழப்பத்திற்கும், தீய மனதிற்கும் முன்மாதிரியாக இருப்பவரை உங்களிடமிருந்து சீக்கிரம் வெளியேற்றி விடுங்கள். எவர் நமது ஜமாஅத்தில் ஏழ்மை, நன்மை, தூய்மை, சகிப்புத்தன்மை, மென்மையாக பேசுதல், நல்லியல்பு, நன்னடத்தை ஆகியவற்றுடன் இருக்க முடியாதோ அவர் விரைவில் நம்மை விட்டு விலகி விடட்டும். ஏனெனில், அத்தகையவர் நம்மிடம் இருப்பதை நமது இறைவன் விரும்புவதில்லை. நிச்சயமாக அவர் தீய நிலையில் மரணிப்பார். ஏனெனில் அவர் நன்மையான வழியைப் பின்பற்றவில்லை. எனவே நீங்கள் கவனமாக இருங்கள். உண்மையிலேயே நல்ல உள்ளம் கொண்டவராகவும், பணிவுள்ளவராகவும், நேர்மையானவர் -களாகவும் மாறுங்கள். ஐவேளை தொழுகைகளினாலும் நல்லொழுக்க நிலைகளினாலுமே நீங்கள் கண்டறியப்படுவீர்கள். மேலும், எவரிடம் தீமையின் விதை உள்ளதோ அவர் இந்த அறிவுரையின்படி நிலைத்திருக்க முடியாது.” (இஷ்திஹார் 29.5.1898 தப்லீகே ரிஸாலத் தொகுதி 7 பக்கம் 42,43)

## நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள்

அடுத்து, நம்பிக்கை துரோகத்தைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்: “தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்பவர்களின் சார்பாக நீர் வாதாட வேண்டாம். நிச்சயமாக நம்பிக்கை துரோகிகளான பெரும் பாவிகளை அல்லாஹ் நேசிப்பதில்லை.” (4:108)

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“எவர் உம்மிடம் ஒரு பொருளை அமானிதமாக வைக்கின்றாரோ அவருக்கு அவருடைய அமானிதத்தை திருப்பிக் கொடுத்து விடுங்கள். உங்களிடம் நம்பிக்கைத் துரோகமாக நடந்து கொண்டவரிடமும் நீங்கள் ஒருபோதும் நம்பிக்கை துரோகமாக நடந்து கொள்ளாதீர்கள்.”

(அபூதாவூத் - கிதாபுல் புயூ)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"தீமையை கைவிடுதல் என்பதில் இரண்டாவது வகை அமானிதம், நேர்மை என்று சொல்லப்படும் ஒழுக்கமாகும். அதாவது பிறருடைய செல்வத்தை அநியாயமாகவோ அல்லது தீய எண்ணத்துடனோ கைப்பற்றி அவருக்கு துன்பம் கொடுப்பதில் திருப்தி கொள்ளாதிருத்தல். எனவே, அமானிதம் நேர்மை என்பது மனிதனுடைய இயல்பான நிலைமைகளில் உள்ள ஒரு நிலையாகும். இதன் காரணமாகத்தான் தன் குறைந்த வயதின் காரணமாக இன்னும் இயல்பான எளிமையில் இருக்கின்ற, தனது குறைந்த வயதின் காரணமாக இதுவரை தனது தீய பழக்கங்களுக்கு அடிமையாகாத, பால் குடிக்கும் குழந்தை கூட எந்த அளவுக்கு மற்றவர்களின் பொருளை வெறுக்கின்றதென்றால் மற்ற பெண்ணின் பாலைக் கூட கஷ்டப்பட்டு குடிக்கிறது." (இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம், ரூஹானி கஸாயின் தொகுதி 10, பக்கம் 344)

## குழப்பத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்

**அடுத்து குழப்பத்தைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்:**

"அல்லாஹ் உமக்கு வழங்கியதிலிருந்து மறுமையின் வீட்டை சம்பாதிக்க ஆசைப்படு. உலகத்திலும் உனக்குரிய குறிப்பிட்ட பங்கை புறக்கணித்து விடாதே. அல்லாஹ் உம்முடன் அழகிய முறையில் நடந்து கொண்டது போன்று, நீயும் அழகிய முறையில் நடந்து கொள். மேலும் பூமியில் நீ குழப்பத்தை (பரப்ப) விரும்ப வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் குழப்பம் விளைவிப்பவர்களை நேசிப்பதில்லை". (28:78)

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"போர் இரண்டு வகைப்படும். ஒன்று, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இமாமுக்கு கட்டுப்படுதல். அத்தகையவர் தனது சிறந்த செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கின்றார். மேலும் தன்னுடன் பயணம் செய்பவருக்கு வசதி செய்து கொடுக்கின்றார். மேலும் குழப்பத்திலிருந்து விலகி இருக்கின்றார். எனவே அவரின் தூங்குவதும் விழித்திருப்பதும் எல்லாம் நற்கூலிக்குரியதாகும். இன்னொருவர், பெருமைக்காக, காட்டுவதற்காக, தனது வீர சம்பவங்களை கூறுவதற்காக போர் செய்கின்றார். அத்தகையவர் இமாமுக்கு மாறு செய்கின்றார். மேலும் பூமியில் குழப்பத்தை பரப்புகிறார். எனவே அப்படிப்பட்டவர் முன்னர் கூறப்பட்டவருக்கு நிகரானவராக திரும்பமாட்டார்."

(சுனன் அபீதாவூத் - கிதாபுல் ஜிஹாத்)

**யஸீதின் மகள் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

"உங்களில் மிகச் சிறந்த மக்களைப் பற்றி நான் உங்களுக்கு சொல்லட்டுமா? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஏன் இல்லை? கண்டிப்பாக சொல்லுங்கள் என தோழர்கள் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) கூறினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதாவது நல்ல காட்சியைக் காணும்போது இறை தியானத்தில் ஈடுபடுபவர்களே அவர்கள் என்று கூறினார்கள். பிறகு உங்களில் மிகத் தீய மக்களைப் பற்றி நான் உங்களுக்கு கூறட்டுமா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். புறம்பேசும் நோக்கத்துடன் நடமாடிக் கொண்டிருப்பவர்கள். அன்பு கொண்டிருப்பவர்களுக்கு மத்தியில் சீர்குலைவை ஏற்படுத்தக் கூடியவர்கள். மேலும், கட்டுப்படுபவர்களைப் பற்றி அவர்கள் பாவங்களில் ஈடுபடட்டும் என ஆசைப்படுபவர்கள்தான் மக்களில் மிகத் தீயவர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்."

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 459 பைரூத் வெளியீடு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"இறைவனால் நிலைநாட்டப்பட்ட இயக்கத்தில் நீங்கள் இணைந்துள்ளீர்கள் என்ற காரணத்தினால் மட்டும் உங்களை விட்டு விலகி தனியாக இருக்கும் (அஹ்மதி அல்லாதவர்களாகிய) அவர்களுடன் சண்டை, சச்சரவுகள் செய்யாதீர்கள். மாறாக, அல்லாஹ் தன் அருளினால் உங்களுக்கு வழங்கியுள்ள அந்த அகப்பார்வையையும், இறை ஞானத்தையும் அவர்களுக்கும் வழங்க அவர்களுக்காக மறைமுகமாக

துஆ செய்யுங்கள். நீங்கள் நல்ல வழியை மேற்கொண்டுள்ளீர்கள் என்பதை நீங்கள் உங்கள் தூய முன்மாதிரி மற்றும் உயர்ந்த நடத்தைகளினால் நிரூபித்துக் காட்டுங்கள். பாருங்கள்! மீண்டும் மீண்டும் உங்களுக்கு வழிகாட்ட நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். எல்லாவித குழப்பங்களில் இருந்தும் தீமை ஏற்படும் இடங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுங்கள். ஏச்சுப் பேச்சுகளைக் கேட்ட பிறகும் பொறுமையாக இருங்கள். தீமைக்கு நன்மையின் மூலம் பதிலடி கொடுங்கள். எவராவது குழப்பம் செய்யத் தயாரானால் நீங்கள் அந்த இடத்திலிருந்து நழுவி விடுவது சிறந்தது. மேலும் மென்மையாக பதில் சொல்லுங்கள். இன்னார் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவராக இருந்து கொண்டு மற்றவருடன் சண்டையிட்டார் என்பதை நான் கேள்விப்படும்போது அதனை நான் ஒருபோதும் விரும்பவில்லை. மேலும் உலகத்தில் முன்மாதிரியாக விளங்கவிருக்கின்ற ஒரு ஜமாஅத், இறையச்சத்தின் வழி அல்லாத பிற வழியை மேற்கொள்வதை இறைவனும் விரும்புவதில்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த ஜமாஅத்தில் இணைந்து சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ளவில்லையென்றால், அவர் இந்த ஜமாஅத்தில் இணைந்தவராகமாட்டார் என்பதையும் அல்லாஹ் வலியுறுத்திக் கூறியுள்ளான். மிகவும் ஆவேசம் கொள்வதற்கு ஒரு காரணம், நான் அசிங்கமாக திட்டப்படுகிறேன் என்பதுமாகும். இந்த விவகாரத்தை இறைவனிடம் விட்டு விடுங்கள். நீங்கள் அந்த ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டும் பொறுத்தும் சகித்தும் கொள்ளுங்கள்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 157 புதிய பதிப்பு)

## கிளர்ச்சி செய்யும் வழிகளிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள்

பிறகு பைஅத்தின் இரண்டாவது நிபந்தனையிலேயே கிளர்ச்சி செய்யும் வழிகளிலிருந்து தப்பித்துக் கொள்வேன் என்று உள்ளது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**“வ காத்திலூஹும் ஹத்தா லா தகூன ஃபித்னத்துன் வயகூனத்தீனு லில்லாஹ்** (2:194) அதாவது அவர்களின் கிளர்ச்சி விலகும் அளவுக்கு நீங்கள் அவர்களுடன் போரிடுங்கள். மேலும்



மார்க்கத்திற்கான தடைகள் நீங்க வேண்டும். ஆட்சி,அல்லாஹ்வுடைய மார்க்கத்திற்காக இருக்க வேண்டும். அடுத்து (அல்லாஹ்) கூறுகிறான்: **குல் கிதாலுன் ஃபீஹீ கபீர். வஸத்துன் அன் சபீலில்லாஹி வகுஃப்ரும் பிஹீ வல் மஸ்ஜிதில் ஹராமி வஇக்ராஜு அஹ்லிஹீ மின்ஹு அக்பரு இந்தல்லாஹ். வல்ஃபித்னத்து அக்பரு மினல் கத்ல். வலாயஸாலூன யுகாதிலூனக்கும் ஹத்தா யருத்தூக்கும் அன்தீனிக்கும் இனிஸ்ததாவூ** (2:218) அதாவது கண்ணியத்திற்குரிய மாதத்தில் கொலை செய்வது பாவம்தான். ஆனால் இறைவனுடைய வழியிலிருந்து தடுப்பதும் இறைவனை நிராகரிப்பதும், அல்லாஹ்வின் நல்லடியார்களை புனிதப் பள்ளியிலிருந்து வெளியேற்றுவதும் மிகப்பெரும் பாவமாகும். கிளர்ச்சியைப் பரப்புவதும், அதாவது நிம்மதியைக் குலைப்பது கொலையை விடக் கொடியது.”

( ஜங்கே முகத்தஸ் ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 255)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இன்றைய நாட்களில் பெரும்பாலும் இந்துக்களிலும், முஸ்லிம்களிலும் சில அறிவிலிகள், விசமிகள் அரசாங்கத்திற்கு எதிராக எத்தகைய செயல்களைச் செய்கின்றனர் என்றால் அதனால் கிளர்ச்சியின் நாற்றம் வீசுகிறது. இன்னும் சொல்லப்போனால் ஏதாவதொரு நேரத்தில் கிளர்ச்சி செய்யும் பண்பு அவர்களின் இயல்புகளில் உருவாகி விடும் என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. எனவே, பஞ்சாபின் பல்வேறு இடங்களிலும் இந்தியாவிலுள்ள என் ஜமாஅத்தைச் சேர்ந்த மக்களிடம் – அவர்களின் எண்ணிக்கை அல்லாஹ்வின் அருளால் பல இலட்சங்களை எட்டி விட்டது. அவர்களுக்கு நான் வலியுறுத்திக் கூறுவதாவது, 26 ஆண்டு காலமாக சொற்பொழிவின் மூலமாகவும், எழுத்து மூலமாகவும் அவர்களின் சிந்தனையில் நான் பதிய வைத்து வந்த எனது அந்த போதனையை நன்றாக நினைவில் வையுங்கள். அதாவது, அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு முழுமையாகக் கட்டுப்பட வேண்டும். ஏனெனில் அது நமக்கு நன்மை செய்யும் அரசாங்கமாகும்..... இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஏதாவது கிளர்ச்சியான சிந்தனையை உள்ளத்தில் வைத்திருப்பவர் என் ஜமாஅத்தில் இணைய முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்; நன்றாக

ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எந்த அரசாங்கத்தின் மூலமாக அநியாயக்காரர்களின் பிடியிலிருந்து நாம் காப்பாற்றப்படுகிறோமோ – எந்த அரசாங்கத்தின் நிழலின் கீழ் நமது ஜமாஅத் முன்னேற்றமடைகிறதோ அதன் நன்மைகளுக்கு நாம் நன்றி காட்டாதிருப்பது, என்னைப் பொருத்தவரை மிகவும் கீழ்த்தரமானதாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: ஹல் ஜஸாவுல் இஹ்ஸானி இல்லல் இஹ்ஸான் – அதாவது நன்மைக்கு ஈடு நன்மைதான். எவர் மனிதனுக்கு நன்றி பாராட்டவில்லையோ அவர் இறைவனுக்கும் நன்றி பாராட்டவில்லை என ஹதீஸிலும் வந்துள்ளது. நீங்கள் இந்த அரசாங்கத்தின் நிழலிலிருந்து வெளியே சென்று விட்டால், பின்னர் உங்களுக்கு எங்கே புகலிடம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். உங்களை தன் பாதுகாப்பில் எடுத்துக் கொள்ளும் ஏதாவதொரு அரசாங்கத்தைக் கூறுங்கள் பார்க்கலாம். ஒவ்வொரு இஸ்லாமிய அரசாங்கமும் உங்களைக் கொல்வதற்கு பற்களைக் கடித்துக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் அவர்களின் பார்வையில் நீங்கள் காஃபிராகவும், முர்தத்தாகவும் ஆகி விட்டீர்கள். அப்படியிருக்கும்போது இறைவனால் வழங்கப்பட்ட இந்த அருட்கொடைக்கு மதிப்பளியுங்கள்....

இரத்தம் சிந்தும் மஹ்தி வருவார்; கிறித்தவ மன்னர்களை சிறைப்பிடிப்பார் என்ற பகட்டுக் கொள்கைகளை தேவையில்லாமல் பரப்புவதால் நமது எதிரி முஸ்லிம்களின் உள்ளம் கருப்பாகவும், கடினமாகவும் ஆகிவிடுகின்றன. மேலும் இத்தகைய கொள்கை உடையவர்கள் பயங்கரமான மனிதர்களாவர். மேலும் இத்தகைய கொள்கை ஒரு காலத்தில் அறிவிலிகளுக்கு கிளர்ச்சிக்கு காரணமாக அமையும். எனவே, முஸ்லிம்கள் அத்தகைய கொள்கைகளிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்பது நமது முயற்சியாகும். மனித அனுதாபம் இல்லாத மார்க்கம் இறைவன் புறமிருந்துள்ளதாக இருக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். பூமியில் கருணை காட்டுங்கள். அப்போதுதான் வானத்தில் உங்கள் மீது கருணை காட்டப்படும் என்பதை இறைவன் நமக்கு கற்றுத் தந்துள்ளான்.

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 582-585)



## மன உணர்ச்சிகளினால் வெற்றி கொள்ளப்படாதிருத்தல்

பிறகு இதே இரண்டாவது நிபந்தனையில், மன உணர்ச்சியின் போது அவை தன்னை வெற்றி கொள்ளாது என்று வருகிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“ஆன்மீக நிலையின் 4 –வது படித்தரமாக அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகிறான்: **வல்லதீனஹும் லிஃபுரூஜிஹிம் ஹாஃபிலூன். (23:6)** அதாவது மூன்றாவது படித்தரத்தைக் கடந்த நம்பிக்கை கொண்டவர்கள் மன இச்சைகளிலிருந்தும், தடுக்கப்பட்ட உணர்வுகளில் இருந்தும் தம்மைக் காத்துக் கொள்கின்றனர். இது இறைவழியில் செலவு செய்கின்றனர் என்ற மூன்றாவது படித்தரத்தை விட ஏன் பெரியது என்றால், மூன்றாவது படித்தரத்தை உடைய நம்பிக்கையாளர், அவருடைய உயிருக்கு மிகவும் பிடித்தமான செல்வத்தை மட்டும் இறைவழியில் கொடுக்கின்றார். ஆனால், நான்காவது படித்தரத்தை உடைய நம்பிக்கையாளர் செல்வத்தை விடவும் அதிக பிடித்தமானதும், அன்பிற்குரியதுமானதை இறை வழியில் தியாகம் செய்கின்றார். அதாவது ஆபாச உணர்வுகளை, ஏனெனில் மனிதனுக்கு தனது ஆபாச உணர்வுடன் எந்த அளவுக்கு நேசம் என்றால், அவன் தன் ஆசைகளை நிறைவேற்றுவதற்காக தன் அன்பிற்குரிய செல்வத்தையும் தண்ணீரைப் போன்று செலவு செய்கின்றான். ஆபாச உணர்வுகளை நிறைவேற்றுவதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்களை நாசமாக்கி விடுகின்றான். மேலும் ஆபாசங்களைப் பெறுவதற்காக செல்வத்தை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. அத்தகைய அசுத்தமான இயல்பைக் கொண்ட கருமித்தனம் கொண்டவர்கள் தம் கருமித்தனத்தின் காரணமாக தேவையுடையவருக்கும், பசித்தவர்களுக்கும், ஆடை இல்லாதவர்களுக்கும் ஒரு பைசா கூட கொடுக்கமாட்டார்கள். ஆனால் மனத்தின் ஆபாச உணர்வுகளின் உந்துதலினால் வேசிப் பெண்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து தமது வீட்டை நாசமாக்கி விடுகின்றனர். எனவே ஆபாசம் என்ற வெள்ளம் எவ்வளவு வேகமானது என்றால், கருமித்தனம்

என்ற அசுத்தத்தைக் கூட அது அடித்துக் கொண்டு சென்று விடுகின்றது. எந்த ஈமானின் ஆற்றலினால் கருமித்தனம் நீங்குகின்றதோ, மனிதன் தனது அன்பிற்குரிய செல்வத்தை இறைவனுக்காகக் கொடுக்கின்றானோ அந்த ஈமானை விட, எதன் மூலமாக மனிதன் ஆபாச உணர்வுகள் என்னும் வெள்ளப்பெருக்கிலிருந்து தப்பிக்கின்றானோ அந்த ஈமானின் ஆற்றல் மிகவும் வலுவானதும், சய்த்தானை எதிர்ப்பதில் மிக கடுமையானதும், நீண்ட காலம் நிலைத்திருப்பதுமாகும். ஏனெனில் அதன் வேலை, நஃப்ஸே அம்மாரா என்னும் பழைய பாம்பை தனது கால்களின் கீழே நசுக்கி விடுகின்றது. மேலும் கருமித்தனமானது, ஆபாச உணர்வுகளை நிறைவேற்றும் துடிப்பிலும், தன்னை பெரியவனாக வெளிப்படுத்திக் காட்டும் நேரங்களிலும் நீங்கலாம். ஆனால் உள்ளத்தின் ஆபாச உணர்வுகள் மேலோங்குவதால் உருவாகும் இந்த வெள்ளப்பெருக்கு மிகக் கடுமையானதும், நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதுமாகும். அது இறைவனுடைய கருணையில்லாமல் நீங்கவே முடியாது. எவ்வாறு உடல் அமைப்பில் எல்லா உறுப்புகளிலும் எலும்பு மிக உறுதியானதாகவும் ஆயுள் நீண்டதாகவும் உள்ளதோ அவ்வாறே இந்த வெள்ளப்பெருக்கை தடுத்து அதிலிருந்து நம்மை அகற்றும் ஈமானின் ஆற்றலும் மிகவும் உறுதியானதாகவும், ஆயுள் நீண்டதாகவும் உள்ளது. அப்போதுதான் அதனால் அத்தகைய எதிரியை நீண்ட நேரமாக எதிர்த்து அழிக்க முடியும். அதுவும் இறைவனுடைய கருணையினால்தான் நடக்கும். ஏனெனில் மனத்தின் ஆபாச உணர்வுகள் என்னும் வெள்ளப்பெருக்கு எத்தகைய பயங்கரமானதென்றால் இறைவனின் சிறப்பான கருணையின்றி எவரும் இதிலிருந்து தப்பிக்க முடியாது. இதன் காரணமாகத்தான் **வமா உபர்ரிவு நஃப்ஸீ இன்னன் நஃப்ஸ லஅம்மாரத்தும் பிஸ்ஸூயி இல்லா மா ரஹிம ரப்பீ** என ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களுக்கு கூற வேண்டியது ஏற்பட்டது. (12:54) அதாவது, நான் எனது ஆன்மாவை குற்றத்திலிருந்து விடுதலை பெற்றதாக அறிவிக்கவில்லை. ஆன்மா மிகவும் அதிகமாக தீமையைக் கட்டளையிடக் கூடியதாக இருக்கிறது. இறைவனே கருணை காட்டாத வரை அதன் தாக்குதலிலிருந்து விடுதலை பெறுவது சாத்தியமில்லை. இந்த வசனத்தில் **இல்லா மா ரஹிம ரப்பீ** – என்



இறைவன் கருணை காட்டினால் அன்றி என வந்துள்ளதைப்போன்றே நூஹ் நபியின் காலத்தில் வந்த வெள்ளப்பெருக்கு பற்றி குறிப்பிடும் இடத்திலும் இதே மாதிரியான சொல் வந்துள்ளது. அதாவது அங்கு அல்லாஹ், **லா ஆஸிமல் யவ்ம மின் அம்ரில்லாஹி இல்லா மன் ரஹிம** – அவன் கருணை காட்டினால் அன்றி அல்லாஹ்வின் கட்டளையினால் இன்று எவரும் யாரையும் காப்பாற்ற முடியாது (11:44) என்று கூறுகிறான். எனவே மனத்தின் ஆபாசம் என்னும் இந்த வெள்ளப்பெருக்கு தனது வலிமையிலும் அபாயத்திலும் நூஹின் வெள்ளப்பெருக்கை ஒத்ததாகும் என்பதை இது குறிப்பிடுகிறது.”

(பராஹீனே அஹ்மதிய்யா பகுதி 5 ரூஹானி கஸாயின் தொகுதி 21 பக்கம் 205-206)

சுருக்கம் என்னவென்றால், தீய ஆசைகள் உங்களை வெற்றி கொள்ள எப்பொழுதும் முயற்சி செய்து கொண்டிருக்கும். அவற்றிலிருந்து எப்பொழுதும் தப்பிக்க வேண்டும். அல்லாஹ்விடமிருந்து கருணையைத் தேடியவாறு அவற்றிலிருந்து தப்பிக்க வேண்டும். இன்றைய காலத்தில் இதன் பல்வேறு வழிகள் மேலும் அதிகமாக திறக்கப்பட்டுள்ளது. எனவே முன்னரை விட அதிகமாக துஆ செய்ய வேண்டிய, அல்லாஹ்வின் பக்கம் குனிய வேண்டிய, அவனுடைய கருணையை வேண்ட வேண்டிய தேவை உள்ளது.

கவனமாக கேளுங்கள்! தூய மார்க்கமே அல்லாஹ்வின் மகிமைக்கு உகந்ததாகும். அவனையன்றி மற்றவர்களை நண்பர்களாக கொள்பவர்கள், அவர்கள் எங்களை அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்களாக ஆக்குகின்றனர் என்பதற்காகவே நாங்கள் அவர்களை வணங்குகின்றோம் (எனக் கூறுகின்றனர்). நிச்சயமாக அல்லாஹ், அவர்கள் கொண்டிருக்கும் கருத்து வேறுபாடு குறித்து அவர்களுக்கு இடையே தீர்ப்பு வழங்குவான். நிச்சயமாக பொய்யருக்கும் நன்றி கொன்றவர்க்கும் அல்லாஹ் நேர்வழி காட்டமாட்டான். (39:4)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“எத்தகைய இறைவனின் இருப்பின் மீத தவ்ராத், இஞ்சீல், திருக்குர்ஆன் மூன்றும் ஒன்றுபட்டுள்ளதோ அத்தகைய இறைவனை

ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த மூன்று வேதங்களிலும் ஒன்றுபட்ட சாட்சியினால் நிரூபணமாகாத எந்தவொரு இறைவனையும் உங்கள் சார்பாக உருவாக்காதீர்கள். அறிவும், பகுத்தறிவும் சாட்சி கூறுகின்ற, இறைவனுடைய வேதங்கள் ஒன்றுபட்டு கூறுகின்ற வி-யத்தை ஒப்புக் கொள்ளுங்கள். இறைவனின் வேதங்களில் பிரிவினையை உண்டாக்குகின்ற வகையில் இறைவனை ஏற்றுக் கொள்ளாதீர்கள். விபச்சாரம் செய்யாதீர்கள். பொய் கூறாதீர்கள். தீய பார்வை பார்க்காதீர்கள். எல்லா விதமான தீமை, கட்டுப்படாமை, அநீதியிழைத்தல், நம்பிக்கை துரோகம், குழப்பம், கிளர்ச்சி ஆகியவற்றின் வழிகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். மன உணர்ச்சிகளால் வெற்றி கொள்ளப்படாதீர்கள். மேலும் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுங்கள். மனித இயல்பில் ஐந்து வகையான புரட்சிகளே வருகின்றன. மேலும் நமது நபி கரீம் (ஸல்) அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருங்கள். அவர்களின் மீது சலவாத் ஓதுங்கள். ஏனெனில் அவர்தான் இருண்ட காலத்திற்குப் பிறகு புதிதாக இறைவனைப் புரிந்து கொள்ளும் வழியைக் காட்டித் தந்தார்கள்.”

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இது எனது இயக்கத்தின் தனிச் சிறப்பான அடையாளமாக விளங்கும் எனது இயக்கத்தின் கொள்கையாகும். மனித அனுதாபம், மனித குலத்திற்கு துன்பமிழைப்பதை கைவிடுதல், ஆட்சியாளர்களை எதிர்ப்பதை விட்டு விடுதல் ஆகியவற்றிற்கு இவ்வியக்கம் எத்தகைய அடிப்படையை நாட்டியுள்ளதோ அது மற்ற முஸ்லிம்களிடம் காணப்படவில்லை. அவர்களுடைய கொள்கைகள் தனது எண்ணற்ற தவறுகளின் காரணமாக வேறுவகைப்பட்டவையாகும். அதனை விளக்கிக் கூறத் தேவையில்லை. மேலும், இது அதற்கான சந்தர்ப்பமும் அல்ல.”

(ஸமீமா தர்யாகுல் குலூப். ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 524 - 526)



# பைஅத்தின் மூன்றாவது நிபந்தனை

**“இறைவன் மற்றும் இறை தூதரின் கட்டளையின்படி ஐவேளை தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன். மேலும் இயன்றவரை தஹஜ்ஜுத் தொழுவதிலும், நமது நமது கரீம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதிலும், நாள்தோறும் எனது பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்பதிலும் பாவமன்னிப்புத் தேடுவதிலும் தொடர்ந்து ஈடுபட்டிருப்பேன். மேலும் இறைவனுடைய அருள்களை மனமாற நினைவு கூர்ந்து அவனைப் புகழ்வதிலும், பாராட்டுவதிலும் நாள்தோறும் ஈடுபட்டிருப்பேன்.”**

## ஐவேளை தொழுகைகளை முறையாக பேணுங்கள்

இந்த நிபந்தனையில் கூறப்பட்ட விசயங்களில் ஒன்று, இறைவன் மற்றும் இறைதூதரின் கட்டளைப்படி ஐவேளைத் தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன் என்பதாகும். தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழ வேண்டும் என்பது ஆண்கள், பெண்கள், 10 வயது நிரம்பிய பிள்ளைகளுக்கும் கூட அல்லாஹ்வும் ரஸூலும் இட்ட கட்டளையாகும். ஆண்களுக்கு ஜமாஅத்தாகத் தொழ வேண்டும் என்ற கட்டளை இருக்கிறது. பள்ளிவாசல்களுக்கு செல்லுங்கள். அவற்றை நிரப்புங்கள். இறைவனின் அருளைத் தேடுங்கள். ஐவேளை தொழுகைகள் விசயத்தில் எந்த சலுகையும் கிடையாது. பயணத்தின்போது தொழுகைகளை கஸர் (தொழுகையை சுருக்கித் தொழுவது) செய்யலாம். பயணத்தின்போதும், நோயின்போதும் தொழுகைகளை ஜமஅ (தொழுகைகளை சேர்த்து தொழுவது) செய்யலாம். நோய்வாய்ப்பட்டிருக்கும்போது பள்ளிவாயில் செல்லாமல் இருக்க சலுகை உள்ளதென்றால் இதிலிருந்தே (மற்ற நாட்களில்) ஜமாஅத்தாகத் தொழுவதற்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பது தெரிய வேண்டும்.

இப்போது நான் இதன் முக்கியத்துவத்தைப் பற்றி இன்னும் சில மேற்கோள்களை எடுத்துரைக்கிறேன். ஆனால் ஒன்றைக் கூறிக் கொள்கிறேன். பைஅத் செய்த ஒவ்வொருவரும், நாம் நம்மை விற்று விட்டதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் திருக்குர்ஆனின் தெளிவான இந்தக் கட்டளையைப் பேணவும் செய்கின்றோமா இல்லையா என தன்னைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். ஒவ்வோர் அஹ்மதியும் தன் மனதிற்கு, தானே அறிவுரை வழங்குபவராவார். அவர்கள் தாமே பரிசீலிக்கட்டும். தாமே பார்க்கட்டும். நாமே நம்மை பரிசீலித்தால், சீர்தூக்கிப் பார்த்தால் ஒரு மகத்தான புரட்சி ஏற்படலாம்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தை நிறைவேற்றுங்கள். தூதருக்குக் கட்டுப்படுங்கள். உங்கள் மீது கருணை காட்டப்படும். (24:57) அடுத்து, நிச்சயமாக நானே அல்லாஹ். என்னையன்றி வணக்கத்திற்குரியவர் எவருமில்லை. எனவே என்னை வணங்குங்கள். மேலும் என்னை நினைவு கூர்வதற்காக தொழுகையை நிலைநாட்டுங்கள். (20:15) இவ்வாறு தொழுகையைப் பற்றி திருக்குர்ஆனில் பல இடங்களில் கட்டளை வந்துள்ளது.

**ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“தொழுகையை விட்டு விடுவது மனிதனை ஷிர்க் மற்றும் குஃப்ருக்கு அருகில் கொண்டு சென்று விடுகிறது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன்.” (முஸ்லிம் கிதாபுல் ஈமான்)

எனது கண்களின் குளிர்ச்சி தொழுகையாகும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “மறுமை நாளில் அடியாரிடம் முதன்முதலாக விசாரிக்கப்படுவது தொழுகை பற்றியதாகும். அந்த கணக்கு சரியாகி விட்டால் அவர் வெற்றியடைந்து விட்டார். மேலும் அவர் ஈடேற்றம் அடைந்து விட்டார். இந்த கணக்கு மோசமானதாக இருந்தால் அவர் தோல்வியடைந்து விட்டார். மேலும் அவர் நஷ்டமடைந்து விட்டார். அவரது



கடமைகளில் ஏதாவது குறைவு இருந்தால் எனது அடியானுடைய நஃபில்கள் ஏதாவது இருக்கின்றனவா என்பதை பாருங்கள் என்று அல்லாஹ் கூறுவான். நஃபில்கள் இருந்தால் அவற்றின் மூலமாக கடமைகளில் உள்ள குறைவு முழுமை செய்யப்படும். இவ்வாறே அவருடைய மற்ற செயல்களும் பார்க்கப்படும். அவை பரிசீலிக்கப்படும். (திர்மிதி கிதாபுஸ் ஸலாத்)

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருவரது வீட்டின் கதவருகில் நதி ஓதிக் கொண்டிருக்கின்றது. அதில் ஒரு நாளைக்கு அவர் ஐந்துவேளை குளிக்கின்றார். அவரது உடலில் ஏதாவது அழுக்கு இருக்க முடியுமா? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எந்த அழுக்கும் இருக்காது என சஹாபாக்கள் கூறினார்கள். ஐவேளை தொழுகைக்கும் இதுதான் உதாரணமாகும். அல்லாஹ் அவற்றின் மூலமாக பாவங்களை மன்னிக்கின்றான். மேலும் பலவீனங்களை அகற்றுகின்றான் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி கிதாப் மவாகீதுஸ்ஸலாத்)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“தொழுங்கள்; தொழுங்கள். அது எல்லா நற்பாக்கியங்களுக்கும் திறவுகோல் ஆகும்.” (இஸாலே அவ்ஹாம் பக்கம் 829 முதல் பதிப்பு)

**மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்:** “தொழுகையின் சத்தும், ஆன்மாவும் துஆவாகும்.”

(அய்யாமுஸ் ஸுல்ஹ் ரூஹானி கஸாயின் தொகுதி 14 பக்கம் 241)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

“என் ஜமாஅத்தில் இணைந்தவராக தன்னைக் கருதிக் கொள்ளும் அனைத்து மக்களே! நீங்கள் உண்மையிலேயே இறையச்சத்தின் வழிகளில் காலெடுத்து வைக்கும்போதுதான் வானத்தில் நீங்கள் என் ஜமாஅத்தைச் சேர்ந்தவராக கருதப்படுவீர்கள். எனவே நீங்கள் இறைவனைப் பார்க்கின்றீர்கள் என்பது போன்று உங்கள் ஐவேளை தொழுகைகளை அச்சத்துடனும் இறைவன் முன்னிலையில் நின்றவாறும் தொழுங்கள்.

மேலும் உங்கள் நோன்புகளை இறைவனுக்காக உண்மையுடன் நிறைவேற்றுங்கள். ஸகாத் கொடுக்க உரிமை பெற்றவர்கள் ஸகாத் கொடுங்கள். எவர்மீது ஹஜ் கடமையாகி விட்டதோ, எந்த தடையும் இல்லையோ அவர் ஹஜ் செய்யட்டும். நன்மையை அழகுபடுத்தி நிறைவேற்றுங்கள். மேலும் தீமையை வெறுத்து, விட்டு விடுங்கள். இறையச்சமில்லாத எந்தவொரு செயலும் இறைவன் வரை சென்றடையாது என்பதை உறுதியாக நினைவில் கொள்ளுங்கள். எல்லா நன்மைகளின் வேர் இறையச்சமாகும். எந்த செயலில் இந்த வேர் வீணாகாதோ அந்த செயலும் வீணாகாது.” (கிஷ்தி நூஹ் - ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 15)

**அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்:**

“தொழுகை என்பது என்ன? அது தஸ்பீஹ், தஹ்மீது, இஸ்திக்ஃபார் மற்றும் சலவாத் ஆகியவற்றோடு மன்றாடலுடன் வேண்டப்படும் துஆவாகும். எனவே நீங்கள் தொழும்போது அறியாத மக்களைப் போன்று உங்கள் துஆக்களில் வெறும் அரபிச் சொற்களை மட்டும் பின்பற்றாதீர்கள். ஏனெனில் அத்தகையவர்களின் தொழுகை, இஸ்திக்ஃபார் எல்லாம் சம்பிரதாயங்களாகும். அவற்றுடன் எந்த உண்மையும் இல்லை. ஆனால் நீங்கள் தொழும்போது இறைவனின் வார்த்தைகளாகிய திருக்குர்ஆனையும், இறைதூதரின் வார்த்தைகளாகிய சுன்னத்தான துஆக்களையும் தவிர மற்ற எல்லா பொதுவான துஆக்களிலும் உங்கள் தாய்மொழியிலேயே உருக்கமான வார்த்தைகளை பயன்படுத்துங்கள். அப்போதுதான் அந்த பணிவின், உருக்கத்தின் ஏதாவதொரு தாக்கம் உங்கள் உள்ளங்களில் ஏற்படும்.” (கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 68-69)

**அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“தொழுகை எத்தகையதென்றால், அதன் மூலமாக வானம் மனிதனுக்கு முன்னால் குனிகின்றது. தொழுகையை உரிய முறையில் தொழுகின்றவர், தான் இறந்து விட்டதாகவும், தனது ஆன்மா உருகி இறைவன் மடியில் விழுந்துவிட்டதாகவும் கருதுகிறார்.... எந்த வீட்டில் இந்த மாதிரியான தொழுகை இருக்குமோ அந்த வீடு ஒருபோதும் நாசமாகாது.



நூஹ் (அலை) அவர்களின் காலத்தில் தொழுகை இருந்தால், அந்த சமுதாயம் ஒருபோதும் வீணாகியிருக்காது என நபிமொழியில் இருக்கிறது. மனிதனுக்கு ஹஜ்ஜும் நிபந்தனைக்குரியதாகும். நோன்பும் நிபந்தனைக்குரியதாகும். ஸக்காத்தும் நிபந்தனைக்குரியதாகும். ஆனால் தொழுகை நிபந்தனைக்குரியதல்ல. (மற்றவையெல்லாம்) ஆண்டில் ஒருமுறை நிறைவேற்றுவதாகும். ஆனால் தொழுகை தினசரி ஐந்து வேளை நிறைவேற்ற வேண்டும். எனவே முழுமையான தொழுகை இல்லாதவரை தொழுகையிலிருந்து கிடைக்கும் பரக்கத்தும் கிடைக்காது. மேலும் இந்த பைஅத்திற்கு பயனும் இருக்காது.” (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 627 புதிய பதிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“தொழுகை ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு சமுதாயத்தினர் வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் தொழாமல் இருக்க அனுமதி தாருங்கள். ஏனென்றால் நாங்கள் வேலை செய்பவர்களாக இருக்கின்றோம். விலங்குகளை பராமரிப்பதால் எங்கள் ஆடைகள் சுத்தமாக இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கில்லை. மேலும் ஓய்வும் எங்களுக்கில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். இதனைக் கேட்ட அவர்கள் பாருங்கள்! தொழுகை இல்லையென்றால் வேறு என்னதான் இருக்கும்? தொழுகை இல்லாத மார்க்கம், மார்க்கமாகாது என்று பதில் கூறினார்கள்.

தொழுகை என்றால் என்ன? அது தான் பணிவான உருக்கத்துடன் மன்றாடுவதையும் தமது பலவீனங்களையும் இறைவன் முன் எடுத்து வைப்பதாகும். மேலும் இறைவனிடம் தனது தேவைகளை வேண்டுவதாகும். சில சமயங்களில் அவனது மகிமையை நிலைநாட்டவும் அவனது கட்டளைகளை செயல்படுத்துவதற்காக கைகட்டி நிற்பதும் சில சமயங்களில் முழுமையான தாழ்மையுடனும் பணிவுடனும் அவன் முன்னால் சஜ்தாவில் வீழ்ந்து அவனிடம் தனது தேவைகளை கேட்பதுதான் தொழுகையாகும். சில நேரங்களில் ஒரு பிச்சைக்காரனைப் போன்று யாரிடம் அவன் பிச்சைக் கேட்கின்றானோ அவனை புகழ்வதும் அவனது வல்லமையையும்

மகிமையையும் எடுத்துக்கூறி அவனது கருணையை தூண்டியவாறு அவனிடம் வேண்டுவதுதான் தொழுகையாகும். எந்த மார்க்கத்தில் அது இல்லையோ அது மார்க்கமன்று.

மனிதன் எல்லா நேரமும் தேவையுடையவனாக இருக்கின்றான். அவன் இறைவனிடம் அவனது திருப்தியின் வழிகளை கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். அவனது அருளைஅவனிடமிருந்தே கேட்டு பெற வேண்டும். ஏனென்றால், அவன் தரும் வாய்ப்பின் மூலமாகத்தான் ஏதாவது செய்ய முடியும். இறைவா! நாங்கள் உனக்காக ஆகிவிடும் நற்பேற்றை வழங்குவாயாக! நாங்கள் உன்னுடைய திருப்திக்கேற்ப செயல்பட்டு உன்னை திருப்திப்படுத்த வேண்டும். இறைவன் மீதுள்ள அன்பு, அவன் மீது இருக்கும் அச்சம், அவனது நினைவில் உள்ளம் ஒன்றியிருத்தல் ஆகியவற்றின் பெயர்தான் தொழுகை. மேலும் இதுவே மார்க்கமாகும்.

எவர் தொழுகையிலிருந்தும் ஓய்வு பெற விரும்புகின்றாரோ அவர் விலங்குகளை விட அதிகமாக என்ன செய்துள்ளார்? விலங்குகளைப் போன்று உண்பதும், குடிப்பதும், தூங்குவதும் தான் அவனிடமும் இருக்கின்றதென்றால் இது ஒருபோதும் மார்க்கம் அல்ல. இது நிராகரிப்பவர்களின் வாழ்க்கையாகும். எந்த நொடியில் கவனமின்மை வந்து விடுகிறதோ அந்த நொடியில்தான் ஒருவர் காஃபிராகின்றார் என்ற விசயம் முற்றிலும் உண்மையானதும் சரியானதுமாகும்.

**(தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) தொகுதி 3 பக்கம் 611,612 புதிய வெளியீடு, ரப்வா)**

தொழுகையில் எவ்வாறு இன்பம் கிடைக்கும்? இதுபற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இறைவா! நான் எவ்வளவு குருடனாக இருக்கின்றேன் என்பதை நீ பார்க்கின்றாய். நான் பார்வையற்றவன். மேலும் இப்போது நான் முற்றிலும் இறந்த நிலையில் இருக்கின்றேன். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு எனக்கு ஓசை வரும் என்பதை நான் அறிவேன். அப்போது நான் உன்னை நோக்கி வருவேன். அப்போது யாரும் என்னை தடுக்க முடியாது. ஆனால் எனது உள்ளம் குருடாகவும், கண்டு கொள்ளாததாகவும் உள்ளது. இதில் உனது அன்பும், நேசமும் உருவாகும் அளவுக்கு நீ இதில் ஒளிப்பிழம்பை



இறக்குவாயாக. நான் குருடனாக எழுப்பப்படாதிருக்கவும் குருடர்களுடன் சேர்ந்து விடாதிருக்கவும் நீ அருள்புரிவாயாக. இவ்விதமான துஆவை அவர் கேட்டால், அதில் நிலைத்திருந்தால், அவர் காண்பார். ஒரு காலம் வரும். ஆர்வம் இல்லாத அவருடைய தொழுகையில் ஒன்று வானத்திலிருந்து அவர் மீது விழும். அது உருக்கத்தை உருவாக்கி விடும்.”

**(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 616 புதிய பதிப்பு)**

## தஹஜ்ஜுத் தொழுகையை பேணுங்கள்

அடுத்து பைஅத்தின் மூன்றாவது நிபந்தனையில் தஹஜ்ஜுத் தொழுகை தொழுவேன் என்பதும் இருக்கின்றது.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

“சூரியன் சாய்ந்த நேரத்திலிருந்து இரவில் நன்றாக இருட்டிவிடும் நேரம் வரை பல்வேறு நேரங்களில் தொழுகையினை மிகச்சிறந்த முறையில் நிறைவேற்றுவீராக. அதிகாலையில் குர்ஆன் ஓதுவதையும் (கட்டாயமாக்கி கொள்வீராக). அதிகாலையில் குர்ஆன் ஓதுவது (அல்லாஹ்விடத்தில்) நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும் (ஒரு) செயலாகும்.

இரவிலும் நீர் (இந்தக் குர்ஆனைத்) தஹஜ்ஜுத் தொழுகையில் ஓதுவதற்காக சிறிது துயில் கொண்டதன் பின்னர் விழித்துக் கொள்க. இது உமக்கு அதிகப்படியான ஒரு வெகுமதியாகும். இதனால் உம்முடைய இறைவன் உம்மைப் புகழுக்குரிய இடத்திற்கு உயர்த்தக்கூடும்.” (17:79,80)

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“நீங்கள் தஹஜ்ஜுத் தொழுகையை தொடர்ந்து தொழ வேண்டும். ஏனென்றால், இதுதான் கடந்த கால நல்லவர்களின் வழிமுறையாக இருந்தது. மேலும், இதுவே இறைநெருக்கம் கிடைப்பதற்கான வழியாகும். இந்த பழக்கமானது பாவங்களை தடுக்கின்றது. தீமைகளை அழிக்கின்றது. பௌதீக நோய்களில் இருந்து பாதுகாக்கின்றது.”

**(திர்மிதி அப்வாபுத் தஃவாத்)**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"இரவின் கடைசி நேரம் வரும்போது அல்லாஹ் உலகத்தின் வானத்தில் இறங்கி வருகிறான். என்னிடம் துஆ கேட்பவர் எவராவது இருக்கின்றாரா? நான் அவருடைய துஆவை ஒப்புக் கொள்கிறேன் என்று கூறுகிறான். மேலும் என்னிடம் பாவமன்னிப்புக் கேட்பவர் எவராவது இருக்கின்றாரா? நான் அவரை மன்னிப்பதற்கு என்று கூறுகிறான். மேலும் என்னிடம் ரிஸ்க் கேட்பவர் எவராவது இருக்கின்றாரா? நான் அவருக்கு ரிஸ்க் வழங்குவதற்கு என்று கூறுகிறான். மேலும் தன் துன்பத்தை நீக்குவதற்காக துஆ செய்பவர் எவராவது இருக்கின்றாரா? நான் அவருடைய துன்பத்தை நீக்குவதற்கு என்று அல்லாஹ் கூறுகிறான். காலை விடியும் வரை அல்லாஹ் இவ்வாறே கூறிக் கொண்டிருக்கின்றான்."

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 521 பைரூத் வெளியீடு)

ஆக, பலர் துஆவுக்காக எழுதுகின்றார்கள். அவர்களும் இந்த வழிமுறைகளின்படி செயல்பட்டால், அல்லாஹ்வின் அருள்களின் மழை இறங்குவதைப் பார்ப்பார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருமுறை கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"எவர் எனது நண்பருடன் பகைமை கொள்வாரோ அவருடன் நான் போர் செய்வதற்கான அறிவிப்பை செய்கின்றேன். எனது அடியான் எனக்கு விருப்பமானவற்றிலிருந்தும் நான் அவன் மீது கடமையாக்கியுள்ளதில் இருந்தும் எந்த அளவு எனது நெருக்கத்தைப் பெற முடியுமோ, அந்த அளவு வேறு எவற்றாலும் பெற முடியாது. நஃபிலான செயல்கள் மூலம் எனது அடியான் என்னை நெருங்கி வருகின்றான். எதுவரையென்றால், நான் அவனிடம் அன்பு செலுத்துகின்றேன். மேலும் நான் அவனை நண்பனாக்கிக் கொள்ளும் போது அவன் கேட்கும் காதாக நான் ஆகி விடுகின்றேன். அவன் பார்க்கும் கண்ணாகவும் நான் ஆகிவிடுகின்றேன். அவன் பிடிக்கும் கையாகவும் நான் ஆகிவிடுகின்றேன். அவன் என்னிடம் கேட்டால் நான் அவனுக்கு வழங்குவேன். அவன் என்னிடம் அடைக்கலம் கேட்டால் நான் அடைக்கலம் வழங்குவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்." (புகாரி - கிதாபுர் ரிகாக்)



**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"எவர் இரவில் எழுந்து, தொழுது தன் மனைவியை எழுப்புகிறாரோ - மனைவி எழுவதற்கு கஷ்டப்பட்டால். அவள் எழுந்து நிற்பதற்காக அவருடைய முகத்தில் தண்ணீர் தெளிக்கின்றாரோ அத்தகையவர்கள் மீது அல்லாஹ் கருணை புரிவானாக. அவ்வாறே, எந்தப் பெண் இரவில் எழுந்து, தொழுது, தன் கணவரை எழுப்பி, கணவர் எழுவதற்கு கஷ்டப்பட்டால், அவர் எழுந்து நிற்பதற்காக அவருடைய முகத்தில் தண்ணீர் தெளிக்கின்றாரோ அத்தகைய பெண் மீது அல்லாஹ் கருணை புரிவானாக!"

(அபூதாவூது - கிதாபுஸ் ஸலாத்)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"நமது ஜமாஅத் தஹஜ்ஜுத் தொழுகையை கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும். அதிகமாக இல்லா விட்டாலும் இரண்டு ரக்அத்துகளே தொழட்டும். ஏனெனில் அவருக்கு துஆ செய்யும் வாய்ப்பு எப்படியும் கிடைத்து விடும். அந்த நேரத்திலுள்ள துஆக்களுக்கு ஒரு சிறப்பான தாக்கம் ஏற்படுகிறது. ஏனெனில் அவை உண்மையான வேதனையுடனும், உந்துதலுடனும் வெளி வருகின்றன. ஒரு சிறப்பான உருக்கமும், மன வேதனையும் இல்லையென்றால் ஒருவர் சொகுசான தூக்கத்திலிருந்து எப்போது விழித்தெழ முடியும்? எனவே அந்த நேரத்தில் எழுவதே ஒரு மன உருக்கத்தை உருவாக்கி விடுகிறது. துஆவால் உருக்கம், மன்றாடுதல் என்ற நிலை உருவாகி விடுகிறது. மேலும் இந்த மன்றாடுதலே துஆ கபூல் ஆவதற்கு காரணமாகி விடுகின்றது. ஆனால் அவர் எழுவதில் சோம்பேறித்தனத்தையும், அக்கறையின்மையையும் காட்டுகிறார் என்றால், அவர் வேதனையிலும், மன உருக்கத்திலும் இல்லை என்பது வெளிப்படை. ஏனெனில் தூக்கம் துக்கத்தை நீக்கி விடுகிறது. ஆனால் தூக்கத்திலிருந்து விழித்தெழுகிறார் என்றால் தூக்கத்தையும்விட ஏதோ ஒரு வேதனை, துக்கம் இருக்கின்றது. அது அவரை எழுப்புகிறது எனத் தெரிகிறது." (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 182 புதிய பதிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"இரவில் எழுங்கள். அல்லாஹ்தஆலா உங்களுக்கு தனது வழியைக் காட்ட துஆ செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களது சஹாபாக்களும்கூட படிப்படியாகத்தான் சீர்திருத்தத்தை பெற்றார்கள். முதலில் அவர்கள் எப்படி இருந்தார்கள்? ஒரு விவசாயி விதைத்த விதைகள் போன்று இருந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் நீர்ப்பாய்ச்சினார்கள். அவர்கள் தமது தோழர்களுக்காக துஆ செய்தார்கள். விதை சரியானதாக இருந்தது. அது விதைக்கப்பட்ட நிலமும் சிறந்ததாக இருந்தது. அதனால் அந்த நீர்ப்பாய்ச்சியதன் விளைவாக நல்ல கனிகள் வெளிவந்தன. அந்த நபித்தோழர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடந்தது போன்றே நடந்தார்கள். அவர்கள் பகலுக்காகவோ இரவுக்காகவோ காத்திருக்கவில்லை. நீங்களும் உண்மையான உள்ளத்துடன் தவ்பா செய்யுங்கள். தஹஜ்ஜுத் தொழ எழுங்கள். துஆ செய்யுங்கள். உள்ளத்தை சீர்திருத்துங்கள். பலவீனங்களை விட்டு விடுங்கள். மேலும் இறைவனின் திருப்திக்கேற்ப உங்களது சொல்லையும் செயலையும் அமைத்துக் கொள்ளுங்கள்." (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 28 புதிய பதிப்பு)

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதை தொடர்ந்து செய்து வாருங்கள்

பைஅத்தின் இதே மூன்றாவது நிபந்தனையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவேன். ஸலவாத் ஓத முயற்சி செய்து கொண்டிருப்பேன். அதைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவேன் என வாக்குறுதி கொடுக்கிறோம். இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

"நிச்சயமாக அல்லாஹ் இந்த நபியின் மீது தன் அருளைப் பொழிந்து கொண்டே இருக்கின்றான். மலக்குகளும் (இவருக்காக பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கின்றனர். எனவே) நம்பிக்கை கொண்டவர்களே! இந்த நபிக்கு எப்போதும் அருள்பொழியுமாறும் சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள்." (33:57)

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமரிப்னில் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டார்கள். பாங்கு சொல்பவர் பாங்கு சொல்ல நீங்கள் கேட்டால் அவர்



கூறும் அதே சொற்களை நீங்களும் கூறுங்கள். பிறகு என் மீது ஸலவாத் ஓதுங்கள். எவர் என் மீது ஸலவாத் ஓதினாரோ அல்லாஹ் அவர் மீது 10 மடங்கு அருள்களை இறக்குகின்றான். அடுத்து கூறினார்கள். எனக்காக அல்லாஹ்விடம் வஸீலாவை வேண்டுங்கள். அது சொர்க்கத்தின் படித்தரங்களில் ஒரு படித்தரம் ஆகும். அது அல்லாஹ்வின் அடியார்களில் ஓர் அடியாருக்கு கிடைக்கும். அது நான்தான் என நான் நம்புகிறேன். அல்லாஹ்விடம் எனக்காக எவர் வஸீலாவை வேண்டினாலும் அவருக்கு பரிந்துரை ஹலாலாகி விடும்." (ஸஹீஹ் முஸ்லிம் - கிதாபுஸ் ஸலாத்)

ஆக, இதனை அனைவரும் கவனத்தில் வைக்க வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக - இறைவன் வரை சென்றடைவதற்காக - தமது துஆக்கள் அல்லாஹ்விடம் கபூலாகும் படித்தரத்தை அடைவதற்காக நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும் என்று கூறியுள்ளார்கள். **அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லய்த்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்.**

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் ஆமிர் பின் ரபிஆ (ரலி) அறிவிக்கின்றார்கள்:**

"எவர் என் மீது ஸலவாத் ஓதுகின்றாரோ அவர் என் மீது ஸலவாத் ஓதிக் கொண்டிருக்கும் வரையில் மலக்குகள் அவருக்காக பிரார்த்தனை செய்து கொண்டிருப்பார்கள். அவர்கள் விரும்பினால் குறைவாகவும் துஆ செய்யலாம். அல்லது அவர்கள் விரும்பினால் (அவர் ஓதும் ஸலவாத்தை) விட அவருக்காக அதிகமாக துஆ செய்யலாம்."

**ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

"துஆ வானத்திற்கும் பூமிக்குமிடையில் நின்று விடுகின்றது. எதுவரை நீ நமது நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதவில்லையோ அதுவரை அவற்றிலிருந்து எந்த பகுதியும் (இறைவன் முன்பு சமர்ப்பிக்கப் -படுவதற்காக) மேலே செல்லாது. " (திர்மிதி - கிதாபுஸ்ஸலாத்)

**ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அப்தில்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:**

"மக்களில் எவர் என்மீது அதிகமாக ஸலவாத் ஓதியவராக இருப்பாரோ அவர்தான் மறுமை நாளில் எனக்கு மிக அருகில் இருப்பார்."

(திர்மதி - கிதாபுஸ்ஸலாத்)

ஸலவாத் ஓதுவதன் அருள்களைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** தமது சொந்த அனுபவங்களை இவ்வாறு கூறுகின்றார்கள்:

"நான் நீண்ட காலமாக தொடர்ந்து ஸலவாத் ஓதி வந்தேன். ஏனெனில் இறைவனின் வழிகள் மிகவும் நுண்ணிய வழிகள் என்பது எனது உறுதியான நம்பிக்கை ஆகும். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஸீலா இல்லாமல் கிடைக்க முடியாது. உதாரணமாக, **வப்தஹு இலைஹில் வஸீலத்த** என இறைவன் கூறுகிறான். அப்போது ஒரு நீண்ட காலத்திற்குப் பிறகு ஆன்மீகக் காட்சியில் நான் கண்டதாவது, இரண்டு மலக்குகள் வந்துள்ளனர். ஒருவர் உட்புறமான வழியின் மூலமாகவும், இன்னொருவர் வெளிப்புறமான வழியின் மூலமாக என் வீட்டில் நுழைந்துள்ளனர். மேலும் அவர்களின் முதுகுகளில் ஒளியின் குவளைகள் இருக்கின்றன. மேலும் அவர்கள் **ஹாதா பிமா ஸல்லய்த்த அலா முஹம்மதின்** – அதாவது, இந்த அருள்கள் நீர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதியதன் காரணமாக கிடைத்துள்ளன என்றனர்."

ஹகீகத்துல் வஹீ பக்கம் 128 -ல் உள்ள அடிக்குறிப்பு. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 131 -ல் உள்ள அடிக்குறிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"ஸலவாத் ஓதுவதன் மூலம் அல்லாஹ்வின் அருள்கள் வியக்கத்தக்க ஒளியின் வடிவத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பக்கம் செல்வதையும் அங்கு சென்ற பிறகு அவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நெஞ்சத்தில் ஊடுறுவதையும் நான் பார்க்கின்றேன். அந்த ஒளி அங்கிருந்து வெளியேறி எண்ணற்ற குழாய்களாக ஆகிவிடுகின்றன. அவற்றிலிருந்தும் உரிமை பெற்ற ஒவ்வொருவருக்குமுரிய பங்கு அவரது நேர்மைக்கேற்ப அவரை



சென்றடைகிறது. நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஊடகமாக கொள்ளாமல் எந்த ஒரு அருளும் மற்றவர்கள் வரை சென்றடையாது. ஸலவாத் ஓதுதல் என்றால் என்ன? அது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களது அரியணையை அசைப்பதாகும். அங்கிருந்தே இந்த ஒளியின் குழாய்கள் வெளிவருகின்றன. எவர் அல்லாஹ்வின் கருணையையும் அருளையும் பெற விரும்புகின்றாரோ அவர் அதிகமாக ஸலவாத் ஓதுவது கட்டாயமானதாகும். அதன் மூலமாகவே அந்த அருள்களில் அசைவு ஏற்படுகின்றது." (அல்ஹகம் 28.02.1903 பக்கம் 7)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"மனிதன் உண்மையில் அடிமையாவான். எஜமான் என்ன கட்டளையிட்டாலும் அதை ஏற்றுக் கொள்வது அடிமையின் பணியாகும். அவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அருள்களை பெற நீங்கள் விரும்பினால் அவர்களது அடிமைகளாக நீங்கள் ஆக வேண்டியது கட்டாயமானதாகும்."

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**குல் யா இபாதியல்லதீன அஸ்ரபூ அலா அன்புஸிஹிம்.**
(நபியே) நீர் கூறுவீராக. தமக்கே (பாவஞ் செய்து) அநீதியிழைத்து கொண்ட என் அடியார்களே! (39:54)

இங்கு அடியார்கள் என்பதன் கருத்து அடிமைகள் என்பதேயாகும். படைப்பினங்கள் என்பதல்ல. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களது அடிமையாவதற்கு நீங்கள் அவர்கள் மீது ஸலவாத் ஓதுவது அவசியமானதாகும். அவர்களது எந்த கட்டளைக்கும் நீங்கள் கீழ்ப்படியாமல் இருந்து விடாதீர்கள். எல்லா கட்டளைகளையும் ஏற்றுச் செயல்படுங்கள்.

(அல் பதர் தொகுதி 2 நம்பர் 14 தேதி 24 ஏப்ரல் 1903 பக்கம் 109)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் வ பாரிக் அலைஹி வ ஆலிஹி பிஅததி ஹம்மிஹீ வ கம்மிஹீ வ ஹுஸ்னிஹீ லி ஹாதிஹில் உம்மத்தி வ அன்ஸில் அலைஹி அன்வார ரஹ்மதிக இலல் அபத்.

(பரகாத்துத் துஆ ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 11)

பொருள்: அல்லாஹ்வே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் உனது சாந்தியும் கருணையும் அருள்களும் உண்டாவதாக! எந்த அளவு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உள்ளத்தில் இந்த உம்மத்திற்காக வேதனையும் துக்கமும் இருந்ததோ அந்த அளவு அதிகமாக உனது கருணைகளும் அருள்களும் அவர்கள் மீது உண்டாகட்டும். மேலும் அவர்கள் மீது எப்போதும் உனது கருணைகளின் ஒளியை இறக்கிக் கொண்டேயிருப்பாயாக.

## பாவமன்னிப்புத் தேடுவதில் தொடர்ந்து ஈடுபடுங்கள்

அடுத்து மூன்றாவது நிபந்தனையில், இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்புக் கோருதல்) பற்றியும் உள்ளது. திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

“மேலும் நான் அவர்களிடம் கூறினேன். நீங்கள் உங்கள் இறைவனிடம் மன்னிப்புக் கோருங்கள். அவன் மிக அதிகமாக மன்னிப்பவன் ஆவான். அவன் உங்களுக்காக மிக அதிகமாக மழையை இறக்குவான்.

மேலும் செல்வங்களையும், குழந்தைகளையும் கொண்டு அவன் உங்களுக்கு உதவி செய்வான். உங்களுக்காகத் தோட்டங்களை முளைக்க செய்து உங்களுக்காக ஆறுகளையும் ஓடச் செய்வான்.” (71:11-13)

“நீர் உமது இறைவனைப் புகழ்ந்து அவனது தூய்மையினை எடுத்துரைத்து அவனுடைய மன்னிப்பை தேடுவீராக. நிச்சயமாக அவன் தொடர்ந்து கருணை காட்டுபவனாவான்.” (110:4)

இது சம்பந்தமாக ஒரு ஹதீஸ் உள்ளது. அபூபர்தா பில் அபீ மூஸா தன் தந்தை அபூ மூஸா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“என் உம்மத்திற்கு இரண்டு அமானிதங்களை வழங்குவது பற்றி அல்லாஹ் எனக்கு வஹி அறிவித்துள்ளான். அவை 1) **வமா கானல்லாஹு யுஅஸ்ஸிபஹும் வஅன்த ஃபீஹிம்** - அதாவது நீர் அவரிடம் இருக்கும் போது அல்லாஹ் அவர்களுக்கு தண்டனையை வழங்கமாட்டான். 2) **வமா கானல்லாஹு முஅஸ்ஸிபஹும் வஹும் யஸ்தக்ஃபிரூன்** -



அவர்கள் பாவமன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அல்லாஹ் அவர்களுக்கு தண்டனை வழங்கமாட்டான்.(8:34) எனவே நான் அவர்களை விட்டு தனியாகும்போது மறுமை நாள் வரை அவர்களுக்கு பாவமன்னிப்புக் கேட்டலை விட்டுச் செல்கிறேன்.”

(ஜாவுத் திர்மிதி - கிதாபுத் தஃப்ஸீரில் குர்ஆன் தஃப்ஸீர் சூரா அன்ஃபால்)

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“எவர் இஸ்திக்ஃபாரை பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறாரோ அவருக்கு எல்லா குறுகலானவற்றிலிருந்தும் வெளியேறும் வழியை அல்லாஹ் உருவாக்கிக் கொடுத்து விடுகிறான். மேலும் ஒவ்வொரு கஷ்டத்திலிருந்தும் பரந்த வழியை உருவாக்கி விடுகின்றான். மேலும் அவர்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத வழிகளிலிருந்து ரிஸ்கை வழங்குகின்றான்.” (சுனன் அபீதாவூத் கிதாபுல் வித்ர் பாப் ஃபில் இஸ்திக்ஃபார்)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“.......எவற்றால் ஈமானின் வேர்கள் உறுதியடைகின்றனவோ அந்த இஸ்திக்ஃபார் திருக்குர்ஆனில் இரு பொருள்களில் வந்துள்ளது. ஒன்று, தனது உள்ளத்தை இறைநேசத்திற்குட்படுத்தி தனிமையாக இருக்கும் நிலையில் வேகமாக வெளிப்படும் பாவங்களை இறை தொடர்பினால் தடுத்தல், மேலும் இறைவனுடன் தொடர்பு கொண்டு அவனிடம் உதவி வேண்டுதல். இது இறை நெருக்கத்தைக் கொண்டவர்களின் இஸ்திக்ஃபாராகும். அவர்கள் இறைவனை விட்டு பிரிவதை தனது அழிவுக்குக் காரணமாக உணர்கின்றனர். எனவே இறைவன் தன் அன்பால் அவர்களை தாங்கிப் பிடிப்பதற்காக அவர்கள் இஸ்திக்ஃபார் செய்கின்றனர்.

இரண்டாவது வகையான இஸ்திக்ஃபார் என்பது பாவத்திலிருந்து வெளியேறி இறைவன் பக்கம் ஓடுதல். மரம் நிலத்தின் வேரூன்றி விடுவது போல உள்ளம் இறைவனின் நேசத்தில் கைதியாகி விட முயற்சி செய்தல். அப்போதுதான் அதில் தூய வளர்ச்சி ஏற்பட்டு பாவத்தால் காய்ந்து போகும் நிலை, வீழ்ச்சி ஆகியவற்றிலிருந்து அது தப்பிக்க முடியும். இவ்விரு நிலைகளுக்கும் இஸ்திக்ஃபார் என பெயர் வைக்கப்பட்டுள்ளது. கஃபர என்பதில் இருந்து உருவான இஸ்திக்ஃபார் என்பது மூடுதல், அமுக்குதல்

என்பதற்குக் கூறப்படும். ஆக இஸ்திக்ஃபார் என்பதன் பொருள், எவர் இறைவனுடைய அன்பில் தன்னை நிலைபெறச் செய்கின்றாரோ அவருடைய பாவத்தை இறைவன் அமுக்கி வைப்பானாக. மனித பலவீனங்கள் நிர்வாணமாக்கி விடாதிருப்பானாக! மாறாக, இறைமை என்ற போர்வையில் எடுத்துக் கொண்டு தனது பரிசுத்தத் தன்மையிலிருந்து பங்களிக்கட்டும். அல்லது பாவம் வெளிப்பட்டு நிர்வாணமாகி விட்டால் பின்னர் அதை மறைப்பானாக! மேலும் அதன் நிர்வாணத்தின் தீய விளைவிலிருந்து காப்பாற்றுவானாக. எனவே இறைவன் அருள்களின் பிறப்பிடமாவான். மேலும் அவனுடைய ஒளி எல்லா இருள்களையும் அகற்றுவதற்கு எந்நேரமும் தயாராக இருக்கிறது. எனவே தூய வாழ்க்கையைப் பெறுவதற்கு நேரிய வழி என்னவென்றால், நாம் இந்த பயங்கரமான நிலைக்கு பயந்து நம்மை நோக்கி வேகமாக இயங்கும் வகையில் அந்த தூய நீரூற்றை நோக்கி நாம் நமது இரு கைகளையும் நீட்ட வேண்டும். அப்போதுதான் எல்லா அசுத்தங்களையும் அது ஒரேடியாக கொண்டு சென்று விடும். உண்மையில் நாம் இறைவழியில் மரணத்தை ஏற்றுக் கொண்டு நம்மை அவனுக்கு முன்னால் வைப்பதை விட இறைவனை திருப்திப்படுத்தும் தியாகம் வேறு ஏதுமில்லை.”

**(சிராஜுத்தீன் ஈஸாயீகே சார் சவாலோன்கா ஜவாப். ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 346-347)**

**அடுத்து, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இறைவனிடம் ஆற்றலை வேண்டும்போது அதாவது, இஸ்திக்ஃபார் செய்தால் பரிசுத்த ஆவியின் உதவியால் அவர்களுடைய பலவீனம் நீங்கலாம். மேலும் இறைவனின் நபிமார்களும் ரஸூல்மார்களும் தப்பிப்பதைப் போன்று அவர்களும் பாவம் செய்வதிலிருந்து தப்பிக்கலாம். பாவிகளான பின்னர் அவர்கள் பாவமன்னிப்பு கேட்டால் அது அவர்களுக்கு தரும் பயன் என்னவெனில் பாவங்களின் தீய விளைவுகளிலிருந்து அதாவது தண்டனையிலிருந்து காப்பாற்றப்படுகின்றார்கள். ஏனெனில் ஒளி வருவதால் இருள் எஞ்சியிருக்க முடியாது. குற்றமிழைப்பவர்கள் பாவமன்னிப்புக் கேட்கவில்லையென்றால் அதாவது இறைவனிடம் ஆற்றலை வேண்டவில்லை என்றால் அவர்கள் தமது குற்றங்களுக்கான தண்டனையை பெற்றுக் கொண்டே இருப்பார்கள்.”

**(கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 34)**



**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“சில மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் பாவத்தைப் பற்றி அறிந்திருக்கின்றார்கள். மேலும் சிலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்களென்றால் அவர்கள் பாவம் பற்றி தெரியாமலேயே இருக்கின்றனர். மனிதன் ஒவ்வொரு பாவத்திற்காகவும் – அது வெளிப்படையாக இருந்தாலும் மறைவாக இருந்தாலும் – அதுபற்றி அவன் அறிந்திருந்தாலும் அறியாவிட்டாலும் – கைகள், கால்கள், நாவு, மூக்கு, காது, கண் ஆகியவற்றால் செய்துள்ள எல்லா விதமான பாவங்களிலிருந்தும் பாவமன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் எப்போதும் பாவமன்னிப்புக் கேட்பதை தொடர்ந்து செய்யும்படி வைத்துள்ளான். இன்றைய நாட்களில் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் செய்த துஆவை செய்ய வேண்டும். **ரப்பனா லலம்னா அன்ஃபுஸனா வஇ(ன்)ல்லம் தக்ஃபிர்லனா வதர்ஹம்னா லனகூனன்ன மினல் ஹாஸிரீன்** (7:24) இந்த துஆ ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. கவனக்குறைவாக வாழ்க்கையை கழித்து விடாதீர்கள். எந்த நபர் கவனக்குறைவாக வாழ்க்கையை கழிக்கவில்லையோ அவர் தனது சக்திக்கு அப்பாற்பட்ட துன்பத்தில் ஆழ்ந்து விடுவார் என ஒருபோதும் நம்ப முடியாது. எந்த ஒரு துன்பமும் (இறை) கட்டளையின்றி வருவதில்லை. உதாரணமாக, எனக்கு இந்த துஆ இல்ஹாமாக வந்துள்ளது.

**ரப்பி குல்லு – ய்யின் காதிமுக வ ரப்பி ஃபஹ்ஃபழ்னீ வன்சுர்னீ வர்ஹம்னீ.**

(பொருள்: என் இறைவா! ஒவ்வொரு பொருளும் உனது ஊழியத்திற்காக இருக்கின்றன. என் இறைவா! என்னை பாதுகாப்பாயாக! எனக்கு உதவி செய்வாயாக! என் மீது கருணை காட்டுவாயாக!)

**(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 577 புதிய பதிப்பு)**

## இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பா

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மேலும் நீங்கள் உங்கள் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோரி அவன் பக்கம் திரும்புங்கள். (11:4) நினைவில் கொள்ளுங்கள்! இவ்விரு விசயங்கள் இந்த உம்மத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஒன்று ஆற்றலைப்

பெறுவதற்காகவும் மற்றொன்று பெற்ற ஆற்றலை செய்கையின் மூலமாக வெளிப்படுத்துவதற்காகவும் உள்ளன. ஆற்றலைப் பெறுவதற்காக இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்புக் கேட்பது) உள்ளது. இதனை வேறு சொற்களில் இஸ்திம்தாத் (உதவியை பெறுவது) என்றும் இஸ்திஆனத் (உதவியைக் கேட்பது) என்றும் கூறுவர். உதாரணமாக, எவ்வாறு பளு தூக்குவதன் மூலமும் அதனை மேலும் கீழும் கொண்டு வருவதாலும் உடல்ரீதியான ஆற்றலும் சக்தியும் வளர்ச்சியடைகின்றதோ அவ்வாறே ஆன்மீகமான பளு தூக்குதல்தான் இஸ்திக்ஃபார் ஆகும். இதனால் ஆன்மாவிற்கு ஆற்றல் கிடைக்கின்றது. மேலும் உள்ளத்தில் உறுதியாக நிலைநிற்கும் தன்மை உருவாகிறது என்று சூஃபிகள் எழுதியுள்ளார்கள். எவர் ஆற்றலை பெற நாடுகின்றாரோ அவர் இஸ்திக்ஃபார் செய்யட்டும். கஃபர என்ற சொல் மூடுதல், அமுக்குதல் என்பதற்கு கூறப்படும். இஸ்திக்ஃபார் மூலமாக மனிதன் இறைவனிடமிருந்து அவனை தடுக்கின்ற உணர்வுகளையும் எண்ணங்களையும் மூடுவதற்கும் அமுக்குவதற்கும் முயற்சி செய்கின்றான். மனிதனைத் தாக்கி அவனை அழிக்க விரும்புகின்ற விசத்தன்மையை அழித்து வெற்றி பெற்று இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றும் வழியிலிருக்கும் தடைகளிலிருந்து தப்பித்து அவற்றை செயல்வடிவில் நிறைவேற்றி காட்டுவதே இஸ்திக்ஃபார் என்பதன் பொருளாகும்.

அல்லாஹ் மனிதனிடத்தில் இருவிதமான தன்மைகளை வைத்துள்ளான் என்ற விசயத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று விசத்தன்மையாகும். அதை தூண்டுபவன் சய்த்தான் ஆவான். மற்றொன்று விசத்தை முறிக்கும் தன்மையாகும். மனிதன் தற்பெருமை கொண்டு தன்னை ஒரு பொருட்டாக கருதி விசத்தை முறிக்கும் தன்மையுடைய நீரூற்றிலிருந்து உதவி பெறவில்லையென்றால் விசத்தன்மையானது அவனிடம் மிகைத்து விடும். ஆனால், அவன் தன்னை இழிவானவனாகவும் அற்பமானவனாகவும் கருதி தனக்கு அல்லாஹ்வின் உதவியின் தேவையை உணரும்போது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஒரு நீரூற்று உருவாகின்றது. அதன் மூலம் அவனது ஆன்மா உருகி ஓடுகின்றது. இதுவே இஸ்திக்ஃபார் என்பதன் பொருளாகும். அதாவது, இந்த ஆற்றலைப் பெற்று விசத்தன்மையை அழித்து வெற்றி பெற வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 348-349 ரப்வா வெளியீடு)



## அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருங்கள்

அடுத்து, மூன்றாவது நிபந்தனையில் எல்லா நேரமும் அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருப்பேன் என்பதும் இருக்கின்றது. இதுபற்றி திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

"எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லா புகழும் உரியது." (அல் ஃபாத்திஹா - வசனம் 2)

"வானங்களிலும், பூமியிலும் உள்ள எல்லாம் எவனுக்கு உரியனவோ அந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். மறுமையிலும் எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. அவன் நுட்பமான ஞானம் உள்ளவனும், எல்லாவற்றையும் நன்கு தெரிந்தவனுமாவான்." (34:2)

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"அல்லாஹ்வை புகழாமல் ஆரம்பமாகும் ஒவ்வொரு முக்கிய பணியும் குறைபாடுள்ளதாக இருக்கும்."

இன்னொரு அறிவிப்பில் இந்த சொற்கள் வந்துள்ளன: "அல்லாஹ்வைப் புகழாமல் ஆரம்பமாகும் ஒவ்வொரு வார்த்தையும் அருளற்றதாகவும் தாக்கமற்றதாகவும் இருக்கும்."

(சுனன் இப்னி மாஜா அப்வாபுந்நிகாஹ், சுனன் அபீதாவூத் கிதாபுல் அதப்)

**நுஃமான் பின் பஷீர் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேடையில் ஏறி நின்று கூறினார்கள்:**

"எவர், கொஞ்சம் இருப்பதைக் கொண்டு நன்றி செலுத்தமாட்டாரோ அவர் அதிகமாக இருக்கும் போதும் நன்றி செலுத்தமாட்டார். எவர் மக்களுக்கு நன்றி செலுத்தவில்லையோ அப்படிப்பட்டவர் அல்லாஹ்வுடைய அருள்களுக்கும் நன்றி செலுத்த முடியாது. அல்லாஹ்வின் அருள்களை நினைத்துப் பார்ப்பதும் நன்றி கூறுதலே ஆகும். அல்லாஹ்வின் அருள்களை நினைத்துப் பார்க்காமல் இருப்பதும் நன்றிகேடே ஆகும்."

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 278 பைரூத் வெளியீடு)

**ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தனது கையைப் பிடித்து இவ்வாறு கூறியதாக அறிவிக்கின்றார்கள்:**

மஆஸே! இறைவன் மீது ஆணையாக! நிச்சயமாக நான் உம்மை நேசிக்கின்றேன். மஆஸே! நீர் ஒவ்வொரு தொழுகைக்கு பிறகும் இந்த துஆவை செய்ய மறந்துவிட வேண்டாம் என்று உம்மிடம் வலியுறுத்திக் கூறுகின்றேன். **அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக வஷுக்ரிக வஹுஸ்னி இபாததிக.** பொருள்: அல்லாஹ்வே! உன்னை நினைவு கூறுவதற்கும், உனக்கு நன்றி செலுத்துவதற்கும், உன்னை நல்ல முறையில் நான் வணங்குவதற்குமுரிய நல்வாய்ப்பை நீ எனக்கு வழங்குவாயாக!

(சுனன் அபீதாவூது கிதாபுல் வித்ர்)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“மனிதன் சிந்தித்துப் பார்த்தால் எல்லா விதமான புகழுக்கும் நற்பண்புகளுக்கும் உரிமையானவன் அல்லாஹ் மட்டுமேயாவான் என்பது அவனுக்கு தெரிய வரும். மேலும் எந்த மனிதனும் படைப்பினமும் உண்மையாகவே புகழுக்கு உரிமையுடையதல்ல. மனிதன் எவ்வித நோக்கத்தின் கலப்புமில்லாமல் பார்த்தால் ஒரு விசயம் மிகத் தெளிவாக அவனுக்கு தெரியும். அதாவது ஒரு நபர் புகழுக்குரியவர் என்று நாம் கூறும் போது எந்த ஒரு பொருளும் இல்லாத காலத்தில் – அதைப் பற்றி யாரும் தெரியாத காலத்தில் அதனை அந்த நபர் படைத்திருந்தார் என்பதனால் அவர் புகழுக்குரியவராகலாம் அல்லது ஒரு பொருளும் இல்லாத காலத்தில் – அந்த பொருள் நிலைநிற்பதற்கும், எஞ்சியிருப்பதற்கும், ஆரோக்கியம் பாதுகாக்கப்படுவதற்கும், வாழ்க்கை நிலைபெறுவதற்கும் என்னென்ன பொருள்கள் தேவையாக இருந்ததோ அதனை அந்த நபர் கிடைக்கும்படி செய்ததால் அவர் புகழுக்குரியவராகலாம் அல்லது அப்பொருள்கள் மீது ஒரு காலத்தில் பல்வேறு துன்பங்கள் வந்த சமயத்தில் அந்த நபர் அவற்றின் மீது கருணை காட்டி அவற்றை பாதுகாத்தால் அவர் புகழுக்குரியவராகலாம்.

அல்லது முயற்சி செய்தவரின் முயற்சியை வீணாக்காமல் முயற்சி செய்பவர்களுக்கான உரிமையை முழுமையாக செலுத்தியதன் காரணமாக அவர் புகழுக்குரியவராகலாம். வெளிப்படையாகப் பார்க்கும்போது கூலிக்காக வேலை செய்பவரின் உரிமையை நிறைவேற்றினாலும் அவன்



செய்த வேலைக்குரிய கூலிதான் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், எவர் அந்த உரிமையையும் முழுமையாக வழங்குகின்றாரோ அந்த நபரும் கூட அருள் செய்பவராவார். இப்படிப்பட்ட உயர் தகுதியுடைய நற்பண்புகள்தான் ஒருவரை புகழுக்குரியவராக ஆக்க முடியும். இப்போது சிந்தித்து பாருங்கள். இந்த எல்லா நற்பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ள அல்லாஹ் மட்டும்தான் உண்மையாகவே இந்த எல்லா புகழுக்கும் உரியவனாவான். வேறு எவரிடத்திலும் இந்த பண்புகள் இல்லை....

சுருக்கமாக, முதலாவதாக சுயமாகவும் முழுமையாகவும் உயர்வாகவும் இறைவனே புகழுக்கு உரிமை பெற்றவன். இதற்கு நேர் மாறாக வேறு எவருக்கும் சொந்தமாக (புகழுக்குரிய) எந்த உரிமையும் இல்லை. எவருக்காவது புகழுக்குரிய உரிமை இருக்கின்றதென்றால் அது இறைவன் மூலமாக கிடைத்தது என்பது மட்டுமே ஆகும். அதுவும் இறைவனின் கருணை ஆகும். அவன் தனித்தவனாகவும், இணை -யற்றவனாகவும் இருந்தபோதிலும் அவன் தன் மூலமாக சிலரை தன் புகழ்களில் இணைத்துள்ளார்கள்.”

(ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 598-602)

ஜமாஅத்திற்கு பொதுவான அறிவுரை வழங்கியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

“வானத்தில் மலக்குகளும் உங்களை பாராட்ட வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள் என்றால் அடிபட்டாலும் மகிழ்ச்சியாக இருங்கள். ஏச்சுக்களைக் கேட்டு நன்றி தெரிவியுங்கள். மேலும் தோல்விகளைக் கண்டும் தொடர்பை முறித்து விடாதீர்கள். நீங்கள் இறைவனின் கடைசி ஜமாஅத் ஆவீர்கள். எனவே, முழுமையில் தன் இறுதி படித்தரத்தை அடைந்த நற்செயல்களைச் செய்யுங்கள். உங்களில் சோம்பேறியாகி விடும் ஒவ்வொருவரும் அசுத்தமான பொருளைப் போன்று ஜமாஅத்தை விட்டு வெளியே எறியப்படுவார். மேலும் அவர் ஏக்கத்துடன் மரணிப்பார். அவர் இறைவனை எதுவும் செய்துவிட முடியாது. பாருங்கள். உங்கள் இறைவன் உண்மையில் இருக்கின்றான் என நான் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். எல்லாம் அவனுடைய படைப்பினம்தான். ஆயினும் எவர் அவனைத்

தேர்ந்தேடுக்கின்றாரோ அவரை இறைவனும் தேர்ந்தெடுக்கின்றான். எவர் இறைவன் பக்கம் செல்கின்றாரோ அவர் பக்கம் இறைவனும் செல்கின்றான். எவர் இறைவனுக்கு கண்ணியம் அளிக்கின்றாரோ அவருக்கு இறைவனும் கண்ணியம் அளிக்கின்றான். நீங்கள் உங்கள் உள்ளங்களை நேராக்கி நாவுகளையும் கண்களையும் காதுகளையும் தூய்மையாக்கி அவன் பக்கம் வாருங்கள். அவன் உங்களை ஒப்புக் கொள்வான்." (கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 15)

**மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்:**

"இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவனின் கரத்தினால் மண்ணில் விதைக்கப்பட்ட விதையாவீர்கள். இந்த விதை முளைக்கும்; பூக்கும்; எல்லா திசையிலும் இதன் கிளைகள் படரும்; பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று இறைவன் கூறியுள்ளான். எனவே, இறைவனின் வசனத்தில் நம்பிக்கை கொண்டு இடையில் ஏற்படும் சோதனைகளுக்கு அஞ்சாதவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். ஏனென்றால் சோதனைகள் வருவதும் அவசியமானதாகும். தமது பைஅத் வாதத்தில் உண்மையாளர் யார்? பொய்யர் யார்? என உங்களை சோதிக்கவே இறைவன் அவ்வாறு செய்கின்றான். ஏதாவது சோதனையில் தடுமாற்றமடைபவன் இறைவனுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்தமாட்டான். மேலும் பாக்கியமற்ற நிலை அவனை நரகத்திற்கு எடுத்துச் செல்லும். அவன் பிறக்காமல் இருந்தால் அது அவனுக்கு நன்றாக இருந்திருக்கும். ஆனால், எவர்கள் இறுதி வரை பொறுமையை மேற்கொள்வதுடன் துன்பங்கள் என்னும் பூமியதிர்ச்சிகளையும், ஆட்டங்கானக் செய்யும் விபத்துகள் என்னும் புயல்களையும் தாங்கி கொண்டு உலகத்திலுள்ளவர்கள் அவர்களுடன் கடுமையான வெறுப்புடன் நடந்து கொள்வதையும், சமுதாயத்தின் ஏளனப் பேச்சையும், எள்ளி நகையாடுதலையும், இழிவையும் பொருட்படுத்தாமல் இருப்பார்களோ அவர்களே இறுதியில் வெற்றி பெறுவார்கள். அருள்களின் வாசல்கள் அவர்களுக்காக திறக்கப்படும்.

என் ஜமாஅத்திற்கு அறிவிக்கும்படி இறைவன் என்னிடம் கூறியுள்ளதாவது, உலகப்பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ



கலவாத, கட்டுப்பாட்டின் எத்தகுதியையும் இழக்காத நம்பிக்கை கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவர்களாவார்கள்.

(ரிஸாலா அல் வஸிய்யத் ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 309)

நாம் அனைவரும் இதில் நிலைபெற்றிருக்கும் நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. அல்லாஹ் உண்மையான பொருளில் நம்மை உண்மையான, அஹ்மதி முஸ்லிமாக ஆக்குவானாக. நம்மை பைஅத் உடன்படிக்கையில் நிலைபெறுகின்றவர்களாகவும், அதன்படி செயல்டுகின்றவர்களாகவும் ஆக்குவானாக. இறைவனுக்கும், இறை தூதர் (ஸல்) அவர்களுக்கும் உண்மையாகவும், முழுமையாகவும் கட்டுப்படுபவர்களாக ஆக்குவானாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அன்பான ஜமாஅத்திற்கு ஆட்சேபனைக்கு உரியதாக அமையும் எந்த செயலும் நம்மிடம் இருந்து வெளிப்படாதிருக்கட்டுமாக. அல்லாஹ்வே! நீ எங்களுடைய தவறுகளை மன்னிப்பாயாக! எங்களின் குறைகளை திரையிட்டு மறைப்பாயாக! எங்களை எப்பொழுதும் உனக்கு கட்டுப்படுபவர்களுடனும், நன்றி உள்ளவர்களுடனும் எழுதுவாயாக! எங்களை பைஅத் உடன்படிக்கையில் நிலைபெறச் செய்வாயாக! எங்கள் சந்ததிகளும் அவற்றை கடைபிடிக்கும் நல்வாய்ப்பை வழங்குவாயாக! எங்களை உன் நேசத்திற்குரியவர்களுடன் எழுதுவாயாக! உன்னை விட்டு எங்களை ஒருபோதும் பிரித்து விடாதே! எங்களுக்கு உண்மையான இறைஞானத்தை வழங்குவாயாக! கருணை காட்டுபவர்களிலெல்லாம் அதிக கருணை காட்டுபவனே! எங்களின் எல்லா துஆக்களையும் ஏற்றுக் கொள்வாயாக! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திற்காகவும், தம் ஜமாஅத்தில் இணைபவர்களுக்காகவும் செய்த எல்லா துஆக்களுக்கும் எங்களை வாரிசாக்குவாயாக!

(2003 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் தேதி இங்கிலாந்தின் ஆண்டு மாநாட்டில் ஹுஸூர் அவர்கள் நிகழ்த்திய முடிவுரையிலிருந்து)

.....தற்போது நான் கூறும் கருத்துக்கள் எந்த அளவு முக்கியமானதும் அவசியமானதுமென்றால் தற்போதைய காலக்கட்டத்தில் இதன் தேவை

இன்னும் அதிகமாக உணரப்படுகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது காலத்திலிருந்து நாம் தொலைவில் சென்று விட்டாலும் நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது இந்த சஹாபியின் சந்ததிகளில் வந்தவர்கள் என்ற பெருமை நமக்கு இருக்கின்றது. ஆனால் நமது மூதாதையர்கள் செய்த தியாகங்கள் மீதுள்ள நமது பார்வை குறைவாக இருக்கின்றது. அடுத்த தலைமுறைக்கு உடல்ரீதியாக (சென்ற தலைமுறையின்) இரத்தம் வந்து விட்டது. ஆனால் ஆன்மீகத்தின் தரம் குறைந்து விட்டது. எவ்வாறிருப்பினும் நாம் நபித்துவத்தின் காலத்திலிருந்து தொலைவில் செல்ல செல்ல சில குறைகளும் பலவீனங்களும் உருவாகி விடுகின்றது. ஆனால் முன்னேற்றமடைகின்ற ஜமாஅத்துகள் காலத்தையும் நிலைமைகளையும் காரணமாக கூறி ஒரே இடத்தில் அமர்ந்து விடாது. மாறாக அவை முயற்சி செய்கின்றன. நாம் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றோம். முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது போதனையை நாம் உலகில் பரப்பப் போகின்றோம் என்று நம்மைப் பற்றிய நற்செய்திகளும் முன்னறிவிப்புகளும் இருக்கின்றது. மேலும் இது விதிக்கப்பட்டதாகும். நிபந்தனை என்னவென்றால் நாம் ஏகத்துவத்தில் நிலைபெற்றிருக்க வேண்டும். மேலும் இப்போதனைகளில் நாம் மட்டும் நிலைத்திருக்காமல் நமது சந்ததிகளையும் அவற்றில் நிலைநிற்கும்படி செய்ய வேண்டும். இப்போது நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை உங்கள் முன்பு வைக்கின்றேன். தன்னிடம் பைஅத் செய்தவர்களிடம் அவர்கள் எதை விரும்புகின்றார்கள் என்பது அதன் மூலம் தெளிவாகி விடும். அதற்கு பிறகு பைஅத் நிபந்தனைகளில் நான்காவது நிபந்தனையைப் பற்றி கூறுவேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“எனது கைகளில் தவ்பா செய்வது ஒரு மரணத்தை விரும்புவதாகும். அதன் மூலமாக நீங்கள் புதிய வாழ்க்கையில் இன்னொரு பிறப்பை பெற வேண்டும்.”



“உள்ளத்தால் பைஅத் செய்யவில்லை என்றால் அதற்கு எந்த விளைவும் ஏற்படாது. எனது பைஅத்தின் மூலம் உள்ளத்தால் அதை ஏற்றுக் கொள்வதையே இறைவன் விரும்புகின்றான். எனவே எவர் உண்மையான உள்ளத்துடன் என்னை ஏற்றுக் கொண்டு உண்மையான பாவமன்னிப்பு தேடுவாரோ அவரது பாவங்களை மிக அதிகமாக மன்னிக்கின்ற கருணைமிக்க இறைவன் நிச்சயமாக மன்னித்து விடுவான். அவர் தாயின் வயிற்றிலிருந்து இப்போதுதான் வெளிவந்தவர் போன்று ஆகிவிடுவார். அப்போது மலக்குகள் அவரை பாதுகாப்பார்கள்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 262)

# பைஅத்தின் நான்காவது நிபந்தனை

**"அல்லாஹ்வின் அனைத்து படைப்பினங்களுக்கு பொதுவாகவும், முஸ்லிம்களுக்கு குறிப்பாகவும் எனது மன உணர்ச்சியின் காரணமாக நாவினாலோ, கைகளினாலோ, வேறு வகையாலோ எவ்விதமான தகாத தொல்லையும் கொடுக்கமாட்டேன்."**

கோபம் வரும்போது அந்த கோபத்தால் ஆட்கொள்ளப்பட்டு தனது சுய கௌரவத்திற்காக தனது பொய்யான தன்மான உணர்வை வெளிப்படுத்தியவாறு தனது நாவினாலோ கையினாலோ எவருக்கும் தொல்லை கொடுக்கக் கூடாது என்பதே இந்த நிபந்தனையில் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது. எந்த முஸ்லிமுக்கும் துக்கத்தை கொடுக்கமாட்டேன் என்பது முக்கியமான நிபந்தனையாகும். இதனை நாம் குறிப்பாக பேண வேண்டும். இது நம்மீது கடமையாகும். ஏனென்றால் முஸ்லிம்கள் நமது நேசத்திற்குரிய அன்பரான எஜமானர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களுடன் தங்களை தொடர்புள்ளவர்களாக கூறுகின்றனர். எனவே, இக்காலத்தின் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கும் மஹ்திக்கும் எதிராக தங்களது எதிர்ப்பில் இறுதி எல்லையை அடைந்து விட்ட இஸ்லாத்தின் பெயரில் ஒரு கறையாக இருக்கின்ற அந்த பெயர்தாங்கி ஆலிம்களை தவிர முஸ்லிம்களுக்கு தீங்கு ஏற்பட வேண்டும் என்று நாம் நினைத்துக் கூட பார்க்க முடியாது. அத்தகைய தீய ஆலிம்களுக்கு எதிராகவும் நாங்கள் எல்லா ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருக்கின்ற அந்த வல்லமைமிக்க இறைவனிடம் உதவி கேட்டவாறு அவன் முன்னால் குனிந்தவாறு அல்லாஹ்வே! நீயே இவர்களை பிடிப்பாயாக என்று கூறுகின்றோம். அதுவும்கூட இறைவனின் தூதர் இவர்களை பற்றி மிக தீய படைப்பினங்கள் என்று கூறியதனால்தான். ஏனென்றால் எங்களுக்கு எவரிடமும் அதிகமான பகைமையும் எவருக்கு எதிராகவும் கோபமும் இல்லை. நாங்கள் அல்லாஹ்வின் போதனைகளுக்கு ஏற்ப செயல்படுபவர்கள் ஆவோம்.



அல்லாஹ் நமக்கு நமது கோபத்தை அடக்குவது தொடர்பாக போதனை செய்தவாறு இவ்வாறு கட்டளையிடுகின்றான்.

அவர்கள் செல்வ நிலையிலும் வறிய நிலையிலும் செலவு செய்கின்றனர். மேலும் (அவர்கள்) கோபத்தை அடக்குபவர்களும் மக்களை மன்னிப்பவர்களுமாவார். அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கின்றான். (3:135)

இந்த வசனத்தின் மூலமாகத்தான் ஹஸ்ரத் ஹுஸைன் (அலை) அவர்களது அடிமை விடுதலை பெற்றார். இது பற்றி இவ்வாறு கூறப்படுகின்றது. ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் மீது அவர்களது அடிமை தவறுதலாக சுடு தண்ணீர் அல்லது குடிக்கின்ற வேறு ஏதாவது சூடான பொருளை சிந்தி விட்டார். அவர்கள் மிக கடுமையான கோபத்துடன் அந்த அடிமையின் பக்கம் பார்த்தார்கள். அந்த அடிமை மிகவும் திறமைசாலியாக இருந்தார். திருக்குர்ஆனின் அறிவும் அவருக்கு இருந்தது. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உடனடியாக செயல்படும் மூளையும் அவருக்கு இருந்தது. உடனே அந்த அடிமை அவர்களிடம் **வல் காழிமீனல் கய்ழ்** (அவர்கள் கோபத்தை அடக்குபவர்கள்) என்று கூறினார். இதனைக் கேட்டதும் ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் நல்லதுதான் கோபத்தை அடக்கி விட்டேன் என்று கூறினார்கள். அவர்கள் கோபத்தை அடக்கிவிட்டாலும் உள்ளத்தில் கோபம் இருக்கலாம். வெறொரு சமயத்தில் வேறு ஏதாவது தவறு நடந்துவிட்டால் அடிவிழுந்துவிடக் கூடாதே என்ற எண்ணம் அந்த அடிமைக்கு வந்ததும் உடனடியாக **வல் ஆஃபீன அனின்னாஸ்** (அவர்கள் மக்களை மன்னிப்பவர்களுமாவர்) என்று அந்த அடிமை கூறினார். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் சரி நான் உன்னை மன்னித்து விட்டேன்; செல் என்றார்கள். அந்த அடிமையின் அறிவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உடனடியாக செயல்படும் மூளையும் தக்க பலனை அவருக்கு தந்தது. அவர் உடனடியாக **வல்லாஹு யுஹிப்புல் முஹ்ஸினீன்** (அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கிறான்) என்று கூறினார். இதனைக் கேட்ட ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் செல்; நான் உனக்கு விடுதலை அளிக்கின்றேன் என்று கூறினார்கள். அந்த நாட்களில் அடிமைகள் விலைக்கு வாங்கப்பட்டார்கள். இவ்வளவு எளிதாக அவர்களுக்கு விடுதலை கிடைக்காது. ஆனால், அடிமையின் சந்தர்ப்பத்திற்கேற்ப உடனடியாக செயல்படும்

மூளையும், அறிவும், எஜமானரின் இறையச்சமும் நல்ல பலனை தந்தது. விடுதலையும் கிடைத்தது. எனவே, இதுதான் இஸ்லாத்தின் போதனையாகும்.

## பிறருடைய குற்றங்களை பொறுத்துக்கொண்டு அவற்றை மன்னித்து விடுங்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நன்மையை ஏவும் இரண்டாவது வகையான நல்லொழுக்கப் பண்புகள் பற்றி கூறுகையில் இவ்வாறு கூறியுள்ளார்கள்:

“இந்த இரண்டாவது வகை நல்லொழுக்க குணங்களில் முதற்குணம் பிறருடைய குற்றங்களை பொறுத்துக் கொள்வதாகும். அதாவது ஒருவருடைய பாவங்களை மன்னிப்பதாகும். பாவம் செய்கின்ற ஒருவன் பிறருக்கு தீங்கிழைக்கின்றான். அதற்காக அவன் தண்டனையோ, சிறைவாசமோ, அபராதமோ பெறவேண்டியவனாகின்றான். அல்லது தீங்கிழைக்கப்பட்டவனே நேரிடையாக அவனை தண்டித்து விடலாம். ஆனால் அதற்குப் பகரமாக அவனுக்கு மன்னிப்பு வழங்குதலே பொருத்தமென்றால் அவனை மன்னித்து விடுவதே அவனுக்கு நன்மை செய்தல் ஆகும். இதனைக் குறித்து திருக்குர்ஆன் போதிப்பதாவது:

**வல்காழிமீனல் கைழி வல் ஆஃபீன அனின்னாஸ். ஜஸாஉ ஸய்யிஅதின் ஸய்யிஅதுன் மிஸ்லுஹா. ஃபமன் அஃபா வஅஸ்லஹ. ஃப அஜ்ருஹு அலல்லாஹி** – கோபத்தை அடக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அதை அடக்குபவர்களும் குற்றங்களை மன்னிக்க வேண்டிய இடத்தில் மன்னித்து விடுபவர்களும் நன்மை புரிவோர் ஆவர். (3:135) குற்றத்திற்குரிய தண்டனை, செய்யப்பட்ட குற்றத்திற்கு ஏற்ற அளவில் இருக்க வேண்டும். ஆனால் குற்றவாளியிடத்தில் ஒரு மாறுதல் ஒரு சீர்திருத்தம் ஏற்படுகின்றது என்றால் பிறகு அவனால் எவ்வித தீங்கும் ஏற்படாதென்றால் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவனுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும். (42:41) அதாவது இந்த மன்னிப்பு தகுந்த தருணத்தையும் இடத்தையும் பொருத்ததாக இருந்து தகாத தருணத்தையும் இடத்தையும் பொருத்ததாக இல்லாமலிருந்தால் அதற்கான நற்கூலியை (அக்குற்றத்தை மன்னித்தவர்) பெறுவார்.”

(இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் ரூஹானி கஸாயின் தொகுதி என் 10, பக்கம் 351)



மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு ஹதீஸ் உள்ளது. அதனை பெரும்பாலார் கேட்டிருப்பர். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது நெஞ்சத்தை சுட்டிக்காட்டியவாறு இறையச்சம் இங்கு இருக்கின்றது என்று கூறினார்கள். உண்மையான ஈடுயிணையில்லாத இறையச்சம் எங்காவது இருக்க முடியுமென்றால் அது இருக்குமிடம் முழுக்க முழுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய உள்ளத்தில் மட்டுமேயாகும். அந்த உள்ளத்தில் இறையச்சத்தை தவிர வேறு எதுவும் இருக்கவில்லை.

எனவே மக்களே! நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்தைச் சார்ந்திருப்பவர்களே! நீங்கள் எந்த அழகிய முன்மாதிரியைப் பின்பற்றிச் செயலாற்ற வேண்டுமென்றால், அது ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியாகும். எனவே, உங்கள் உள்ளத்தை அலசிப் பாருங்கள். நீங்கள் உள்ளத்தால் அந்த அழகிய முன்மாதிரியின்படி நடந்து உங்களை நீங்களே இறையச்சத்தால் நிரப்ப முயற்சி செய்கின்றீர்களா? என்ன? உங்களிடத்திலும் அல்லாஹ்வைப் பற்றிய அச்சமும் பயமும் இருப்பதால் அதன் விளைவாக நீங்கள் அவனது படைப்பினங்களுக்கு நன்மையை நாடி அவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்கின்றீர்களா?

இப்போது நான் நபிமொழியை முழுமையாகக் கூறுகின்றேன்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“உங்களுக்கிடையில் பொறாமை கொள்ளாதீர்கள். சண்டை இடாதீர்கள். உங்களுக்கிடையில் காழ்ப்புணர்ச்சி வைக்க வேண்டாம். ஒருவர் மற்றவர் மீது பகைமை கொள்ள வேண்டாம். ஒருவர் மற்றவரது வியாபாரத்தின் மீது வியாபாரம் செய்ய வேண்டாம். அல்லாஹ்வின் அடியார்களே! நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாகி விடுங்கள். ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் சகோதரராவார். அவர் தனது சகோதரர் மீது அநீதியிழைக்கமாட்டார். அவரை இழிவுபடுத்தமாட்டார். அவரை அற்பமாக கருதமாட்டார். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது நெஞ்சத்தை சுட்டிக்காட்டியவாறு தக்வா ஹாஹுனா அதாவது தக்வா (இறையச்சம்) இங்கு இருக்கின்றது என்று மூன்று முறை கூறினார்கள். ஒரு

மனிதன் தீயவன் என்பதற்கு அவன் தனது முஸ்லிம் சகோதரனை அற்பமாக நினைப்பதே போதுமானதாகும். ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் மற்ற முஸ்லிமின் இரத்தம், செல்வம், கண்ணியம் ஆகியவை தடுக்கப்பட்டுள்ளன.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா)

## எவருக்கும் தொல்லை கொடுக்க வேண்டாம்

நாவாலோ கையாலோ எவருக்கும் எவ்வகையிலும் தொல்லை கொடுக்கக்கூடாது என்பது பைஅத்தின் நான்காவது நிபந்தனையில் இருக்கின்றது. இந்த நிபந்தனை தொடர்பாக நான் இதற்கு முன்னர் படித்த நபிமொழியைக் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொறாமை கொள்ள வேண்டாம் என்று கூறியுள்ளார்கள். பொறாமை எப்படிப்பட்டதென்றால் அது வளர்ந்து வளர்ந்து இறுதியில் பகைமை வரை சென்று விடுகின்றது. இந்த பொறாமை காரணமாக எவர் மீது பொறாமை இருக்கின்றதோ அவருக்கு இழப்பை ஏற்படுத்தும் எண்ணம் உள்ளத்தில் எல்லா நேரமும் இருந்து கொண்டிருக்கும். பிறகு பொறாமை எப்படிப்பட்ட நோய் என்றால் அதனால் மற்றவர்களுக்காக இழப்பு ஏற்படுவது மட்டுமின்றி பொறாமை கொள்பவரும் நெருப்பில் எரிந்து கொண்டிருப்பார். இவரது வியாபாரம் ஏன் நன்றாக நடக்கின்றது? இவரிடம் என்னை விட அதிகமாக பைசா இருக்கின்றது. இவருடைய வீடு என்னுடைய வீட்டை விட நன்றாக இருக்கின்றது. இவருடைய பிள்ளைகள் அதிகமாக திறமையுள்ளவர்களாக இருக்கின்றார்கள் போன்ற சிறிய சிறிய விசயங்கள் பொறாமையை உண்டாக்குகின்றன. பெண்களின் நிலை எப்படி இருக்கிறதென்றால் இவளிடம் உள்ள நகை நன்றாக இருக்கின்றதே என்ற எண்ணத்தில் பொறாமை ஆரம்பமாகி விடுகின்றது. மேலும் மார்க்க விசயத்தில் எங்கு நன்மையைக் கண்டாலும் அதை கண்டு பெருமிதம் கொள்ளும் அதே சமயத்தில் நாமும் முன்னேறி மார்க்கத்தின் தொண்டர்களாக முயற்சி செய்ய வேண்டும். அதற்கு பகரமாக மார்க்கத்திற்கு ஊழியம் செய்பவர்களின் காலை வாறிவிட்டு எப்படியாவது முறையீடுகள் செய்து அவரையும் மார்க்கத் தொண்டிலிருந்து விலக்கி வைப்பதற்கான முயற்சிகளை செய்கின்றார்கள்.



பிறகு, அந்த ஹதீஸில் சண்டையிடக் கூடாது என்று கூறப்பட்டிருக்கின்றது. சிறிய சிறிய விசயங்களில் சண்டைகள் ஆரம்பமாகி விடுகின்றன. உதாரணமாக, டியூட்டியில் இருக்கும் ஒருவர் மாநாடு நடைபெறும் போது ஒரு குழந்தையை அது தொடர்ந்து செய்து கொண்டிருந்த சேட்டைகள் காரணமாக சற்று கடுமையாக அதனை தடுத்தால் அல்லது இனிமேல் இவ்வாறு நீ செய்தால் நான் கடுமையாக நடந்து கொள்வேன்; தண்டனை கொடுப்பேன் என எச்சரித்தால் உடனடியாக பக்கத்தில் அமர்ந்திருக்கும் அந்த குழந்தையின் தாய் அல்லது தந்தை வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்து விடுகின்றார்கள். மேலும் அந்த டியூட்டியில் இருப்பவரை மிகவும் இழிவாக பேசுகின்றார்கள். இவையெல்லாம் அனுபவத்தில் வந்த விசயங்களாகும். இப்படிப்பட்ட செயல் மூலமாக ஒரு பக்கம் நீங்கள் உங்கள் பைஅத் உடன்படிக்கையை முறித்து உங்கள் ஒழுக்கத்தையும் மோசமாக்கி விட்டீர்கள். மறுபக்கம் உங்களது சந்ததிகளின் உள்ளத்திலும் ஜமாஅத் அமைப்பின் மீதுள்ள கண்ணியத்தை அழித்து விட்டீர்கள். அவர்களது மூளையிலிருந்தும் சரியானது எது தவறு எது என்பதை அறிந்து கொள்ளும் தன்மையை அழித்து விட்டீர்கள்.

அடுத்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பகைமை கொள்ளக் கூடாது என்று கூறியுள்ளார்கள். சிறிய சிறிய விசயங்களில் பகைமை ஆரம்பமாகி விடுகின்றது. உள்ளங்கள் வெறுப்புகளாலும் குரோதங்களாலும் நிரம்பி விடுகின்றன. எனக்கு எப்போதாவது சந்தர்ப்பம் கிடைத்தால் என்னை எதிர்த்தவரை பழிவாங்க வேண்டும் என்று சமயம் காத்திருக்கின்றார்கள். ஆனால், எவரிடமும் பகைமையும் வெறுப்பும் கொள்ள வேண்டாம் என்ற கட்டளையிடப்பட்டிருக்கின்றது. நபிமொழியில் இவ்வாறு வந்துள்ளது. ஒரு நபித்தோழர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நான் மறந்துவிடாத அளவில் சுருக்கமாக ஒரு போதனையை எனக்கு கூறுங்கள் என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோபத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீண்டும் ஒருமுறை, கோபத்திலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள் எனக் கூறினார்கள். கோபத்திலிருந்து விலகிக் கொள்வதை நாம் எப்போதும் நமது எண்ணங்களில்

வைத்தால் வெறுப்பும் குரோதமும் தாமாக அழிந்து விடும். பிறருக்கு இழப்பை ஏற்படுத்தவும், துன்பம் தருவதற்கும், அவரை எவ்வகையிலாவது அழிப்பதற்கும், அவரது வியாபாரத்தின் மீது வியாபாரம் செய்யும் பழக்கம் இருக்கிறது. இந்த நபிமொழியில் இதுவும்கூட தடை செய்யப்பட்டுள்ளது. மற்றவரின் வியாபாரம் மோசமாகி விட வேண்டும் என்ற நோக்கத்தோடு மட்டும் அதிக விலை கொடுத்து பொருள்களை வாங்க முயற்சி செய்கின்றார்கள். ஆனால் இதனால் எவ்வித சுய லாபமும் அவருக்கு இருக்காது. இங்கு நான் இன்னொரு விசயத்தையும் கூறிவிடுகின்றேன். எவரையாவது திருமணம் செய்யும் நோக்கத்துடன் ஒருவர் தூது அனுப்பியுள்ள அதே இடத்தில் உடனடியாக இன்னொருவர் தூது அனுப்புவதும் இதில் அடங்கும். இந்த செயலும் தடுக்கப்பட்டுள்ளது. எனவே, அஹ்மதிகள் இந்த செயலிலிருந்தும் தங்களை விலக்கிக் கொள்ள வேண்டும்.

அநீதியிழைக்காதீர்கள்; எவரையும் அற்பமாகக் கருதாதீர்கள்; எவரையும் இழிவுபடுத்தாதீர்கள் என்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அநியாயக்காரன் ஒருபோதும் இறை நெருக்கத்தைப் பெற முடியாது என்றிருக்கும்போது ஒரு பக்கம் நீங்கள் இறைவனை மகிழ்விப்பதற்காக இக்காலத்தில் அல்லாஹ்விடமிருந்து அனுப்பப்பட்டவரை ஏற்று பைஅத் செய்துவிட்டு மறுபக்கம் மக்களது உரிமைகளை அநியாயமாக அபகரிப்பவர்களாகவும் சகோதரர்களுக்கு அவர்களுக்குரிய உரிமையை வழங்காமலும் உங்களால் எப்படி இருக்க முடியும்? சகோதரியின் திருமணம் வேறு குடும்பத்தில் நடைபெற்றுள்ளதால் எங்களது மூதாதையர்களின் பூர்வீக சொத்துக்கள் மற்ற குடும்பங்களில் சென்றுவிடக் கூடாது என்பதற்காக மட்டும் தமது சகோதரிகளுக்கு சொத்திலிருந்தும் பங்கு கொடுக்காமல் இருக்கின்றார்கள். கிராமங்களில் இது பொதுவான வழக்கமாக இருந்து வருகிறது. மனைவிமார்கள் மீது கொடுமையிழைப்பவர்களாக இருக்கின்றார்கள். அவர்களது உரிமைகளை கருத்தில் கொள்ளாமல் இருக்கின்றார்கள். மனைவிமார்கள் கணவன்மார்களின் உரிமைகளை கருத்தில் கொள்ளாமல் இருக்கின்றார்கள். இவ்வாறு நாள்தோறும் உள்ள பிரச்சனைகளில் பல



வி-யங்களும் அநீதியின் பட்டியலில் வந்து விடுகின்றது. இவர்கள் மற்றவர்களை அற்பமாக கருதுகின்றார்கள் அல்லது மற்றவர்களை இழிவாகக் கருதுகின்றார்கள் என்பதை உணரும் வகையில் பல விசயங்களும் நடைபெற்று வருகின்றது. ஆக ஒருபுறம் பைஅத் செய்ததாக வாதம் செய்து எல்லா தீமைகளையும் விட்டுவிடுவதாக உடன்படிக்கை செய்து விட்டு மறுபுறம் இப்படிப்பட்ட செயல்களைச் செய்கின்றார்கள். ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமை அற்பமாக கருதுவது எவ்வகையிலும் அனுமதிக்கப்பட்டதல்ல என்ற தெளிவான கட்டளை இருக்கின்றது. அவ்வாறே ஒரு முஸ்லிமின் மீது இன்னொரு முஸ்லிமின் இரத்தம், செல்வம் மற்றும் கண்ணியம் விலக்கப்பட்டிருக்கின்றது. இக்காலத்தில் இறைவனால் அனுப்பப்பட்டவரை ஏற்றுக்கொண்டு இஸ்லாமிய போதனைகளின்படி நடப்பதாக வாதிக்கும் உங்களிடம் இப்படிப்பட்ட செயல்கள் இருந்தால் அதற்கு பிறகும் நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்தில் இணைந்திருப்பதை எப்படி சகித்துக் கொள்ள முடியும்? இவற்றை சிறிய விசயமாக கருதாமல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சஹாபாக்கள் இவ்விசயங்களில் எவ்வாறு செயல்பட்டார்கள்? இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பிறகு அவர்கள் தங்களிடத்தில் எப்படிப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்தினார்கள் என்பதைப் பற்றிய இன்னும் சில முன்மாதிரிகளை நபிமொழிகளிலிருந்தும் உங்கள் முன் வைக்கின்றேன்.

ஹஸ்ரத் அபூஸர் கஃப்பாரி (ரலி) அவர்கள் அறிவிக்கும் சம்பவம் இது. அவர்களுக்கு ஒரு தடாகத்திலிருந்து தண்ணீர் குடிப்பதற்கு கொடுக்கப்பட்டது. ஒரு முறை ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சிலர் அங்கு வந்தார்கள். அவர்களில் ஒருவர் உங்களில் யார் அபூஸரிடம் சென்று அவரது தலைமுடியைப் பற்றிப் பிடித்து அவரிடம் கணக்கு கேட்பார்? என்று கேட்டார். ஒரு நபர் நான் இந்த வேலையைச் செய்வேன் என்று கூறினார். அந்த நபர் ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களிடம் தடாகத்திற்கு அருகில் வந்து அவர்களுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்தார். அப்போது ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பிறகு அமர்ந்து விட்டார்கள். அதற்கு பிறகு படுத்து விட்டார்கள். இதைப் பார்த்த அந்த நபர் அபூஸர் அவர்களே! நீங்கள் முதலில் ஏன் உட்கார்ந்தீர்கள்? பிறகு ஏன்

படுத்தீர்கள்? என்று கேட்டார். இதனைக் கேட்ட ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்கள் எவருக்காவது கோபம் வந்தால் அவர் நின்று கொண்டிருந்தால் உட்கார்ந்துவிட வேண்டும். அதனால் அவரது கோபம் அகன்று விட்டால் நல்லது. அவ்வாறு கோபம் அகலவில்லையென்றால் அவர் படுத்துவிட வேண்டும் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களைப் பார்த்து கூறியிருந்தார்கள் என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 153, பைரூத் வெளியீடு)

**பிறகு இன்னொரு அறிவிப்பில் அறிவிப்பாளர் இவ்வாறு அறிவிக்கின்றார்:**

நாங்கள் உர்வா பின் முஹம்மது அவர்களின் அருகில் அமர்ந்திருந்திருந்தோம். அவர்களிடம் ஒரு நபர் வந்து அவர்களிடம் எப்படிப்பட்ட விசயங்களை பேசினாரென்றால் அதனால் அவர்களுக்கு கோபம் வந்தது. அவர்களுக்கு கடுமையான கோபம் வந்தபோது அவர்கள் எழுந்த நின்று வுளு செய்துவிட்டு எங்களிடம் திரும்பி வந்தார்கள். பிறகு அவர்கள் எங்களிடம் இவ்வாறு கூறினார்கள்.

எனது தந்தையார் ஸஹாபாக்களில் ஒருவரான எனது பாட்டனார் அதிய்யா அவர்கள் முலமாக கேட்டு என்னிடம் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ (ஸல்) அவர்கள் கோபம் சைய்த்தானிடமிருந்து வருகின்றது. ஷை-ய்த்தான் நெருப்பால் படைக்கப்பட்டிருக்கின்றான். மேலும் தண்ணீர் முலமாக நெருப்பு அணைக்கப்படுகின்றது. எனவே உங்களில் எவருக்காவது கோபம் வந்தால் அவர் வுளு செய்ய வேண்டும் என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல், தொகுதி 4 பக்கம் 226, பைரூத் வெளியீடு)

ஹஸ்ரத் ஸியாது தனது சிறிய தகப்பனாரான உத்பா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள். அல்லாஹவே! தீய ஒழுக்கத்திலிருந்தும் தீய செயல்களிலிருந்தும், தீய விருப்பங்களிலிருந்தும் நான் உன்னிடம் அடைக்கலம் தேடுகின்றேன் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ (ஸல்) அவர்கள் துஆ செய்து வந்தார்கள். (திர்மிதி - கிதாபுத் தஃவாத்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) இது தொடர்பாக என்ன கூறியுள்ளார்கள் என்பதையும் அவர்களுக்கு ஜமாஅத்திடம் என்ன எதிர்பார்ப்புகள் இருக்கின்றன என்பதை இப்போது நான் கூறுகின்றேன்.



**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இங்கு வருகை தந்துள்ள அல்லது தமது இடங்களில் வாழ்கின்ற என்னுடைய ஜமாஅத்தினரும் இந்த அறிவுரையை கவனமாகக் கேளுங்கள். அவர்கள் இந்த இயக்கத்தில் இணைந்து என்னுடன் தொடர்பையும், முரீதையும் பெற்றதன் குறிக்கோள் அவர்கள் நன்னடத்தை, நன்னெறி மற்றும் இறையச்சம் ஆகியவற்றின் உயர்ந்த படித்தரத்தை எட்ட வேண்டும். மேலும் எந்த குழப்பமும், தீங்கும், தீய நடத்தையும் அவர்களுக்கு அருகில் வர முடியாதிருக்க வேண்டும். அவர்கள் ஐவேளை தொழுகைகளை ஜமாஅத்தாகப் பேண வேண்டும். அவர்கள் பொய் பேசக்கூடாது. அவர்கள் எவருக்கும் நாவினால் துன்பமிழைக்கக் கூடாது. அவர்கள் தீய செயலில் ஈடுபடக்கூடாது. மேலும் அவர்கள் எந்தவொரு தொல்லை, அநியாயம், குழப்பம் ஆகியவற்றின் சிந்தனை கூட உள்ளத்தில் தோன்றவிடக் கூடாது. சுருக்கமாக, எல்லா விதமான பாவங்கள், குற்றங்கள், பேசக்கூடாத வி-யங்களைப் பேசுதல், உணர்ச்சிகள், பொருத்தமற்ற செயல்கள் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். மேலும் அவர்கள் தூய உள்ளத்தை கொண்ட தீங்கற்ற, அடக்கமான குணத்தை கொண்ட இறையடியாராக மாற வேண்டும். மேலும் அவர்களிடம் விசத்தின் எந்த தன்மையும் இருக்கக்கூடாது.......

மேலும் முழு மனித இனத்திற்கும் கருணை காட்டுவது அவர்களது கொள்கையாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். அவர்கள் தங்களது நாவுகளையும், கைகளையும், தங்கள் உள்ளத்திலுள்ள எண்ணங்களையும் ஒவ்வொரு தூய்மையற்ற குழப்பத்தை தூண்டுகின்ற வழிகளிலிருந்தும் நம்பிக்கை துரோகத்திலிருந்தும் காப்பாற்றுபவர்களாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் ஐவேளை தொழுகைகளை மிகுந்த கவனத்துடன் நிலைநாட்டுபவர்களாகவும் அநீதியிழைத்தல், வரம்பு மீறுதல், லஞ்சம் வாங்குதல், பிறரது உரிமைகளைப் பறித்தல், ஒருதலைப்பட்சமாக செயல்படுதல் போன்றவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும். அவர்கள் தீய நண்பர்களுடன் அமர வேண்டாம். உங்களிடம் வந்து போகும் நபர் ஒருவர் இறைவனது கட்டளைகளைப் பேணாதவர்.... அல்லது அடியார்களுக்குரிய

உரிமைகளை நிறைவேற்றுவதை பொருட்படுத்தாமல் இருப்பவர் அல்லது அநீதியிழைக்கும் இயல்புடையவன் அல்லது தீய இயல்பும், தீய நடத்தையுமுள்ள மனிதர் அல்லது எந்த நபருடன் உங்களுக்கு பைஅத்தின் தொடர்பு உள்ளதோ அந்த நபரைப் பற்றி உண்மைக்குப் புறம்பான காரணமற்ற தீய விசயங்களைக் கூறித் தீய சொற்களாலும், பழித்துரைகளாலும் அவர் மீது இட்டுக்கட்டி பொய்யான விசயங்களைக் கூறும் பழக்கமுடையவராகவும் அதன் மூலம் இறைவனது அடியார்களை ஏமாற்ற விரும்புபவராகவும் இருப்பவர் என்பது பின்னர் நிரூபிக்கப்பட்டால் அப்படிப்பட்ட தீயவரை உங்களிடமிருந்து விலக்கி விடுவது உங்கள் மீது கட்டாயமாகும். அப்படிப்பட்ட அபாயகரமான மனிதரிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். எந்தவொரு மதத்தையும் சமுதாயத்தையும் பிரிவையும் சார்ந்த மனிதனுக்கும் இழப்பை ஏற்படுத்த எண்ணாதீர்கள். எல்லாருக்கும் உண்மையான போதகராக ஆகிவிடுங்கள். தீய வாழ்க்கை நடத்துபவர்களும், விசமிகளும், குழப்பவாதிகளும், தீய நடத்தை உடையவர்களும் உங்கள் சபைகளில் ஒருபோதும் வர வேண்டாம். அவர்கள் உங்கள் வீடுகளிலும் தங்க வேண்டாம். அதனால் ஏதாவது ஒரு சமயத்தில் அவர்கள் உங்கள் தடுமாற்றத்திற்கு காரணமாகி விடலாம்.”

**மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இவை ஆரம்பத்திலிருந்தே நான் கூறிவரும் நிபந்தனைகளாகும். என் ஜமாஅத்திலுள்ள ஒவ்வொரு நபரும் இந்த எல்லா அறிவுரைகளின்படி செயல்படுவது கட்டாயமானதாகும். மேலும் உங்கள் சபைகளில் எந்தவொரு அசுத்தமும், கிண்டலும், எள்ளிநகையாடலும் இருக்கக் கூடாது. மேலும் நல்ல உள்ளத்துடனும், தூய இயல்புடனும், தூய சிந்தனையுடனும் பூமியில் நடங்கள். எல்லா தீங்கும் எதிர்க்கத்தக்கதல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, பெரும்பாலான நேரங்களில் மன்னிப்பையும், கண்டும் காணாதிருக்கும் பழக்கத்தையும் உருவாக்குங்கள். பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் கடைபிடியுங்கள். எவர் மீதும் அநியாயமான முறையில் தாக்காதீர்கள். மன உணர்ச்சிகளை அடக்கி வையுங்கள். மேலும் வாதம் புரிந்தால் அல்லது மார்க்கக் கருத்துப்



பரிமாற்றம் செய்தால் மென்மையான சொற்களிலும் நாகரிகமான முறையிலும் செய்யுங்கள். எவராவது முட்டாள்தனமாக நடந்து கொண்டால் சலாம் கூறிவிட்டு அத்தகைய சபையிலிருந்து சீக்கிரம் எழுந்து சென்று விடுங்கள். உங்கள் மீது அநியாயம் செய்யப்பட்டால், நீங்கள் திட்டப்பட்டால், உங்களைப் பற்றி தீய சொற்கள் கூறப்பட்டால் கவனமாக இருங்கள். முட்டாள்தனத்தை முட்டாள்தனத்தினால் நீங்கள் எதிர்க்காதீர்கள். இல்லையென்றால், நீங்களும் அவர்களைப் போன்றே ஆகிவிடுவீர்கள். நன்மை, நேர்மை ஆகியவற்றிற்கு முழு உலகத்திற்கும் முன்மாதிரியைக் கொண்ட ஜமாஅத்தாக உங்களை இறைவன் ஆக்க விரும்புகின்றான். எனவே, தீமைக்கும், தீங்கிற்கும், குழப்பத்திற்கும், தீய மனதிற்கும் முன்மாதிரியாக இருப்பவரை உங்களிடமிருந்து சீக்கிரம் வெளியேற்றி விடுங்கள். எவர் நமது ஜமாஅத்தில் ஏழ்மை, நன்மை, தூய்மை, சகிப்புத்தன்மை, மென்மையாக பேசுதல், நல்லியல்பு, நன்னடத்தை ஆகியவற்றுடன் இருக்க முடியாதோ அவர் விரைவில் நம்மை விட்டு விலகி விடட்டும். ஏனெனில், அத்தகையோர் நம்மிடம் இருப்பதை நமது இறைவன் விரும்புவதில்லை. நிச்சயமாக அவர் தீய நிலையில் மரணிப்பார். ஏனெனில் அவர் நன்மையான வழியைப் பின்பற்றவில்லை. எனவே, நீங்கள் கவனமாக இருங்கள். உண்மையிலேயே நல்ல உள்ளம் கொண்டவராகவும் பணிவுள்ளவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் மாறுங்கள். ஐவேளை தொழுகைகளினாலும், நல்லொழுக்க நிலைகளினாலுமே நீங்கள் கண்டறியப்படுவீர்கள். மேலும், எவரிடம் தீமையின் விதை உள்ளதோ அவர் இந்த அறிவுரையின்படி நிலைத்திருக்க முடியாது.”

(இஷ்திஹார் 29-5-1898 தப்லீகே ரிஸாரத் தொகுதி 7 பக்கம் 42,43)

**மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்:**

“மனிதன் தற்பெருமை கொள்ள வேண்டாம். பிறரை கருத்தில் கொள்ளாமல் இருக்க வேண்டாம். படைப்பினங்களிடத்தில் தீய பரிமாற்றத்தை மேற்கொள்ள வேண்டாம். நேசத்துடனும், நல்லவிதமாகவும் நடந்து கொள்ள வேண்டும். தனது சுய நோக்கங்களுக்காக எவரிடமும் காழ்ப்புணர்ச்சி கொள்ள வேண்டாம். பொருத்தமான சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப கடினத்தையும் மென்மையையும் கைக்கொள்ள வேண்டும்.” (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 609 புதிய பதிப்பு)

## பணிவையும் தாழ்மை குணத்தையும் மேற்கொள்ளுங்கள்

தன்னடக்கம், பணிவு ஆகியவை தொடர்பாக **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

“இறைதண்டனை வந்து பாவமன்னிப்பிற்கான வாசலை அடைப்பதற்கு முன்பாக தவ்பா செய்யுங்கள். உலக சட்டங்களுக்கு இந்த அளவுக்கு அஞ்சுகின்ற போது இறைவனின் சட்டங்களுக்கு அஞ்சாமல் இருப்பதற்கு என்ன காரணம்? துன்பம் தலைக்கு மேல் வரும்போது அதன் சுவையை சுவைக்க வேண்டியது வரும். ஒவ்வொரு நபரும் தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழ முயற்சி செய்ய வேண்டும். ஐவேளை தொழுகைகளிலும் குனூத் துஆவை ஓத வேண்டும். இறைவனை வெறுப்படையச் செய்கின்ற ஒவ்வொரு செயலிலிருந்தும் தவ்பா செய்ய வேண்டும். எல்லா தீமைகளிலிருந்தும் இறைவனின் வெறுப்பிற்கு காரணமாக இருப்பவற்றையும் விட்டு விட்டு ஒரு தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்தி முன்னேறிச் சென்று இறையச்சத்தை மேற்கொள்வதுதான் தவ்பா என்பதன் கருத்தாகும். இதிலும் இறைவனது கருணை இருக்கின்றது. மனித பழக்கவழக்கங்கள் சரியாக இருக்க வேண்டும். கோபம் இருக்கக் கூடாது. தன்னடக்கமும் தாழ்மைக் குணமும் அதன் இடத்தையும் பிடித்துக் கொள்ள வேண்டும். ஒழுக்கங்களை சரியாக்குவதுடன் உங்களது சக்திக்கு ஏற்ப தருமம் கொடுப்பதையும் கடைபிடியுங்கள். **யுத்இமூனத் தஆம அலா ஹுப்பிஹீ மிஸ்கீனன் வயதீமன் வஅஸீரா** – அதாவது இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக அவர்கள் வறியவர்களுக்கும் அநாதைகளுக்கும் கைதிகளுக்கும் உணவளிப்பார்கள். மேலும் குறிப்பாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே நாங்கள் இதனை தருகின்றோம். மிகவும் அபாயகரமான அந்த நாள் குறித்து அஞ்சுகின்றோம் என்றும் கூறுகின்றனர். (76:9-11)

“சுருக்கமாக கூறுவதென்றால் துஆ தவ்பா ஆகியவற்றை கடைபிடியுங்கள். தருமம் கொடுத்துக் கொண்டிருங்கள். அதன் மூலமாக அல்லாஹ் தனது அருளுடனும், கருணையுடனும் உங்களிடம் நடந்து கொள்ள வேண்டும்.” (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 134, 135 புதிய பதிப்பு)



**மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“நண்பர்களே! இந்த கொள்கையை வலுவாகப் பற்றிப் பிடியுங்கள். ஒவ்வொரு சமுதாயத்துடனும் மென்மையாக நடந்து கொள்ளுங்கள். மென்மையைக் கடைபிடிப்பதால் அறிவு வளர்ச்சி அடைகின்றது. சகிப்புத் தன்மையின் மூலமாக ஆழ்ந்த சிந்தனைகள் உருவாகின்றன. மேலும் எவர் இந்த வழிமுறைகளை மேற்கொள்வதில்லையோ அவர் நம்மை சார்ந்தவரல்ல. நமது ஜமாஅத்தைச் சார்ந்த எவராவது எதிரிகளின் கடுமையான வார்த்தைகளையும் ஏச்சுப் பேச்சுக்களையும் கேட்டு பொறுமையைக் கடைபிடிக்க முடியவில்லையென்றால் அவர் நீதிமன்றம் சென்று அதன் மூலம் தீர்வு காணலாம். ஆனால், கடுமைக்கு எதிராக கடுமையுடன் நடந்து ஏதாவது குழப்பத்தை ஏற்படுத்துவது பொருத்தமான செயல் அல்ல. இது நாம் நமது ஜமாஅத்திற்கு வலியுறுத்திக் கூறவேண்டியவையாகும். அதை நாம் செய்து விட்டோம். இதற்கேற்ப செயல்படாதவர்களை விட்டும் நாம் விலகி நிற்கின்றோம். மேலும் அப்படிப்பட்டவரை நம் ஜமாஅத்திலிருந்தும் வெளியேற்றுகின்றோம்.”

(தப்லீகே ரிஸாலத் தொகுதி 6 பக்கம் 170)

# பைஅத்தின் ஐந்தாவது நிபந்தனை

**“துக்கம், மகிழ்ச்சி, பணக்கஷ்டம், பணவசதி, இறைவனிடமிருந்து கிடைக்கும் அருள், அவனால் தரப்படும் சோதனை ஆகிய எந்த நிலையிலும் இறைவனிடம் மனங்கோணாமல் பற்றுள்ளவனாக இருப்பேன். இறைவனின் தீர்ப்பை எந்த நிலையிலும் உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வேன். அவன் வழியில் எல்லா வகையான இழிவையும் இன்னல்களையும் ஏற்கத் தயாராக இருப்பேன். எத்தகைய தொல்லைகளுக்கு ஆளானாலும் முகஞ்சுளிக்காமல் முன்னேறிச் செல்வேன்.”**

**அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:**

“மக்களுள் அல்லாஹ்வின் திருப்தியினைப் பெறுவதற்காகத் தமது உயிரையே விற்று விடுபவர்களும் உள்ளனர். (இத்தகைய) அடியார்களிடம் அல்லாஹ் மிகுந்த பரிவுகாட்டக்கூடியவனாவான்.” (2:208)

**இதற்கு விளக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“மனிதர்களில் இறை திருப்தியில் தன்னை அர்ப்பணிக்கின்ற உயர்ந்த நிலையிலுள்ள மனிதர்கள் தமது உயிரை விற்றுவிடுகின்றனர். மேலும் அவர்கள் இறைதிருப்தியைப் பெற்று விடுகின்றனர். இந்த மக்கள் மீதுதான் இறைவனின் கருணை இருக்கின்றது. .........எந்த நபர் எனது வழியில் எனது திருப்தியின் வழியில் தனது உயிரை விற்று விடுகின்றாரோ அவர் எல்லா துக்கங்களிலிருந்தும் இரட்சிப்பை பெறுகின்றார். தனது உயிரை அர்ப்பணிப்பதன் மூலமாக அவர் இறைவனுக்குரியவர் என்ற தனது நிலையை அவர் நிரூபிக்கின்றார். முழுக்க முழுக்க படைத்தவனுக்கு கீழ்படிவதற்கும் படைப்பினங்களுக்கு தொண்டு செய்வதற்காகவும் உருவாக்கப்பட்ட ஒரு பொருளாக அவர் தன்னை கருதுகின்றார் என்று அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகின்றான்.”

(ரிப்போர்ட் ஜல்ஸா அஃஸம் மஸாஹிப் பக்கம் 131, 132)



**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இறைவனது அன்பான அடியார் தனது உயிரை இறைவழியில் கொடுத்து விடுகின்றார். மேலும் அதற்குப் பகரமாக அவர் இறைதிருப்தியை வாங்குகின்றார். இப்படிப்பட்ட மக்களே இறைவனின் குறிப்பான கருணைக்குரியவர்களாவர்.” **(ரிப்போர்ட் ஜல்ஸா மஸாஹிப் பக்கம் 188)**

**மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“எப்படியாவது இறைவன் திருப்தியடைந்து விட வேண்டும் என்பதற்காக இறைவழியில் தங்கள் உயிர்களை விற்றுவிடுகின்ற சிலர் இருக்கின்றனர்.” (பயகாமே ஸுல்ஹ் ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 473)

இப்படிப்பட்ட மக்கள் தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு நற்செய்தி கூறுகின்றான்.

நிம்மதியடைந்த ஆன்மாவே! நீ உன் இறைவனிடம் திருப்தி அடைந்தவாறும் அவன் (உன்னிடம்) திருப்தியடைந்தவாறும் (அவனிடம்) திரும்பி வருக. நீ என்னுடைய நல்லடியார்களுக்கு இடையே நுழைந்து விடுக. எனது சுவர்க்கத்தில் நுழைந்து விடுக (என உன் இறைவன் உன்னிடம் கூறுகின்றான்.) (89:28-31)

இறைநியதியில் திருப்தியடைபவர்களுக்கும் இறைவனுக்காக துக்கத்தையும் துயரத்தையும் தாங்கிக் கொள்பவர்களுக்கும் நற்கூலி வழங்காமல் ஒருபோதும் இறைவன் விட்டுவிடமாட்டான். நம்மில் பலரும் தவறிழைப்பவர்களாகவும் கவனக்குறைவு உள்ளவர்களாகவும் பலவீனமானவர்களாகவும் இருக்கின்றோம். நம்மிடமிருந்து பல தவறுகளும் பாவங்களும் ஏற்பட்டு விடுகின்றது. ஆனால், இறைநியதியில் திருப்தியடைகின்ற பழக்கம் நம்மிடம் இருந்து, இறைவனுக்காக ஒவ்வொரு துக்கத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்து அவற்றை நாம் ஏற்றுக் கொண்டால், சிறிய இழப்பு ஏற்பட்டாலும் வானத்தை தலையில் சுமந்திருப்பது போல கூச்சலிட்டு அழுது புலம்புகின்ற பெண்கள் போன்றல்லாமல் இருந்தால், அப்படிப்பட்ட பொறுமையை மேற்கொள்பவர்களுக்கு இறைவனின் தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு நற்செய்தி கூறியுள்ளார்கள்.

## துன்பங்கள் பாவங்களுக்கு பரிகாரமாகி விடும்

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

"எந்தவொரு முஸ்லிமுக்கு வருகின்ற எந்த துக்கமும் எந்த துயரமும் எந்த கஷ்டமும் எந்த கவலையும் ஒரு முள் குத்துவதும் கூட அல்லாஹ் அவரது கஷ்டத்தை அவரது பாவங்களுக்கு பரிகாரமாக ஆக்குவதற்கே ஆகும். அல்லாஹ் அவற்றை அவரது பாவங்களுக்கு பரிகாரமாக ஆக்கி விடுகின்றான்." (முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸிலா)

**ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் சுஹைப் பின் சனான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"நம்பிக்கையாளரின் விசயங்கள் வியப்புக்குரியவையாகும். அவரது எல்லா பணிகளும் அருள் நிறைந்ததாக இருக்கின்றது. இந்த அருள் குறிப்பாக நம்பிக்கையாளருக்கு மட்டும் உரியதாகும். அந்த நம்பிக்கையாளருக்கு ஏதாவது மகிழ்ச்சி, இன்பம், வசதி ஆகியவை ஏற்படும் போது அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது அவருக்கு மேலும நன்மையும் அருளும் கிடைக்க காரணமாகி விடுகின்றது. மேலும் அவருக்கு ஏதாவது துக்கம், துயரம், வசதியின்மை, இழப்பு ஆகியவை ஏற்படும் போது அவர் பொறுமையை மேற்கொள்கின்றார். அவருடைய இந்த செயல்முறையும் அவருக்கு நன்மையும் அருளும் கிடைக்க காரணமாகி விடுகின்றனர். ஏனெனில் அவர் பொறுமையை மேற்கொண்டு நற்கூலியை பெற்றுக் கொள்கின்றனர்." (முஸ்லிம் கிதாபுஸ் ஸுஹது)

**ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் சுஹைப் பின் சனான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

நம்பிக்கையாளரின் விசயங்கள் வியப்புக்குரியவையாகும். அவரது எல்லா பணிகளும் அருள் நிறைந்ததாக இருக்கின்றது. இந்த அருள் குறிப்பாக நம்பிக்கையாளருக்கு மட்டும் உரியதாகும். அந்த நம்பிக்கையாளருக்கு ஏதாவது மகிழ்ச்சி, இன்பம் வசதி ஆகியவை ஏற்படும் போது அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது அவருக்கு மேலும் நன்மையும் அருளும் கிடைக்க காரணமாகி விடுகின்றது. மேலும் அவருக்கு ஏதாவது துக்கம், துயரம், வசதியின்மை, இழப்பு ஆகியவை ஏற்படும் போது அவர் பொறுமையை மேற்கொள்கின்றார். அவருடைய இந்த செயல்முறையும்



அவருக்கு நன்மையும் அருளும் கிடைக்க காரணமாகி விடுகின்றன. ஏனெனில் அவர் பொறுமையை மேற்கொண்டு நற்கூலியை பெற்று கொள்கின்றார்." (முஸ்லிம் கிதாபுஸ்ஸுஹத்)

பிறகு சில சமயங்களில் சந்ததிகள் மூலமாகவும் அல்லாஹ் தனது அடியார்களை சோதிக்கின்றான் சந்ததிகள் மரணமடைகின்ற போது மிகவும் அதிகமாக ஒப்பாரி வைக்கின்றார்கள். குறிப்பாக பெண்களிடம் இந்த பழக்கம் இருக்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மிகவும் அதிகமாக பொறுமையை கடைபிடித்து இறைவனது திருப்தியில் திருப்தி அடைகின்ற தாய்மார்களை அல்லாஹ் தந்துள்ளான். ஆனால் சில சமயங்களில் சில இடங்களில் முறையீடுகள் செய்வதும் இருக்கின்றது. குறிப்பாக மிகவும் குறைவாக எழுத படிக்க தெரிந்தவர்களிடம் இப்படிப்பட்ட நிலை இருக்கின்றது. அவர்களிடம் மட்டுமின்றி படித்தவர்களிடம் கூட இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நன்றிகேட்டை வெளிப்படுத்தும் சொற்கள் நாவிலிருந்து வெளிவந்து விடுகின்றன. இதனை நான் பார்த்திருக்கின்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்களிடம் பைஅத் வாங்கும் போது இந்த வி-யம் தொடர்பாகவும் உறுதிமொழி வாங்கியிருந்தார்கள். ஹஸ்ரத் உஸைத் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிம் நேரடியாக பைஅத் செய்த நபித்தோழி ஒருவரிடமிருந்து இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:

"ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பைஅத் வாங்கும்போது எங்களிடம் பெற்ற உறுதிமொழியில் இந்த விசயங்கள் கூறி இருந்தன. அதாவது நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படியாமல் இருக்கமாட்டோம். மரணித்தவர்களுக்காக அழும்போது எங்கள் முகங்களை சுழித்துக் கொள்ள மாட்டோம். ஒப்பாரி வைக்க மாட்டோம். எங்கள் மேலாடைகளை கிழித்துக் கொள்ள மாட்டோம். மேலும் எங்கள் தலைமுடிகளை சின்னாபின்னமாக சிதற விடமாட்டோம் என்று நாங்கள் உறுதி மொழி கூறினோம்." (அபூதாவூது கிதாபுல் ஜனாயிஸ்)

(அதாவது கடுமையான அமைதியற்ற நிலையையும் அளவு கடந்த பொறுமையின்மையையும் அவநம்பிக்கையையும் வெளிப்படுத்தும் வகையிலுள்ள செயல்களை மேற்கொள்ள மாட்டோம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறுதிமொழி வாங்கினார்கள்).

## துக்கம் ஏற்படுகின்ற ஆரம்ப வேளையில் மேற்கொள்ளப்படும் பொறுமையே உண்மையான பொறுமையாகும்

**ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பெண்ணிற்கு அருகில் நடந்து செல்லும்போது அந்த பெண் ஒரு கல்லறைக்கு அருகில் அமர்ந்து அழுவதைப் பார்த்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பெண்ணிடம் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள், மேலும் பொறுமையை கடைபிடியுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அந்த பெண் இங்கிருந்து சென்று விடுங்கள். உங்கள் வழியைப்பார்த்து செல்லுங்கள். எனக்கு வந்துள்ள துக்கம் உங்களுக்கு வரவில்லை என்று கூறினாள். உண்மையில் அந்த பெண் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. (அதனால்தான் அவளது நாவிலிருந்து அப்படிப்பட்ட தரக்குறைவான சொற்கள் வெளிவந்தன). இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) ஆவார்கள் என அப்பெண்ணிடம் கூறப்பட்டதும் அவள் மிகுந்த அச்சத்துடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வீட்டு கதவருகில் வந்தாள். அங்கு அவளை தடுக்கின்ற எந்த காவலாளியும் இருக்கவில்லை. எனவே நேராக அவள் வீட்டிற்குள் சென்றாள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னால் உங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அந்தப் பெண் கூறினாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துக்கம் ஏற்படுகின்ற ஆரம்ப வேளையில் மேற்கொள்ளப்படும் பொறுமையே உண்மையான பொறுமை என்று கூறினார்கள்.

(புகாரி கிதாபுல் ஜனாயிஸ்)

(அவ்வாறில்லாமல் அழுது புலம்பிய பிறகு எல்லா மக்களும் பொறுமையாக இருந்து விடுவார்கள்).

எல்லா நிலையிலும் இறைவனுக்கு நன்றி உள்ளவனாக இருப்பேன் என்ற முக்கியமான கருத்து ஐந்தாவது நிபந்தனையில் கூறப்பட்டுள்ளது.

வறுமை, வசதியின்மை ஆகியவற்றின் நாட்கள் மிக நீண்டதாக ஆகிக்கொண்டிருக்கின்றது. உலக பேராசைகள் கண்முன்னே தெரிகின்றது.



நான் இந்த பணியை செய்தால், இந்த பக்கம் குனிந்தால் மிகப்பெரும் பலன்களை பெற முடியும் என்று எண்ணமும் வருகின்றது. உலக சக்திகளும் பேராசை காட்டுகின்றன. அஹ்மதியாக இருந்து கொண்டு ஜமாஅத்துடன் தொடர்பு வைத்துக்கொண்டு நீங்கள் இந்த பணியை செய்தால் ஒன்றுமில்லை. இந்த தொழிலை நீங்கள் செய்தால் உங்கள் நிலைமையை சிறப்பானதாக ஆக்கிக்கொள்வீர்கள். பிறகு சந்தா கொடுத்து ஜமாஅத்துக்கு தொண்டு செய்து கொள்ளலாம் என்றெல்லாம் கூறப்படுகிறது. இவையெல்லாம் ஜமாஅத்தை விட்டும் இறைவனை விட்டும் உங்களை விலக்கி செல்லக்கூடிய தஜ்ஜாலிய குழப்பங்களாகும். இதற்காகத்தான் நீங்கள் பைஅத் செய்த பிறகு இப்படிப்பட்ட குழப்பங்களில் வீழ்ந்து விடாதீர்கள். இப்படிப்பட்ட ஏமாற்றங்களிலிருந்து விலகி சென்று விடுங்கள். இறைவனிடம் நன்றியுள்ளவராக நடந்து கொள்ளும் முன்மாதிரியை காட்டுங்கள். அவன் பக்கம் குனிந்தால் நீங்கள் என்னை சார்ந்தவராக இருப்பீர்கள். மேலும் உங்களுக்கு எல்லாம் கிடைத்து விடும் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"ஒரு முறை நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சவாரியில் அவர்களுக்கு பின்னால் அமர்ந்திருந்தேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் சகோதரரே! நான் உமக்கு சில விசயங்களை கூறுகின்றேன். முதலாவது விசயம் நீர் அல்லாஹ்வை நினைவில் வைத்திருக்க வேண்டும். அல்லாஹ்வும் உம்மை தனது நினைவில் வைத்திருப்பான். நீர் அல்லாஹ்வின் மீது உமது பார்வையை வைத்திருந்தால் நீர் அவன் உமதருகில் இருப்பதை உணர்ந்து கொள்வீர். எந்த பொருளையாவது கேட்க வேண்டுமென்றால் அதனை அல்லாஹ்விடம் கேட்பீராக. நீர் உதவி கேட்கும் போது அல்லாஹ்விடம் உதவி கேட்பீராக. நினைவில் கொள்க! எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து உமக்கு நற்பலனை தர விரும்பினாலும் அல்லாஹ் அதனை விரும்பி அதனை உமது நற்பாக்கியத்தில் எழுதாத வரை அவர்கள் உமக்கு எந்த நற்பலனையும் தர முடியாது. மேலும் அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உமக்கு இழப்பபை

ஏற்படுத்த விரும்பினாலும் அல்லாஹ் உமக்கு இழப்பை எழுதாக வரை அவர்களால் உமக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது. பேனாக்கள் எடுத்து வைக்கப்பட்டுவிட்டன. விதி எழுதப்படும் பேனாமை காய்ந்து விட்டது என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக இன்னொரு அறிவிப்பில் இருக்கின்றது. அவர்கள் கூறினார்கள்:**

"அல்லாஹ்வின் மீது நீர் உமது பார்வையை வைப்பீராக! நீர் அவன் உமக்கு முன்னால் இருப்பதை உணர்ந்து கொள்வீர். இன்பமான நிலையில் நீர் அல்லாஹ்வை அடையாளம் கண்டு கொள்வீராக. வறுமையில் அல்லாஹ் உம்மை அடையாளம் கண்டு கொள்வான். நினைவில் கொள்க! உம்மை விட்டு சென்றவையும் உமக்கு எட்டாதவையும் உமது பங்கில் இல்லாததாகும். எது உமக்கு கிடைத்திருக்கின்றதோ அது உமக்கு கிடைக்காமல் இருக்க முடியாது. ஏனென்றால், விதியில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. தெரிந்து கொள்க! பொறுமையை மேற்கொள்பவர்களுடன் அல்லாஹ்வின் உதவி இருக்கின்றது. மகிழ்ச்சி அமைதியின்மையுடன் கலந்திருக்கின்றது. ஒவ்வொரு கஷ்டத்திற்கு பிறகு எளிதான நிலைமையும் சுகமும் வருகின்றது." (சுனன் திர்மிதி அப்வாப் ஸிஃபத்துல் கியாமா)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எந்த ஒரு செயலிலும் அல்லாஹ்வின் திருப்தி இல்லாமல் இருக்கவில்லை. அவ்வாறிருந்தும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக அவர்கள் எந்த அளவு வேதனையுடன் துஆ செய்திருக்கின்றார்கள்.

**ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதாக முஹம்மது பின் இப்ராஹீம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருகில் தூங்கிக் கொண்டிருந்தேன். இரவின் ஒரு பகுதி கழிந்த பிறகு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அங்கு பார்க்க முடியவில்லை. நான் தடவிப்பார்த்த போது எனது கைகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கால்களைத் தொட்டது. அப்போது அவர்கள் சஜ்தா செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் இவ்வாறு துஆ செய்து கொண்டிருந்தார்கள்:



அல்லாஹ்வே! நான் உனது வெறுப்பிலிருந்தும், உனது திருப்தியின் அடைக்கலத்தை வேண்டுகின்றேன். உனது தண்டனையிலிருந்து உனது மன்னிப்பின் அடைக்கலத்தை வேண்டுகின்றேன். என்னால் உனது புகழை எண்ண முடியாது. எவ்வாறு உனது இருப்பைப் பற்றி நீ புகழ்ந்து கூறியுள்ளாயோ அவ்வாறே நீ இருக்கின்றாய்." (சுனன் திர்மிதி கிதாபுத் தஃவாத்)

**மதீனாவிலுள்ள ஒரு நபரிடமிருந்து ஹஸ்ரத் அப்துல் வஹாப் பின் வர்த் அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:**

"ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்களிடம் ஏதாவது போதனை ஒன்றை எழுதி அனுப்பும்படி எழுதியிருந்தார்கள். அதைக் கண்ட பிறகு ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதி அனுப்பினார்கள்: அஸ்ஸலாமு அலைக்கும். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுவதைக் கண்டேன். எந்த நபர் மக்கள் அவரிடம் வெறுப்படையும்படி செய்தும்கூட அல்லாஹ்வின் திருப்தியை வேண்டுபவராக இருப்பாரோ அப்படிப்பட்டவருக்கு மக்களுக்கு எதிரில் அவனே அவருக்கு போதுமானவனாக ஆகிவிடுவான். மேலும் எவர் மக்களை திருப்திபடுத்துவதற்காக அல்லாஹ்வை வெறுப்படையச் செய்வாரோ அப்படிப்பட்டவரை அல்லாஹ் மக்களிடம் ஒப்படைத்து விடுவான்."

(திர்மிதி கிதாபுஸ் ஸுஹது)

## நீங்கள் இறைவனின் இறுதியான ஜமாஅத்தாக இருக்கின்றீர்கள்

அல்லாஹ்வுடன் நன்றியுணர்வுடன் தனது தொடர்பை நிலைநாட்டுமாறு தனது ஜமாஅத்திற்கு போதனை செய்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

"இதற்கு முன்னர் நம்பிக்கையாளர்கள் சோதிக்கப்பட்டது போன்று பல்வேறு வகையான துக்கங்களாலும் துயரங்களாலும் நீங்களும் சோதிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். எனவே தடுமாற்றமடைந்து விடாமல் எச்சரிக்கையாக இருங்கள். உங்களுக்கு வானத்துடன் உறுதியான

தொடர்பு இருந்தால் பூமியில் இருப்பவர்களால் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாது. உங்களுக்கு நீங்களே இழப்பை ஏற்படுத்திக் கொள்ளும் போதெல்லாம் அது எதிரிகளின் கைகளால் அல்லாமல் உங்களது கைகளாலேயே ஏற்படுகின்றது. பூமியில் உங்களுக்கு கிடைக்கும் அனைத்து கண்ணியத்தையும் நீங்கள் இழந்து விட்டாலும் என்றும் அழியாத ஓர் கண்ணியத்தை இறைவன் உங்களுக்கு விண்ணில் தருவான். எனவே, நீங்கள் அவனை விட்டு விடாதீர்கள். உங்களுக்கு துக்கம் கொடுக்கப்படுவதும் உங்களது பல நம்பிக்கைகளும் நிறைவேறாமல் போவதும் அவசியமானதாகும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படும்போது நீங்கள் உள்ளத்தால் சோர்வடைந்து விடாதீர்கள். ஏனென்றால் அவனது வழியில் நீங்கள் உறுதியுடன் நிற்கின்றீர்களா? இல்லையா? என்பதை உங்கள் இறைவன் உங்களிடம் சோதித்துப் பார்க்கின்றான். வானத்தில் மலக்குகள் உங்களைப் புகழ வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் நீங்கள் அடிப்பட்டாலும் மகிழ்ச்சியாக இருங்கள். ஏச்சுப் பேச்சுக்களை கேட்டாலும் இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். தோல்விகளைக் கண்ட பிறகும் இறைவனுடனுள்ள தொடர்பை முறித்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் இறைவனின் இறுதியான ஜமாஅத்தாக இருக்கின்றீர்கள். எனவே தனது சிற்பபுத் தன்மையின் இறுதி தகுதியை அடைந்துவிட்ட நற்செயல்களை செய்து காட்டுங்கள். உங்களில் சோம்பேறியாக இருக்கும் ஒவ்வொருவரும் ஒரு அசுத்தமான பொருளைப் போன்று இந்த ஜமாஅத்தை விட்டும் வெளியே எறியப்படுவார். மேலும் அவர் வேதனையுடன் மரணிப்பார். அவரால் இறைவனுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது. பாருங்கள்! உங்கள் இறைவன் உண்மையிலேயே இருக்கின்றான் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். எல்லாரும் அவனது படைப்பினமாக இருந்தாலும் எவர் அவனை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றாரோ அவரையே அவனும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். அவனிடம் வருபவ்ரகளிடமே அவனும் வருகின்றான். எவர் அவனுக்கு கண்ணியம் கொடுப்பாரோ அவருக்கே அவனும் கண்ணியம் வழங்குகின்றான்."

(கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 15)



**தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"நாம் அல்லாஹ்வை திருப்திப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும். அதற்கு மனத்தூய்மையும், உண்மையும், நன்றி உணர்வும் அவசியமானதாகும். வெறும் வாய்ப்பேச்சுக்களால் மட்டும் நமது தைரியமும், முயற்சியும் ஓர் எல்லைக்குள் இருந்து விடக்கூடாது. நாம் அல்லாஹ்வை திருப்திப்படுத்தும்போது பிறகு அல்லாஹ்வும் அபிவிருத்தியை தருகின்றான். உண்மை, நன்றியுணர்வு ஆகியவற்றின் வாசலாக இருக்கும் இந்த குறுகிய வாசலைக் கடந்து செல்வது எளிதானதல்ல. நமக்கு ஆன்மீக தரிசனங்களும் இல்ஹாமும் வருகின்றது. எனவே, நாம் கை மீது கை வைத்து அமர்ந்து விடலாம். முயற்சிகள் செய்வதிலிருந்து விலகி விடலாம் என்பன போன்ற வி-யங்களால் நாம் பெருமை கொள்ள முடியாது. அல்லாஹ் இதை விரும்பமாட்டான். (அல் பத்ர் தொகுதி 3 எண் 18,19 - தேதி : 16.05.1904)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"ஒவ்வொரு நம்பிக்கையாளரின் நிலைமையும் இப்படித்தான் இருக்கின்றது. அவர் மனத்தூய்மையுடனும் நன்றியுணர்வுடனும் இறைவனுக்காக ஆகிவிடும்போது இறைவனும் அவரது நண்பனாகி விடுகின்றான். ஆனால் ஈமானின் கட்டடம் பாழடைந்து போனால் சந்தேகமின்றி அதனால் ஆபத்து ஏற்படும். எவரது உள்ளத்தின் நிலைமையும் நமக்குத் தெரியாது...... ஆனால் ஒருவர் முழுமையாக இறைவனுக்காக ஆகிவிடும்போது அல்லாஹ் அவரை குறிப்பாக பாதுகாக்கின்றான். அவன் எல்லாருக்கும் இறைவனாக இருந்தாலும் எவர் தன்னை குறிப்பாக இறைவனுக்காக ஆக்கிக் கொள்வாரோ அவர் மீது இறைவன் தனது சிறப்பான தோற்றத்துடன் வெளிப்படுகின்றான். குறிப்பாக, இறைவனுக்காக ஆகி விடுவது என்பது தனது நஃப்ஸை அதன் எந்த துகளும் எஞ்சியிருக்காத அளவில் உடைத்து விடுவதாகும். எனவே, பைஅத் செய்ததில் ஒருபோதும் பெருமை கொள்ளாதீர்கள் என்று மீண்டும் மீண்டும் நான் எனது ஜமாஅத்திடம் கூறுகின்றேன். உள்ளம் தூய்மையாக இல்லையென்றால் கை மேல் கை வைப்பதால் என்ன பலன் கிடைக்கப் போகின்றது?...... ஆனால் எவர் உண்மையான உறுதிமொழி

கூறுகின்றாரோ அவரது பெரும் பெரும் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது. மேலும் அவருக்கு ஒரு புது வாழ்வு கிடைக்கின்றது.”

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 65 - புதிய பதிப்பு)

## எவர் என்னைச் சார்ந்தவராக இருப்பாரோ அவர் என்னை விட்டு பிரிய முடியாது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“எவருக்காவது என்னுடன் தொடர்ந்து செல்ல முடியவில்லை என்றால் அவர் என்னை விட்டு பிரிந்து விடட்டும். எந்த எந்த அபாயகரமான முட்கள் நிறைந்த காடுகளை நான் கடந்து செல்ல வேண்டியதுள்ளது என்பதைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? எந்த மக்களது பாதங்கள் மென்மையாக இருக்கின்றனவோ அவர்கள் என்னுடன் சேர்ந்து துன்பங்களை ஏன் சுமக்க வேண்டும்? எவர் என்னைச் சார்ந்தவராக இருப்பாரோ அவர் துன்பங்களாலோ, மக்களின் ஏச்சுப் பேச்சுக்களாலோ, விண்ணிலிருந்து வரும் சோதனைகளாலோ என்னை விட்டுப் பிரிய முடியாது. எவர் என்னைச் சார்ந்தவராக இல்லையோ அவர் வீணாக என்னுடன் நட்பு வைத்திருப்பதாக வாதம் புரிகின்றார். ஏனென்றால் அப்படிப்பட்டவர்கள் விரைவில் தனியாக பிரிக்கப்படுவார்கள். அவர்களது பிந்தைய நிலை அவர்களது முந்தைய நிலையை விட மோசமானதாகும். பூகம்பங்களைக் கண்டு நாம் அஞ்ச முடியுமா என்ன? நமது அன்பான இறைவன் ஏதாவது ஒரு வகையில் நம்மை சோதிப்பதால் அவனை விட்டும் நாம் பிரிந்து விட முடியுமா? அவ்வாறு ஒருபோதும் பிரிய முடியாது. ஆனால் அது இறைவனது அருள் மற்றும் கருணையினாலேயே நடக்கும். எனவே, பிரிந்து செல்பவர் பிரிந்து செல்லட்டும். அவர்களுக்கு நாம் ஸலாம் கூறி பிரியாவிடை கொடுக்கின்றோம். ஆனால் தப்பெண்ணம் கொண்டு தொடர்பை முறித்துக் கொண்ட பின்னர் ஏதாவது சமயத்தில் மீண்டும் திரும்பி வருவதென்றால் அந்த திரும்புதலுக்கு இறைவன் பார்வையில் நன்றியுணர்வுள்ள மக்களுக்கு கிடைக்கும் அந்த கண்ணியம் கிடைக்காது என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். ஏனென்றால் தப்பெண்ணம் மற்றும் நம்பிக்கை துரோகத்தின் கறை மிகப்பெரிய கறையாகும்.”

(அன்வாருல் இஸ்லாம் ரூஹானி கஸாயின் தொகுதி 9 பக்கம் 23,24)



## முழுமையான நன்றியுணர்வு மற்றும் கொள்கையில் உறுதியாக நிலைநிற்றல் ஆகியவற்றின் முன்மாதிரியைக் காட்டுங்கள்

இன்றிலிருந்து நூறு ஆண்டுகளுக்கு முன்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது வாழ்வில் இரண்டு சான்றோர்கள் தங்களது முழுமையான நன்றியுணர்வு மற்றும் கொள்கையில் உறுதியாக நிலைநிற்றல் ஆகியவற்றின் முன்மாதிரியைக் காட்டியுள்ளார்கள். தங்களது பைஅத் உடன்படிக்கையை மிகச் சிறப்பாக நிறைவேற்றினார்கள். பைஅத் உடன்படிக்கையை முறிப்பதற்காக அவர்களுக்கு பல்வேறு பேராசைகள் காட்டப்பட்டன. ஆனால் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்ற அந்த சான்றோர்கள் சிறிதளவுகூட அவற்றை பொருட்படுத்தாமல் தங்களது பைஅத் உடன்படிக்கையில் நிலைத்து நின்றார்கள். அவர்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிறப்பாக பாராட்டினார்கள். ஹஸ்ரத் சாஹிப் சாதா ஸய்யத் அப்துல் லத்தீஃப் சாஹிப் சஹீது (ரலி) அவர்கள் மற்றும் அப்துர் ரஹ்மான் கான் சாஹிப் (ரலி) அவர்கள் ஆகிய இருவரே அந்த சான்றோர்களாவர்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஒரு மேற்கோளை உங்கள் முன் வைக்கின்றேன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“எந்த இயக்கத்தில் அடித்தளம் முழுக்க முழுக்க சதி, ஏமாற்றுதல், பொய், இட்டுக்கட்டு ஆகியவற்றால் அமையுமோ அந்த இயக்கத்திலுள்ள மக்களால் தங்களது கொள்கையில் இந்த அளவு உறுதியுடன் நிலைநின்று தங்களது வீரத்தைக் காட்ட முடியுமா? என்பதை நீதியுடனும் ஈமானுடனும் சிந்திக்க வேண்டும். அவர்கள் அந்த இறைவனது வழியில் கற்களால் வெட்டுண்டு போவதை ஏற்றுக் கொண்டார்கள். தங்களது மனைவி, குழந்தைகள் பற்றி கூட அவர்கள் கவலைப்படவில்லை. மேலும் எந்த அளவு வீரத்துடன் அவர்கள் தங்களது உயிரை கொடுத்தார்கள் என்றால் பைஅத் உடன்படிக்கையை முறித்துக் கொள்ளும் நிபந்தனையின் பேரில் விடுதலை

செய்யப்படும் வாக்குறுதி மீண்டும் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பிறகும் அந்த வழியை அவர்கள் விட்டுவிடவில்லை. இவ்வாறே சேக் அப்துர் ரஹ்மானும் காபூலில் (ஆப்கானிஸ்தான்) அறுக்கப்பட்டார் என்றாலும் சிறிது கூட அவர் அதற்காக தயங்கவில்லை. என்னை விட்டு விடுங்கள். நான் பைஅத்தை முறித்துக் கொள்கின்றேன் என்றும் அவர் கூறவில்லை. இதுதான் உண்மையான மார்க்கத்தின், உண்மையான இமாமின் அடையாளமாகும். அதாவது, எவருக்காவது அந்த இமாமைப் பற்றிய முழுமையான அறிவு கிடைத்து ஈமானின் இனிமை அவரது உடலிலும் உயிரிலும் கலந்த பிறகு அப்படிப்பட்ட மக்கள் இவ்வழியில் மரணிப்பதற்கு அஞ்சமாட்டார்கள். ஆனால், எவர் மேலெழுந்தவாரியாக ஈமான் கொள்கின்றாரோ, எவரது இரத்த நாளங்களில் ஈமான் நுழையவில்லையோ அவர்கள் யூதாஸ் போன்று சிறிதளவு பேராசை காட்டப்பட்டவுடன் முர்தத் ஆகலாம். அப்படிப்பட்ட தூய்மையற்ற முர்தத்துகள் ஒவ்வொரு நபியின் காலத்திலும் இருந்திருக்கின்றார்கள என்பதற்கு நிறைய முன்னுதாரணங்கள் இருக்கின்றன. தூய்மையாளர்களின் ஒரு மிகப்பெரிய ஜமாஅத் என்னுடன் இருக்கின்றது என்பதற்காக நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். அவர்களில் ஒவ்வொருவரும் எனக்காக ஓர் அடையாளமாக திகழ்கின்றார். இது எனது இறைவனின் அருளாகும். **ரப்பி இன்னக ஜன்னதீ வ ரஹ்மதுக ஜுன்னதி வ ஆயத்துக கிஸாயீ வ ஃபஸ்லுக ரிதாயீ** – அதாவது எனது இறைவா! நீ எனது சுவர்க்கமாகும். உனது கருணை எனது கேடயமாகும். உனது அடையாளங்கள் எனது உணவாகும். உனது அருள் எனது போர்வையாகும்.”

(ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 360, 361)

இதற்குப் பிறகும் கூட நூறு ஆண்டுகளுக்கும் அதிகமாக இருந்து வரும் ஜமாஅத்தின் வரலாறு இப்படிப்பட்ட நன்றியுணர்வு மற்றும் கொள்கையில் உறுதியாக நிலைநிற்கும் நல்லுதாரணங்களை நிலைநிறுத்தியுள்ளது என்பதற்கு சாட்சியாக இருக்கின்றது. செல்வத்திற்கும் உயிருக்கும் இழப்புகள் ஏற்பட்டன. உயிர்த்தியாகம் செய்ய வேண்டியது வந்தது. மகன் தந்தைக்கு முன்பாக வைத்தும் தந்தை மகனுக்கு முன்பாக வைத்தும் கொலை செய்யப்பட்டார்கள். எல்லாரையும் விட



நன்றியுணர்வுகளுக்கு சிறப்பாக பதில் கூறும் அந்த இறைவன் இந்த இரத்தத்தை வீணாக்கி விட்டானா? இல்லை. முன்பை விட அதிகமாக இவர்களது சந்ததிகள் மீது கருணை, அருள்கள் ஆகியவற்றின் மழையைப் பொழிந்தான். உங்களில் இங்கு இப்போது இருக்கக்கூடிய பலரும் அல்லது உலகின் பல்வேறு நாடுகளில் பரவியிருப்பவர்கள் இந்த விசயத்திற்கு கண்கண்ட சாட்சியாக இருக்கின்றார்கள். மாறாக, உங்களில் பலரும் இந்த அருள்களைப் பெற்றுள்ளார்கள். நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் பைஅத் செய்த பைஅத் உடன்படிக்கையை உண்மைப்படுத்திக் காட்டி இறைவனுடன் நன்றியுணர்வுடன் நடந்து கொண்டதன் விளைவே இந்த அருள்களாகும். எனவே உங்களுக்கு வசதியான நிலைமை ஏற்பட்ட பிறகு நீங்களோ அல்லது உங்கள் சந்ததிகளோ எந்நிலையிலும் இந்த பைஅத் உடன்படிக்கையை மறந்து விட வேண்டாம். இந்த அன்பான இறைவனுடன் எப்போதும் நன்றியுணர்வுடன் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள். அதன் மூலமாக இந்த அருள் உங்களது சந்ததிகளிலும் நிலைபெறட்டும். மேலும் இந்த நன்றியுணர்வின் தொடர்பு உங்களது அடுத்த தலைமுறைகள் வரை கடந்து சென்று கொண்டே இருக்கட்டும்.

# பைஅத்தின் ஆறாவது நிபந்தனை

**"சடங்கு சம்பிரதாயங்களிலிருந்தும் மனத்தின் சொந்த விருப்பங்களைப் பின்பற்றுவதில் இருந்தும் தவிர்ந்து கொள்வேன். திருக்குர்ஆனின் ஆட்சிக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு, இறைவனின் போதனைப்படியும் அவன் தூதரின் போதனைப்படியும் நடப்பதையே எல்லா நிலையிலும் எனது நடைமுறையாக ஆக்கிக் கொள்வேன்."**

சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றிச் செல்லமாட்டேன் என்ற விசயத்திலும் நீங்கள் என்னிடம் பைஅத் செய்ய வேண்டும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். நீங்கள் வாழும் சமுதாயத்தின் பகுதியாக அந்த சடங்குகள் உள்ளன என்பதற்காக மட்டும் நீங்கள் அவற்றை உங்கள் மார்க்கத்தில் சேர்த்து விட்டீர்கள். மற்ற மதங்களில் அந்த சடங்குகள் இருந்ததால் அவற்றை நீங்களும் பின்பற்றுகின்றீர்கள். உதாரணமாக, திருமண சந்தர்ப்பத்தில் சில வீணான சடங்குகள் செய்யப்படுகின்றன. மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கு அனுப்புகின்ற பொருள்கள், பெண் வீட்டார் அனுப்பும் சீதனப் பொருட்கள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டுகின்றார்கள். பொருட்காட்சியில் வைத்திருப்பது போன்று அந்தப் பொருள்களை பிறர் பார்ப்பதற்காக அடுக்கி வைக்கின்றார்கள்.

இஸ்லாம் மஹர் தொகையைக் கூறுவதுடன் நிக்காஹ்விற்கான அறிவிப்பு செய்யும்படி கூறுகிறது. மற்றவை அனைத்துமே வீணான சடங்குகளாகும். மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்கு அனுப்பும் பொருட்களை வெளிப்படையாக காட்டுவதிலோ அல்லது சீதனப் பொருட்களை வரிசையாக அடுக்கி வைத்துக் காட்டுவதிலோ தங்களது பெருமையை வெளிப்படுத்திக் காட்டுவது மட்டுமே வசதிபடைத்த மக்களின் நோக்கமாக இருக்கின்றது. எங்களது உறவினர்கள் தங்களது சகோதரி அல்லது சகோதரனுக்கு அல்லது தனது மகன் அல்லது தனது மகளுக்கு



அவர்களின் திருமணத்தின் போது என்ன கொடுத்திருந்தார்களோ அதைவிட எவ்வளவு அதிகமாக நாங்கள் கொடுத்திருக்கின்றோம் என்று பாருங்கள் என்று பிறருக்கு காட்டுவதற்காகவும் பெயருக்காகவும் போட்டி போடுவதற்காகவும் இவ்வாறெல்லாம் செய்கின்றார்கள். உங்களில் பலருக்கும் அல்லாஹ் தனது அருளால் நீங்கள் இங்கு (ஜெர்மனி) வந்த பிறகு அதிகமாக வழங்கியுள்ளான். மிகவும் வசதியான நிலைமையை உங்களுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளான். இதுவும்கூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்தில் இணைந்ததினால் உள்ள அருளாகும். உங்களது மூதாதையர்கள் செய்த தியாகங்களின் விளைவினாலும் அவர்கள் செய்த துஆக்களின் அருளினாலும்தான் இவையெல்லாம் உங்களுக்கு கிடைத்திருக்கின்றது. இந்த அருள்களையும் பரக்கத்தையும் இறைவன் முன் குனிந்தவாறும் அவனது வழியில் செலவு செய்தவாறும் வெளிப்படுத்துவதற்குப் பகரமாக சிலர் திருமணங்களில் பெயருக்காகவும், தங்களை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவும் இப்படிப்பட்ட சடங்குகளில் அவற்றை வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். பிறகு திருமணங்களிலும் வலிமா விருந்துகளிலும் உணவு வீணாக்கப்படுகிறது. பிறருக்கு காட்டுவதற்காக பல்வேறு விதமான உணவு வகைகளை தயார் செய்யப்படுகின்றது. ஏழைகள் அல்லது குறைவான வசதி படைத்த மக்களும் கூட பிறரைப் பார்த்து அவர்களும் சீதனப் பொருட்களை பிறருக்கு காட்ட வேண்டும் என்பதற்காக அதை வாங்குவதற்காக பிறரிடம் கடன் வாங்குகிறார்கள். சில சமயம் பெண் வீட்டாரிடம் மாப்பிள்ளை வீட்டார் சீதனப் பொருட்களை கேட்கின்றார்கள். அதனால் பெண் வீட்டார் மருமகள் ஒரு பொருளும் கொண்டு வரவில்லையே என்று கூறிவிடக்கூடாதே என்ற எண்ணத்தில் கடன் வாங்குகின்றார்கள். எனவே, மாப்பிள்ளை வீட்டாரும் இறைவனுக்கு அஞ்ச வேண்டும். சடங்குகளைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக, உங்களது கண்ணியம் உயர்வாக இருக்க வேண்டும் என்பதற்காக ஏழைகளை துன்பங்களிலும் கடன்களிலும் நீங்கள் சிக்க வைக்க வேண்டாம். நாங்கள் அஹ்மதிகள். நாங்கள் பைஅத்தின் பத்து நிபந்தனைகளுக்கேற்ப முழுமையாக செயல்படுகின்றோம் என்பதுதான் உங்களது வாதம். நான் மிகச் சுருக்கமாக இப்போது திருமணங்களில் பின்பற்றபடும் சடங்குகள் பற்றி கூறியிருந்தேன். இதனை நான் இன்னும்

விரிவாக கூறுவதாக இருந்தால் இப்படிப்பட்ட திருமண சடங்குகளினால் மட்டும் ஏற்பட்டுள்ள அபாயகரமான விளைவுகள் நமக்கு தெரிய வரும். மேலும் இதுபோன்ற பல உதாரணங்கள் கிடைக்கலாம். இப்படிப்பட்ட சடங்குகள் வளர்ச்சியடைந்து விட்டால் பிறகு மனிதன் முற்றிலும் குருடனாகி விடுவான். பிறகு அதன் அடுத்த கட்டமாக அவன் முழுமையாக தனது மனத்தின் சொந்த விருப்பத்தின் பிடியில் சிக்கி விடுகின்றான். ஆனால் பைஅத் செய்த பிறகு மனத்தின் சொந்த விருப்பங்களை பின்பற்றுவதிலிருந்து விலகிவிடுவதாகவும், அல்லாஹ்வின் ஆட்சிக்கு கட்டுப்படுவதாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுவதாகவும் அவன் உடன்படிக்கை செய்திருக்கின்றான். சடங்கு சம்பிரதாயங்களையும் மனதின் சொந்த விருப்பங்களையும் பின்பற்றுவதையும் விட்டுவிட்டு தனது கட்டளைக்கு ஏற்ப செயல்படுவதையே அல்லாஹ்வும் அவனது தூதரும் விரும்புகின்றார்கள்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

“அவர்கள் உமது அழைப்பிற்கு பதிலளிக்கவில்லையென்றால், அவர்கள் தமது தீய விருப்பங்களையே பின்பற்றுகின்றனர் என்று நீர் அறிந்து கொள்வீராக. மேலும் அல்லாஹ்விடமிருந்து வந்துள்ள வழிகாட்டலை விட்டு விட்டு தனது விருப்பங்களை பின்பற்றுபவனை விட மிகத் தவறான வழியில் செல்பவன் எவன்? நிச்சயமாக அநீதியிழைக்கும் சமுதாயத்தனருக்கு அல்லாஹ் ஒருபோதும் நேர்வழி காட்ட மாட்டான்.” (28:51)

பாருங்கள். இந்த வசனத்தில், எவர்கள் தங்கள் மனத்தின் சொந்த விருப்பங்களையே பின்பற்றிச் செல்கின்றார்களோ அவர்கள் ஒருபோதும் நேர்வழியைப் பெற முடியாது என்ற தீர்ப்பை அல்லாஹ் தெளிவாக தெரிவித்து விட்டான். இது நாம் அச்சப்பட வேண்டிய இடமாகும். ஒருபுறம் காலத்தின் இமாமை நாங்கள் அடையாளம் கண்டு கொண்டோம். அவர்களை நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்று வாதம் செய்கின்றோம். மறுபுறம் சமுதாயத்தில் இருக்கின்ற இப்படிப்பட்ட தீமைகள் செய்வதை விட்டுவிடுவதாக நாம் உடன்படிக்கை செய்த பிறகும் அத்தீமைகளை நாம் விட்டு விடாமல் இருந்தால் பிறகு நாம் ஒருவேளை பின்னால் சென்று கொண்டிருக்கின்றோமோ என்பதை ஒவ்வொருவரும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நாம் இந்த



பைஅத் உடன்படிக்கையில் நிலைத்திருந்து நமது இறைவனுக்கு அஞ்சியவாறு மனத்தின் சொந்த விருப்பங்களை பின்பற்றுவதிலிருந்தும் விலகி இருப்பதுடன் நாம் அந்த அன்பான இறைவனை புகழ்ந்தவாறும் துதித்தவாறும் அவன் பக்கமே குனிந்து விட்டால் அவன் அதற்கு பகரமான சுவர்க்கத்திற்கான நற்செய்தியை நமக்கு தருகின்றான். இது தொடர்பாக இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

“எவன் தனது இறைவனின் மகிமைக்கு அஞ்சி, தீய விருப்பங்களை விட்டுத் தன்னைத் தடுத்துக் கொண்டானோ நிச்சயமாக சுவர்க்கமே அவனுடைய தங்குமிடமாகும்.” (79:41,42)

சடங்கு சம்பிரதாயங்களைப்ப பற்றிய சில நபிமொழிகளை உங்கள் முன் வைக்கின்றேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

“எந்த நபர் மார்க்க விசயத்தில் மார்க்கத்துடன் தொடர்பில்லாத ஏதாவது புதிய சடங்கை உருவாக்குவாரோ அந்த சடங்கு ரத்து செய்யப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்படாததும் ஆகும்.” (புகாரி - கிதாபுஸ் ஸுல்ஹ்)

**ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடையே சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அப்போது அவர்களது கண்கள் சிவந்துவிட்டன. அவர்கள் குரல் உயர்த்திருந்தது. அவர்கள் தாக்க வரும் ஒரு படையைக் குறித்து எங்களுக்கு அச்சமூட்டுவது போல் உணர்வு பொங்கியவர்களாக, அந்த படை காலையிலோ மாலையிலோ உங்கள் மீது தாக்குதல் நடத்தும் என்று அவர்கள் கூறினார்கள்.”

**தொடர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

“நானும் அந்த நொடியும் இவ்வாறு ஒன்றாக அனுப்பப்பட்டுள்ளோம் என்று கூறியவாறு தனது சுட்டு விரலையும் நடுவிரலையும் ஒன்றாக இணைத்து எவ்வாறு இந்த இரண்டு விரல்கள் ஒன்றாக இருக்கின்றனவோ

அவ்வாறே நானும் அந்த நொடியும் ஒன்றாக அனுப்பப்பட்டுள்ளோம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இவ்வாறும் கூறினார்கள்: இப்போது நான் உங்களுக்கு கூறுகின்றேன். மிகச் சிறந்த விசயம் அல்லாஹ்வின் வேதமாகும். மிகச்சிறந்த வழிமுறை முஹம்மத் (ஸல்) அவர்களின் வழியாகும். கீழ்த்தரமான செயல் மார்க்கத்தில் புதியவற்றை புகுத்துவதாகும். புதிதாக புகுத்தப்படும் ஒவ்வொன்றும் வழிகேட்டின் பக்கம் கொண்டு செல்லும்.”

(முஸ்லிம் கிதாபுல் ஜுமுஆ)

ஹஸ்ரத் அம்ர் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக அறிவிக்கின்றார்கள்:

“எந்த நபர் எனது நடைமுறைகளில் ஏதாவது ஓர் நடைமுறையை மக்கள் அதனை செயல்படுத்தும் அளவில் உயிர்பெற செய்வாரோ அந்த நபருக்கு அந்த நடைமுறையை செயல்படுத்தியவருக்கு கிடைக்கும் நற்கூலிக்கு சமமான அளவிலுள்ள நற்கூலி கிடைக்கும். அவரது நற்கூலியில் எதுவும் குறைக்கப்படமாட்டாது. எந்த நபர் மார்க்கத்தில் புதியவற்றை புகுத்துவாரோ அந்த நபருக்கும் அவற்றிற்கேற்ப செயல்படுபவர்களின் பாவங்களிலிருந்தும் பங்கு கிடைக்கும். இவ்வாறு புதியவற்றை புகுத்தும் மக்களின் பாவங்களிலும் சிறிதும் குறைவு ஏற்படாது.” (இப்னு மாஜா)

## மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படுபவையும் சடங்குகளும் ரத்து செய்யப்பட வேண்டியவையாகும்

இந்த ஹதீஸில் எந்த சடங்குகளுக்கு மார்க்கத்துடன் எவ்வித தொடர்பும் இல்லையோ, எந்த சடங்குகள் மார்க்கத்திலிருந்து நம்மை வெகு தொலைவில் கொண்டு செல்பவையாகவும் இறைவனும் அவனது தூதரும் கூறிய கட்டளைக்கு மாசு கற்பிப்பவையாகவும் இருக்கின்றதோ அவை அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டிய சடங்குகளாகும். அவை அனைத்தும் வீணான விசயங்களாகும். அவை புறக்கணிக்கப்பட வேண்டியவையாகும். எனவே அதிலிருந்தும் தப்பித்துக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். பிறகு



இது மார்க்கத்தில் புதிய புதிய விசயங்களுக்கு இடமளிக்கும். இதனால் மார்க்கம் சீர்குலைந்து போய்விடும். இவ்வாறே மற்ற மதங்களிலும் சடங்குகள் நுழைந்ததனால் அவற்றிற்கு சீர்குலைவை ஏற்படுத்தி விட்டன. இது நடக்க வேண்டிய ஒன்றுதான். ஏனென்றால், இந்த காலத்தில் உயிருள்ள மார்க்கமாக இஸ்லாம் மட்டுமே இருக்க வேண்டியதிருந்தது. ஆனால் நீங்கள் ஆய்வு செய்து பார்த்தால் கிறிஸ்தவம் போன்ற மற்ற மதங்களில் பல்வேறு நாடுகளில் பல்வேறு பகுதிகளில் காணப்படும் சடங்கு சம்பிரதயாங்களுக்கு ஏற்றவாறு தங்களது சடங்குகளையும் மதத்தின் ஒரு பகுதியாக அவர்கள் அமைத்துக் கொண்டார்கள் என்பது உங்களுக்கு தெரிய வரும். ஆப்பிரிக்காவிலும் இதுபோன்ற விசயங்களை நம்மால் பார்க்க முடிகிறது. பிறகு மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படுபவையின் வழிகள் திறந்து விட்டால் புதுப்புது பித்அத்துகள் மார்க்கத்தில் நுழைந்து விடும். இப்படிப்பட்ட பித்அத்துகளை உருவாக்குபவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளார்கள். அவர்களுக்கு இவ்விசயம் மிகவும் கவலையளிப்பதாக இருந்தது. நீங்கள் இந்த பித்அத்துகளை பின்பற்றுவதின் காரணமாக நீங்கள் உங்கள் மனத்தின் சொந்த விருப்பங்களுக்கு இரையாகி விட்டதன் காரணமாக நான் மிகவும் அஞ்சுகின்றேன். இதன் காரணமாக மார்க்கம் சீர்குலைந்து போய்விடக் கூடாதே என்றும் நீங்கள் வழிதவறிவிடக் கூடாதே என்றும் நான் அஞ்சுகின்றேன் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தற்காலத்தில் நீங்கள் இங்கே இந்த மேற்கத்திய சமுதயாத்தில் வாழ்கின்றீர்கள். மார்க்த்தை விட்டு மிக தொலைவில் உங்களை கொண்டு செல்கின்ற எண்ணற்ற சடங்கு சம்பிரதாயங்கள் இங்கே இருக்கின்றன. இஸ்லாத்தின் அழகிய போதனைகள் மீது திரையிடுகின்ற சடங்கு சம்பிரதாயங்களும் வழிமுறைகளும் இங்கே இருக்கின்றன. ஏனெனில், உலகில் வெளிப்படையான தோற்றங்கள் இவர்கள் மீது அதிகமாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, இந்த சமுதாயத்தில் மிகவும் எச்சரிக்கையாக பாதங்களை எடுத்து வைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே. இப்படிப்பட்ட தவறான சடங்குகளை பின்பற்றுவதற்கு பகரமாக இஸ்லாத்தின்

அழகிய போதனைகளை நாம் இவர்களுக்கு எடுத்து கூற வேண்டும். மேற்கத்திய சமுதாயத்தின் எவ்வித தாக்கமும் ஏற்படாத வகையிலுள்ள வலுவான செயல்முறையும் ஒவ்வொரு அஹ்மதியிடமும் இருக்க வேண்டும். உதாரணமாக பெண்கள் பர்தா அணிய வேண்டும் என்ற இஸ்லாமிய கட்டளை இருக்கின்றது. பர்தா அணிவதன் காரணமாக பெண்கள் ஒரு சிறப்பான தகுதியை பெறுவதில்தான் அவர்களது கண்ணியம் இருக்கின்றது. ஆண்கள், பர்தா அணிவதிலுள்ள பலன்களையும் சிறப்புகளையும் இந்த சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு எடுத்து கூறுவதை விட பெண்கள் தாங்களும் பர்தா அணிந்து இந்த சமுதாயத்திலும் பர்தாவின் சிறப்புகளை எடுத்துக் கூறினால் எல்லா நிலையிலும் அது அதிகமான நல்விளைவை ஏற்படுத்தும். எந்த பெண்கள் பர்தா அணிகின்றார்களோ அவர்களுக்கு மட்டும் இருக்கும் தனித்தன்மையின் காரணமாக தப்லீக் செய்வதற்கும் அதிகமான சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு கிடைக்கின்றது. இதன் பக்கமும் அதிகமாக கவனம் செலுத்த தேவை இருக்கிறது.

மேலும் இந்த மேற்கத்திய சமுதாயத்தில் இன்னும பல தீமைகள் உள்ளன. நாம் இந்த சமுதாயத்தில் வாழ்வதால் வேறு வழியில்லை என்று கருதி அத்தீமைகளை நாமும் செய்வதால் இது மிகவும் அஞ்ச வேண்டிய இடமாக இருக்கின்றது. உதாரணமாக, உங்களுக்கு மது குடிக்கின்ற நபருடன் நட்பு இருந்தால் நீங்கள் அவருடன் ரெஸ்டாரண்ட் அல்லது பார் போன்ற இடங்களுக்கு சென்று எனது நண்பர் அங்கு மது குடித்து கொண்டிருக்கட்டும் நான் காபி அல்லது வேறு ஏதாவது பானம் குடிப்பேன் என்று நினைத்தால் அதுவும் கூட தவறுதான். மிகவும் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்றது. என்றாவது நீங்கள் அவரது தாக்கத்திற்குள்ளாகி நீங்கள் ஒரு மடக்கு குடித்து விடலாம். மேலும் அதற்கு பிறகு அதுவே உங்களுக்கு பழக்கமாகிவிடலாம். அல்லாஹ் அவ்வாறு செய்யாமல் இருப்பானாக! எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் கவலையடைந்தவாறு கூறியுள்ள கீழ்காணும் நபிமொழியை கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும்.



**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் அபூ பர்ஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"உங்களது வயிறுகளிலும் உங்கள் வெட்க ஸ்தலங்களிலும் உருவாக விடுகின்ற அப்படிப்பட்ட விருப்பங்களின் காரணமாகத்தான் நான் உங்களை பற்றி மிகவும் அஞ்சுகின்றேன். மேலும் மனதின் சொந்த விருப்பங்களின் விளைவாக உருவாகின்ற வழிகேடுகள் தொடர்பாகவும் நான் மிகவும் அஞ்சுகின்றேன்."

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 423 பைரூத் வெளியீடு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"இஸ்லாத்தில் வைக்கப்பட்டுள்ள எந்த இறைஞானத்தின் பொக்கிசத்தை பெற்று கொள்வதன் மூலமாக பாவங்களின் அழுக்கால் நிறைந்த வாழ்விற்கு மரணம் ஏற்படுகின்றதோ அந்த இறைஞானத்தை மனிதன் உண்மையான முயற்சியையும் உழைப்பையும் மேற்கொள்ளாத வரை பெற்றுக் கொள்ள முடியாது. மேலும் எந்த இறைவனை மனிதனால் பார்க்க முடியுமோ, எந்த இறைவனின் குரலை மனிதன் கேட்க முடியுமோ அந்த இறைவனை அம்மனிதன் பெற்றுக் கொள்ளவும் முடியும். எனவே, இது தொடர்பாக அல்லாஹ் தெளிவாக இவ்வாறு கூறுகின்றான்: எவன் தனது இறைவனின் மகிமைக்கு அஞ்சி, தீய விருப்பங்களை விட்டுத் தன்னைத் தடுத்துக் கொண்டானோ நிச்சயமாக சுவர்க்கமே அவனுடைய தங்குமிடமாகும். (79:41,42)

நான் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்துள்ளேன் என்று ஒரு நபர் தற்பெருமையுடன் கூறுவது மிக எளிதான விசயமாகும். இந்த வாதத்தை செய்த பிறகும் அந்த ஈமானின் அடையாளங்களும், பழங்களும் கொஞ்சம் கூட உருவாகவில்லையென்றால் அது வெற்று வாதமாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட மக்கள் அல்லாஹ்வை சிறிதும் பொருட்படுத்துவதில்லை. அல்லாஹ்வும் அவர்களை பொருட்படுத்துவதில்லை."

(அல்ஹகம் தொகுதி 9 நம்பர் 29 தேதி 17 ஆகஸ்ட் 1905 பக்கம் 6)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"எவர் தனது இறைவன் முன் நிற்பதற்கு அஞ்சியவாறு தீய விருப்பங்களிலிருந்து தன்னை தடுத்து கொள்கின்றாரோ அப்படிப்பட்டவரது

தங்குமிடம் சுவர்க்கமாகும். அல்லாஹ்விற்காக தன்னை அர்ப்பணித்து விடுதல் என்பது தீய விருப்பங்களிலிருந்து தன்னை தடுத்து கொள்வதேயாகும். இதன் மூலமாக மனிதன் இறைவனின் திருப்தியை பெற்று இந்த உலகிலேயே சுவர்க்கத்தின் இடத்தை அடைந்து விடுகின்றான்.”

(பத்ர் தொகுதி நம்பர் 1 தேதி 3 ஆகஸ்ட் 1905 பக்கம் 2)

## இஸ்லாமிய போதனைகளுக்கான நமது வழிகாட்டி திருக்குர்ஆனே ஆகும்

எனவே, சடங்குளிலிருந்தும் தீய விருப்பங்களிலிருந்தும் தப்பித்து கொள்வது இஸ்லாமிய போதனைகளின் ஒரு பகுதியாகும். இந்த போதனைகளைநாம் புரிந்து கொள்ள நமது வழிகாட்டியாக திருக்குர்ஆன் இருக்கின்றது. உண்மையில் ஒரு நம்பிக்கையாளர் திருக்குர்ஆனை முழுமையாக தனது வாழ்வின் செயல்முறையாக ஆக்கிக் கொண்டால் எல்லா தீய விருப்பங்களின் எண்ணம் கூட உள்ளத்தில் தோன்றாது. ஏனென்றால், மார்க்கச்சட்டத்தை முழுமையாக்கி மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் சூழ்ந்தவாறு அமைந்துள்ள ஒரு செயல்முறை திட்டமாக இருக்கும் இத்தூய வேதத்தை அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய உள்ளத்தில் இறக்கினான். பிறகு எங்கு தேவைப்பட்டதோ அங்கு அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது சொல்லாலும் செயலாலும் விளக்கம் கூறியுள்ளார்கள். எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதனை நீங்கள் உங்கள் தலை மீது ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்கள். இது தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களையும், நபிமொழிகளையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளையும் உங்கள் முன் வைக்கின்றேன்.

**அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

நிச்சயமாக நாம் குர்ஆனை (நீங்கள் அறிந்து) நினைவு கூர்ந்து அறிவுரை பெறும் பொருட்டு எளிதாக ஆக்கியுள்ளோம். எனவே அறிவுரையினைப் பெறுபவர் எவரேனும் உண்டா? (54:18)



**ஹதீஸில் இவ்வாறு வருகிறது.**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் அபூ முஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

“எந்த மூமின் திருக்குர்ஆனை படித்து அதற்கேற்ப செயல்படுகின்றாரோ அவரது உதாரணம் ஆரஞ்சு பழத்தை போன்றது. அதன் சுவையும் நன்றாக இருக்கும். மணமும் நன்றாக இருக்கும் . எந்த மூமின் திருக்குர்ஆனை படிக்காதவராக இருந்தாலும் அதன் படி செயல்படுகிறாரோ அவர் பேரீத்தம் பழத்தை போன்றவராவார். அதன் சுவை நன்றாக இருக்கும். ஆனால் அதிக மணம் இருக்காது. திருக்குர்ஆன் ஓதுகினற் நயவஞ்சகரின் உதாரணம் துளசி செடியை போன்றதாகும். அதன் மணம் நன்றாக இருக்கும். ஆனால் அதன் சுவை கசப்பாக இருக்கும். திருக்குர்ஆனை ஓதாத நயவஞ்சகரின் உதாரணம் அத்திப்பழத்தை போன்றதாகும். அதன் சுவையும் கசப்பானதாக இருக்கும். அதன் மணமும் வெறுக்கத்தக்கதாக இருக்கும்.” (புகாரி கிதாப் ஃபாயிலுல் குர்ஆன்)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“திருக்குர்ஆன் ஆழமான ஞானங்களால் நிரம்பி இருக்கின்றது. பைபிளை விட நன்மையை கற்பிப்பதில் அது சிறந்து நிற்கின்றது. குறிப்பாக உண்மையான மாற்றமில்லாத இறைவனை காண்பதற்காக தீபம் திருக்குர்ஆனின் கையில்தான் இருக்கின்றது. திருக்குர்ஆன் உலகில் வரவில்லையென்றால் உலகில் படைக்கப்பட்டவற்றை வணங்குபவரின் எண்ணிக்கை எது வரை சென்றிருக்கும் என்பதை இறைவனே நன்கறிவான். பூமியில் தொலைந்துபோய்விட்ட இறைவனின் ஏகத்துவம் மீண்டும் நிலைபெற்றிருப்பதால் நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.” (துஃபா கெய்ஸரிய்யா ரூஹானி கஸாயின் தொகுதி 12 பக்கம் 282)

திருக்குர்ஆனிலேயே உங்கள் வாழ்வு அடங்கியிருக்கின்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“திருக்குர்ஆனை ஒரு கைவிடப்பட்ட பொருளை போன்று விட்டுவிடாதீர்கள். இதில்தான் உங்கள் வாழ்வு அடங்கியிருக்கின்றது. எவர் திருக்குர்ஆனுக்கு கண்ணியமளிப்பாரோ அவர் வானத்தில் கண்ணியத்தை

பெறுவார். எவர் ஒவ்வொரு ஹதீஸிற்கும் ஒவ்வொரு கூற்றிற்கும் எதிரில் திருக்குர்ஆனுக்கு முக்கியத்துவம் கொடுப்பாரோ அவருக்கு வானத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படும். மனித இனத்திற்கு இந்த பூமியில் குர்ஆனை தவிர இப்போது வேறு எந்த வேத நூலும் இல்லை. ஆதமின் சந்ததிகளான அனைவருக்கும் இப்போது ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களை தவிர வேறு எந்த தூதரும் இல்லை.”

(கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 13)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“திருக்குர்ஆன் தனது ஆன்மீக சிறப்புகளாலும், சுய ஒளியாலும் தன்னை பின்பற்றுபவர்களை தன் பக்கம் ஈர்க்கின்றது. அவர்களது உள்ளத்தை ஒளிமயமாக ஆக்குகின்றது. பிறகு பெரும் பெரும் அடையாளங்களை காட்டி இறைவனுடன் எத்தகு உறுதியான தொடர்பை அது ஏற்படுத்துகின்றதென்றால் அதனை துண்டு துண்டாக்க விரும்பும் எந்த வாளாலும் கூட உடைத்தெறிய முடியாது. அது உள்ளத்தின் கண்களைத் திறக்கின்றது. பாவத்தின் அசுத்தமான நீரூற்றை தடுக்கின்றது. இறைவனின் இனிமையான உரையாடலை கேட்கவும் அவனுடன் பேசுவதற்குமுள்ள நற்பேற்றை வழங்குகின்றது. மேலும் அது மறைவான செய்திகளை வழங்குகிறது. அதன் மூலமாக இறைவன் துஆ ஏற்றுக்கொள்ளப்பட்டதை தனது சொற்கள் மூலமாக தெரிவிக்கின்றான். திருக்குர்ஆனை உண்மையாக பின்பற்றும் ஒருவரை எதிர்க்கின்ற ஒவ்வொருவர் மீதும் இறைவன் தனது தோற்றத்தை அச்சமூட்டக்கூடிய அடையாளங்களுடன் வெளிப்படுத்துகின்றான். அவன் தனது சொற்களை பின்பற்றுகின்ற அந்த அடியானுடன் இருக்கின்றான் என்பதை வெளிப்படுத்திக் காட்டுகின்றான்.”

(சஷ்மயே மஅரிஃபத் ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 308,309)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“எனவே, நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். இறைவனின் போதனைக்கும், திருக்குர்ஆனின் வழிகாட்டலுக்கும் எதிராக ஒரு அடி கூட எடுத்து வைக்காதீர்கள். எவர் திருக்குர்ஆனின் எழுநூறு கட்டளைகளில் ஏதாவது ஒரு சிறிய கட்டளையைக் கூட அலட்சியமாக விட்டு விட்டாரோ அவர் தனது இரட்சிப்பின் வாசலை தனது கைகளால் தானே அடைத்துக்



கொள்கிறார் என்று உண்மையாகவே நான் உங்களிடம் கூறுகின்றேன். உண்மையான முழுமையான இரட்சிப்பின் வழிகளை திருக்குர்ஆன் திறந்து தந்திருக்கிறது. மற்றவை அனைத்தும் அதன் நிழலாகும். எனவே, நீங்கள் திருக்குர்ஆனைக் கவனமாகப் படியுங்கள். நீங்கள் எதன் மீதும் கொள்ளாத அளவு அதிகமான நேசத்தை அதன் மீது கொள்ளுங்கள். ஏனென்றால், இறைவன் என்னை நோக்கி இவ்வாறு கூறியுள்ளான்:

**அல்கைரு குல்லுஹு ஃபில் குர்ஆன்** – அதாவது எல்லா நன்மைகளும் திருக்குர்ஆனிலேயே இருக்கின்றது. இதுவே உண்மையான விசயமாகும். இதற்கெதிரில் மற்றவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கும் மக்கள் மீது பரிதாபமே! உங்களது எல்லா வெற்றி மற்றும் இரட்சிப்பின் நீரூற்று திருக்குர்ஆனேயாகும். திருக்குர்ஆனால் நிறைவு செய்ய முடியாத உங்கள் எந்த மார்க்க தேவையும் இல்லை. மறுமை நாளில் உங்கள் ஈமானை உண்மைப்படுத்துவதும் பொய்ப்படுத்துவதையும் திருக்குர்ஆனேயாகும். வானத்தின் கீழ் திருக்குர்ஆனைப் போன்று உங்களுக்கு நேரடியாக வழிகாட்டக்கூடிய வேறு எந்த வேதமும் இல்லை. இறைவன் உங்கள் மீது அதிகமாக நன்மை செய்துள்ளான். அவன் உங்களுக்கு திருக்குர்ஆன் போன்ற வேதநூலை வழங்கியிருக்கின்றான். நான் உண்மையாகவே உங்களிடம் கூறுகின்றேன். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வேதம் கிறித்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்கள் அழிவிற்காளாகியிருக்க மாட்டார்கள். உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த அருளும் நேர்வழியும் தவ்ராத்திற்கு பகரமாக யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களில் சில பிரிவினர் மறுமை நாளை மறுப்பவர்களாக ஆகியிருக்கமாட்டார்கள். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அருட்கொடைக்கு மதிப்பளியுங்கள். இது மிகவும் நேசத்திற்குரிய அருட்கொடையாகும். இது மிகப்பெரும் செல்வமாகும். திருக்குர்ஆன் வராமலிருந்திருந்தால் முழு உலகமும் ஓர் அசுத்தமான சதைகட்டி போன்று இருந்திருக்கும். திருக்குர்ஆன் எப்படிப்பட்ட வேதமென்றால் அதற்கெதிரில் எல்லா வழிகாட்டல்களும் ஒன்றுமற்றவையாகும். (கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 26, 27)

நம்மில் ஒவ்வொருவரும் எந்த அளவு திருக்குர்ஆனை நேசிக்கின்றோம் என்பதையும் எந்த அளவு அதன் கட்டளைகளை ஏற்றுக் கொண்டு அதன்படி

செயலாற்றுவதற்கு முயற்சி செய்கின்றோம் என்று தன்னைத்தானே ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அன்பை வெளிப்படுத்துவதற்கும் வழிமுறைகள் இருக்கின்றது. ஒவ்வொரு அஹ்மதியும் தன் மீது கடமையாக்கி கொள்ள வேண்டிய மிக முக்கியமான விசயம் என்னவென்றால் அவர் ஒவ்வொரு நாளும் தொடர்ச்சியாக விடாமல் குறைந்தபட்சம் திருக்குர்ஆனின் இரண்டு அல்லது மூன்று ருகூ கண்டிப்பாக ஓத வேண்டும். பிறகு அதற்கு அடுத்த கட்டமாக அதன் மொழியாக்கத்தை படிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் திருக்குர்ஆனை ஓதுவதுடன் அதன் பொருளையும் படித்தால் படிப்படியாக இந்த அழகிய போதனைகள் நாம் அதைப் பற்றி பேசாத நிலையிலும்கூட நமது மூளையில் அமர ஆரம்பித்து விடும்.

பிறகு பைஅத்தின் ஆறாவது நிபந்தனையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ள இன்னொரு விசயம் இறைவனின் கட்டளைகளையும் அவனது தூதரின் கட்டளைகளையும் பேணி நடப்பதை எல்லா விசயங்களிலும் எனது நடைமுறையாக்கிக் கொள்வேன் என்ற நிபந்தனையாகும். அக்கட்டளைகளை கண்முன் நிறுத்தி செயல்படுவதுடன் தேவைப்படும்போது அவற்றிலிருந்து ஆலோசனையைப் பெற்றுக் கொள்வேன் என்று உறுதிமொழி கூறுகின்றோம். இது வாயளவில் மட்டும் கூறப்படும் ஒரு வி-யமல்ல. இது உடன்படிக்கையை நிறைவேற்றுவதைப் பற்றி மனிதன் சிந்தித்துப் பார்க்கும் போது அதனால் அவனுக்கு மிகுந்த கவலை ஏற்படுகின்றது. ஏனென்றால், அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

"நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கே கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும் உங்களுடைய அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். பின்னர் உங்களுக்குள் ஏதாவது ஒன்றில் தர்க்கம் ஏற்பட்டால் நீங்கள் உண்மையிலேயே அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும் நம்பிக்கை கொண்டவர்களாயின், அதனை அல்லாஹ்விடமும் இத்தூதரிடமும் கொண்டு செல்லுங்கள். இதுவே சிறந்த வழிமுறையும் மிக நல்ல முடிவை தருவதுமாகும்." (4:60)



**பிரிதோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:**

"மேலும், உங்களுக்குக் கருணை காட்டப்படும் பொருட்டு நீங்கள் அல்லாஹ்வுக்கும் இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள்." (3:133)

"தூதரே! போரில் கைப்பற்றிய பொருள்கள் குறித்து அவர்கள் உம்மிடம் வினவுகின்றனர். போரில் கைப்பற்றிய பொருள்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் உரியன. எனவே, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்களுக்கிடையே சீர்திருத்தத்தை மேற்கொள்ளுங்கள். மேலும் நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயின் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடவுங்கள்." (8:2)

இங்கு அல்லாஹ் எனது கட்டளைகளை சரியான முறையில் ஏற்றுக் கொண்டு அவற்றை செயல்படுத்துங்கள் என்றும் அந்த கட்டளைகளுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ன விளக்கங்கள் கூறியுள்ளார்களோ அதற்கேற்ப செயல்படுங்கள் என்றும் உங்களுக்கென்று நியமிக்கப்பட்டுள்ள அமீர்மார்களுக்கும் ஜமாஅத் அமைப்பிற்கும் முழுமையாக கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றும் கூறியுள்ளான். அப்போதுதான் நீங்கள் பைஅத் செய்ததற்கான கடமையை நிறைவேற்றியவர்களாக ஆவீர்கள். இது தொடர்பாக சில ஹதீஸ்களை உங்கள் முன் வைக்கின்றேன்.

**ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிப்பு செய்கின்றார்கள்:**

"எங்களுக்கு விருப்பமான நிலையிலும், விருப்பமற்ற நிலையிலும் நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கட்டளைகளை கேட்போம். மேலும் அதற்கு கட்டுப்படுவோம் என்ற விசயத்தில்தான் நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்துள்ளோம்."

(புகாரி - கிதாபுல் அஹ்காம்)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அம்ர் அவர்களும் ஹஜ்ர் பின் ஹஜ்ர் அவர்களும் ஹஸ்ரத் அர்பாழ் பின் ஸாரியா (ரலி) அவர்களிடம் வந்தனர். பிறகு ஹஸ்ரத் அர்பாழ் பின் ஸாரியா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

"ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களுக்கு சுபுஹ் தொழுகை தொழ வைத்தார்கள். பிறகு அவர்கள் எந்த அளவு மிக நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலுள்ள தெளிவான சொற்களால் எங்களுக்கு போதனை செய்தார்கள் என்றால் அதைக் கேட்ட மக்களின் கண்களில் கண்ணீர் வழிந்தது. அவர்களது உள்ளங்கள் அச்சத்தால் நடுங்கிற்று. அப்போது அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது நீங்கள் எங்களை பிரிந்து செல்லும் சமயத்தில் வழங்கும் போதனை போல் உள்ளதே என்று கூறினர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ன போதனை கூறினார்கள்?

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

இது எனது வஸிய்யத் (உயில்) ஆகும். அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்ளுங்கள். ஒரு ஆப்பிரிக்க அடிமை உங்களுக்கு அமீராக நியமிக்கப்பட்டாலும் நீங்கள் அவர் கூறுவதை கேளுங்கள். அதற்கு கட்டுப்பட்டு நடங்கள். ஏனென்றால் ஒரு காலம் வரவிருக்கின்றது. அப்போது எனக்குப் பிறகு உங்களில் எவர் உயிருடன் இருப்பாரோ அவர் மிகப்பெரும் கருத்து வேறுபாடுகள் நிலவுவதைக் காண்பர். எனவே நீங்கள் அப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் எனது நடைமுறையையும் என்னால் வழிகாட்டப்பட்ட எனது நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் நடைமுறையையும் பின்பற்றுங்கள். அதனை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மார்க்கத்தில் புதிய வி-யங்களை உருவாக்குவதில் இருந்தும் நீங்கள் தப்பித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், மார்க்கத்தின் பெயரால் செய்யப்படும் ஒவ்வொரு புதிய விசயமும் பித்அத் ஆகும். மேலும் பித்அத் முழுக்க முழுக்க வழிகேடாகும்." *(திர்மிதி - கிதாபுல் இல்ம்)*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களை முழுமையாக பின்பற்றுவதாக வாதம் செய்கின்ற அஹ்மதிகளாகிய நாம் இந்த ஹதீஸிலுள்ள போதனையை எப்போதும் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும்.



**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:**

"எவரிடம் இந்த மூன்று விசயங்கள் இருக்கின்றதோ அவர் ஈமானின் இனிமையைப் பெற்றுக் கொள்வார். முதலாவதாக அல்லாஹ்வும் அவனது தூதரும் மற்ற எல்லாரையும் விடவும் அவருக்கு அதிகம் நேசத்திற்குரியதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக, அல்லாஹ்வின் மீதுள்ள அன்பினால் மட்டும் ஒருவரை நேசிக்க வேண்டும். மூன்றாவதாக, எவ்வாறு நெருப்பில் போடப்படுவதை ஒருவர் விரும்புவதில்லையோ அவ்வாறே (நம்பிக்கை கொண்ட பிறகு) அவர் குஃப்ர் (இறை மறுப்பு) பக்கம் திரும்பிச் செல்வதை விரும்பாமல் இருக்க வேண்டும்." (புகாரி - கிதாபுல் ஈமான்)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

"பாருங்கள்! திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான். நீர் கூறுவீராக! (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான் என்று கூறுகின்றான்.(3:32) இறைவனின் நேசத்திற்குரியவராக ஆவதற்கான ஒரே வழி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது மட்டுமேயாகும். இறைவனுடன் உங்களை சந்திக்க வைக்கின்ற வேறு எந்த வழியும் உங்களுக்கு இல்லை. ஈடு இணையற்ற அந்த ஏக இறைவனைத் தேடுவது மட்டுமே மனிதனின் நோக்கமாக இருக்க வேண்டும். ஷிர்க்கிலிருந்தும் பித்அத்திலிருந்தும் விலக வேண்டும். சடங்குகளை பின்பற்றவும் மனிதனின் சொந்த விருப்பங்களுக்கு கீழ்படியவும் கூடாது. பாருங்கள்! நான் மீண்டும் கூறுகின்றேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காட்டிய உண்மையான வழியில் செல்லாமல் வேறு எவ்வகையிலும் மனிதன் வெற்றி பெற முடியாது.

நமக்கு ஒரே ஒரு தூதர் தான் இருக்கின்றார்கள். ஒரேயொரு திருக்குர்ஆன் மட்டுமே அந்த தூதரின் மீது இறங்கியது. அதனைப் பின்பற்றுவதன் மூலமாகத்தான் நாம் இறைவனைப் பெற முடியும். இன்றைய ஃபகீர்மார்கள் வெளிப்படுத்துகின்ற வழிமுறைகளையும் பெரும் பெரும் இருக்கைகளில் அமர்ந்திருக்கும் பீர்மார்கள் கூறுகின்ற கூற்றுகள்,

துஆக்கள், வஸீலாக்கள் ஆகிய இவையனைத்தும் மனிதனை நேரான வழியிலிருந்தும் திசை மாறிச் செல்ல வைக்கும் கருவிகளாகும். எனவே, நீங்கள் இவற்றிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள். இந்த மக்கள் காத்தமுல் அன்பியாவாக (நபிமார்களின் முத்திரையாக) இருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முத்திரையை உடைக்க விரும்புகின்றனர். அதாவது தங்களுக்கென்று இவர்கள் தனியாக ஒரு -ரீஅத்தை உருவாக்கி இருக்கின்றார்கள். திருக்குர்ஆனையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியவற்றையும் பின்பற்றுவது, தொழுகை, நோன்பு போன்ற சுன்னத்தான வழிமுறைகளை கடைபிடிப்பது ஆகியவற்றைத் தவிர இறைவனது அருள்கள், பரக்கத்துகள் ஆகியவற்றின் வாசல்களைத் திறக்கின்ற வேறு எந்த திறவுகோலும் இல்லை. இந்த வழிகளை விட்டு விட்டு வேறு புது வழிகளை கடைபிடிப்பவர்களும் கூறியவற்றை பின்பற்றாமல் வேறு வழிகளைத் தேடுபவர்களும் தோல்வியடைந்து மரணிப்பார்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 102, 103 புதிய பதிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“நீர் கூறுவீராக! (மக்களே) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.(3:32) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உண்மையான கீழ்படிவதுதான் அல்லாஹ்வை மகிழ்விப்பதற்கான ஒரே வழியாகும். மக்கள் பல்வேறு வகையிலான சடங்குகளில் சிக்கியுள்ளதை பார்க்க முடிகின்றது. ஒருவர் மரணித்து விட்டால் பல்வேறு வகையான பித்அத்துகளும் சடங்குகளும் செய்யப்படுகின்றது. ஆனால் மரணித்தவருக்காக துஆக்கள் செய்ய வேண்டும். சடங்குகளை செய்கின்றவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக மட்டும் செயல்படவில்லை. மாறாக, அவர்களை இழிவுபடுத்தவும் செய்கின்றார். அது எவ்வாறென்றால், அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியவற்றை போதுமானதாக கருதவில்லை. அதை போதுமானதாக கருதியிருந்தால், தங்கள் தரப்பிலிருந்தும் சடங்குகளை உருவாக்குவதற்கு ஏன் தேவை ஏற்பட்டது?”

மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 316 புதிய பதிப்பு)



**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இந்த சில நாட்களுக்கான உலக வாழ்க்கை எப்படியும் கழிந்து விடும். அது வறுமையில் கழிந்தாலும் அல்லது வசதியாக கழிந்தாலும் சரியே. ஆனால், மறுமையின் விசயம் மிகவும கடுமையான வி-யமாகும். அது எப்போதும் நிலைத்திருக்கும் இடமாகும். அது துண்டிக்கப்படாது. இறைவனுடன் தூய்மையாக நடந்து கொண்ட நிலையில் ஒருவர் இந்த இடத்தை அடைந்து அல்லாஹ்வின் அச்சம் அவரது உள்ளத்தை ஆட்கொண்டு பாவங்களிலிருந்து தவ்பா செய்து அல்லாஹ் பாவம் என்று கூறியுள்ள ஒவ்வொரு பாவத்தையும் விட்டு அவர் விலகினால் அல்லாஹ்வின் அருள் அவருக்கு வழிகாட்டும். இறைவன் திருப்தியடைகின்ற அந்த இடத்தில் அவர் இருப்பார். மேலும் அவர் தனது இறைவனிடத்தில் திருப்தியடைவார். அவ்வாறில்லாமல் அக்கறையின்றி அவர் தமது வாழ்க்கையை கழித்தால் பிறகு அவருடைய முடிவு அபாயகரமானதாக இருக்கும். எனவே, பைஅத் செய்கின்ற சமயத்தில் பைஅத்தின் நோக்கமென்ன? அதனால் என்ன பயன் கிடைக்கும்? என்பதை தீர்மானித்துக் கொள்ள வேண்டும். உலகத்திற்காக மட்டும் பைஅத் செய்வதாக இருந்தால் அது பலனற்றதாகும். ஆனால் அந்த பைஅத் மார்க்கத்திற்காகவும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் செய்யப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட பைஅத் அருளுக்குரியதாகும். மேலும் தனது உண்மையான நோக்கத்தையும் குறிக்கோளையும் அது தன்னகத்தே வைத்திருக்கின்றது. எனவே, ஒரு உண்மையான பைஅத்தால் கிடைக்கின்ற நற்பலன்களையும் லாபத்தையும் இதன் மூலம் நாம் எதிர்பார்த்து அது கிடைக்கும் என்று முழுமையான நம்பிக்கை வைக்கலாம்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 142)

அல்லாஹ் இக்காலத்தின் இமாமாகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை முழுமையான உள்ளத்துடன் ஏற்றுக் கொள்ளும் நற்பேற்றை நமக்கு வழங்கியுள்ளான். எத்தகைய வேதனையுடனும், கவனத்துடனும் அவர்கள் அல்லாஹ்வுடைய ஆட்சியையும் அவனது திருத்தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஆட்சியையும் உலகில் நிலைநாட்டுவதற்காக தனது ஜமாஅத்தை தயார் செய்ய விரும்பினார்களோ, எத்தகைய வேதனையுடன் அதற்காக

நமக்கு அறிவுரை கூறினார்களோ அல்லாஹ் அதற்கேற்ப செயல்படுபவர்களாக நம்மை ஆக்குவானாக! எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்கள் நம்மிடம் பைஅத்திற்கான உடன்படிக்கையை வாங்கினார்களோ அந்நிபந்தனைகளை முழுமையாக பேணுபவர்களாகவும் அவற்றின்படி செயல்படுபவர்களாகவும் எப்போதும் அவற்றை நம் கண்முன் நிறுத்துபவர்களாகவும் நாம் இருப்போமாக. நமது எந்த செயலும் நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது போதனைகளுக்கு எதிராக நடந்து நம்மை குற்றவாளிகளாக ஆக்காமலிருக்கட்டும். நாம் எப்போதும் நம்மை கணக்கிட்டுப் பார்ப்பவர்களாக இருப்போமாக. அல்லாஹ் நமக்கு உதவி செய்வானாக. இன்று அல்லாஹ்வின் அருளால் துஆவிற்கு பிறகு இந்த மாநாடு நிறைவுபெறும். இந்த மாநாட்டின் அருள்களிலிருந்து முழு வருடமும் மட்டுமல்ல. முழு வாழ்விலும் பலன் பெறுபவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். அல்லாஹ் நமது சந்ததிகளிலும் அல்லாஹ்வுடனும் அவனது தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆகியோருடனும், கிலாஃபத்துடனும் நேசமிக்க தொடர்பை நிலைநாட்டுவானாக! அல்லாஹ் நமது கடந்த கால பலவீனங்களையும் பாவங்களையும் திரையிட்டு மறைப்பதுடன் நம்மை மன்னிப்பானாக. மேலும் நம்மை முழுக்க தனது அருளால் தனது அன்பிற்குரியவர்களின் ஜமாஅத்தில் சேர்ப்பானாக. இறைவா! நீ அதிகமாக மன்னிப்பவனும் மிகுந்த கருணை காட்டுபவனுமாவாய். எங்களை பாவங்களை மன்னிப்பாயாக. எங்கள் மீது கருணை காட்டுவாயாக. உனது மன்னிப்பு, கருணை ஆகியவற்றின் போர்வையால் எங்களை மூடுவாயாக. எங்களை ஒருபோதும் உன்னை விட்டும் பிரித்து விடாதே. ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

(2003ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 24 ம் தேதயன்று நடைபெற்ற ஜெர்மன் ஆண்டு மாநாட்டின் இறுதி உரையிலிருந்து)



# பைஅத்தின் ஏழாவது நிபந்தனை

**“தற்பெருமையையும், அகம்பாவத்தையும் முற்றாக விட்டு விடுவேன். பணிவு, தன்னடக்கம், இனிய குணம், சகிப்புத்தன்மை, எளிமை இவற்றையே மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவேன்.”**

## இறைவனுக்கு இணை வைக்கும் செயலுக்கு அடுத்தபடியாக ஆணவம் போன்ற எந்த ஒரு சோதனையும் இல்லை

சய்த்தான் கர்வம் காட்டிய பிறகு, ஆரம்பத்திலிருந்தே, தான் அதிகமாக வழிகெடுப்பதாகவும், மனிதனை ரஹ்மானின் அடியாராக மாறவிட மாட்டேன் என்றும் மனிதனை எவ்வாறு என் வலையில் சிக்க வைப்பேன் என்றால், அவனிடமிருந்து நன்மைகள் வெளிப்பட்டாலும் அவனை தனது இயல்புக்கேற்ப பெருமையடிக்க வைப்பேன் என்றும் சூளுரைத்தான். இந்த பெருமையடித்தல் மனிதனை படிப்படியாக அகங்காரத்தின் பக்கம் கொண்டு சென்று விடும். இந்த அகங்காரம் மனிதனை நன்மையின் நற்கூலியிலிருந்து விலக்கி விடும். மனிதனை நேர்வழியிலிருந்து வழிகெடுப்பேன் என சய்த்தான் முதல் நாளிலிருந்தே தீர்மானித்து விட்டான். மேலும் அவன் அகம்பாவத்தின் காரணமாகத்தான் அல்லாஹ்வின் கட்டளையை மறுத்தான். இதுவே பல்வேறு சாக்குப்போக்குகளினால் சய்த்தான் சோதிக்கும் ஆயுதமாகும். ரஹ்மானின் அடியார்கள். அல்லாஹ்வின் சிறப்பான அடியார்களாகவும் அவனை வணங்குபவர்களாகவும் இருக்கின்றார்கள். எனவே அவர்கள் சய்த்தானின் இந்த ஆயுதத்திலிருந்து தப்பித்திருக்கின்றார்கள். மற்றபடி பொதுவாக அகம்பாவத்தின் மூலமாகவே சய்த்தான் மனிதனை தன் பிடியில் கொண்டு வருவதில் வெற்றி பெற்று விடுகின்றான். ஆக, இதனை சாதாரணமானதாகக் கருதி விடக்கூடாது.

நாம் அகம்பாவம் காட்ட மாட்டோம்; ஆணவம் கொள்ள மாட்டோம்; அவற்றை முற்றாக விட்டு விடுவோம் என பைஅத்தில் கூறுகிறோம். இது அவ்வளவு எளிதான வேலையல்ல. இது பல வகைப்படும். சய்த்தான் பல்வேறு வகைகளின் மூலமாக மனித வாழ்க்கையில் தாக்குதல் செய்கின்றான். மிகவும் அஞ்ச வேண்டிய இடமாகும். உண்மையில் அல்லாஹ்வுடைய அருள் இருந்தால்தான் இதிலிருந்து தப்பிக்க முடியும். ஆனால் இந்த 7-வது நிபந்தனையில், அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவதற்கான ஒரு வழிமுறையையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வைத்து விட்டார்கள். அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அகம்பாவத்தை விட்டு விட்டால் (விட்ட இடத்தில்) இடைவெளி உருவாகும். அதனை நீங்கள் பணிவின் மூலமாகவும் தன்னடக்கத்தின் மூலமாகவும் நிரப்பவில்லையென்றால், அகம்பாவம் மீண்டும் தாக்குதல் நடத்தும். எனவே பணிவை மேற்கொள்ளுங்கள். ஏனெனில் இந்த வழியே அல்லாஹ்வுக்குப் பிடித்தமானதாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்தப் பணிவை இறுதி எல்லை வரை எட்டவைத்தார்கள். அதற்கு நிகரில்லை. எனவேதான் அல்லாஹ் அவர்கள் மீது மகிழ்ச்சி அடைந்தவாறு, 'உமது பணிவான வழிகள் எமக்குப் பிடித்து விட்டன' என்று இறை அறிவிப்பின் மூலமாகக் கூறினான். எனவே அன்னாரிடம் பைஅத் செய்ததாக வாதிடும் நாம், அன்னாரை காலத்தின் இமாம் என நம்பும் நாம் எந்த அளவுக்கு அந்த நற்பண்பை கைக்கொள்ள வேண்டும்! மனிதன் கர்வம் கொண்டு திரிவதற்கு அவனுக்கு எந்தத் தகுதியும் இல்லை. அல்லாஹ் கூறுகிறான்: நீர் பூமியில் கர்வம் கொண்டு திரியாதீர். நீர் நிச்சயமாக பூமியை பிளந்து விட முடியாது. மலையின் உச்சிக்கு உயர்ந்து விடவும் உம்மால் முடியாது.(17:38)

மனிதனுக்கு எந்த தகுதியும் இல்லை என இந்த வசனத்திலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. சிலர் கிணற்றுத்தவளைகளாக இருக்கிறார்கள். தமது வட்டத்தை விட்டு வெளியே வர விரும்புவதில்லை. அங்கேயே உட்கார்ந்து கொண்டு, தாம் பெரியவர்கள் என நினைக்கின்றனர். இதற்கு இப்போது நான் உங்கள் வீட்டு வாழ்கை, சூழ்நிலை ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒரு சிறிய உதாரணத்தை கூறுகின்றேன். சில ஆண்கள் தமது



வீட்டில் தமது மனைவி மக்களுடன் எத்தகைய அநியாயமான முறையில் நடந்து கொள்கின்றார்கள் என்றால், அதனால் உள்ளம் அதிர்ச்சியடைகின்றது. சில பெண் பிள்ளைகள் எழுதுகின்றனர்: நாங்கள் சிறுமிகளாக இருக்கும் காலத்திலிருந்தே எங்கள் தந்தை எங்கள் தாயாரின்மீது அநியாயமாக நடந்து கொள்கின்றார். இப்போது நாங்கள் வயதுக்கு வந்து விட்டோம். இனி எங்களால் இதைத் தாங்கிக்கொள்ள முடியாது. எங்கள் தந்தை எங்களுடனும் எங்கள் தாயாருடனும் கொடூரமாக நடந்து கொள்கின்றார், தந்தையின் வீட்டில் நாங்கள் நுழைந்ததுமே எங்கள் அறைக்குள் சென்று விடுகின்றோம். எங்கள் தந்தைக்கு முன்னால் எங்கள் தாயாரோ அல்லது நாங்களோ அவருடைய இயல்புக்கு மாற்றமான ஏதாவது பேச்சைப் பேசி விட்டால் அவர் கொடூரமான தந்தையாகி விடுகிறார். பிறகு பேசியவருக்கு கியாமத் வந்து விடுகிறது. ஆக, இது அகம்பாவம் தான். அதுதான் இந்த மாதிரியான தந்தைகளை இந்த எல்லை வரை எட்டவைத்துள்ளது. பெரும்பாலும் இத்தகையவர்கள் வெளி உலகத்தில் நன்றாக நடந்து கொள்கிறார்கள். வெளியிலிருந்து பார்க்கும் மக்கள், இவரைப்போன்ற நல்ல மனிதர் யாருமே இல்லை எனக் கருதுகிறார்கள். வெளியிலுள்ளவர்களின் சாட்சி அவர்களுக்கு சாதகமாக இருக்கிறது. சிலர் உள்ளேயும் வெளியேயும் ஒரே மாதிரி நடந்து கொள்கிறார்கள். அவர்களிடம் உள்ளதெல்லாம் பகிரங்கமாகி விடுகின்றன. பிறகு இத்தகைய ஒழுக்கங்கெட்ட ஆணவம் கொண்டவர்களின் குழந்தைகளும் குறிப்பாக ஆண் மக்கள் வாலிபர்களானதும் தம் தந்தை தம் தாயாரின் மீதும், சகோதரிகளின் மீதும் அல்லது தங்களின் மீதும் செய்த கொடுமைகளுக்கு எதிர் விளைவாக அந்த ஆண்மக்கள் தம் தந்தைக்கு எதிராக நிற்க ஆரம்பித்து விடுகிறார்கள். பிறகு ஒரு நேரத்தில் தந்தை தனது பலவீனமான வயதை அடையும்போது அவரிடம் குறிப்பாக பழிக்குப்பழி வாங்குகின்றார்கள். ஆக, இத்தகைய அகம்பாவம் பிடித்த சிந்தனையுடையவர்களுக்கு தம் வட்டத்திலேயே உதாரணங்கள் காணப்படுகின்றன. சமூகத்திற்கு பல வட்டங்கள் இருக்கின்றன. ஒன்று வீட்டிற்குள் உள்ள வட்டம்; இன்னொன்று வெளியே சுற்றுப்புறச் சூழலில் உள்ள வட்டம், தத்தமது வட்டத்திற்குள் நீங்கள் ஆய்வு செய்து பார்த்தால் ஆணவத்தின் இந்த உதாரணம் உங்களுக்குக் கிடைத்துக்கொண்டே செல்லும்.

பிறகு, இதனுடைய எல்லை இன்னொரு வட்டத்திலும் தெரிகின்றது. அதாவது, சில சமூதாயங்கள், நாடுகள், அரசாங்கங்கள் தமது ஆணவத்தின் காரணமாக ஒவ்வொருவரையும் தன்னை விட கீழாக கருதுகின்றன. ஏழை சமுதாயங்களை, ஏழை நாடுகளை தன் காலடியில் வைத்துக் கொண்டுள்ளது. இன்று உலகத்தில் குழப்பத்திற்கு மிகப்பெரும் காரணம் இதுதான். இந்த ஆணவம் ஒழிந்து விட்டால் உலகத்திலிருந்து குழப்பமும் ஒழிந்து விடும். ஆனால், அல்லாஹ் ஆணவம் கொள்பவர்களின் ஆணவத்தையும் அகம்பாவத்தையும் உடைக்கும் போது அவை எங்கு அழிந்து போயின என்பதே தெரிவதில்லை. இது ஆணவம் கொண்ட இந்த சமுதாயங்களுக்கு, அரசாங்கங்களுக்கு தெரிவதில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

“மேலும் (ஆணவத்தினால்) மனிதர்களிடத்து உன் கன்னத்தை பொங்கச் செய்யாதே. மேலும் பூமியில் தேவையில்லாமல் அகம்பாவம் பிடித்துத் திரியாதே. நிச்சயமாக அல்லாஹ் எந்த ஆணவம் கொண்டவரையும், பெருமையடிப்பவரையும் நேசிப்பதில்லை”.(31:19)

இந்த வசனத்திலிருந்து தெரிவதைப் போன்று, அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் கன்னங்களை பொங்கச் செய்தவாறு தேவையில்லாமல் ஆணவம் கொண்டு திரியாதீர்கள். ஆணவம் கொண்டு திரிபவர்களுக்கென்று ஒரு பாணி இருக்கின்றது. கழுத்தை உயர்த்தியவாறு திரிதல். இது அல்லாஹ்வுக்கு பிடித்தமானதல்ல. சிலருடைய பழக்கம் என்னவென்றால், தன்னை விட குறைந்த தகுதியுடைய மக்களுக்கு முன்னால் ஆணவம் காட்டுவார்கள். தன்னைவிட மேலானவர்களுக்கு முன்னால் குனிவார்கள். ஆக, இத்தகையவர்களிடம் நயவஞ்சகத்தன்மை என்ற தீமையும் வெளிப்படுகின்றது. ஆக, இந்த ஆணவம் பல ஒழுக்கங்கெட்ட தீமைகளுக்கு காரணமாக அமைகின்றது. மேலும் நன்மையில் முன்னேறும் வழி படிப்படியாக முற்றிலும் அடைபட்டு விடுகிறது. பிறகு, அவர்கள் மார்க்கத்தை விட்டும் விலகி விடுகின்றார்கள்.ஜமாஅத்தின் அமைப்பை விட்டும் விலகி விடுகிறார்கள். அவர்களின் ஆணவம் பெருக, பெருக அவர்கள் அல்லாஹ் மற்றும் இறைதூதரின் நெருக்கத்தை விட்டும், அவனுடைய அருள்களை விட்டும் விலகி விடுகின்றார்கள்.



ஒரு நபிமொழியில் வருகிறது. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“உங்களில் எவர் அனைவரையும் விட நல்ல ஒழுக்கம் கொண்டவராக இருப்பாரோ அவர்தான் மறுமை நாளில் அனைவரையும் விட எனக்கு அன்பிற்குரியவராகவும், எனக்கு மிக நெருக்கமுள்ளவராகவும் இருப்பார். மேலும் உங்களில் எவர் ஸர்ஸார் (வாயாடி) ஆகவும், முத–த்திக் (வாயைப் பிளந்து, பிளந்து பேசக்கூடியவர்) ஆகவும், முத்ஃபைஹிக் (ஆணவம் கொண்டவர்) ஆகவும் இருப்பாரோ அவர்தான் உங்களில் அனைவரையும் விடவும் அதிகமாக எனது கோபத்திற்குரியவராகவும், என்னை விட்டு அதிகம் விலகியிருப்பவராகவும் இருப்பார். அப்போது நாங்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஸர்ஸார் (வாயாடி), முதசத்திக் (வாயைப் பிளந்து பேசுபவர்) என்பவர்கள் யார் என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் முத்ஃபைஹிக் என்பவர்கள் யார்? என்று கேட்டோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். முஸ்ஃபைஹிக் என்பவர்கள் கர்வம் பிடித்த பேச்சை பேசுபவர்கள் எனக் குறிப்பிட்டார்கள்.”

**(திர்மிதி அப்வாபுல் பிர்ரி வஸிலா, பாபு ஃபீ மஆலியல் அஹ்லாக்)**

இன்னொரு ஹதீஸ். ஹஸ்ரத் இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“மூன்று விசயங்கள் எல்லா பாவங்களுக்கும் வேர் ஆகும். அவற்றிலிருந்து தப்பிக்க வேண்டும். ஒன்று, ஆணவத்திலிருந்து தப்பித்திருங்கள். ஏனெனில், ஆணவம்தான் சய்த்தானை ஆதமுக்கு சஜ்தா செய்வதை விட்டும் தடுத்தது. இரண்டாவது, பேராசையில் இருந்து தப்பியுங்கள். ஏனெனில் பேராசைதான் ஆதமை (விலக்கப்பட்ட) மரத்திலிருந்து (கனியை) உண்ணத் தூண்டியது. மூன்றாவது, பொறாமையிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். ஏனெனில், பொறாமையின் காரணமாகத்தான் ஆதமின் இரு மகன்களில் ஒருவர் தன் சகோதரனைக் கொன்று விட்டான்.” **(கசைரிய்யா பாபுல் ஹஸத் – பக்கம் 79)**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“எவருடைய உள்ளத்தில் அணுவளவாவது ஆணவம் இருக்குமோ அல்லாஹ் அவரை சுவர்க்கத்தில் நுழைய விடமாட்டான். அப்போது ஒருவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மனிதன், தன் ஆடை நன்றாக இருக்க வேண்டும் எனவும், காலணி நன்றாக இருக்க வேண்டும் எனவும் விரும்புகிறான். (இது ஆணவமாகுமா?) எனக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அது ஆணவம் அல்ல. அல்லாஹ் அழகானவன். அழகை விரும்புகின்றான். உண்மையில் ஆணவம் என்பது மனிதன் உண்மையை மறுப்பதாகும். மக்களை அற்பமாக மதிப்பதாகும். அவர்களை அற்பமாகப் பார்ப்பதாகும். மேலும் அவர்களுடன் தீயதாக நடந்து கொள்ளுதல் ஆகும் எனக் கூறினார்கள்.” (முஸ்லிம் - கிதாபுல் ஈமான்)

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“நரகத்திற்கும் சொர்க்கத்திற்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டது. என்னிடம் பெரும் பெரும் கொடுங்கோலர்கள், அகராதி பிடித்தவர்கள் நுழைகின்றனர் என்று நரகம் கூறியது. என்னிடம் பலவீனமானவர்களும், ஏழைகளும் நுழைகின்றனர் என சுவர்க்கம் கூறியது. அப்போது அல்லாஹ் நரகத்திடம், நீ எனது தண்டனையின் தோற்றமாகும். நான் நாடுபவர்களுக்கு உன் மூலமாக தண்டனையை வழங்குகின்றேன் என்று கூறினான். மேலும் அல்லாஹ் சுவர்க்கத்திடம், நீ எனது அருளின் தோற்றமாகும். நான் நாடுபவர்களுக்கு உன் மூலமாக அருள் செய்கின்றேன். மேலும் உங்கள் இருவரில் ஒவ்வொருவருக்கும் அதன் முழுமையான பங்கு கிடைக்கும் என்று கூறினான்.”

(சஹீஹ் முஸ்லிம் - கிதாபுல் ஜன்னத்)

ஒவ்வோர் அஹ்மதியும் பணிவு, எளிமை, அழகிய ஒழுக்கம் ஆகியவற்றின் வழிகளின்படி செயல்பட்டவாறு அல்லாஹ்வின் அருளைப் பெறக்கூடியவர்களாகவும், அல்லாஹ்வின் சுவர்க்கத்தில் செல்லக்



கூடியவர்களாகவும் அல்லாஹ் ஆக்குவானாக. மேலும் ஒவ்வோரு வீடும், ஆணவத்திலிருந்து தூயதாக இருக்கட்டுமாக.

ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரி (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களும் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“கண்ணியம் அல்லாஹ்வின் ஆடையாகும். பெருமை அவனுடைய போர்வையாகும். அல்லாஹ் கூறுகிறான்: எனவே என்னிடமிருந்து இவற்றை பறிக்க முயற்சி செய்பவருக்கு நான் தண்டனை வழங்குவேன்.”

(முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா)

## ஆணவம் கொள்பவர் ஒருபோதும் சுவர்க்கத்தில் நுழையமாட்டார்

ஆக, கர்வம் கடைசியில் மனிதனை இறைவனுக்கு எதிராகக் கொண்டு நிறுத்தி விடுகிறது. இறைவனுக்கு இணை வைப்பவரை, நான் மன்னிக்க மாட்டேன் என அல்லாஹ் கூறும்போது, எவர் தம்மை இறைவன் என்றே வாதிக்கின்றாரோ அவருக்கு எப்படி மன்னிப்பு கிடைக்கும்? ஆக, இந்த கர்வம் தான் பல்வேறு காலகட்டத்தில் ஃபிர்அவ்னின் பண்பைக் கொண்ட மக்களை உருவாக்கியது. பிறகு இந்த மாதிரியான ஃபிர்அவ்ன்களின் முடிவுகளைப் பற்றி நீங்கள் படித்திருக்கின்றீர்கள். இந்தக் காலத்தில் பார்த்தும் இருக்கின்றீர்கள். ஆக, இது மிகவும் அச்சப்பட வேண்டிய இடமாகும். ஒவ்வோர் அஹ்மதியும் அற்பமான கர்வத்திலிருந்தும் தப்பிக்க வேண்டும். ஏனெனில் இது பரவி பரவி மனிதனை முழுமையாக தன்வசப்படுத்திக் கொள்கிறது. அல்லாஹ் நமக்கு எச்சரிக்கை செய்து விட்டான். தெளிவாக்கி விட்டான். இது எனது போர்வையாகும். நான் ரப்புல் ஆலமீன் ஆவேன். பெருமை எனக்குரியது. இதனை ஏற்றுக் கொள்ளுங்கள். பணிவைக் காட்டுங்கள். இந்த எல்லைகளை விட்டு வெளியேற நீங்கள் முயற்சி செய்தால் தண்டனைக்குள்ளாக்கப்படுவீர்கள். கடுகளவு உங்களிடம் கர்வம் இருந்தாலும் தண்டனை உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டதாகும். ஆனால் அத்துடன் அணு அளவு உங்களிடம் ஈமான் இருந்தாலும் நான் உங்களை நெருப்பின் தண்டனையிலிருந்து காப்பாற்றுவேன் என்ற நற்செய்தியையும் அவன் வழங்கியுள்ளான்.

ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் அறிவிக்கின்றார். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“எவருடைய உள்ளத்தில் கடுகளவு கர்வம் இருக்குமோ அவர் சுவர்க்கத்தில் நுழையமாட்டார். மேலும் எவருடைய உள்ளத்தில் கடுகளவு ஈமான் இருக்குமோ அவர் நெருப்பில் நுழையமாட்டார்.”

(சுனன் இப்னிமாஜா, கிதாபுல் முகத்தமா)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

“மறுமை நாளில் ஷிர்க்கிற்கு அடுத்தபடியாக கர்வத்தைப் போன்று வேறு எந்த சோதனையும் இல்லை என்பதை உண்மையாகவே நான் உங்களிடம் கூறுகின்றேன். இது எப்படிப்பட்ட சோதனை என்றால், இது ஈருலகிலும் மனிதனை அவமானத்திற்கு உள்ளாக்கி விடுகிறது. இறைவனின் கருணை தவ்ஹீதில் இருக்கும் ஒவ்வொருவரையும் காப்பாற்றும். ஆனால் கர்வம் கொள்பவரைக் காப்பாற்றாது. சய்த்தானும் தவ்ஹீதில் இருப்பதாக வாதித்தான். ஆனால் அவன் தலை மீது கர்வம் இருந்தது. இறைவனின் பார்வையில் பாசத்திற்குரியவராக விளங்கிய ஆதமை (சய்த்தான்) ஏளனமாகப் பார்த்தான். அவரை குறை கூறினான். எனவே அவன் நாசமடைந்தான். மேலும் அவனுடைய கழுத்தில் சாபம் என்ற விலங்கு போடப்பட்டது. ஆக ஒரு நபர் நிரந்தரமாக நாசமாவதற்கு காரணமாக இருந்த முதல் பாவம் கர்வம்தான்.”

(ஆயினே கமாலோத்தே இஸ்லாம். ரூஹானி கஸாயின் தொகுதி 5 பக்கம் 598)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“உங்களிடம் எந்த வகையிலாவது கர்வமோ அல்லது வெளிவேசமோ அல்லது சுயநலமோ அல்லது சோம்பேறித்தனமோ இருக்கின்றதென்றால் நீங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவர்களாக ஆகி விடுவீர்கள். சில விசயங்களை செய்துவிட்டு நாம் செய்ய வேண்டியதை செய்து விட்டோம் என உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். உங்களிடம் முழுக்க முழுக்க ஒரு புரட்சி ஏற்பட வேண்டும் என இறைவன் விரும்புகின்றான். அவன் உங்களிடம் ஒரு மரணத்தை வேண்டுகின்றான். அதற்கு பிறகு அவன் உங்களை உயிர்பிப்பான்.”

(கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 12, 13)



## கர்வத்திற்கும் சய்த்தானுக்கும் இடையிலுள்ள ஆழமான தொடர்பு

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“நபிமார்களை விட கோடிக்கணக்கான மடங்கு கீழே இருப்பவர்கள், இரண்டு நாள் தொழுது விட்டு கர்வம் காட்ட ஆரம்பித்து விடுகின்றார்கள். அவ்வாறே நோன்பு, ஹஜ் ஆகியவற்றால் அவர்களிடம் தூய்மை உண்டாவதற்குப் பதிலாக கர்வமும், வெளிவேசமும் உண்டாகிறது. நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். கர்வம் –ய்த்தானிடமிருந்து வந்தது; மேலும் சய்த்தானாக்கி விடுகிறது. மனிதன் அதிலிருந்து விலகாதவரை உண்மையை ஏற்றுக் கொள்வதன் வழியிலும், இறை அருள்களின் வழியிலும் அது தடையாக நிற்கின்றது. எவ்விதத்திலும் கர்வம் கொள்ளக் கூடாது. கல்வின் அடிப்படையிலோ, செல்வத்தினாலோ, அழகினாலோ, திறமையினாலோ, குலம், கோத்திரத்தினாலோ கர்வம் கொள்ளக் கூடாது. ஏனெனில் பெரும்பாலும் இவ்விசயங்களினாலேயே கர்வம் தோன்றுகிறது. மேலும் இந்த கர்வங்களிலிருந்து மனிதன் தன்னைத்தானே தூய்மையாக்காத வரை அவன் இறைவனிடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவராக முடியாது; வீணான உணர்வுகளை எரித்து விடும் இறைஞானம் அவருக்கு கிடைக்க முடியாது. ஏனெனில் இது சய்த்தானுடைய பங்காகும். இதை அல்லாஹ் விரும்புவதில்லை.”

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுவதாவது, சில அடிப்படை விசயங்கள் இருக்கின்றன. அவற்றின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். மேலும் அவற்றிலிருந்து தப்பிக்க வேண்டும். சிலர் இரண்டு, நான்கு நாட்கள் தொழுது விட்டு, நாம் பெரிய நல்லவர்களாகி விட்டோம் எனக் கருதுகிறார்கள். முகத்தில் நூதனமான சாது பண்புடன் பெருமை ஏற்பட்டு விடுகிறது. சில நேரத்தில் ஜிப்பா அணிந்த சிலரை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்கள் கையில் தஸ்பீஹ் மணியை எடுத்துக் கொண்டு பள்ளிவாசல்களிலிருந்து வெளியேறுவார்கள். அவர்களுடைய கழுத்துகளிலேயே கர்வமும், இறுமாப்பும் தெரிகின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் இப்படிப்பட்ட ஜிப்பா அணிபவர்களை விட்டும் தூயதாக இருக்கிறது.

நன்றி. அல்லாஹ்வுக்கு மிக மிக நன்றி. பிறகு அவர்கள் ஹஜ் செய்து விட்டு வருகிறார்கள். அதை எவ்வளவு விளம்பரம் செய்கின்றார்கள் என்றால் அதற்கு எல்லையேயில்லை. இப்படிப்பட்டவர்களின் நோன்பு காட்டுவதற்கான நோன்பு ஆகும். ஹஜ் காட்டுவதற்கான ஹஜ் ஆகும். பெருமையடிப்பதற்காகவே இவையெல்லாம் செய்கின்றார்கள். இன்னார் பெரிய நல்லவர். ரொம்ப நோன்பு வைப்பவர். ஹாஜியாராவார் என மக்கள் கூற வேண்டும் என்பதற்காக செய்கின்றார்கள். இந்த எல்லா காட்டுதலும் கர்வத்தினால் தோன்றுகின்றன. அல்லது காட்டுவதினால் கர்வம் உருவாகிறது. அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னொன்றையும் கூறினார்கள். சிலர் தமது குடும்பத்தின் காரணமாக கர்வம் காட்டுகின்றார்கள். எங்கள் குடும்பம் உயர்ந்த குடும்பம்; இன்னார் தரம் குறைந்தவர். அவர் எப்படி எங்களோடு போட்டி போட முடியும் என்று கூறுகிறார்கள். எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள். கர்வம் பலவகைப்படும். அது உங்களை இறை ஞானத்திலிருந்து இறை நெருக்கத்திலிருந்து வெகுதூரம் விலக்கிக் கொண்டு சென்று விடும். பிறகு படிப்படியாக மனிதன் சய்த்தானின் மடியில் விழுந்து விடுகிறான்.

**பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“என்னைப் பொருத்தவரை பரிசுத்தமாவதற்கு மிகச் சிறந்த வழி இதுதான். இதை விட சிறந்த வேறு எந்த வழியும் கிடைக்க முடியாது. அது என்னவெனில், மனிதன் கல்வியினாலோ, குடும்பத்தினலோ, செல்வத்தினாலோ எந்த விதமான கர்வமும் கொள்ளக் கூடாது. இறைவன் ஒருவருக்கு கண்ணைக் கொடுக்கும் போது, இந்த இருள்களிலிருந்து காப்பாற்றும் ஒவ்வோர் ஒளியும் வானத்திலிருந்துதான் வருகிறது என்பதை அவர் கண்டு கொள்கிறார். மேலும் மனிதனுக்கு எல்லா நேரமும் வானத்தின் ஒளி தேவைப்படுகிறது. வானத்திலிருந்து வரும் சூரிய ஒளி வராவிட்டால் கண்ணும் பார்க்க முடியாது. எல்லாவிதமான இருளையும் அகற்றி அதற்குப் பதிலாக இறையச்சம், தூய்மை என்ற ஒளியை உருவாக்கும் அக ஒளியும் வானத்திலிருந்தே வருகின்றது. மனிதனின் இறையச்சம், ஈமான், இறை



வழிபாடு, பரிசுத்தம் எல்லாம் வானத்திலிருந்து வருகின்றன என உண்மையாகவே நான் கூறுகின்றேன். மேலும் இது அல்லாஹ்வின் அருளைச் சார்ந்துள்ளது. அவன் விரும்பினால் அதை நிலைநாட்டுவான். விரும்பினால் நீக்கி விடுவான். எனவே மனிதன் தன்மை ஒன்றுமற்றவனாகவும் ஒரு பொருட்டில்லாதவனாகவும் கருதி இறைவன் முன்னிலையில் விழுந்து பணிவுடனும் தன்னடக்கத்துடனும் இறைவனின் அருளை வேண்டி மன உணர்ச்சிகளை எறிந்து தன்னகத்தே ஒளியையும் நன்மைகளுக்கான ஆற்றலையும் சூட்டையும் உருவாக்குகின்ற அந்த இறைஞானத்தின் ஒளியை கேட்பதற்கு பெயர்தான் உண்மையான மஃரிபத் (இறைஞானம்) ஆகும். பிறகு அவ்விறைவனின் அருளால் அவனுக்கு இறை ஞானத்திலிருந்தும் பங்கு கிடைத்து ஏதாவது ஒரு சமயத்தில் எவ்வகையிலாவது விரிவுத்தன்மையும் உள்ளம் தெளிவு பெறும் நிலையும் கிடைத்து விட்டால் அதனால் அகம்பாவமும் பெருமையும் கொள்ளாமல் அதற்கு எதிரில் பணிவையும் தாழ்மையையும் கடைபிடிப்பதில் மேலும் முன்னேற வேண்டும். ஏனெனில், எந்த அளவு அவன் தன்னைத்தானே ஒரு பொருட்டில்லாதவராக கருதுவானோ அந்த அளவு சிறப்புத் தன்மைகளும் ஒளிகளும் இறைவனிடமிருந்து இறங்கி அவனுக்கு ஒளியையும் ஆற்றலையும் வழங்கும். மனிதன் இத்தகு கொள்கையை உடையவனாக இருந்தால் அல்லாஹ்வின் அருளால் அவனது ஒழுக்கநிலை சிறப்பானதாக இருக்கும். உலகில் மனிதன் தன்னை ஒரு பொருட்டாக கருதுவதும் கர்வமாகும். பிறகு மனிதன் மற்றவர்களை சபிக்கத் தொடங்கி அவர்களை ஏளனமாக கருதும் அளவிற்கு அவனது நிலைமை மாறி விடுகின்றது.” (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 212, 213 புதிய பதிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“கர்வம் மிக பயங்கரமான நோயாகும். எந்த மனிதனிடம் இது உருவாகி விடுகிறதோ அவருக்கு அது ஆன்மீக மரணமாகும். இந்த நோய் கொலையை விடப் பெரியது என உறுதியாக நான் அறிகிறேன். கர்வமுள்ளவர் சய்த்தானின் சகோதரராகி விடுகின்றார். ஏனெனில் கர்வம் தான் சய்த்தானைஅவமானத்திற்கும் இழிவிற்கும் ஆளாக்கியது. எனவே நம்பிக்கை கொண்டவர்களிடம் கர்வம் இருக்கக்கூடாது என்பது

நிபந்தனையாகும். மாறாக, பணிவு, அடக்கம், எளிமை அவர்களிடம் காணப்பட வேண்டும். மேலும் இது இறைவனால் நியமிக்கப்படுபவர்களின் சிறப்புத் தன்மையாகும். அவர்களிடம் அதிகமான அளவில் பணிவும், தன்னடக்க குணமும் இருக்கிறது. இந்தப் பண்பு அனைவரையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்தது. உங்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படிப் பழகுகிறார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஊழியர் ஒருவரிடம் கேட்ட போது உண்மை என்னவென்றால் என்னை விட அவர்கள் எனக்கு அதிமாக தொண்டு செய்கின்றார்கள் என்று பதில் கூறினார். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லிம்". (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 437,438 புதிய பதிப்பு)

## ஆணவம் இறைவனின் பார்வையில் மிகவும் வெறுப்பிற்குரியதாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"ஆணவத்திலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுரை கூறுகின்றேன். ஏனெனில் கம்பீரம் மிக்க நம் இறைவனின் பார்வையில் ஆணவம் மிகவும் வெறுப்பிற்குரியதாகும். ஆனால் ஆணவம் என்றால் என்ன என்பதை ஒரு வேளை நீங்கள் புரியாமல் இருக்கலாம். எனவே என்னிடமிருந்து புரிந்து கொள்ளுங்கள். நான் இறைவனின் ஆவியால் பேசுகிறேன். தன் சகோதரரை விட தான் அதிக அறிஞர், அறிவுள்ளவர், திறமைமிக்கவர் என்பதனால் அவரை அற்பமாக கருதும் ஒவ்வொருவரும் ஆணவம் கொண்டவராவார். ஏனெனில் அவர் இறைவனை அறிவின், ஞானத்தின் ஊற்றாக கருதவில்லை. மாறாக தன்னை ஒரு பொருட்டாகக் கருதுகிறார். அவரை பைத்தியக்காரர் ஆக்குவதற்கும், அவர் சிறியவராகக் கருதும் அவருடைய சகோதரருக்கு அவரை விட சிறந்த அறிவையும், ஞானத்தையும் திறமையையும் வழங்குவதற்கு இறைவனுக்கு ஆற்றல் இல்லையா? எவர் தமது செல்வம், செல்வாக்கு, கவுரவம் ஆகியவற்றை நினைத்து தன் சகோதரரை அற்பமாக கருதுகிறாரோ அவரும் ஆணவம் கொண்டவராவார். ஏனெனில் அந்த



செல்வாக்கையும், கவுரவத்தையும் இறைவன் தான் தமக்கு வழங்கியிருந்தான் என்பதை அவர் மறந்துவிட்டார். மேலும் அவர் குருடராவார். ஒரு நொடியில் அவர் தாழ்ந்தோரிலும் தாழ்ந்தோரில் சென்று விடும் அளவுக்கு இறைவன் அவர் மீது ஒரு பேரிழப்பை ஏற்படுத்தவும், தான் அற்பமாக கருதும் தன் சகோதரருக்கு தன்னைவிட சிறந்த செல்வத்தையும் செல்வாக்கையும் வழங்கவும் இறைவன் ஆற்றல் மிக்கவன் என்பதை அவர் அறிவதில்லை. அவ்வாறே தன் உடற்கட்டின் மீது பெருமை கொள்பவரும் அல்லது தனது அழகு, கம்பீரம், வலிமை, ஆற்றல் ஆகியவற்றின் மீது பெருமையடிப்பவரும், தன் சகோதரரை கேலி கிண்டல் செய்து, ஏளனமாக பெயர்சூட்டி அவருடைய உடல் குறைகளை மக்களுக்கு கூறித்திரிபவரும் ஆணவம் கொண்டவர் ஆவார். ஏனெனில் அந்த சகோதரரை விட தன்னை மோசமாக்கிவிடும் உடற்குறைகளை ஒரு நொடியில் தன் மீது இறக்கி, எவர் அற்பமாக பார்க்கப்பட்டாரோ அவருடைய ஆற்றலில் ஒரு நீண்டகாலம் வரை அருளை வழங்கும் இறைவனை அவர் அறியாது இருக்கின்றார். பிறகு அந்த அருள் குறையாது, வீணாகாது. ஏனெனில் இறைவன் தான் நாடுவதை செய்கின்றான். அவ்வாறே தன் ஆற்றல்களின் மீது நம்பிக்கை வைத்தவாறு துஆ செய்வதில் சோம்பேறித்தனம் காட்டுபவரும் ஆணவம் கொண்டவராவார். ஏனெனில் ஆற்றல்களின், வல்லமைகளின் உறைவிடத்தை அவர் இனங்கண்டு கொள்ளவில்லை. தன்னை ஒரு பொருட்டாக மதிக்கின்றார். எனவே அன்பிற்குரியவர்களே! இந்த எல்லா விசயங்களையும் ஞாபகத்தில் வையுங்கள். ஏதாவது ஒரு கோணத்தில் இறைவனிடத்தில் ஆணவம் கொண்டவராகி, அது பற்றி உங்களுக்கு தெரியாமலேயே இருந்து விட வேண்டாம். தன் சகோதரரின் தவறான சொல்லை ஆணவத்துடன் திருத்துபவரும் ஆணவத்தில் பங்கு கொண்டு இருக்கின்றார். ஒருவன் தன் சகோதரரின் விசயத்தை பணிவுடன் கேட்க விரும்பாமல் முகத்தை திருப்பிக் கொள்கிறார் என்றால் அவரும் ஆணவத்தில் பங்கு கொண்டிருக்கிறார். ஓர் ஏழை சகோதரர் தன் அருகில் அமர்வதை வெறுக்கின்றவரும் ஆணவத்தில் பங்கு கொண்டிருக்கிறார். ஒருவர் துஆ செய்கின்றவரை கேலி கிண்டலுடன் பார்க்கின்றார் என்றால் அவரும் ஆணவத்திலிருந்து ஒரு பங்கை பெற்றிருக்கின்றார். இறைவனால்

நியமிக்கபட்டவருக்கும், இறைதூதருக்கும் முழுமையாக கட்டுப்பட்டு நடக்க விரும்பாதவரும் ஆணவத்திலிருந்து ஒரு பங்கைப் பெற்றுள்ளார். மேலும் எவர் இறைவனால் நியமிக்கப்பட்டவர் மற்றும் இறைதூதரின் விசயங்களை கவனமாக கேட்பதில்லையோ, அவருடைய எழுத்துக்களை கவனமாக படிப்பதில்லையோ அவரும் ஆணவத்திலிருந்து ஒரு பங்கை பெற்றுள்ளார். எனவே ஆணவத்தின் எந்தப் பகுதியும் உங்களிடம் இல்லாதிருக்க முயற்சி செய்யுங்கள். அப்போது தான் நீங்கள் அழிந்து போகமாட்டீர்கள். அப்போதுதான் நீங்கள் உங்கள் மனைவி மக்களுடன் ஈடேற்றம் பெறுவீர்கள். இறைவனின் பக்கம் குனியுங்கள். உலகில் ஒருவருடன் எந்த அளவுக்கு நேசம் காட்ட முடியுமோ அந்த அளவுக்கு அவனிடம் நேசம் காட்டுங்கள். உலகில் மனிதன் ஒருவருக்கு எந்த அளவுக்கு பயப்பட முடியுமோ அந்த அளவுக்கு உங்கள் இறைவனுக்கு பயப்படுங்கள். தூய்மையான உள்ளம் கொண்டவர்களாகவும், அடக்கமுள்ளவர்களாகவும், தீமையற்றவர் களாகவும் ஆகுங்கள். அப்போது உங்கள் மீது கருணை காட்டப்படும்".

(நுஸுலுல் மஸீஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 402,403)

இந்த பைஅத் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள இரண்டாவது விசயம் பணிவுடனும், தன்னடக்கத்துடனும், அழகிய ஒழுக்கத்துடனும் சகிப்புத் தன்மையுடனும் ஏழ்மையுடனும் வாழ்கை நடத்துவேன் என்பதாகும். எனவே நான் ஏற்கனவே கூறியது போன்று நீங்கள் உங்கள் உள்ளத்தையும், சிந்தனையையும், கர்வத்தை விட்டும் சுத்தப்படுத்தினால் பின்னர் கண்டிப்பாக ஓர் உயர்ந்த பண்பை, ஒழுக்கத்தை உங்களிடம் உருவாக்க வேண்டும். இல்லையென்றால் சைத்தான் தாக்குவான். ஏனெனில் உங்களை விடாமல் பிடிப்பதற்காக அவன் காத்திருக்கின்றான். (நீங்கள் உருவாக்க வேண்டிய) அந்த ஒழுக்கம் பணிவு, அடக்கம் என்பதாகும். பணிவுள்ளவரும் கர்வம் கொண்டவரும் ஒன்றிணைய முடியாது.

ரஹ்மானின் அடியார்களாக இருக்கின்ற பணிவுள்ள மக்களை கர்வம் கொண்டவர்கள் குத்திக்காட்டி இழிவாகப் பேசும் போது அந்த மக்களுக்கு எதிரில் நீங்களும் அவர்களைப் போன்று பரிமாறக் கூடாது. மாறாக, அளவற்ற அருளாளனாகிய இறைவனின் (உண்மையான) அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பவராவார். அறிவற்றவர்கள்



அவர்களுடன் (அறிவீனமாகப்) பேசினால் அவர்கள் சாந்தி என கூறிச் சென்று விடுவார்கள் (25:64) என்ற இறைக்கட்டளைக்கேற்ப செயல்பட வேண்டும்.

**ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரி (ரலி) அவர்கள அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

"எவர் அல்லாஹ்வுக்காக ஒரு படித்தரம் பணிவை மேற்கொண்டாரோ அல்லாஹ் அவருக்கு இன்னொரு படித்தரத்தை உயர்த்துவான். எதுவரை என்றால் அவருக்கு சொர்க்கத்தின் உயர்ந்த இடத்தில் இடமளிப்பான். மேலும் எவர் அல்லாஹ்வுக்கு எதிராக ஒரு படித்தரம் கர்வத்தை மேற்கொள்வாரோ அல்லாஹ் அவரை ஒரு படித்தரம் கீழே விழச்செய்வான். எதுவரை என்றால் அவரை தாழ்ந்தோரிலும் தாழ்ந்தோரில் நுழையச் செய்வான்."

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல்)

இவ்வாறு நடந்து கொள்ளும் மக்களது சபைகளிலிருந்தும் ஸலாம் கூறி விட்டு எழுந்து சென்று விடுவதுதான் உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில், இதன் மூலமாகவே உங்களது படித்தரம் உயர்வடைகிறது. மேலும் எதிரிகள் தங்களது இத்தகு பேச்சுகளின் காரணமாக தாழ்ந்தோரிலும் தாழ்ந்தோரில் நுழைந்து விடுகின்றார்கள்.

ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

"தர்மம் கொடுப்பதால் செல்வம் குறைவதில்லை. மேலும் அல்லாஹ்வின் அடியார் ஒருவரை எவ்வளவு அதிகமாக மன்னிக்கின்றாரோ அல்லாஹ்வும் அதே அளவு அதிகமாக அவருடைய கண்ணியத்தை அதிகமாக்குவான். அவர் எவ்வளவு அதிகமாக பணிவையும், தன்னடக்கத்தையும் மேற்கொள்வாரோ அதே அளவுக்கு அல்லாஹ் அவருக்கு உயர்ந்த அந்தஸ்தை வழங்குவான்."

(முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா)

அயாஸ் பின் ஹமார் பின் முஜாசஹ் அவர்களின் சகோதரர் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்**கள் எங்கள் மத்தியில் சொற்பொழிவாற்றும் போது இவ்வாறு கூறினார்கள்:

“நீங்கள் எந்த அளவு தாழ்மையை மேற்கொள்ள வேண்டும் என்றால் உங்களில் எவரும் மற்றவர் மீது பெருமை கொள்ள வேண்டாம். உங்களில் எவரும் மற்றவர் மீது அநீதியிழைக்க வேண்டாம் என்று அல்லாஹ் எனக்கு வஹி அறிவித்தான்.”

எனவே ஒவ்வோர் அஹ்மதியும் ஒருவர் மற்றவரை மன்னிக்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டும். அப்போது மறு உலகிலும் அந்தஸ்துகள் உயரும். இவ்வுலகிலும் அல்லாஹ் உங்களுடைய அந்தஸ்துகளை உயர்த்திக் கொண்டே செல்வான். தனக்காக செய்யப்பட்ட எந்த செயலுக்கும் அல்லாஹ் நற்கூலி இல்லாமல் விடமாட்டான்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பார்வையில் ஏழைகளுக்கு இருந்த அந்தஸ்து

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பார்வையில் ஏழைகளுக்கு என்ன அந்தஸ்து இருந்தது என்பதை இந்த ஹதீஸிலிருந்து கணிக்கலாம். ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: “ஏழைகளுடன் நேசம் காட்டுங்கள். ஏனெனில் **அல்லாஹும்ம அஹ்யினீ மிஸ்கீனன். வ அமித்னீ மிஸ்கீனன். வஹ்ஷுர்னீ ஃபீ ஸும்ரத்தில் மஸாகீன்** (அல்லாஹ்வே நீ என்னை ஏழையாக இருக்கும் நிலையில் உயிர் வாழச் செய்வாயாக. மேலும் ஏழையாக இருக்கும் நிலையிலேயே மரணிக்கச் செய்வாயாக. மேலும் ஏழைகளின் கூட்டத்திலிருந்து என்னை எழுப்புவாயாக) என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்வதை நான் செவியுற்றேன்.”

(இப்னு மாஜா கிதாபுல் ஸுஹது.பாபு மஜாலிஸத்துல் ஃபுகரா)

எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் சென்ற அதே வழிகளில் செல்ல வேண்டும். ஒவ்வொரு அஹ்மதியும் ஏழைகளின் அணியில் தன்னை அமர்த்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால், ஏழ்மையுடன் வாழ்க்கை நடத்துவேன் என்பதுதான் பைஅத் உடன்படிக்கையாகும்.



**ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“ஜாஃபர் பின் அபீதாலிப் (ரலி) அவர்கள் ஏழைகளுடன் அதிகமாக அன்பு செலுத்துவார்கள். அவர்களது சபைகளில் அமர்வார்கள். அந்த ஏழைகளுடன் அவர்கள் பேசுவார்கள். அந்த ஏழைகளும் அவர்களுடன் பேசுவார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) அவர்களை அபுல் மஸாகீன் (ஏழைகளின் தந்தை) என்ற குன்னியத் பெயரால் அழைத்தார்கள். (இப்னு மாஜா கிதாபுஸ் ஸுஹது)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“அல்லாஹ்வை தேட வேண்டுமென்றால், ஏழைகளின் உள்ளத்திற்குப் பக்கத்தில் தேடுங்கள். இதனால்தான் தூதர்கள் ஏழ்மை என்னும் ஆடையை அணிந்திருந்தினர். அவ்வாறே பெரிய சமுதாயத்தினர், சிறிய சமுதாயத்தினரை எள்ளி நகையாட வேண்டாம். மேலும் என் குடும்பம் பெரியது என எவரும் கூற வேண்டாம். அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் என்னிடம் வரும்போது உங்களுடைய சமுதாயம் எது என்று கேட்க மாட்டேன். மாறாக உங்கள் செயல் எது என்று கேட்பேன். அவ்வாறே இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தம் மகளிடம் ஃபாத்திமாவே இறைவன் குலத்தைப் பார்க்கமாட்டான். நீ ஏதாவது தீய செயல் செய்தால் நீ இறைத்தூதரின் மகள் என்பதனால் இறைவன் உன்னை மன்னிக்க மாட்டான். எனவே நீ உன் வேலையை எப்பொழுதும் பார்த்து செய் என்று கூறினார்கள்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 370 புதிய பதிப்பு)

**அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இறையச்சம் கொண்டவர்களின் நிபந்தனை, அவர்கள் ஏழ்மையிலும், எளிமையிலும் தம் வாழ்வை கழிக்க வேண்டும். இது இறையச்சத்தின் ஒரு கிளை ஆகும். இதன் மூலமாக தகாத கோபத்தை நாம் எதிர்க்க வேண்டும். கோபத்திலிருந்து தப்பிப்பது தான் பெரும் பெரும் இறைஞானிகளுக்கும், ஸித்தீக்குகளுக்கும் கடைசியான, கடினமான கட்டமாகும். கோபத்தினால் தற்பெருமையும், இறுமாப்பும் உருவாகிறது.

அவ்வாறே சில நேரத்தில் தற்பெருமை, இறுமாப்பு ஆகியவற்றால் கோபம் உருவாகிறது. ஏனெனில் மனிதன் மற்றவர்களைவிட தனக்கு முன்னுரிமை வழங்கும் போதுதான் கோபம் உருவாகிறது.”

(1897 ஆம் ஆண்டு ஜல்ஸா ஸாலானாவின் ரிப்போர்ட் பக்கம் 49)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்கள் என்றால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றிலிருந்து பிறந்த இரு சகோதரர்களைப் போன்று ஆகி விடுங்கள். உங்களில் எவர் தம் சகோதரரின் பாவங்களை அதிகமாக மன்னிக்கின்றாரோ அவர்தான் உங்களில் அதிக மேன்மைக்குரியவர் ஆவார். மேலும் பிடிவாதம் பிடித்து மன்னிக்காதவர் தீயவர் ஆவார். எனவே அவருக்கு என்னுடன் எந்த தொடர்பும் இல்லை.”

(கிஷ்தி நூஹ் - ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 12, 13)



# பைஅத்தின் எட்டாவது நிபந்தனை

**“மார்க்கம், அதன் கண்ணியம், இஸ்லாத்திற்குத் தொண்டு செய்தல் ஆகியவற்றை எனது உயிர், பொருள், கண்ணியம், குழந்தைகள், உறவினர்கள் ஆகிய எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வாகக் கருதுவேன்.”**

உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பேன் என்ற உடன்படிக்கை எத்தகைய உடன்படிக்கை என்றால் ஜமாஅத்துடன் முறைப்படியான தொடர்பு வைத்திருக்கும் ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் கூட்டங்களிலும், இஜ்திமாக்களிலும் இந்த உறுதிமொழியை திரும்பத் திரும்ப கூறுகின்றார். எல்லா இஜ்திமாக்களிலும் இது பேனரில் எழுதி தொங்கவிடப்படுகிறது. இதற்கு ஏன் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது? ஏனெனில் இது இல்லாமல் ஈமான் நிலைபெறவே முடியாது. இதன்படி செயல்படுவது எளிதான காரியம் அல்ல. எனவே இதனை பெறுவதற்காக எல்லா நேரமும் வினாடியும் அல்லாஹ்விடம் உதவி தேடிக் கொண்டிருக்க வேண்டும். அவனுடைய அருள் இருந்தால்தான் இந்த உயர்வான தகுதியில் நிலைபெற முடியும். நாம் அல்லாஹ்வின் அருளினால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்துள்ளோம். அல்லாஹ் நமக்கு இவ்வாறு கட்டளையிட்டுள்ளான்: “அவர்கள் மார்க்கத்தை அவனுக்கே உரித்தாக்கியவாறு எப்பொழுதும் அவன் பக்கம் குனிந்தவாறு அல்லாஹ்வை வணங்க வேண்டும் என்றும், தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்றும், ஸக்காத் கொடுக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. இதுவே நிலைத்திருக்கும், நிலைத்திருக்க வைக்கும் போதனைகளைக் கொண்ட மார்க்கமாகும்.” (98:6)

ஆக, தொழுகையை நிலைநாட்டுவதனால் - அதாவது ஜமாஅத்தாகவும் குறித்த நேரத்திலும் தொழுவதனால் அவனுடைய வழியில் செலவு செய்வதனால் ஏழைகளை கவனத்தில் கொள்வதனால் நாம் சரியான மார்க்கத்தில் நிலைபெற முடியும். மேலும் இந்த போதனைகளை நம்

வாழ்க்கையின் அங்கமாக ஆக்கிக் கொள்ள முடியும். அவற்றை நம் வாழ்வில் செயல்படுத்தவும் முடியும். நாம் அல்லாஹ்வை வணங்குவதுடன் அவன் தந்துள்ள போதனைகளுக்கு ஏற்ப செயல்பட்டால் அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்கி நமது ஈமானை எந்த அளவு உறுதியானதாக ஆக்குவானென்றால் நாமும், நமது விருப்பங்களும் நமது சந்ததிகளும் மார்க்கத்திற்கு எதிரில் நமக்கு ஒன்றுமற்றவையாக தெரிய ஆரம்பித்து விடும். எல்லாமே தூயதாகி அல்லாஹ்வுக்காக ஆகி விட்டால் நம்முடையதென்று எதுவுமே இல்லாமல் ஆகி விட்டால் பிறகு அல்லாஹ் அப்படிப்பட்ட மக்களை வீணாக்கமாட்டான். அவன் அவர்களுடைய கண்ணியத்தை காப்பாற்றுகின்றான். அவர்களின் சந்ததிகளையும் பாதுகாக்கின்றான். அவர்களிடம் அருளை உருவாக்குகின்றான். அவர்களின் செல்வத்தையும் பெருக்குகின்றான். அவர்களை தமது கருணை மற்றும் அருளின் போர்வையில் போர்த்துகின்றான். அவர்களின் எல்லா அச்சத்தையும் நீக்கி விடுகின்றான். அவன் கூறுவதாவது, இல்லை. இல்லை. உண்மை என்னவென்றால் எவர் தம்மை அல்லாஹ்விடம் அர்ப்பணித்து விடுகின்றாரோ மேலும் நன்மை செய்கின்றாரோ அதற்குரிய கூலி அவனுடைய இறைவனிடம் இருக்கிறது. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இருக்காது. அவர்கள் துயரப்படவுமாட்டார்கள். (2:113)

## இஸ்லாமிய போதனைகளின் சுருக்கம்

"எவர் தன் முழு கவனத்தையும் அல்லாஹ்வுக்காக அர்ப்பணித்து விடுகிறாரோ மேலும் அவர் நன்மை செய்பவராக இருக்கின்றாரோ மேலும் அவர் ஏக இறைவனை வணங்கிய இப்ராஹீமின் மார்க்கத்தைப் பின்பற்றினாரோ அவரை விட மார்க்கத்தில் சிறந்தவர் வேறு யார் இருக்க முடியும்? மேலும் அல்லாஹ் இப்ராஹீமை உற்ற நண்பனாக ஆக்கி இருந்தான்." (4:126)

இவ்வசனத்தில் இஸ்லாமிய போதனைகளின் சுருக்கம் கூறப்பட்டுள்ளது. அதாவது முழுமையாக கட்டுப்படுபவராகவும், தனது எல்லா ஆற்றல்களாலும் முழுக்க முழுக்க அல்லாஹ்வின் கட்டளையை பேணுபவராகவும் இறைவனின் மார்க்கத்திற்காக தம்மைத் தாமே அர்ப்பணிக்கக் கூடியவராகவும், நன்மை செய்பவராகவும் இருக்க



வேண்டும். அவர் அல்லாஹ்வுக்காக நன்மை புரிபவராக இருக்கின்றார். எனவே, இவர் எல்லா நேரமும் மார்க்கத்தின் சேவையின் பக்கமும் இருப்பதால் இவருடைய செல்வம், சந்ததிகள் வீணாகி விடுமே என எவரும் கருத வேண்டாம்.

மாறாக, அனைவரையும் விட அதிகமாக பிரதிபலன் வழங்குபவன் அல்லாஹ் ஆவான். உங்களின் இந்த செயலுக்கு அவனே கூலி தருவான். அவர்களுடைய உயிர், பொருள், கண்ணியத்தை பாதுகாப்பான். அத்தகையவர்களையும் அவர்களின் தலைமுறையினரையும் அல்லாஹ் வீணாக்கமாட்டான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**"பலா மன் அஸ்லம வஜ்ஹஹு...... வலாஹும் யஹ்ஸனூன்** (2:113). அதாவது, எவர் தம்மை இறைவனுக்கு முன்னால் வைத்து விடுகின்றாரோ, தம் வாழ்வை அவன் வழிகளில் அர்ப்பணித்து விடுகிறாரோ நன்மை செய்வதில் உற்சாகமாக இருக்கின்றாரோ அவர் இறைநெருக்கம் என்ற நீர் ஊற்றிலிருந்து தன் கூலியைப் பெறுவார். மேலும் அத்தகையவர்களுக்கு எந்த அச்சமும், எந்த வருத்தமும் இல்லை. அதாவது எவர் தமது எல்லா ஆற்றல்களையும் இறைவழியில் ஈடுபடுத்தி விடுகின்றாரோ அவருடைய சொல்லும், செயலும், அசைவும், அசையாமையும், முழு வாழ்வும் இறைவனுக்காக ஆகி விட்டால் உண்மையான நன்மை செய்வதில் சுறுசுறுப்புடன் இருந்தால் அவருக்கு இறைவன் தன்னிடமிருந்து நற்கூலி வழங்குவான். அச்சம், வருத்தம் ஆகியவற்றிலிருந்து ஈடேற்றம் வழங்குவான்."

*(சிராஜுத்தீன் ஈஸாயீ கே சார் சவாலோன் கா ஜவாப். ரூஹானி கஸாயின் தொகுதி 12, பக்கம் 344)*

ஒரு ஹதீஸில் வருகிறது. முஆவிய்யா பின் ஹைதா குஷைரீ (ரலி) அவர்கள் தாம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சம்பவத்தை குறிப்பிடும் போது கூறுகின்றார்கள்:

"நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்று எங்களுடைய இறைவன் உங்களுக்கு என்ன தூதுச் செய்தியை கொடுத்து அனுப்பியுள்ளான்? மேலும் தாங்கள் என்ன மார்க்கத்தை கொண்டு

வந்துள்ளீர்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர்கள் இறைவன் எனக்கு இஸ்லாம் மார்க்கத்தை கொடுத்து அனுப்பியிருக்கின்றான் என்றார்கள். இஸ்லாம் மார்க்கம் என்பது என்ன? என்று நான் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாம் என்றால் நீங்கள் உங்களை முழுவதுமாக அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுவது ஆகும். மேலும் (அல்லாஹ் அல்லாமல்) வணங்கப்படுகின்ற பிறவற்றிலிருந்து விலகிவிடுவதாகும். மேலும் தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத் கொடுங்கள் எனக் கூறினார்கள். (அல் இஸ்தீஆப்)

**பிறகு இன்னொரு நபிமொழி அறிவிப்பு ஹஸ்ரத் ஃஸுஃப்யான (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"ஒருமுறை நான், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதற்கு பிறகு இனி நான் வேறு யாரிடமும் கேட்க வேண்டிய தேவையே இல்லாத அளவுக்கு எனக்கு இஸ்லாத்தைப் பற்றி கூறுங்கள் எனக் கேட்டேன். (அதாவது எனக்கு முழுமையான திருப்தி ஏற்படும் அளவுக்கு பதில் கூறுங்கள்). அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நான் அல்லாஹ்வின்மீது ஈமான் கொண்டேன் என்று கூறி பிறகு அதில் உறுதியாக இருங்கள். மேலும் அதில் உறுதியாக தொடர்ந்து நிலைபெற்றிருங்கள் என பதில் கூறினார்கள்." (முஸ்லிம் - கிதாபுல் ஈமான்)

சஹாபிகளின் செயல் எப்படி இருந்தது? ஒரு ஹதீஸில் வருகிறது. ஆரம்ப காலத்தில் மது ஹராமாக்கப்படவில்லை. அப்போது நபித்தோழர்கள் மது அருந்தி வந்தனர். பெரும்பாலும் அதனால் அவர்கள் போதையில் ஆழ்ந்து விடுவர். ஆனால், அந்த நிலைமையிலும் அவர்களிடம் மார்க்கம் மற்றும் மார்க்கத்தின் கண்ணியம் மேலோங்கி இருந்தது. எல்லாவற்றையும் விட மார்க்கம் முன்னுரிமை பெற்றது என்பதை உணர்ந்திருந்தார்கள். மது ஹராமானது பற்றிய கட்டளையும் வந்தது. அப்போது மக்கள் சபையில் உட்கார்ந்து கொண்டு மது அருந்திக் கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் போதையிலும் இருந்தனர். மது ஹராமான கட்டளையை அவர்கள் கேட்டதும் உடனே அதனை செயல்படுத்தினார்கள். இது தொடர்பான நபிமொழி இருக்கின்றது.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான், அபூ தல்ஹா அன்சாரி, அபூ உபைதா பின் ஜர்ராஹ், அபீபின் கஅப் ஆகியோருக்கு பேரித்தம் பழத்தின் மதுவை அருந்த வைத்துக்



கொண்டிருந்தேன். ஒருவர் வருகின்றவரிடம், மது ஹராமாகி விட்டது எனக் கூறினார். இதைக் கேட்ட அபூதல்ஹா (ரலி) அவர்கள் அனஸே! எழுந்திருங்கள். மதுவின் பானைகளை உடைத்துவிடுங்கள் என்று கூறினார்கள். அனஸ் கூறுகிறார்கள்: நான் எழுந்து கற்களால் மதுப்பானைகளின் கீழ் பகுதியை உடைத்துவிட்டேன். அது உடைந்து விட்டது."

(புகாரி கிதாப் கபருல் வாஹிது)

## இஸ்லாம் உயிர் பெறுவதற்கு நம்மிடமிருந்து ஒரு பரிகாரத்தை வேண்டுகிறது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

"இஸ்லாம் உயிர் பெறுவதற்கு நம்மிடமிருந்து ஒரு பரிகாரத்தை வேண்டுகிறது. அது என்ன? அது நாம் அதன் வழியிலேயே மரணித்தலாகும். இந்த மரணத்திலேயே இஸ்லாத்தின் வாழ்வும், முஸ்லிம்களின் வாழ்வும், உயிருள்ள இறைவனின் தோற்றமும் அடங்கியிருக்கிறது. வேறு சொற்களில் கூறுவதாயின் இதற்குப் பெயர்தான் இஸ்லாம். இந்த இஸ்லாத்தையே இறைவன் இப்போது உயிரூட்ட விரும்புகின்றான். இந்த மகத்தான பணியை நிறைவேற்றுவதற்கு எல்லா வகையிலும் நல்ல விளைவைத்தரும் ஒரு மகத்தான ஏற்பாட்டை அவன் தன் சார்பாக செய்வது அவசியம் ஆயிற்று. எனவே அந்த ஞானமிக்கவனும், ஆற்றல் மிக்கவனும் சீர்படுத்துவதற்காக இந்த எளியவனை அனுப்பி அவ்வாறே செய்துள்ளான்."

(ஃபதஹே இஸ்லாம், ரூஹானி கஸாயின் தொகுதி 2 பக்கம் 10-12)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

"மனிதன் உண்மையுடனும், நேர்மையுடனும் இறைவனுடைய அடியாராக ஆகாத வரை எந்தவொரு படித்தரம் கிடைப்பதும் கடினம் தான். இப்ராஹீம் (அலை) அவர்களைப் பற்றி, இப்ராஹீம் எத்தகையவர் என்றால், அவர் தம் விவகாரத்தை முழுமைப்படுத்தி காட்டினார் என அல்லாஹ் கூறுகிறான் (53:38). ஆக, இவ்வாறு தம் உள்ளத்தை அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து தூய்மைபடுத்துதல், இறை நேசத்தால் நிரப்புதல், இறைதிருப்திக் கேற்ப நடத்தல், ஆகியவற்றைக் கடைபிடித்து நிழல் நிஜத்தைப்

பின்பற்றுவது போலவே இறை கட்டளைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அவருடைய விருப்பமும் இறைவனுடைய விருப்பமும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். எந்த வித்தியாசமும் இருக்கக் கூடாது. இவையெல்லாம் துஆவினால் கிடைக்கின்றன. தொழுகை உண்மையில் துஆவுக்காகத்தான். எல்லா நிலையிலும் துஆ செய்ய வேண்டும். ஆனால் எவர் தூங்கியவாறு தொழுகிறாரோ, அதுபற்றிய உணர்வே எவருக்கு இல்லையோ உண்மையில் அது தொழுகை அல்ல......... எனவே தொழுகையை நிறைவேற்றுவதில் மனிதன் சோம்பேறித்தனம் காட்டக் கூடாது. அக்கறையில்லாமல் போய்விடக்கூடாது. நமது ஜமாஅத், ஜமாஅத் ஆக விரும்புகிறதென்றால் அது ஒரு மரணத்தை மேற்கொள்ள வேண்டும். மன இச்சைகளிலிருந்தும், சுய விருப்பங்களிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். மேலும் எல்லாவற்றையும் விட அல்லாஹ்வுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 457-458 புதிய பதிப்பு)

## நிச்சய உறுதியே பாவங்களிலிருந்து மீட்பை பெறுவதற்கான வழியாகும்

**அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“இறைவனை வேண்டுகின்ற அடியார்களே! காது திறந்து கேளுங்கள். உறுதியைப் போன்று வேறு எதுவும் இல்லை. நிச்சய உறுதிதான் பாவத்திலிருந்து மீட்கிறது. நிச்சய உறுதியே தான் நன்மைசெய்ய ஆற்றலை வழங்குகிறது. நிச்சய உறுதியேதான் இறைவனை நேசிப்பவனாக ஆக்குகிறது. நிச்சய உறுதியே இல்லாமல் நீங்கள் மன உணர்ச்சியிலிருந்து விலகி நிற்க முடியுமா? நிச்சய உறுதியே இல்லாமல் உண்மையான மாற்றத்தை நீங்கள் உருவாக்க முடியுமா? நிச்சய உறுதியே இல்லாமல் உண்மையான மகிழ்ச்சியை நீங்கள் உருவாக்க முடியுமா?..... நிச்சய உறுதி இல்லாமல் இருண்ட வாழ்விலிருந்து நீங்கள் வெளிவர முடியாது. உங்களுக்கு பரிசுத்த ஆவியும் கிடைக்க முடியாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உறுதி கொள்பவர்களே அருளுக்குரியவர்கள். ஏனெனில் அவர்கள்தான் இறைவனைக் காண்பார்கள். ஐயங்களில் இருந்தும், ஐயப்பாடுகளிலிருந்தும் ஈடேற்றம் பெற்றவர்கள் அருளுக்குரியவர்கள். ஏனெனில் அவர்கள் பாவங்களிலிருந்து இரட்சிப்பை



பெறுவார்கள். உறுதி என்னும் செல்வம் கொடுக்கப்பட்ட நீங்கள் அருளுக்குரியவர்கள். ஏனெனில் அதற்கு பிறகு உங்களுடைய பாவம் முடிந்து விடும். பாவமும், உறுதியும் ஒன்றிணைய முடியாது. கடுமையான விசமுள்ள பாம்பைக் கண்ட பிறகும் பாம்புப் புற்றினுள் நீங்கள் உங்கள் விரலை நுழைப்பீர்களா? எந்த இடத்தில் எரிமலையினால் எரிகற்கள் பொழிகின்றனவோ அங்கு நீங்கள் நிற்பீர்களா? அல்லது இடி விழும் இடத்திலோ அல்லது இரத்தத்தை குடிக்கத் துடிக்கும் சிங்கம் தாக்குகின்ற இடத்திலோ அல்லது பிளேக் நோய் ஒரு நாட்டையே அழித்துக் கொண்டிருக்கும் போது அந்த இடத்திலோ நீங்கள் செல்வீர்களா? பிறகு, பாம்பின் மீதும், இடியின் மீதும் சிங்கத்தின் மீதும், பிளேக் நோயின் மீதும், உங்களுக்கு இருக்கும் அதே உறுதியேதான் இறைவன் மீதும் இருக்கிறதென்றால் அவனுக்கு எதிராக நீங்கள் கட்டுப்படாதிருந்து தண்டனைக்குரிய வழியை மேற்கொள்வதோ அல்லது அவனுடன் இருக்கும் உண்மையான நன்றி உணர்வுகளை தொடர்பை முறிப்பதோ சாத்தியமில்லை.” (கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 66,67)

**இன்னோரிடத்தில் அவர்கள் கூறுகிறார்கள்:**

“அச்சம், அன்பு, மதிப்பளித்தல் ஆகியவற்றின் வேர் முழுமையான இறைஞானம் தான். எனவே எவருக்கு முழுமையான இறைஞானம் வழங்கப்பட்டதோ அவருக்கு (இறை) அச்சமும் (இறை) அன்பும் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. கட்டுப்படாமையினால் உருவாகும் எல்லா பாவங்களிலிருந்தும் அவருக்கு விடுதலை வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்த ஈடேற்றத்தை பெறுவதற்கு எவருடைய இரத்தமும் தேவையில்லை. எந்தவொரு சிலுவையும் தேவையில்லை. நமக்கு ஒரே தியாகம் தான் தேவை. அது நமது நஃப்ஸின் தியாகமாகும். அதன் தேவையைத்தான் நமது இயல்பு உணர்கிறது. இந்த தியாகத்திற்கு மறுபெயர்தான் இஸ்லாம். அறுக்கப்படுவதற்காக கழுத்தை முன்னால் வைப்பதே இஸ்லாம் என்பதன் பொருளாகும். அதாவது தனது ஆன்மாவானது முழுமையான திருப்தியுடன் இறைவன் முன்னிலையில் வைப்பதே இஸ்லாமாகும். இந்த அன்பான பெயரே எல்லா மார்க்கச் சட்டங்களின் ஆன்மாவாகவும் எல்லா கட்டளைகளின் உயிராகவும் இருக்கின்றது. உள்ளத்தில் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும்

அறுக்கப்படுவதற்காக தனது கழுத்தை முன் வைப்பதற்கு முழுமையான அன்பும் நேசமும் தேவைப்படுகிறது. முழுமையான அன்பு முழுமையான இறைஞானத்தை வேண்டுகிறது. சுருக்கமாக இஸ்லாம் என்ற சொல் தெரிவிப்பதாவது, உண்மையான தியாகத்திற்கு முழுமையான இறைஞானமும், முழுமையான அன்பும் தேவை. வேறு எதனுடைய தேவையுமில்லை.”

(லெக்சர் லாஹூர் பக்கம் 5,6 ரூஹானி கஸாயின்தொகுதி 20 பக்கம் 151,152)

இந்த எல்லா விசயங்களின்படி செயல்படும் நல்வாய்பை அல்லாஹ் வழங்குவானாக!

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ந் தேதி ஜெர்மனியிலுள்ள ஃபிராங்ஃபோர்ட்டிலுள்ள ஷ்யூர்ட் ஹாலே என்ற இடத்தில் நிகழ்த்திய குத்பா உரையிலிருந்து.......)

இஸ்லாத்தின் போதனைகள் எத்தகு அழகிய போதனைகளாக இருக்கின்றனவென்றால் அதில் ஏதும் குறை இருக்கின்றது என்று கருதும் வகையில் மனித வாழ்க்கையின் எந்தவொரு அம்சத்தையும் பற்றி அது கூறாமல் விட்டுவிடவில்லை. அந்த இறைவனின் அன்பான தூதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கியுள்ள இந்த போதனைகளை நாம் செயல்டுத்தி அதனை நமது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதைத்தான அல்லாஹ்வின் இந்த அருள்கள் நம்மிடம் எதிர்பார்க்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரும் அன்னாரது அடிமையுமாகிய இந்தக் காலத்தின் இமாமின் ஜமாஅத்தில் இணைந்திருக்கும் நம்மீது இன்னும் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றது. எனவே, அல்லாஹ் எங்கு தன்னை வணங்கும்படியும் தனக்குள்ள உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கமும் நமக்கு கவனமூட்டி இருக்கின்றானோ அங்கு இறை அடியார்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றுவதன் பக்கமும் நமக்கு கவனமூட்டியவாறு பல்வேறு வகையில் நம்முடன் தொடர்புள்ளவர்களின் உரிமைகளை நிறைவேற்றும்படி நமக்கு கட்டளையிட்டுள்ளான். இதன் முக்கியத்துவத்தின் காரணமாகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பைஅத்தின் ஒன்பதாவது நிபந்தனையில் அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்வது பற்றியும் அவர்களது உரிமைகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.



# பைஅத்தின் ஒன்பதாவது நிபந்தனை

**“அல்லாஹ்வின் படைப்புகளாகிய எல்லாருக்கும் தொண்டு செய்வதில் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இறைவனுக்காகவே தொடர்ந்து ஈடுபட்டிருப்பேன். அவனால் எனக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களாலும் அருள்களாலும் என்னால் முடிந்த வரை மனித குலம் பயன்பெறும் வகையில் பணியாற்றுவேன்.”**

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். **வஃபுதுல்லாஹ வலா துஷ்ரிகூபிஹீ சைஅன் வபில் வாலி தைனி இஹ்ஸானன் வபிதில் குர்பா வல் யதாமா வல் மஸா கீனி வல் ஜாரிதில் குர்பா வல் ஜாரில் ஜுனுபி வஸ்ஸாஹிபி பில் ஜன்பி வப்னிஸ் ஸபீலி வமா மலகத் அய்மானுக்கும் இன்னல்லாஹ லாயுஹிப்பு மன் கான முக்தாலன் ஃபகூரா. (4:37)**

இதன் மொழிபெயர்ப்பு இதுவாகும். “மேலும் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். மேலும் பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நெருங்கிய உறவினர்களுடனும், அனாதைகளுடனும், வறியவர்களுடனும் மேலும் உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்கள், அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்கள், உங்களுடன் இருப்பவர்கள், வழிப்போக்கர்கள், உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் ஆகியோரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் தற்பெருமை மற்றும் ஆணவம் கொண்டவர்களை விரும்புவதில்லை.”

## எல்லோரிடமும் நல்ல முறையில் நடந்து கொள்வது பற்றிய போதனை

இந்த வசனத்தில், உங்கள் சகோதரர்கள், உங்கள் நேசத்திற்குரியவர்கள், உறவினர்கள், உங்களுக்கு அறிமுகமானவர்கள், அண்டை வீட்டுக்காரர்கள் ஆகியோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களிடம் அனுதாபம் காட்டுங்கள். மேலும்

அவர்களுக்கு உங்களது உதவி தேவைப்பட்டால் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். எந்த அளவுக்கு அவர்களை பயன்பெறச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு உதவி செய்யுங்கள் என்று மட்டும் கூறவில்லை. மாறாக, நீங்கள் அறிந்திராத அண்டை அயலார்களாக இருந்தாலும் உங்களுக்கு அவர்களுடன் எந்த உறவு முறையோ, தொடர்போ இல்லாவிடினும், அவர்களை தற்காலிகமாகத் தான் சந்திக்கிறீர்கள் என்றாலும், அவர்களுக்கு உங்கள் பரிவு, உதவியின் தேவை இருக்கும் என்றால், அவர்களுக்கு உங்களால் சிறிது நன்மைகளை செய்ய முடியும் என்றால் கண்டிப்பாக செய்யுங்கள். இதன் மூலம் ஒரு சிறந்த இஸ்லாமிய சமூகம் நிலைபெறும் என்று கூறியுள்ளான்.

படைப்பினங்களுடன் அனுதாபம் காட்டுவதும் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு நன்மை செய்யும் பண்பும் அதில் சிறந்த நிலையும் உங்களிடம் உருவாக வேண்டும். நன்மையை விட அதிகமாக இஹ்ஸான் (உபரியான நன்மை) செய்யும் நோக்கத்துடன் இதனை நீங்கள் செய்யுங்கள். இஹ்ஸான் என்பது எனக்கு இதற்கு பதிலாக ஒன்று கிடைக்கும் என்ற நிய்யத்தில் செய்யப்படுவதில்லை என்பதை அறிந்து கொள்க. இஹ்ஸான் என்பது கலப்பற்ற முறையில் அல்லாஹ்வுக்காக மட்டுமே செய்வதாகும். அவ்வாறு நீங்கள் செய்தால் பிறகு ஓர் அழகிய சமூகம் நிலைபெற்று விடும். அதில் கணவன் – மனைவி சண்டை, மாமியார் – மருமகள் சண்டை, ஒரு சகோதரருக்கும் இன்னொரு சகோதரருக்கும் இடையில் சண்டை, பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு இடையில் சண்டை ஆகியவை இருக்காது. ஒவ்வொரு பிரிவினரும் மற்ற பிரிவினருடன் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். அவர்களுக்குரிய உரிமைகளை நேச உணர்வுடன் நிறைவேற்ற முயற்சிப்பார்கள். மேலும் தூய மனதுடன் அல்லாஹ்வுக்காக மட்டும் அவனது அன்பு, நேசத்தைப் பெறுவதற்காகவே அவர்கள் அமல் செய்பவர்களாக இருப்பார்கள். இன்றைய சமூகத்தில் இவ்வாறு செய்வதற்கு இன்னும் அவசியம் ஏற்பட்டுள்ளது. இறைவன் கூறுகின்றான்: இவற்றை நீங்கள் செய்யாவிட்டால் பிறகு தற்பெருமை உள்ளவர் என்று கூறப்படுவீர்கள். தற்பெருமையை அல்லாஹ் விரும்புவதில்லை. தற்பெருமை எப்படிப்பட்ட நோய் என்றால் அதிலிருந்துதான் எல்லா குழப்பங்களும் ஆரம்பமாகின்றது.



பைஅத்தின் ஏழாவது நிபந்தனையில் இது பற்றி விரிவாக வந்து விட்டது. எனவே இங்கு தற்பெருமையைப் பற்றி விரிவாக கூற வேண்டிய அவசியம் இல்லை.

சுருக்கமாக கூறுவதென்றால், படைப்பினங்களுடன் அனுதாபம் காட்டுங்கள். அதன் மூலம் அல்லாஹ்வின் பார்வையில் விருப்பத்திற்குரியவர்களாக ஆகுங்கள். ஈருலக வெற்றியையும் பெறுங்கள். நன்மையை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக அல்லாமல் அன்பின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக ஒருவர் மற்றவர் மீது நன்மை செய்யுங்கள்.

பிறகு அல்லாஹ் கூறுகின்றான். **வயுத்யி மூனத் தஆம அலா ஹுப்பிஹீ மிஸ்கீனன் வயதீமவ் வ அஸீரா** (அத்தஹ்ர் : 9) மேலும் அவர்கள், தாம் உணவை விரும்பும் நிலையிலும், ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும், கைதிகளுக்கும் அதனை வழங்குவார்கள்.

இதன் ஒரு பொருள், அவர்களுக்கே தேவைகள் இருக்கும் போது அல்லாஹ்தஆலாவின் அன்பைப் பெறுவதற்காக மட்டுமே தேவை உடையவர்களின் தேவைகளை கருத்தில் கொள்கின்றனர். தாம் பசியாக இருந்து கொண்டு அவர்களுக்கு உணவளிக்கின்றனர். அவர்கள் வழங்கும்போது அதை பெற்றுக்கொள்பவரின் தேவையே நிறைவேறாமலும், பசியே அகலாத அளவிலும் அவர்கள் குறுகிய மனம் கொண்டவர்களாய் செயல்படுவதில்லை. மாறாக அவர்களால் முடிந்தவரை உதவி செய்கின்றனர். நற்செயலை எவ்வகையிலும் காட்டுவதற்காக செய்வதில்லை. மாறாக, நன்மையை சம்பாதித்துக் கொள்வதற்காகவும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவும் செய்கின்றார்கள். மேலும் இதற்கு இன்னொரு பொருள், அவர்கள் எதை வழங்குகின்றார்களோ அவர்களுக்கே அப்பொருளின் தேவை இருக்கிறது. அதாவது கொடுப்பவர், தானே அப்பொருளை தனக்காக விரும்புகிறார். பிறகு உங்களுக்காக எதை விரும்புகின்றீர்களோ அதனை இறைவனுக்காக வழங்குங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளையை எப்போதும் மனதில் கொள்கிறார். சிலர் தேவையுள்ள தமது சகோதரருக்கு உதவி செய்தாலும், நற்செயலைக் காட்டுவதற்காகவே செய்கின்றனர். அது சரியன்று. சிலர் ஆச்சர்யமான

இயல்புள்ளவர்களாக இருக்கின்றனர். தாம் பயன்படுத்திய பொருளை அன்பளிப்பாக கொடுக்கின்றனர் அல்லது தாம் அணிந்த ஆடைகளை வழங்குகின்றனர். அந்நிலையில் தமது சகோதரர்களின், சகோதரிகளின் கண்ணியத்தை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். கொடுக்க வாய்ப்பில்லை என்றால் கொடுக்காமல் இருப்பது சிறந்ததாகும். அல்லது இது நான் பயன்படுத்திய பொருள்தான் என்று சொல்லி விடுங்கள். அவர்கள் பெற சம்மதித்தால் கொடுங்கள். ஏழை குமர்களுக்கு திருமணத்திற்காக சிறந்த ஆடைகளை தர விரும்புகிறோம். ஆனால் அந்த ஆடைகள் நாங்கள் ஒரு சில நாட்கள் மட்டும் அணிந்தவையாகும். பிறகு அவை சிறியதாகி விட்டன. அல்லது ஏதாவது ஒரு காரணத்தால் பயன்படுத்த முடியாமல் போய் விட்டது என்று சிலர் எழுதுகின்றார்கள். அது போன்ற பொருட்களை லஜ்னா அல்லது குத்தாமுல் அஹ்மதிய்யா போன்ற கிளை அமைப்புகள் மூலம் தந்தாலும் சரி; தனிப்பட்ட முறையில் வழங்குவதாக இருந்தாலும் சரி அவர்கள் பொருட்களை வழங்கும்போது வறியவர்களின் கண்ணியத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அப்பொருள் கொடுக்கத் தகுந்ததாக இருந்தால் தான் கொடுக்க வேண்டும் பயன்படுத்த முடியாததை (கறை பட்டவை, வியர்வை நாற்றம் வரும் துணிகள்) போன்றவற்றை கொடுக்கக் கூடாது. ஏழைகளின் கண்ணியத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அத்தகைய துணிகளை கொடுப்பதாயின் சுத்தப்படுத்தி, நன்றாக துவைத்து சரியாக்கிய பிறகு கொடுங்கள். அதைப்போன்று நமது கிளை அமைப்புகளான லஜ்னா போன்றவையும், யாருக்கு அத்தகைய துணிகளை வழங்குகின்றார்களோ அவர்களிடம் இது பயன்படுத்தப்பட்டவை தான் என்று தெளிவுபடுத்தி விடட்டும். ஏனெனில்,அவர்கள் அதன் பிறகு பெற்றாலும் மகிழ்ச்சியுடன் பெறுவர். ஒவ்வொருவருக்கும் சுயமே ஒரு கவுரவம் இருக்கும். நான் முன்னரே குறிப்பிட்டபடி அதை கவனத்தில் கொள்வது அவசியமாகும். மிகவும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் **வயுத்யிமூனத் தஆம அலா ஹுப்பிஹீ மிஸ்கீனன் வயதீமன் வஅஸீரா** என்ற வசனத்தை விளக்கியவாறு கூறுகிறார்கள்:



“நினைவில் கொள்ளுங்கள். இறைவன் நன்மையை மிகவும் விரும்புகிறான். அவன் தனது படைப்பினங்களுடன் பரிவு காட்ட வேண்டும் என்று விரும்புகிறான். அவன் தீமையை விரும்பியிருந்தால் தீமையை வலியுறுத்திக் கூறியிருப்பான். ஆனால் அல்லாஹ்வின் தகுதி அதனை விட்டும் தூயதாகும். ஆக, நீங்கள் என்னுடன் தொடர்பு கொண்டிருக்கிறீர்கள். நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் ஒவ்வொரு மனிதருடனும் அவர் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, பரிவு காட்டுங்கள். வித்தியாசம் பார்க்காமல் ஒவ்வொருவருக்கும் நன்மை செய்யுங்கள். ஏனெனில் இதுதான் திருக்குர்ஆனின் போதனையாகும். (வயுதீஃமூனத் தஆம அலா ஹுப்பிஹி மிஸ்கீனன் வயதீமன் அஸீரா. அத்தஹ்ர் :9). கைதிகளாக இருப்பவர்களில் பெரும்பாலார் குஃப்பார் (மறுப்பவர்)களாகவே இருந்தனர். இஸ்லாத்தில் அனுதாபம் காட்டுவதின் எல்லை எந்த அளவு விரிவானது என்பதை இப்போது பாருங்கள். எனது கருத்தின்படி, முழுமையான நல்லொழுக்க போதனை இஸ்லாம் இல்லாமல் எவருக்கும் கிடைக்க வாய்ப்பே இல்லை. எனக்கு உடல்நலம் இருந்தால் நல்லொழுக்க போதனை குறித்து ஓர் நிரந்தரமான நூல் ஒன்றை எழுதுவேன். ஏனெனில் எனது எல்லா விருப்பங்களையும் வெளிப்படுத்த விரும்புகிறேன். மேலும் அது எனது ஜமாஅத்திற்கு ஒரு முழுமையான போதனையாகவும், அல்லாஹ்வின் திருப்திக்குரிய விருப்பங்களின் வழிகளை அதில் காட்டித் தரக்கூடியதாகவும் இருக்கும். ஒருவரிடம் இந்த குறை இருக்கின்றது. இன்னொருவர் இதை செய்து விட்டார் என ஒவ்வொரு நாளும் நான் பார்க்கும் போதும் கேள்விப்படும் போதும் எனக்கு மிகவும் கவலை ஏற்படுகிறது. எனது இயல்பு இவ்விசயங்களால் மகிழ்ச்சி அடையாது. நான் ஜமாஅத்தை இப்போது ஒரு குழந்தையைப் போன்று பார்க்கின்றேன். அது இரண்டு அடி எடுத்து வைத்தால் நான்கு முறை விழுந்து விடுகிறது. ஆனால் இறைவன் இந்த ஜமாஅத்தை முழுமையடையச் செய்வான் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். எனவே, நீங்களும் முயற்சி, திட்டம் தீட்டுதல், செயல்பாடு மற்றும் துஆக்களில் ஈடுபடுங்கள். இறைவன் தனது அருளை உங்கள் மீது பொழியட்டும். ஏனெனில் அவன் அருளின்றி எதுவும் ஆகப்போவதே இல்லை. அவன் அருள் இருந்தால் அவனே எல்லா வழிகளையும் திறந்து விடுகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 218, 219 புதிய பதிப்பு)

இறையருளால், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றலினால் அவர்களின் போதனைகளின்படி அமல் செய்ததனால், அக்காலத்தில் அவர்கள் கவலைப்பட்ட பல நோய்கள் ஜமாஅத்திடமிருந்து நீங்கி விட்டது. மேலும் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் பெரும்பகுதி அவற்றிலிருந்தம் முற்றிலும் தூய்மையாக இருந்தது. இருக்கின்றது. ஆனால் அக்காலத்திலிருந்தும் அந்த நேரத்திலிருந்தும் நாம் விலகிச் செல்லச் செல்ல சமுதாயத்தில் சில தீமைகளுடன் சய்த்தான தாக்குதல் தொடுத்துக் கொண்டிருக்கிறான். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதைப்பற்றி கவலைப்பட்டார்களோ அந்த தீமைகளிலிருந்து தப்புவதற்கு அன்னாரின் போதனைக்கு ஏற்ப திட்டமிட்டு செயல்படுவது மற்றும் துஆ மூலமாக அல்லாஹ்வின் அருளை வேண்டியவாறு முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தை எப்போதும் முழுமையாக்கி வைப்பான். இப்போது நான் சில ஹதீஸ்களை எடுத்து வைக்கிறேன்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ரிவாயத் செய்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“அல்லாஹ் கியாமத் நாளில் கூறுவான். ஆதமின் மகனே! நான் நோயுற்றிருந்தேன். நீ என்னை விசாரிக்கவில்லை. அடியார் கூறுவார்: என் இறைவா! நான் எப்படி உன்னை விசாரிப்பேன். நீயே முழு உலகத்தையும் பாதுகாப்பவன். அல்லாஹ் கூறுவான். எனது இந்த அடியார் நோயுற்றிருந்தார் என்பது உனக்கு தெரியாதா? நீ அவரை விசாரிக்கவில்லை. நீ அவரை விசாரித்திருந்தால் என்னை அவரிடம் கண்டிருப்பாய் என்று உனக்குத் தெரியாதா? ஆதமின் மகனே! நான் உன்னிடம் உணவைக் கேட்டேன். நீ எனக்கு உணவு தரவில்லை. இதற்கு ஆதமின் மகன் கூறுவான். என் இறைவா! நீ ரப்புல் ஆலமீனாக இருக்கும் போது நான் எப்படி உனக்கு உணவளிப்பேன்? அல்லாஹ் கூறுவான்: எனது இந்த அடியான் உணவு கேட்ட போது நீ அவனுக்கு உணவளிக்கவில்லையே, உனக்கு நினைவில்லையா? நீ அவனுக்கு உணவளித்திருந்தால் என் சமூகத்தில் அதற்கான கூலியைப் பெற்றிருப்பாய் என்பது உனக்குத் தெரியாதா?



ஆதமின் மகனே! நான் உன்னிடம் தண்ணீர் கேட்டேன். ஆனால் நீ எனக்கு தண்ணீர் தரவில்லை என்று இறைவன் கேட்பான். என் இறைவா! நீயே இந்த உலகங்களுக்கும் ரப்பாக இருக்கும்போது நான் எப்படி உன்னை தண்ணீர் குடிக்க வைப்பேன்? என்று ஆதமின் மகன் கூறுவான். அதற்கு அல்லாஹ் கூறுவான். எனது இந்த அடியான் தண்ணீர் கேட்டான். ஆனால் நீ அவனுக்கு தண்ணீர் கொடுக்கவில்லை. நீங்கள் அவனை குடிக்க வைத்திருந்தால் நீங்கள் என் சமூகத்தில் அதற்குரிய கூலியைப் பெற்றிருப்பீர்கள்.” (முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வ ஸிலா பாப் ஃபஸ்லி இயாததுல் மரீழ்)

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எல்லா படைப்பினங்களும் அல்லாஹ்வுடைய குடும்பம் ஆகும். ஆக அல்லாஹ்வுக்கு தன்னுடைய படைப்பினங்களில், எவர் அவனுடைய குடும்பத்தினர் (படைப்பினங்கள்) களுடன் நல்ல முறையில் நடந்து கொள்கிறாரோ மேலும் அவர்களின் தேவைகள் குறித்து கவனத்தில் கொள்கிறார்களோ, அவரே மிகவும் நேசத்திற்குரியவராக இருக்கிறார்.

(மிஷ்காத் பாபுஷ் சஃபகத் வர்ரஹ்மத் அலல் கல்க்)

பிறகு ஒரு ரிவாயத் வருகிறது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிம் மீது ஆறு கடமைகள் உள்ளன. 1) அவர் (மற்றொரு முஸ்லிமை), அவரை சந்திக்கும் போது சலாம் கூற வேண்டும். 2) அவர் தும்மினால் யர்ஹமுக்கல்லாஹ் (அல்லாஹ் உமக்கு ரஹ்மத் செய்வானாக) என்று கூற வேண்டும். 3) அவர் நோயுற்றால், சென்று நலம் விசாரிக்க வேண்டும்.

சிலரிடம் இறையருளால் தாமே கவனத்தில் வைத்து ஆஸ்பத்திரி சென்று நோயாளிகளை நலம் விசாரிக்கின்ற நல்ல, மிகச் சிறந்த பழக்கம் இருக்கிறது. அவர்கள் (நோயாளிகள்) அறிமுகமானவர்களாக இருந்தாலும் இல்லாவிடினும், அவர்களுக்காக பழங்கள் எடுத்துக் கொண்டு செல்கின்றனர். பூக்களை எடுத்துக் கொண்டு செல்கின்றனர். படைப்பினங்களுக்கு சேவையாற்றுவதில் இது மிகச்சிறந்த நடைமுறையாகும். (ஹதீஸின் தொடர்ச்சி)

“4) அவர் உங்களை கூப்பிட்டால் அவருக்கு பதில் அளியுங்கள். 5) அவர் மரணித்து விட்டால் அவரது ஜனாஸாவுக்கு செல்ல வேண்டும். 6) தனக்காக விரும்புவதை அவருக்காகவும் விரும்ப வேண்டும். அவர் அருகில் இல்லாத போதும் அவருக்கு நல்லதையே நாட வேண்டும்.

(சுனன் தாரமி கிதாபுல் இஸ்தீஸான் பாப் ஃபீ ஹக்கில் முஸ்லிமி அலா முஸ்லிம்)

பிறகு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“ஒருவர் மற்றவரின் மீது பொறாமை கொள்ள வேண்டாம். ஒருவர் மற்றொருவருக்கு இழப்பை ஏற்படுத்துவதற்காக போட்டி போட்டுக் கொண்டு விலையைக் கூட்டாதீர்கள். ஒருவர் மற்றவருடன் பகைமை காட்டாதீர்கள். ஒருவர் இன்னொருவருக்கு முதுகைக் காட்டாதீர்கள். அதாவது அவர்களின் தொடர்புகளை துண்டித்துக் கொள்ளாதீர்கள். ஒருவர் இன்னொருவரின் வியாபாரத்தில் குறுக்கிடாதீர்கள். மாறாக அல்லாஹ்வின் அடியார்கள் தங்களுக்கிடையில் சகோதரர்களாக ஆகி விடுங்கள். முஸ்லிம் தன் சகோதரனுக்கு அநீதியிழைப்பதில்லை. அவரை இழவுபடுத்துவதில்லை. அவருக்கு தலைகுனிவை, அவமானத்தை ஏற்படுத்துவதில்லை. அன்னார் தனது நெஞ்சை நோக்கி சைகை செய்தவாறு கூறினார்கள். தக்வா இங்கிருக்கிறது. இந்த வார்த்தையை அன்னார் மூன்று முறை திரும்பத் திரும்ப கூறினார்கள். பிறகு கூறினார்கள். மனிதரின் பேரிழப்பிற்கு அவர் தன் முஸ்லிம் சகோதரனை இழிவான கண்ணோட்டத்தில் பார்ப்பதே போதுமானது. ஒரு முஸ்லிமின் இரத்தம் பொருள் மற்றும் கண்ணியம் கவுரவம் மற்ற முஸ்லிமுக்கு விலக்கப்பட்டதாகும். மேலும் அவற்றிற்கு கண்ணியம் அளிப்பது அவரது கடமையாகும்.” (முஸ்லிம் கிதாபுல் பிர்ரி வஸிலா)

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“எந்த மனிதர் ஒரு முஸ்லிமின் உலகியல் கஷ்டங்கள், சங்கடங்களை அகற்றுவாரோ அவருடைய கஷ்டங்களை, சங்கடங்களை அல்லாஹ் கியாமத் நாளில் அகற்றுவான். ஒருவர் ஒரு வறியவரை நிம்மதி



அடையும்படி செய்து அவருக்காக எளிதை உருவாக்கினால் அல்லாஹ் மறுமை நாளில் அப்படிப்பட்டவருக்கு எளிதை ஏற்படுத்துவான். எவர் ஒரு முஸ்லிமுடைய குறைகளை திரையிட்டு மறைக்கின்றாரோ அவருடைய குற்றம் குறைகளை மறுமையில் அல்லாஹ் திரையிட்டு மறைப்பான். எவர் தனது சகோதரனுக்கு உதவி செய்யத் தயாராக இருப்பாரோ அந்த அடியானுக்கு உதவி செய்ய அல்லாஹ் தயாராக இருக்கின்றான். எந்த மனிதர் அறிவைத் தேடி வெளியேறுவாரோ அவருக்காக அல்லாஹ் சொர்க்கத்தின் வழியை எளிதாக்கித் தருவான். ஒருவர் அல்லாஹ்வின் வீடுகளில் ஏதாவது ஒரு வீட்டில் அமர்ந்து அல்லாஹ்வுடைய வேதத்தை படிக்கிறார் அல்லது அதன் பாடங்களில், கருத்துக்களில் ஆழ்ந்து இருந்தார் எனில் அல்லாஹ் அவர் மீது திருப்தியையும், நிம்மதியையும் இறக்குகிறான். அல்லாஹ்வின் கருணை அவரை மூடி விடுகின்றது. மலக்குகள் அவரை சூழ்ந்து கொள்கின்றனர். தனது நெருக்கமான அடியார்களில் அல்லாஹ் அவர்களை குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றான். எந்த மனிதர் தனது செயல்களில் சோம்பேறித்தனம் காட்டுவாரோ அவர் தனது குடும்பத்தின் பெயரைக் கூறி வெற்றி பெற முடியாது. குடும்ப செல்வாக்கின் காரணமாக சொர்க்கத்திற்கு செல்ல முடியாது.”

(முஸ்லிம் கிதாபுத் திக்ர் பாப் பஸ்லுல் இஜ்திமாஅ அலா திவாவத்தில் குர்ஆனி வஅலா திக்ர்)

மக்களின் உரிமைகளை கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் சகோதரர்களின் குறைகளை கஷ்டங்களை அகற்றுங்கள். மேலும் அல்லாஹ்வுத்தஆலா கியாமத் நாளில் இதே பரிவுடன் உங்களுடனும் நடந்து கொள்வான். உங்களது குற்றம் குறைகளை அகற்றுவான். இதுவே இதன் ஆரம்பத்தில் உங்களுக்கு விளக்கப்பட்டது. இது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நம்மீது செய்த ஒரு நன்மையாகும். அன்னார் கூறினார்கள். அல்லாஹ் உங்களை தனது மக்ஃபிரத் என்ற போர்வையினால் போர்த்த வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், கஷ்டப்படுபவர்கள், வறியவர்களுக்கு உங்களால் முடிந்த அளவுக்கு உதவி செய்யுங்கள். அல்லாஹ் உங்களுடன் பரிவுடன் நடந்து கொள்வான். உங்கள் சகோதரர்களின் குறைகளை திரையிட்டு மறையுங்கள். அவர்களின் தவறுகளை பிடித்துக் கொண்டு அதனை பறைசாற்றிக் கொண்டு

திரியாதீர்கள். உங்களிடம் எத்தனை பலவீனங்கள், குறைகள் இருக்கும் என்று உங்களுக்கே தெரியாது. அதற்கான கணக்கை மறுமையில் நீங்கள் தர வேண்டியிருக்கும். எனவே நீங்கள் இவ்வுலகில் உங்கள் சகோதரர்களின் குறைகளை மறைப்பீர்கள் எனில் அவர்களின் தவறுகளைப் பார்த்து அதனை குறித்து சர்ச்சை செய்து கொண்டிராமல், வருத்தத்துடன் அவர்களுக்கு அதனை புரிய வைக்க முயற்சிப்பீர்கள் எனில், அல்லாஹ் உங்களுடைய குறைகளையும் கூட திரையிட்டு மறைப்பான். அதுவே அடியார்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் ஆகும். அதனை நீங்கள் நிறைவேற்றினால் அல்லாஹ்வின் அருட்களுக்கு வாரிசு ஆவீர்கள்!

பிறகு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“ஸதகாவினால் பொருளில் குறைவு ஏற்படுவதில்லை. ஒரு மனிதர் மற்றவரின் தவறுகளை மன்னித்து விட்டால் அல்லாஹ்வுத்தஆலா அவருக்கு மேலும் கண்ணியம் தருகிறான். மேலும் எவருடைய குற்றத்தையாவது மன்னிப்பதனால் எந்த கண்ணியக் குறைவும் ஏற்படுவதில்லை.” (முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 235)

பிறகு ஒரு ரிவாயத்தில் வருகிறது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“கருணை காட்டுபவருக்கு ரஹ்மானாகிய இறைவன் கருணை காட்டுவான். நீங்கள் பூமியில் உள்ளவர்கள் மேல் கருணை காட்டினால் வானத்தில் உள்ளவன் உங்கள் மேல் கருணை காட்டுவான்.”

(அபூதாவூத் கிதாபுல் அதப் பாப் ஃபிர் ரஹ்மத்)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“இந்த விசயத்தையும் நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இறைவனுடைய இரண்டு கட்டளைகள் உள்ளன. ஒன்று, உங்கள் வணக்கங்களில் அவனது பண்பிலோ இயல்பிலோ, அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். மேலும் மனித இனத்துடன் கருணை காட்டுங்கள்.



நன்மை செய்தல் என்றால் அது உங்கள் சகோதரர்கள் உறவினர்களுடன் மட்டும்தான் செய்ய வேண்டும் என்பதல்ல. மாறாக, ஆதமின் மகன் யாராக இருப்பினும், இறைவனின் படைப்பினங்கள் எதுவாக இருப்பினும் அவர் இந்து அல்லது கிறிஸ்தவர் என்று கருதாதீர்கள். நான் உண்மையாகவே கூறுகிறேன். அல்லாஹ் உங்களை தூய்மைப்படுத்துவதை தனது கையில் எடுத்துள்ளான். நீங்கள் அதனை செய்வதை அவன் விரும்பவில்லை. எந்த அளவு மென்மையை கடைபிடிப்பீர்களோ எந்த அளவுக்கு பணிவுடனும் அடக்கத்துடனும் நடந்து கொள்வீர்களோ அந்த அளவுக்கு அல்லாஹ் உங்கள் மீது மகிழ்ச்சி அடைவான். உங்கள் எதிரிகளை நீங்கள் இறைவனிடம் ஒப்படைத்து விடுங்கள். மறுமை அண்மையில் உள்ளது. உங்களுக்கு கஷ்டம் தருகிற உங்கள் எதிரிகள் குறித்து பயப்பட வேண்டாம். இப்போது நீங்கள் அவர்கள் மூலமாக பெரும் கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருப்பதை நான் பார்க்கிறேன். ஏனெனில் எவர்கள் நாகரீகத்தின் வட்டத்தை விட்டே வெளியே சென்றுவிடுகின்றனரோ அவர்களின் நாவு அணை உடைந்த வெள்ளம் போல் செல்கிறது. எனவே ஒரு மார்க்கவாதி முதலில் தனது நாவை பராமரிக்க வேண்டும்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 164,165)

பிறகு அவர்கள் கூறுகிறார்கள்: “நினைவில் கொள்ளுங்கள். உரிமைகள் இரு வகைப்படும். ஒன்று அல்லாஹ்விற்குரியது. மற்றது அடியாருக்குரியது. அல்லாஹ்வின் உரிமையை நிறைவேற்றுவதிலும் செல்வந்தர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படுகிறது. தற்பெருமையும், சுயநலமும் அவர்களை அதை செய்வதிலிருந்தும் தடுக்கின்றது. உதாரணமாக, தொழுகையின் வேளையில் ஓர் ஏழையின் அருகில் நிற்பதை சிரமமாக உணர்கின்றனர். அவர்களை தமது அருகில் அமர்த்த முடிவதில்லை. இவ்வாறு அவர்கள் அல்லாஹ்வின் உரிமைகளில் இருந்தும் விலகி விடுகின்றனர். ஏனெனில் மஸ்ஜிதுகள் உண்மையில் வறியோர் இல்லமாக (பைத்துல் மஸாக்கீன்) இருக்கின்றன.

மேலும் அவர்கள் (செல்வந்தர்கள்) அங்கு செல்வது தமது பெருமைக்கு இழுக்கு என்று கருதுகின்றனர். இதனால் அடியார்களுக்கு தர வேண்டிய உரிமைகளிலும் சிறப்பான தொண்டுகளை செய்வதில் பங்கெடுக்க முடிவதில்லை. ஏழை மக்களோ ஒவ்வொரு வகை சேவைகளுக்காகவும்

தயாராக இருக்கின்றனர். அவர்களுக்கு கால்களை அமுக்கி கொடுக்க முடியும். தண்ணீர் கொண்டு வர முடியும். துணிகள் துவைக்க முடியும். எந்த அளவுக்கு எனில் அசுத்தத்தை (நஜீஸ்) வெளியே கொட்ட வேண்டிய சந்தர்ப்பம் வந்தாலும் அதற்கு கூட அவர்கள் தயங்குவதில்லை. ஆனால் செல்வந்தர் அந்த பணியை செய்வது தமக்கு கவுரவக்குறைவு என்று கருதுகின்றனர். எனவே அவர்கள் இவற்றிலிருந்தும் விலகி விடுகின்றனர். சுருக்கமாக, பெரும்பாலான நன்மைகளை செய்வதிலிருந்து செல்வமே அவர்களை தடுத்து விடுகிறது. இதே காரணத்தினால்தான் வறியோர் (செல்வந்தர்களைவிட) ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் சொர்க்கம் செல்வார்கள் என்று ஹதீதில் வருகிறது.”

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 368 புதிய பதிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“ஆகவே படைப்பினங்களுடன் பரிவு காட்டுதல் எத்தகைய வி-யம் எனில், மனிதன் அதனை விட்டு விட்டால் அதிலிருந்து அகன்று விட்டால் சிறிது சிறிதாக அவன் மிருகமாகி விடுகிறான். எதுவரை மனிதன் தனது மற்ற சகோதரனுடன், நல்லொழுக்கம், அனுசரணை, நன்னடத்தையுடன் நடக்கின்றானோ தனது சகோதரனுடன் எவ்வகை வேறுபாடும் காட்டுவதில்லையோ அதுவரைதான் அவன் மனிதனாக இருக்கின்றான். சஅதி அவர்கள் கூறியது போன்று ஒருவர் மற்றவரது உடல் உறுப்பாக இருக்கின்றார்.

நினைவில் கொள்ளுங்கள். கருணையுடன் நடத்தல் என்பதின் வட்டம் எனது பார்வையில் மிகவும் பரந்தது. எந்த சமூகத்தையும், தனி நபரையும், தனியாக பிரித்து விடாதீர்கள். நீங்கள் உங்கள் பரிவையெல்லாம் முஸ்லிம்களுடம் மட்டுமே குறிப்பாக காட்டுங்கள் என்ற இந்த காலத்து அறிவீனர்கள் போன்று நான் கூற விரும்பவில்லை. மாறாக இறைவனுடைய எல்லா படைப்பினங்களுடனும் பரிவு காட்டுங்கள் என்றே கூறுகிறேன். அவர் யாராக இருந்தாலும் சரி. இந்துவாக இருக்கட்டும். அல்லது முஸ்லிமாக இருக்கட்டும். எவர்கள் தமுது சமுதாயத்திடம் மட்டும் பரிவு காட்டுவதை குறிப்பாக ஆக்க விரும்புகிறார்களோ அத்தகையவர்களின் பேச்சுக்களை நான் ஒருபோதும் விரும்பவில்லை.”

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 216, 217 புதிய பதிப்பு)



**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

“சுருக்கமாக, மனித குலத்தின் மீது இரக்கம் மற்றும் கருணை காட்டுதல் பெரிய இபாதத் (வணக்கம்) ஆகும். இறைதிருப்தியை பெறக்கூடிய வலுவான வழிமுறை ஆகும். ஆனால், இந்த அம்சத்தில் பெரும் பலவீனங்கள் வெளிப்படுவதை நான் காண்கின்றேன். மற்றவர்கள் இழிவாக கருதப்படுகின்றனர். அவர்கள் ஏளனம் செய்யப்படுகின்றனர். அவர்களை கவனித்து பார்ப்பதும் ஏதாவது கஷ்டம் துன்பத்தில் வேளையில் அவர்களுக்கு உதவி செய்வதும் பெரிய வி-யமாகும். எவர்கள் ஏழைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லையோ மாறாக அவர்களை இழிந்தவர்களாக கருதுகிறார்களோ அவர்களைக் குறித்து அம்மக்கள் தாமே அந்த துன்பத்தினால் சோதிக்கப்பட்டு விடக்கூடாதே என்று நான் அஞ்சுகின்றேன். அல்லாஹ் எவர்மீது அருள் புரிந்துள்ளானோ அதற்கு நன்றி செலுத்துவது அவனது படைப்பினங்களுடன் நற்செயல் நன்னடத்தையுடன் நடந்து கொள்வதே ஆகும். மேலும் இறைவன் வழங்கிய அருளின் மீது ஆணவம் கொள்ளாதீர்கள். மேலும் காட்டுமிராண்டிகள் போல் ஏழைகளை நசுக்கி விடாதீர்கள்.” (மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 438,439 புதிய பதிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

“திருக்குர்ஆனில் எந்த அளவுக்கு பெற்றோர்கள், குழந்தைகள் மற்றும் உறவினர்கள் மற்றும் வறியோர்களின் உரிமைகள் குறித்து விளக்கப்பட்டுள்ளதோ, அவ்வுரிமைகள் வேறு எந்த வேதத்திலும் எழுதப்பட்டிருக்கும் என்று நான் கருதவில்லை. உதாரணமாக, அல்லாஹ் கூறுகிறான். நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுடன் எதனையும் இணையாக்காதீர்கள். பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். உறவினர்களுக்கும் நன்மை செய்யுங்கள்.”

இந்த சொற்றொடரில் குழந்தைகள், சகோதரர், தூரத்து உறவினர்கள், நெருங்கிய உறவினர்கள் அனைவரும் வந்து விட்டனர்.

“மேலும் கூறினான்: அனாதைகளுடன் ஏழைகளுடன் நன்மை செய்யுங்கள். மேலும் உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்கள், அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்கள், உங்கள் நண்பர்கள் அல்லது

ஏதாவது ஒரு பணியில் உங்கள் பங்குதாரர்களாக இருப்பவர்கள் அல்லது பயணக் கூட்டாளியாக இருப்பவர்கள். மேலும் உங்களுடன் தொழுபவர்கள் அல்லது உங்களுடன் மார்க்கக் கல்வி பயில்பவர்கள் அல்லது பயணிகள் அல்லது உங்கள் ஆதிக்கத்தின் கீழ் உள்ள உயிரினங்கள் இவர்கள் அனைவர்களுடனும் முழுக்க முழுக்க நன்மை செய்யுங்கள். மற்றவர் மீது கருணை காட்டாத கர்வங்கொண்டோரையும் பெருமையடிப்போரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை.”

(சஷ்மயே மஅரிஃபத் ரூஹானி கஸாயின் தொகுதி 23 , பக்கம் 208, 209)

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இது குறித்து கூறுகிறார்கள்:**

“அவர்கள் உணவு வழங்குவதன் நோக்கம் (இன்னா நகாஃபு மிர்ரப்பினா யவ்மன் அபூஸன் கம்தரீரா (76:11) நாங்கள் எங்கள் இறைவனிடம் அபூஸ் மற்றும் கம்ததீர் ஆகிவிடும் ஒரு நாள் குறித்து அஞ்சுகிறோம். அபூஸ் என்றால் கஷ்டம், குறைவுக்கு சொல்லப்படும் சொல்லாகும். கம்ததீர் என்றால் நீளமானது எனப்படும். அதாவது கியாமத் நாள் கஷ்டமானதாகவும் இருக்கும். நீளமானதாகவும் இருக்கும். பசித்தவருக்கு உதவி செய்வதனால் பஞ்சத்தின் கஷ்டத்திலிருந்தும் அது வெகு நாட்கள் வரை நீடிப்பதிலிருந்தும் இறைவன் ஈடேற்றம் தருகிறான். விளைவு (ஃபவகாஹுமுல்லாஹு சர்ர தாலிகல் யவ்மி வலக்காஹும் நள்ரதன் வஸுரூரா) (76:12) இறைவன் அந்நாளின் தீங்கிலிருந்து அவர்களை பாதுகாக்கின்றான். மேலும் அவர்களுக்கு மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் தருகின்றான்.

நான் மீண்டும் கூறுகிறேன்: இன்றைய காலங்களில் ஏழைகள், பசியுள்ளவர்களுக்கு உதவி செய்வதனால் வறட்சி மற்றும் நெருக்கடியான காலகட்டங்களில் இருந்து பாதுகாக்கப்படுவீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எவ்வாறு வெளிப்படையான கண்ணியத்திற்காக முயற்சிக்கின்றோமோ அவ்வாறே நிரந்தரமான கண்ணியமும் நிம்மதியும் பெறுவதற்கு முயற்சி செய்வதற்கும் கூட இறைவன் எனக்கும் உங்களுக்கும் வாய்ப்பளிப்பானாக. ஆமீன். (ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 4 பக்கம் 290, 291)



முடிந்தவரை படைப்பினங்களுக்கு சேவை செய்யும் பணியில் கணிசமான பங்கெடுப்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சிறப்புத் தன்மையாகும். அது தன்னிடம் இருப்பதைக் கொண்டு எந்த அளவுக்கு படைப்பின சேவை செய்ய முடியுமோ, மனித குலத்திற்கு சேவை செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்கின்றது. தனிப்பட்ட முறையிலும் ஜமாஅத் சகோதரர்கள் இதனை செய்கின்றார்கள். ஜமாஅத் ரீதியாகவும் செய்கின்றார்கள். பசியை அகற்றுவதற்காகவும், ஏழைகளுக்கு சிகிச்சை செய்வதற்காகவும், கல்விக்கான உதவித்தொகை வழங்குவதற்கும், ஏழைகளின் திருமணத்திற்கு உதவுவதிலும் ஜமாஅத் சகோதரர்களுக்கு எந்த அளவு சக்தி உள்ளதோ அந்த அளவு ஜமாஅத் அமைப்பின் கீழ் இணைந்து செயல்பட்டவாறு உதவி செய்கின்றார்கள். இவ்வாறு தங்கள் பைஅத் உடன்படிக்கையை அவர்கள் நிறைவேற்றுகின்றார்கள். அவ்வாறு அவர்கள் செய்யவும் வேண்டும். பெரும் அரசாங்கங்களும் சமுதாயங்களும் தங்களது தேவைக்கு அதிகப்படியாக இருக்கும் விளைச்சல்களை வீணாக்கி விடுகின்றன. ஆனால் அவற்றை துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மனித இனத்திற்கு செலவு செய்வதில்லை. அதற்கு ஒரே காரணம் அந்த மக்களுடன் அவர்களது அரசியல் நோக்கங்களுக்கும் பயன்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அப்படிப்பட்ட அரசாங்கங்கள் அல்லது சமுதாயங்கள் போன்று அல்லாஹ் நம்மை ஆக்காதிருப்பானாக. மக்களின் ஒவ்வொரு விசயத்தையும் அவர்கள் (அரசியல்வாதிகள்) ஏற்பதில்லை. அவர்களை வழிநடத்த தயாராக இருப்பதில்லை. மேலும் தண்டனை வழங்கும் முகமாக அவர்கள் தமது சமுதாயங்களை பட்டினியாகவும் நிர்வாணமாகவும் விட்டு விடுகின்றனர். அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு முன்பை விட அதிகமாக மனித நேய சேவை செய்யும் வாய்ப்பை வழங்குவானாக.

இங்கு இன்னொரு விசயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். ஜமாஅத்தின் வட்டத்தில் மனிதநேய சேவைகள் செய்ய வாய்ப்பு கிடைத்தவரை நடக்கின்றன. தூய மனம் கொண்டவர்களின் ஜமாஅத்திற்கு படைப்பினங்களுக்கு சேவை செய்யும் வாய்ப்பை அல்லாஹ் வழங்குகிறான். அவர்கள் பெரும் தொகையை இதற்காக வழங்குகின்றனர். அவற்றினால் மனிதநேய சேவைகள் செய்யப்படுகின்றன. இறை அருளால் அவர்கள்

ஆப்பிரிக்காவிலும், ரப்வாவிலும், காதியானிலும் கூட டாக்டர் மற்றும் ஆசிரியர்களாக தம்மை வக்ஃப் செய்து கொண்டு சேவை செய்கின்றனர். ஆனால் நான் ஒவ்வோர் அஹ்மதி டாக்டர், ஒவ்வோர் அஹ்மதி ஆசிரியர், ஒவ்வோர் அஹ்மதி வக்கீல் மற்றும் தமது தகுதிக்கேற்ப தொண்டு செய்கின்ற ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் ஏழைகள், தேவையுடையவர்களுக்கு மனிதநேய சேவை செய்ய முடியும் என்றால் அவர்களுக்கு நான் கூறுகிறேன். அவர்கள் அவசியம் ஏழைகள், தேவையுடையோருக்கு பணியாற்ற முயற்சி செய்யுங்கள். அவ்வாறு செய்தால் அல்லாஹ்வுத்தஆலா உங்களது பொருள்கள் மற்றும் நஃப்ஸ்களில் முன்பை விட அதிகம் பரக்கத்தை வழங்குவான். இன்சா அல்லாஹ். நாம் காலத்தின் இமாமுடன் ஒரு பைஅத் உடன்படிக்கையில் பிணைந்துள்ளோம் என்ற நிய்யத்தில் நீங்கள் அனைவரும் சேவை செய்கின்றீர்கள் எனில், அதனை நிறைவேற்றுவத நம்மீது கடமையாகும் என்று கருதினீர்கள் எனில் பிறகு பாருங்கள். இன்சா அல்லாஹ் அல்லாஹ்வின் அருள் மற்றும் பரக்கத்தின் மழை எந்த அளவுக்கு பொழியும் எனில், அதனை உங்களால் பாதுகாக்க கூட முடியாது.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மனித இனத்திடம் காட்டிய கருணை

மனித குலத்திற்கு பரிவை போதித்து குறிப்பாக தனது சகோதரருடன் பரிவு காட்டி அவருக்கு உதவி செய்வது குறித்து அறிவுரை வழங்கியவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

“எனது நிலை என்னவெனில் ஒருவருக்கு கஷ்டம் ஏற்பட்டுள்ளது. நான் தொழுகையில் ஈடுபட்டுள்ளேன். எனது காதில் கஷ்டப்படுபவரின் குரல் வந்தடைகிறது எனில் தொழுகையை முறித்து விட்டு கூட ஏதாவது பயன்பட முடியும் எனில் சாத்தியமான வரை அவருக்கு கருணை காட்டவே நான் விரும்புகிறேன். ஒரு சகோதரருக்கு கஷ்டம் ஏற்படும் போது, அவருக்கு உடனிருக்காமல் இருப்பது நல்லொழுக்கத்திற்கு மாற்றமானதாகும். அவருக்காக உங்களால் எதுவும் செய்ய முடியாவிட்டால், குறைந்த பட்சம்



துஆவாவது செய்யுங்கள். நம்மவர்களுக்காக மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் இந்துக்களுக்கும் கூட நல்லொழுக்கத்தின் முன்மாதிரியை காட்டுங்கள். அவர்கள் மீது கருணை காட்டுங்கள். அலட்சிய போக்கு ஒருபோதும் கூடாது. அவனது அடியார்கள் மீது கருணை காட்டுங்கள்.

ஒருமுறை நான் வெளியில் உலாவுதற்காக சென்றேன். என்னுடன் கிராம கணக்கர் அப்துல் கரீம் சாஹிப் என்னுடன் இருந்தார். வழியில் ஒரு மூதாட்டி என்னை சந்தித்தார். 65 அல்லது 70 வயதிற்குரிய பலவீனம் அவரிடம் காணப்பட்டது. அவர் ஒரு கடிதத்தை தந்து படிக்குமாறு கூறினார். ஆனால் அவரோ அந்த மூதாட்டியை ஒரு வார்த்தை கூறி ஒதுக்கிவிட்டார். என் உள்ளத்தில் வருத்தம் ஏற்பட்டது. அவள் அக்கடிதத்தை என்னிடம் தந்தாள். நான் அதனை வாங்கிக் கொண்டு அங்கேயே நின்று படித்துக் காட்டி நன்றாக அவளுக்குப் புரிய வைத்தேன். இதனால் அவருக்கு (கிராம கணக்கர்க்கு) மிகவும் வெட்கப்பட வேண்டியது வந்தது. ஏனெனில் நிற்க வேண்டியதும் ஆகி விட்டது. நன்மையும் கிடைக்கவில்லை.”

(மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 82,83 புதிய பதிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

“நாவினாலோ கையினாலோ அல்லது ஏதாவது ஒரு திட்டம் மூலமாகவோ அநீதி இழைக்காதீர்கள். படைப்பினங்களுக்கு நன்மை செய்ய முயற்சித்துக் கொண்டிருங்கள். எவரிடமும் கர்வம் காட்டாதீர்கள். அவர்கள் உங்கள் கீழ் உள்ளவர்களாக இருந்தாலும் சரி. எவரையும் ஏசாதீர்கள். அவர் உங்களை ஏசினாலும் சரியே. எளிமை, சகிப்புத்தன்மை, நல்லெண்ணத்துடன் படைப்பினங்களுக்கு பரிவு காட்டினால் நீங்களும் ஒப்புக் கொள்ளப்படுவீர்கள். பெரியவராக இருந்து சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை இழிவுபடுத்தாதீர்கள். ஆலிமாக இருந்து அறிவில் குறைந்தவருக்கு அறிவுரை கூறுங்கள். பெருமையுடன் அவர்களை சிறுமைப்படுத்தாதீர்கள். செல்வந்தராக இருந்து ஏழைகளுக்கு தொண்டு செய்யுங்கள். தன்னலத்துடன் அவர்கள் மீது தற்பெருமை காட்டாதீர்கள். அழிவின் வழிகளுக்குப் பயப்படுங்கள்.”

(கிஷ்தி நூஹ்-ரூஹானி கஸாயின் பாகம் 19 பக்கம் 11,12)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

“மக்கள் உங்களுக்கு துக்கம் தருவார்கள் எல்லா வகையிலும் கஷ்டங்களை தருவார்கள். ஆனால் நமது ஜமாஅத் கோபத்தை காட்ட வேண்டாம். நஃப்ஸிலுள்ள வேகத்தினால் உள்ளம் புண்படும் சொற்களை உபயோகிக்க வேண்டாம். அல்லாஹ் அத்தகைய மக்களை விரும்புவதில்லை. நமது ஜமாஅத்தை அல்லாஹ் ஒரு முன்மாதிரி ஆக்க விரும்புகிறான்.”

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

“அல்லாஹ் இறையச்சமுள்ளவர்களை நேசிக்கிறான். இறைவனின் மகிமையை நினைவுகூர்ந்து எல்லோரும் பயப்படுங்கள். எல்லோரும் அல்லாஹ்வின் அடியார்கள் என்பதனை நினைவில் கொள்ளுங்கள். எவர் மீதும் அநீதி இழைக்காதீர்கள். கோபப்படாதீர்கள். எவரையும் இழிவாகப் பார்க்காதீர்கள். ஜமாஅத்தில் ஒருவர் அசுத்தமானவராக இருந்தால் அவர் எல்லோரையும் அசுத்தமானவராக ஆக்கி விடுகிறார். உங்கள் இயல்பு கோபத்தின் பக்கம் சாய்ந்தால் இந்த கோபம் எந்த ஊற்றில் இருந்து வந்துள்ளது என்று உங்கள் உள்ளத்தை அலசிப் பாருங்கள். இந்த இடம் மிகவும் நுட்பமானதாகும்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 8,9)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“உங்கள் உண்மை, நன்றியுடைமை, துயரம், உருக்கம் ஆகியவை வானத்தைச் சென்றடைய வேண்டும். அத்தகைய மக்களாக ஆகுங்கள். இறைவன் எவருடைய மனத்தை உண்மை, அன்பு ஆகியவற்றால் நிறைந்துள்ளதாக பார்க்கின்றானோ அத்தகைய மனிதனைத்தான் இறைவன் பாதுகாக்கின்றான். அவருக்கே பரக்கத் செய்கிறான். அவன் உள்ளங்களையே கவனிக்கின்றான். வெளிப்படையான வார்த்தைகளைக் கவனிப்பதில்லை. எவரது உள்ளம் எல்லா வகையான அசுத்தம், தூய்மையின்மை ஆகியவற்றிலிருந்தும் களையப்பட்டதாக இருக்குமோ அந்த உள்ளத்தில் வந்து அவன் இறங்குகிறான். மேலும் அதனை தனது வீடாக ஆக்குகிறான்.” (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 181 - புதிய பதிப்பு)



**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“நான் மீண்டும் கூறுகிறேன். எவர்கள் மக்களுக்கு பயனுள்ளவர்களாக இருப்பார்களோ ஈமான், உண்மை, நன்றியுடைமையால் முழுமையாக இருக்கிறார்களோ அவர்கள் கண்டிப்பாக பாதுகாக்கப்படுவர். எனவே நீங்கள் உங்களுக்குள் அந்த தகுதியை உருவாக்குங்கள்.”

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 184 புதிய பதிப்பு)

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“உங்கள் உள்ளும் புறமும் ஒன்றாகாதவரை அவனுடைய முன்னில் நீங்கள் ஒப்புக் கொள்ளப்படமாட்டீர்கள். பெரியவர்களாக இருந்து சிறியோர் மீது கருணை காட்டுங்கள். அவர்களை இழிவுபடுத்தாதீர்கள். ஆலிமாக இருந்து அறிவில் குறைந்தவருக்கு அறிவுரை கூறுங்கள். தற்பெருமையுடன் அவர்களை சிறுமைப்படுத்தாதீர்கள். செல்வந்தர்களாக இருந்து ஏழைகளுக்கு சேவை செய்யுங்கள். தன்னலத்தால் அவர்களிடம் ஆணவத்துடன் நடக்காதீர்கள். அழிவின் வழிகளில் (செல்வதற்கு) அஞ்சுங்கள். இறைவனை பயந்து கொண்டே இருங்கள். தக்வாவை மேற்கொள்ளுங்கள். இறைவனின் வாயிலிருந்து வந்து நான் எடுத்து கூறியுள்ள இந்த வி-யங்களை நம்பாதவர் எவ்வளவு துர்பாக்கியசாலியாக இருக்கின்றார்? வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டும் என்று விரும்புவீர்கள் எனில் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே (தாய்) வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போன்று ஆகி விடுங்கள். எவர் தனது சகோதரரின் பாவங்களை அதிகம் மன்னிக்கின்றாரோ அவர்தான் உங்களில் அதிகம் நல்லவராவார். எவர் பிடிவாதமாக மன்னிப்பதில்லையோ அவர் பேரிழந்தவர் ஆவார்.” (கிஷ்தி நூஹ் ரூஹானி கஸாயின் பாகம் 19, பக்கம் 12-13).

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“உண்மையில் இறைவனின் படைப்பினங்களுடன் கருணையுடன் நடத்தல் மிகப் பெரிய விசயமாகும். இறைவன் அதனை மிகவும் விரும்புகிறான். அவன் (இறைவன்) தனது பரிவை அவருக்காக வெளிப்படுத்துகிறான். இதனை விட அவருக்கு பெரியது வேறு என்ன இருக்க

முடியும்? பொதுவாகவும் உலகில் அவ்வாறே நடக்கிறது. ஒரு மனிதரின் பணியாள், ஒருவருடைய நண்பரிடம் செல்கிறார். அந்த மனிதரோ அவரை கண்டு கொள்ளவேயில்லையென்றால், அம்மனிதர் தனது நண்பரைப் பற்றி மகிழ்ச்சி அடைவாரா என்ன? ஒருபோதும் அன்று. அவரோ அந்த வேலைக்காரருக்கு எந்த கஷ்டமும் தரவில்லையென்றாலும் அந்த வேலைக்காரருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் எஜமானருடன் நல்ல முறையில் நடந்து கொள்வதாகும். இவ்வாறுதான் இறைவன் தனது படைப்பினங்களுடன் அலட்சியமாக நடப்பவருடன் கோபம் கொள்கிறான். ஏனெனில் அவனுக்கு தனது படைப்பினங்களுடன் மிகுந்த அன்பு உள்ளது. ஆகவே எவர் அல்லாஹ்வுத்தஆலாவின் படைப்பினங்களுடன் கருணையுடன் நடக்கின்றாரோ அவர் தனது இறைவனை திருப்திப்படுத்துகிறார்.” (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 215-216 புதிய பதிப்பு)

அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளின்படி நடக்கும் வாய்ப்பினை வழங்குவானாக! அவர்களுடன் நாம் என்ன உடன்படிககை செய்தோமோ அதனை நிறைவேற்றும் வாய்ப்பினை வழங்குவானாக!

(2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ம் தேதி இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ உரையிலிருந்து)



# பைஅத்தின் பத்தாவது நிபந்தனை

**“அல்லாஹ்வுக்காக, நல்ல வி-யங்களில் நான் கட்டுப்படுவேன் என இந்த எளியவனிடம் (இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம்) நான் செய்து கொள்ளும் இந்த சகோதர உடன்படிக்கையில் மரணமடையும் வரை நிலைத்திருப்பேன் என்றும் மற்றெல்லா உலகத் தொடர்புகளை விடவும் இந்த சகோதர உடன்படிக்கை மிகவும் உயர்ந்தாக இருக்கும் என்றும் நான் உறுதி கூறுகின்றேன்.”**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும், காலத்தின் கலீஃபாவுடனும் சகோதர உறவை நிலைபெறச் செய்வது அவசியமானதாகும்

இந்த நிபந்தனையில் இந்த அமைப்பில் நீங்கள் இணைகின்ற போது என்னுடன் ஒரு சகோதர உறவை நீங்கள் நிலைபெறச் செய்ய வேண்டும் என தம்மிடம் உடன்படிக்கை செய்யுமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். ஏனென்றால், ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் சகோதரராவார். ஆனால், இங்கு நிலைநாட்டப்படும் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் உறவு இதை விட உயர்வானதாகும். ஏனெனில், இங்கு சம அளவிலான தொடர்பு மற்றும் உறவு நிலைநாட்டப்படவில்லை. மாறாக, வரப்போகின்ற மஸீஹை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது இறைவன் மற்றும் இதை தூதரின் கட்டளையாகும். எனவே, இறைவனுக்காக இந்த தொடர்பை நான் நிலைநாட்டுகின்றேன் என்று நாம் உறுதி எடுத்துக் கொள்கிறோம். அல்லாஹ்வின் மார்க்கத்தின் உயர்வுக்காகவும் இஸ்லாத்தை உலகின் எல்லா திசைகளிலும் பரப்புவதற்காகவும் இந்த உறவை நான் ஏற்படுத்தியுள்ளேன். எனவே, இந்த தொடர்பு நமது உறுதிமொழிக்கேற்ப வெற்றிக்குரியதாகவும், நிலைநிற்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென்றால், அதற்கு நல்ல வி-யங்களில்

கட்டுப்பட்டு நடக்கும் உறுதியை மேற்கொண்டு மரணம் வரை அதில் நிலைத்திருத்தல் அவசியமானதாகும். பிறகு இந்த தொடர்பு இங்கு ஓரிடத்தில் நின்றுவிடக் கூடாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மாறாக, இதில் ஒவ்வொரு நாளும் முன்பிருந்ததைவிட உறுதி அதிகரிக்க வேண்டும். இந்த உறுதி எந்த அளவு உயர்வானதாக இருக்க வேண்டுமென்றால் அதற்கெதிரில் எல்லா உலக உறவுகளும், தொடர்புகளும் நட்பும் ஒன்றுமில்லாமல் போய்விட்டது என்பது நிரூபிக்கப்பட வேண்டும். அதற்கெதிரில் எல்லா தொடர்புகளும் உறவுகளும் எவ்வித நோக்கமும் இல்லாததாக தென்படும் அளவுக்கு ஈடிணையற்ற உறுதியான தொடர்பாக அது திகழ வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இங்கு கூறுவது என்னவென்றால், உறவினர்களிடையே சில நேரங்களில் சிலவற்றை பெற்றுக் கொள்வதும் சில நேரங்களில் சிலவற்றை விட்டுக் கொடுப்பதும் சில நேரங்களில் சிலவற்றை ஏற்றுக் கொள்வதும் சில நேரங்களில் சிலவற்றை பிறரை ஏற்றுக் கொள்ளும்படி செய்வதும் போன்ற வழிமுறைகள் இருப்பது போன்றுதான் இந்த சகோதர உறவும் இருக்கின்றது என்ற எண்ணம் உள்ளத்தில் உருவாகலாம். எனவே, இங்கு நமக்கு தெளிவாக கூறப்பட்டிருப்பதாவது, உங்களது இந்த தொடர்பு அடிமை மற்றும் தொண்டன் என்ற நிலையில் இருப்பதாகும். இன்னும் சொல்லப்போனால் அதையும் தாண்டி அந்த உறவு இருக்க வேண்டும். நீங்கள் எவ்வித முறையீடுமின்றி கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இந்த பணி இப்போது நடக்காது அல்லது இந்த பணியை இப்போது செய்ய முடியாது என்று கூறுவதற்கு உங்களுக்கு உரிமையில்லை.

நீங்கள் பைஅத்தில் நுழைந்து விட்டால் பிறகு உங்களிடம் இருப்பதையெல்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கொடுத்து விட்டீர்கள். இப்போது நீங்கள் அவர்களது கட்டளையைப் பின்பற்றி நடக்க வேண்டும்; அவர்களது போதனையைப் பின்பற்றி நடக்க வேண்டும். மேலும் அவர்களது மறைவுக்குப் பிறகு கிலாஃபத் அமைப்பு நிலைபெற்றிருப்பதால் காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளை வழிகாட்டல்களைப் பின்பற்றி நடப்பது உங்களது பணியாகும். ஆனால்



தொண்டர் ஊழியர் ஆகியோர் வலுக்கட்டாயமாக பணி செய்வது போன்று நீங்கள் இதனை கருதிவிடக் கூடாது. தொண்டு செய்தே ஆக வேண்டும். ஊழியராக இருக்கக் கூடியவர் சில நேரங்களில் சிடுசிடுவென கோபத்தைக் காட்டலாம். எனவே, நாம் ஊழியரின் நிலையில் உள்ளோம் என்பதை எண்ணத்தில் பதிய வைக்கின்ற அதே வேளையில் அதை விட மேலாக அல்லாஹ்வுக்காக சகோதர உறவில் உள்ளோம். அல்லாஹ்வுக்காக கட்டுப்பட உறுதி எடுத்திருக்கின்றோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதன் காரணமாகவே தியாகம் செய்வதற்கான உடன்படிக்கையையும் நாம் செய்துள்ளோம். தியாகத்திற்கான நற்கூலியும் மனிதன் அதனை மகிழ்ச்சியுடன் செய்யும் வேளையில்தான் கிடைக்கின்றது. எனவே, இந்த நிபந்தனை தொடர்பாக நீங்கள் எந்த அளவு சிந்தித்துக் கொண்டேயிருப்பீர்களோ அந்த அளவு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அன்பில் மூழ்கிக் கொண்டே செல்வீர்கள். ஜமாஅத் அமைப்புக்கு கட்டுப்படுபவர்களாக உங்களை நீங்களே உணர்வீர்கள்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:**

“நபியே! நம்பிக்கை கொண்ட பெண்கள் அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்க மாட்டார்கள். திருடமாட்டார்கள். விபச்சாரம் செய்ய மாட்டார்கள். தாங்களாகவே வேண்டுமென்று புனைந்துரைக்கும் அவதூறான எந்த பொய்க்குற்றச்சாட்டையும் எவர் மீதும் சுமத்தமாட்டார்கள். நல்லவற்றில் உமக்கு மாறு செய்ய மாட்டார்கள் என்ற (விசயத்தில்) உம்மிடம் பைஅத் செய்வதற்காக உம்மிடம் வந்தால் நீர் அவர்களின் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு அவர்களை மன்னிக்குமாறு அல்லாஹ்வை வேண்டுவீராக. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (60:13)

இந்த வசனத்தில் பெண்களிடம் அவர்கள் அல்லாஹ்வுக்கு எதனையும் இணை வைக்கமாட்டார்கள். திருடமாட்டார்கள். விபச்சாரம் செய்யமாட்டார்கள். தங்கள் குழந்தைகளை கொல்லமாட்டார்கள். (சந்ததிகளின் தர்பிய்யத்தை கருத்தில் கொள்வார்கள்). எவர் மீதும் பொய்யான குற்றச்சாட்டை சுமத்தமாட்டார்கள். நல்ல விசயங்களுக்கு கீழ்படியாமல் இருக்கமாட்டார்கள் என்ற விசயத்தில் அவர்களிடம் பைஅத்

உடன்படிக்கை செய்து கொள்ளும்படி வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. அல்லாஹ்விடமிருந்து அனுப்பப்படும் நபியும் நல்லவை அல்லாத கட்டளைகளை நமக்கு கூற முடியுமோ என்ற கேள்வி இங்கு எழுகின்றது. நபி அவ்வாறு நல்லவை அல்லாத கட்டளைகளைக் கூற முடிகின்றபோது கலீஃபாவும் நல்லவை அல்லாத கட்டளைகளைக் கூற முடியும் அல்லவா? இப்படிப்பட்ட கேள்வி தொடர்பாக தெளிவாக புரிய வேண்டிய வி-யம் என்னவென்றால், நபி ஒருபோதும் அப்படிப்பட்ட கட்டளைகளை கூறமாட்டார் என்பது தெளிவான விசயமாகும். நபி எதைச் சொன்னாலும் நல்லதையே சொல்வார். அதை தவிர எதையும் கூற மாட்டார். எனவே தான் திருக்குர்ஆனில் பல இடங்களிலும் நீங்கள் அல்லாஹ்வும் தூதரும் இடும் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது.

பிறகு இரு வெவ்வேறான கட்டளைகள் ஏன் கூறப்பட்டுள்ளது? என்ற கேள்வி எழுகின்றது. ஆனால், உண்மையில் இந்த இரண்டும் வெவ்வேறான கட்டளைகள் அல்ல. சிலர் அதை புரிந்து கொள்வதில் தவறிழைத்துள்ளார்கள். எனவே, நான் ஏற்கனவே கூறியது போன்றே நபி எந்த கட்டளையிட்டாலும் அது நல்லதாகத்தான் இருக்கும். நபி ஒருபோதும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாற்றமாகவும், -ரீஅத்தின் கட்டளைகளுக்கு மாற்றமாகவும், எதையும் செய்ய முடியாது. அவர் இந்த பணிக்காக அனுப்பப்பட்டுள்ளார். எனவே எந்த பணிக்காக அவர் அனுப்பப்பட்டுள்ளாரோ அதற்கு மாற்றமாக அவர் எப்படி நடக்க முடியும்? இது உங்களுக்குரிய நற்செய்தியாகும். நீங்கள் நபியை ஏற்றுக் கொண்டு, இறைவனால் அனுப்பப்பட்டவரை ஏற்றுக்கொண்டு அவரது ஜமாஅத்தில் இணைந்ததால் பாதுகாப்பாக இருக்கின்றீர்கள். உங்களுக்கென்று இப்போது நல்லது அல்லாத எந்த கட்டளையும் இல்லை. எந்த கட்டளையாக இருந்தாலும் அது அல்லாஹ்வின் பார்வையில் அவனுக்கு விருப்பமானதாகத்தான் இருக்கின்றது.



## நல்லவை மற்றும் நல்லவை அல்லாதவை பற்றிய விளக்கம்

சில நேரங்களில் சிலர் நல்ல தீர்மானம் அல்லது நல்ல கட்டளைகளுக்குத்தான் கட்டுப்பட வேண்டுமென்ற குழப்பத்தில் சிக்கி அவர்களாகவே ஜமாஅத் அமைப்பை விட்டு விலகி விடுகின்றார்கள். மற்றவர்களையும் அவர்கள் பாழாக்கி விடுகின்றார்கள். சுற்றுச்சூழலில் சில வீண் வி-யங்களை உருவாக்கிவிடுகின்றார்கள். நல்ல தீர்மானம் எது? தீய தீர்மானம் எது? என்பதற்குரிய விளக்கத்தை அவர்கள் சுயமாக முடிவு செய்ய வேண்டாம் என்பதை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

**இதற்கு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு விளக்கம் கூறியுள்ளார்கள்:**

“நல்லதையும் அதற்கு கட்டுப்படுவதையும் புரிந்து கொள்வதில் இன்னொரு தவறிழைக்கப்பட்டிருக்கின்றது. அதாவது எந்த பணிகளை நாங்கள் நல்லது அல்ல என்று கருதுகின்றோமோ அவ்விசயத்தில் நாங்கள் கட்டுப்படமாட்டோம் என்று கூறுவதுதான் அந்த தவறாகும். இந்த சொல் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களுக்காகவும் வந்துள்ளது. **வலா யஃஸீனக ஃபீ மஃரூப்** - நல்லவற்றில் உமக்கு மாறு செய்யமாட்டார்கள் என வந்துள்ளது. இப்போது இப்படிப்பட்ட மக்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களது குறைகளடங்கிய பட்டியலைக்கூட தயார் செய்துள்ளார்களா? இவ்வாறு ஹஸ்ரத் சாஹிப் அவர்களும் (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும்) பைஅத் நிபந்தனையில் இதாதத் (கட்டுப்படுதல்), மஃரூப் (நல்லவை) என்ற சொற்களை எழுதியுள்ளார்கள். இதில் ஒரு இரகசியம் அடங்கியுள்ளது. நான் உங்களில் எவர் மீதும் ஒருபோதும் தப்பெண்ணம் கொள்ளவில்லை. உங்களில் எவருக்கு அவரது அந்தரங்கத்தில் எவ்வித ஏமாற்றமும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இவ்வி-யங்களை நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.”

(குத்பாத்தே நூர் பக்கம் 420, 421)

**யஃமுருஹும் பில் மஃரூப்** - அவர்கள் நல்லவற்றை ஏவுவார்கள் என்ற வசனத்திற்கு விளக்கம் கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“அறிவுக்கு மாற்றமில்லாத வி–யங்களையே இந்த நபி கட்டளையிடுகின்றார். எந்த விசயங்களை அறிவு தடைசெய்கிறதோ அந்த விசயங்களிலிருந்து இந்த நபி தடை செய்கின்றார். அவர் தூய்மையான பொருள்களை ஆகுமானதாக்குகின்றார். எந்த சுமையின் கீழ் சமுதாயங்கள் அமுங்கி கிடக்கின்றதோ அவற்றின் தலையிலிருந்து அதை இறக்குகின்றார். எதன் காரணமாக அவர்கள் தங்கள் கழுத்துகளை நேராக வைக்க முடியவில்லையோ அப்படிப்பட்ட அந்த கழுத்துகளிலுள்ள விலங்குகளில் இருந்து அவர்களுக்கு விடுதலை அளிக்கின்றார். எவர்கள் அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு அவரோடு இணைந்து கொள்வதன் மூலமாக அவருக்கு ஆற்றலை வழங்கி உதவி செய்வாரோ, அவருடன் இறங்கியுள்ள அந்த ஒளியை பின்பற்றுவாரோ அவர் இவ்வுலகிலும் மறுமையிலும் துன்பங்களிலிருந்து இரட்சிப்பை பெறுவார்.”

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5 ரூஹானி கஸாயின் தொகுதி 21 பக்கம் 420)

நபி இறைவனின் கட்டளைகளை விட்டும் விலகாமல் இருக்கும் போது நபிக்கு பிறகு அவரது நோக்கத்தை தொடர்ந்து செயல்படுத்துவதற்காக அல்லாஹ்விடமிருந்து நம்பிக்கையாளர்களின் ஒரு ஜமாஅத்தின் மூலமாக நியமிக்கப்படுகின்ற கலீஃபாவும் கூட அல்லாஹ் நபியின் மூலமாக நமக்கு தந்துள்ள அதே போதனைகளையும், கட்டளைகளையும் தான் தொடர்ந்து செயல்படும்படி செய்கின்றார். மேலும் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப இவ்விசயங்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தெளிவாக நமக்கு கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக ஜமாஅத்தில்தான் இந்த கிலாஃபத் அமைப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பிற்கிணங்க நிறுவப்பட்டு விட்டது. மேலும் கியாமத் நாள் வரை இது நிலைத்து நிற்கும் இன்–ா அல்லாஹ். இந்த கிலாஃபத்தின் அமைப்பில்தான் மார்க்க சட்டத்திற்கும் அறிவுக்கும் ஏற்ப இதுவரை தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றது. இனியும் அவ்வாறே தீர்மானங்கள் எடுக்கப்படும் இன்சா அல்லாஹ்.

மேலும் இவையே நல்ல தீர்மானங்களாகும். ஏதாவது ஒரு சமயத்தில் காலத்தின் கலீஃபா ஏதாவது தவறின் காரணமாக அல்லது தவறாக புரிந்து



கொண்டதன் காரணமாக இழப்பு ஏற்பட வாய்ப்புள்ள ஒரு தீர்மானத்தை எடுத்தால் அதனால் எவ்வித தீய விளைவுகளும் ஏற்படாத வகையில் அல்லாஹ் தானாகவே அதற்கான ஏற்பாட்டை செய்வான்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

“சொந்த விவகாரத்தில் காலத்தின் கலீஃபாவிடமிருந்து ஏதாவது ஒரு தவறு ஏற்படலாம். ஆனால், ஜமாஅத்தின் பௌதீக மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கும் விவகாரங்களில் அவரிடமிருந்து ஏதாவது தவறு ஏற்பட்டாலும் கூட அல்லாஹ் தனது ஜமாஅத்தை பாதுகாப்பான். ஏதாவது ஒரு வகையில் அவருக்கு அவரது தவற்றைப் பற்றி தெரிவித்து விடுவான். சூஃபியாக்கள் இதனை இஸ்மத்தே ஸுக்ரா – சிறிய களங்கமற்ற நிலை என்று கூறியுள்ளனர். நபிமார்களும் முற்றிலும் களங்கமற்றவர்களாக இருக்கும் நிலையை பெற்றுள்ளார்கள். ஆனால் கலீஃபாக்களுக்கு **இஸ்மத்தே ஸுக்ரா** – சிறிய களங்கமற்ற நிலை கிடைக்கின்றது. ஜமாஅத்தின் அழிவிற்கு காரணமாக இருக்கும் அப்படிப்பட்ட எந்த முக்கிய தவறையும் அல்லாஹ் அவர்களை செய்யவிடமாட்டான். அவர்களது தீர்ப்புகளில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட விசயத்தில் சாதாரண தவறுகள் ஏற்படலாம். ஆனால் இறுதி விளைவாக இஸ்லாத்திற்கே வெற்றி கிடைக்கும். மேலும் அவரது எதிரிகள் தோல்வியைத் தழுவுவார்கள். அவர்களுக்கு இஸ்மத்தே ஸுக்ரா – சிறிய களங்கமற்ற நிலை கிடைத்தால் இறைவனது வழிமுறையும் அவர்களது வழிமுறையாகத்தான் இருக்கும். சந்தேகமின்றி பேசுபவர்கள் அவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களது நாவுகள்தான் அசையும். அவர்களது கைகள் வேலை செய்யும். அவர்களது மூளைதான் செயல்படும். ஆனால், இவை எல்லாவற்றிற்கும் பின்னால் இறைவனது கை இருக்கும். எனவே, சில குறிப்பிட்ட வி–யங்களில் அவர்களிடமிருந்து சாதாரண தவறுகள் ஏற்படலாம். சில நேரங்களில் அக்கலீபாக்களின் ஆலோசகர் கூட அவருக்கு தவறான ஆலோசனையை வழங்கலாம். ஆனால்,இந்த இடைப்பட்ட தடைகளை கடந்து வெற்றி அவர்களுக்குத்தான் கிடைக்கும். எல்லா தொடர்களும் ஒன்று சேரும் போது அது சரியான வலுவான சங்கிலியாகிவிடும். எந்த சக்தியாலும் அதை உடைக்க முடியாது.” (தப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 376, 377)

அல்லாஹ்வின் கட்டளைகளுக்கும் சரீஅத்தின் கட்டளைகளுக்கும் முற்றிலும் எதிரான நடவடிக்கையே தீய தீர்மானமாக இருக்கும். இதனை ஒரு நபிமொழி தெளிவுபடுத்துகின்றது.

**ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். அந்த படைக்கு தளபதியாக ஒரு நபரை நியமனம் செய்தார்கள். மக்கள் அவர் கூறுவதை கேட்டு அவருக்கு கட்டுப்படுவதற்காக அவரை தளபதியாக நியமித்தார்கள். அந்த நபர் நெருப்பு மூட்டினார். தனது தோழர்களிடம் அந்த நெருப்பில் குதிக்கும்படி கட்டளையிட்டார். சிலர் அவர் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் நெருப்பிலிருந்து எங்களை பாதுகாத்துக் கொள்ளவே முஸ்லிம்களாயிருக்கின்றோம் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால், வேறு சிலர் நெருப்பில் குதிப்பதற்கு தயாராகி விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இது பற்றி தெரிய வந்த போது இவர்கள் நெருப்பில் குதித்திருந்தால் எப்போதும் நெருப்பிலேயே இருந்திருப்பார்கள். அல்லாஹ்வுக்கு கட்டுப்படாத நிலையில் எந்த கட்டுப்படுதலும் கடமையல்ல. நல்ல விசயங்களில் கட்டுப்படுதலே அவசியமானதாகும் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.”

(சுனன் அபீ தாவூத் - கிதாபுல் ஜிஹாது)

இந்த நபிமொழியை மேலும் விளக்கும் விதத்தில் ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரி (ரலி) அவர்களின் இன்னொரு அறிவிப்பு இருக்கின்றது.

**ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

“ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்கமா பின் முஜஸ்ஸில் அவர்களை ஒரு போரில் கலந்து கொள்ள அனுப்பி வைத்தார்கள். போர் நடைபெறும் இடத்தை அவர் சென்றடைந்த போது அல்லது போருக்கு செல்லும் வழியிலேயே அவர்களது படையிலிருந்த ஒரு பிரிவினர் அவர்களிடம் ஏதோ ஒரு விசயத்திற்காக அனுமதி கேட்டார்கள். அவர்கள் அதற்கான அனுமதியை வழங்கிவிட்டு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுஸாஃபா பின் கய்ஸ் அவர்களை அவர்களுக்கு அமீராக நியமனம் செய்தார்கள். நானும் அவருடன் போருக்கு செல்பவர்களில் இருந்தேன்.



போருக்குச் செல்லும் வழியிலேயே இந்த மக்கள் குளிர்காய்வதற்காகவோ அல்லது உணவு சமைப்பதற்காகவோ நெருப்பு மூட்டினார்கள். அப்போது (நகைச்சுவை இயல்பைக் கொண்டிருந்த) ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம் எனது பேச்சைக் கேட்டு அதற்கு கட்டுப்படுவது உங்கள் மீது கடமை இல்லையா? என்று கேட்டார். அதற்கு அம்மக்கள் ஆம், கடமைதான் என்று பதில் கூறினார்கள். இதனைக் கேட்ட ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுஸாஃபா (ரலி) அவர்கள் நான் உங்களுக்கு என்ன கட்டளையிட்டாலும் அதனை நீங்கள் நிறைவேற்றுவீர்களா? என்று கேட்டார். அதற்கும் அவர்கள் ஆம், நாங்கள் நிறைவேற்றுவோம் என்று பதில் கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுஸாஃபா (ரலி) அவர்கள் நீங்கள் இந்த நெருப்பில் குதிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கட்டளையிடுகின்றேன் என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் சில மக்கள் எழுந்து நெருப்பில் குதிப்பதற்கு தங்களை தயார்செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் உண்மையிலேயே நெருப்பில் குதிக்கப்போகிறார்கள் என்பதைக் கண்ட ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுஸாஃபா (ரலி) அவர்கள் உங்களை (நீங்கள் நெருப்பில் போடுவதிலிருந்தும்) தடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

பிறகு நாங்கள் இந்த போரிலிருந்து திரும்பி வந்த போது சஹாபாக்கள இந்த சம்பவம் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். இதனைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமீர்களில் எந்த நபராவது உங்களுக்கு அல்லாஹ்விற்கு கீழ்ப்படியாமல் இருக்க கட்டளையிட்டால் அதற்கு கீழ்ப்படிய வேண்டாம் என்று கூறினார்கள். (சுனன் இப்னு மாஜா - கிதாபுல் ஜிஹாது)

இந்த நபிமொழியிலிருந்து தெளிவாகும் விசயம் என்னவென்றால், கட்டளையை ஏற்காமல் இருந்தது ஒரு தனி நபர் மாத்திரம் அல்ல. மாறாக, சிலர் எல்லா நிலையிலும் அமீருக்கு கட்டுப்பட்டு நடக்கவே கட்டளையுள்ளது என்று நினைத்து நெருப்பில் குதிக்க தயாராக இருந்தனர். ஒவ்வொரு நிலையிலும், எந்த சூழ்நிலையிலும் அமீருக்கு கட்டுப்பட்டு அதனை ஏற்றுக் கொண்டு நடப்பதே இஸ்லாமிய போதனையாகும் என்பதை அவர் கேள்விப்பட்டு புரிந்த வி-யமாகும். ஆனால், நபித்தோழர்களில் சிலர் இறை

கட்டளைகள் தொடர்பாக நன்றாக புரிந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நட்பிலிருந்து அதிகம் பலன் பெற்றிருந்தார்கள். அவர்கள் (நெருப்பில் குதிக்கும்) அந்த கட்டளையை மறுத்து நடந்தார்கள். அதன் விளைவாக ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து எவரும் அக்கட்டளையை செயல்படுத்தவில்லை. ஏனென்றால் அவ்வாறு செய்வது தற்கொலையாகும். தற்கொலை இஸ்லாத்தில் மிகத் தெளிவாக தடுக்கப்பட்டதாகும். இரண்டாவதாக இவர்களது தலைவராக இருந்த ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுஸாஃபா (ரலி) அவர்கள் சில மக்கள் அமைதியாக கட்டளையை நிறைவேற்ற தயாரான போது அதைக் கண்டு அவர்களுக்கு கவலை ஏற்பட்டது. இது நகைச்சுவைக்காக கூறிய விசயம் என்று கூறி அன்னார் அவர்களை தடுத்தார்கள்.

இந்த சம்பவத்திற்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நன்மையான விசயங்கள் தொடர்பான வழிமுறைகளை வகுத்துக் கூறி எது நன்மையான செயல்? எது நன்மையற்ற செயல்? என்பதை விளக்கி விட்டார்கள். நபி அல்லது காலத்தின் கலீஃபா நகைச்சுவைக்காக கூட இப்படிப்பட்ட விசயங்களை கூறுவதில்லை. எனவே, அமீரிடமிருந்து ஏதாவது ஒரு தெளிவான கட்டளைக்கு எதிராக அவர் செயல்படும் நிலையைக் கண்டால் பிறகு நீங்கள் அல்லாஹ்வின் பக்கமும் அவனது தூதரின் பக்கமும் திரும்புங்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். இப்போது இந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு நேர்வழிபெற்ற கிலாஃபத் அமைப்பு நிலைநாட்டப்பட்டு விட்டது. எனவே, காலத்தின் கலீஃபா வரை நீங்கள் செல்லலாம். அவரது தீர்ப்பு எப்போதும் நல்ல தீர்ப்பாகத்தான் இருக்கும். அது அல்லாஹ் மற்றும் தூதரின் கட்டளைகளுக்கு ஏற்பவே இருக்கும். எனவே, ஏற்கனவே நான் கூறியது போன்று எப்போதும் நீங்கள் நல்ல தீர்ப்பின்கீழ்தான் இருப்பீர்கள் என்ற நற்செய்தி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்காலத்தில் கூட சிலர், ஒரு பணியாளர் நல்ல விதமாக பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரை அப்பணியிலிருந்து அகற்றி விட்டு வேறு நபரிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது எனில் காலத்தின் கலீஃபா அல்லது ஜமாஅத்தின் அமைப்பு தவறான தீர்ப்பை வழங்கி விட்டது. இது நல்ல தீர்ப்பல்ல என்று ஆட்சேபனை செய்கின்றனர். இவர்கள் வேறு எதுவும் செய்ய



முடியாத நிலையில் இது நல்ல தீர்ப்பாக இல்லாததால் எங்களுக்கும் பேச உரிமையுள்ளது என அவர்களே அதற்கு விளக்கம் கூறி அவர்களது அறிவுக்கேற்ப செயல்படுகின்றனர். எனவே, இது குறித்து ஒவ்வொரு இடமாக சென்று பேசுவதற்கும் எங்களுக்கு உரிமை உள்ளது என அவர்கள் நினைக்கின்றனர். முதலாவதாக எந்த ஒரு நபருக்கும் ஜமாஅத் அமைப்புக்கு எதிராக ஒவ்வொரு இடத்திலும் அமர்ந்து பேசுவதற்கு எவ்வித உரிமையும் இல்லை. இது தொடர்பாக இதற்கு முன்பும் நான் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளேன். உங்களது பணி கட்டுப்படுதல் மட்டுமேயாகும். கட்டுப்படுதலின் அளவுகோல் எது?

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:**

“நீர் அவர்களுக்கு கட்டளையிட்டால், உடனே அவர்கள் (வீடுகளிலிருந்து) புறப்பட்டு விடுவதாக அல்லாஹ்வின் மீது உறுதிவாய்ந்த சத்தியங்கள் செய்கின்றனர். நீர் கூறுவீராக: சத்தியங்கள் செய்யாதீர்கள். பொதுவாக கட்டுப்பட்டு நடப்பதே போதுமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு தெரிந்து கொள்பவனாவான்.” (24:54)

இந்த வசனத்திற்கு முன்னுள்ள வசனங்களிலும் கட்டுப்படுதல் பற்றிய கருத்துதான் கூறப்பட்டுள்ளது. நம்பிக்கையாளர்கள் எப்போதும் நாங்கள் கேட்டோம்; ஏற்றுக் கொண்டோம் என்றே கூறுவார்கள். இந்த தக்வாவின் காரணமாக அவர்கள் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்களாக ஆகிவிடுகின்றார்கள். மேலும் அவர்களே தங்கள் நோக்கத்தில் வெற்றி பெறுபவர்களாவார்கள். நம்பிக்கையாளர்களைப் போன்று கேளுங்கள். அதற்கு கட்டுப்படுகின்ற உயர்வான முன்மாதிரியைக் காட்டுங்கள். நாங்கள் இதைச் செய்வோம்; அதைச் செய்வோம் என்று சத்தியம் செய்யாதீர்கள் என்றே இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இந்த வசனத்திற்கு விளக்கம் கூறும்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது தப்ஸீரில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

நயவஞ்சகர்களும் பெரும் வாதங்களைச் செய்கின்றார்கள். செயலளவில் கட்டுப்படுவதுதான் அசல் விசயமாகும். இங்கு அல்லாஹ் அப்படிப்பட்ட மக்களிடம் கட்டுப்படுவதற்கான பொதுவான வழிமுறையை பேணும்படி கூறுகின்றான். பொதுவாக கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று

கூறுகின்றான். நபி உங்களுக்கு சரீஅத்திற்கு எதிராகவோ அறிவுக்கு எதிராகவோ எந்த கட்டளையும் இடமாட்டார். உதாரணமாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னை ஏற்றுக் கொண்டால் ஐவேளை தொழுகைகளை தொழ பழகுங்கள். பொய்யை விட்டு விடுங்கள். தற்பெருமையை விட்டு விடுங்கள். மக்களது உரிமைகளைப் பறிப்பதை விட்டு விடுங்கள். உங்களுக்கிடையில் அன்புடனும் நேசத்துடனும் இருங்கள் என்று தான் கூறியுள்ளார்கள். இவை அனைத்துமே நன்மையான வி-யங்களில் கட்டுப்படும் கட்டளையின்கீழ் தான் வருகின்றன. இவ்வாறே கலீஃபாக்கள் தரப்பிலிருந்தும் பல்வேறு சமயங்களில் ஆன்மீக முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றது. உதாரணமாக, பள்ளிவாசல்களை நிரப்புவது பற்றிய கட்டளை, சந்ததிகளின் தர்பிய்யத் தொடர்பான வழிகாட்டல், நம்மிடம் தைரியத்தை இன்னும் விரிவடையச் செய்வது தொடர்பான வி-யங்கள், அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பது பற்றிய விசயங்கள் அல்லது பல்வேறு பொருள் தியாகங்கள் தொடர்பாக அறிவிப்புகள் போன்ற இப்படிப்பட்ட விசயங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பது அவசியமானதாகும். அல்லது வேறு சொற்களில் கூறுவதாக இருந்தால் இவையெல்லாம் நல்ல விசயங்களுக்கு கட்டுப்படும் பட்டியலில் வந்து விடும். எனவே, நபி அல்லது எந்த கலீஃபாவும் உங்களிடமிருந்து இறை கட்டளைகளுக்கு மாற்றமாகவும் அறிவுக்கு எதிராகவும் உள்ள எந்த பணியையும் செய்யும்படி கூறுவதில்லை. நீங்கள் நெருப்பில் குதியுங்கள் என்றோ கடலில் குதியுங்கள் என்றோ அவர்கள் கூறப்போவதில்லை. அவர்கள் உங்களை எப்போதும் சரீஅத்திற்கு ஏற்பவே வழிநடத்துவார்கள்.

## கட்டுப்படுதலின் உயர்வான நல்லுதாரணம்

கட்டுப்படுவதின் உயர்வான நல்லுதாரணம் ஆரம்பகால முஸ்லிம்களிடமிருந்து நமக்கு இவ்வாறு கிடைத்துள்ளது. ஒரு போரின் போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் படைக்கு தளபதியாக இருந்த காலித் பின் வலீத் (ரலி) அவர்களை அகற்றி விட்டு அப்பொறுப்பை ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கும்படி கட்டளை பிறப்பித்தார்கள். ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் மிகச் சிறப்பாக தனது பொறுப்பை நிர்வகித்து வருகிறார் என்ற எண்ணத்தில்



அவரிடமிருந்து பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தரப்பிலிருந்தும் இப்படிப்பட்ட கட்டளை வந்துள்ளது என்பதை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அறிந்த போது அவர்கள் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்களிடம் சென்றார்கள். இது காலத்தின் கலீஃபாவின் கட்டளையாக இருப்பதால் உடனடியாக அதனை நிறைவேற்றுங்கள் எனறு அவரிடம் கூறினார்கள். எனக்கு உங்களின் கீழ் பணிபுரிவதில் எந்த தயக்கமும் இல்லை. நான் தளபதியாக இருந்தபோது பணியாற்றியதைப் போன்றே உங்களின் கீழ் இருக்கும் போதும் பணியாற்றுவேன் என்றும் கூறினார்கள். இதுதான் கட்டுப்படுதலின் அளவுகோலாகும். அந்த சமயத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எடுத்த தீர்மானம் நல்ல தீர்மானம் அல்ல என எந்த முட்டாளாவது கூறுவானா? இதுவும் கூட தவறான எண்ணமாகும். அங்குள்ள நிலைமைகள் பற்றியும் எதனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்படிப்பட்ட முடிவு எடுத்தார்கள் என்பது பற்றியும் நமக்கு தெரியாது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் தான் இதுபற்றி நன்றாக தெரிந்திருக்கும். இந்த தீர்ப்பில் வெளிப்படையாகப் பார்க்கும் போது சரீஅத்திற்கு மாற்றமான எந்த விசயமும் இல்லை. பாருங்கள் அல்லாஹ் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த தீர்ப்பிற்கு கண்ணியமளித்தான். அந்தப் போரில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. அந்தப் போரில் சில சந்தர்ப்பங்களில் எதிரிகளின் படை நூற்றுக்கணக்கில் இருந்தும் கூட முஸ்லிம்களுக்கே வெற்றி கிடைத்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் தனது எஜமானரின் அடிமையாக இருந்ததன் காரணமாக, ஈடிணையில்லாத அடிமையாக இருந்ததன் காரணமாக அவர்கள் எல்லா பிரச்சனைகளுக்கும் நீதியுடன் தீர்ப்பு வழங்கும் ஹகமன் அதலன் என்ற உயர்வான தகுதியைப் பெற்றார்கள். இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது அன்பு கொண்டு அவர்கள் கூறுவதற்கு கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவே ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது நாங்கள் அன்பு வைத்து அவர்களுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றோம் என்ற வாதம் உண்மையானதாக இருக்க முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் மூலமாகவே அல்லாஹ்விடத்தில் நாம் அன்பு வைத்திருக்கிறோம் என்ற வாதம் உண்மையானதாக இருக்க முடியும்.

**இது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்:**

“நீர் கூறுவீராக! (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் அருள் செய்பவனுமாவான்.” (3:32)

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெற்ற அனைத்துமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதால்தான் கிடைத்தது

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“நான் எனக்கு எவ்வித திறமையுமில்லாத நிலையில் எனக்கு முன்னர் தோன்றிய நபிமார்கள், ரஸுல்மார்கள், இறைவனின் தூய நல்லடியார்கள் ஆகியோருக்கு கிடைத்த அருட்கொடைகளிலிருந்தும் இறைவனுடைய அருளால் மட்டும் முழுமையான பங்கை நானும் பெற்றுள்ளேன். நம் தலைவரும், நண்பரும், தூதர்களுக்கு பெருமை தருபவரும், படைப்பினங்களுள் சிறந்தவருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் வழியினை நான் பின்பற்றாமல் இருந்திருப்பின் இந்த அருட்கொடை எனக்கு கிடைத்திருக்காது. அவரை பின்பற்றியதாலேயே நாம் எல்லாம் பெற்றோம். அத்தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் எவரும் இறைவனை அடைய முடியாது என்பதையும் அப்படிப்பட்டவருக்கு முழுமையான இறைஞானம் கிடைக்காது என்பதையும் நான் என் உண்மையான அறிவினாலும், முழுமையான அறிவினாலும் உணர்கிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையான முழுமையான முறையில் பின்பற்றிய பின்னர் உள்ளத்தில் முதன்முதலாக உருவாவது கல்பே ஸலீமாகும். அதாவது உள்ளத்திலிருந்து உலகப்பற்று வெளியேறி, இதயம் நிலையான, என்றும் அழியாத ஓர் இன்பத்தை தேட ஆரம்பிக்கிறது. இதன் பின்னர் அந்த கல்பே ஸலீம் காரணமாக தூயதும் முழுமையானதுமான இறைநேசம் கிடைக்கிறது. அந்த அருள் அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப்



பின்பற்றுவதனால் பரம்பரைச் சொத்தாக கிடைக்கிறது. இது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்: நீர் கூறுவீராக. (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான் (3:32). ஒரு புறத்திலிருந்து மட்டும் அன்பு வெளிப்படுகிறது என்ற வாதம் பொய்யானதும் வீணானதுமாகும். ஒரு மனிதன் உண்மையிலேயே அல்லாஹ்வை நேசிக்கின்றபோது அல்லாஹ்வும் அவரை நேசிக்கின்றான். அப்போது பூமியில் அவருக்காக மக்கள் அவரை ஏற்றுக் கொள்ளும் தன்மை பரப்பப்படுகிறது. மேலும் ஆயிரக்கணக்கான மக்களின் உள்ளத்தில் அவருக்காக உண்மையான அன்பு கொள்ளும் நிலை போடப்படுகிறது. மேலும் அவருக்கு ஓர் ஈர்ப்பு சக்தியும் ஒளியும் வழங்கப்படுகிறது. அது எப்போதும் அவருடன் இருக்கும். ஒரு மனிதன் உண்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வை நேசிக்கும் போது, முழு உலகத்தை விடவும் அவனுக்கு முக்கியத்துவம் வழங்கும் போது, அல்லாஹ் அல்லாதவற்றின் மகிமையும், அழகும் அவரது உள்ளத்தில் எஞ்சி நிற்காமல் அவை அனைத்தையும் அவர் செத்துப்போன கிருமிகளைவிட அற்பமாக கருதுகின்ற போது அவரது உள்ளத்தை காண்கின்ற இறைவன் ஒரு மகத்தான தோற்றத்துடன் அதில் இறங்குகின்றான். ஒரு தூய கண்ணாடி சூரியனுக்கு எதிரில் வைக்கப்படும் போது அதில் விண்ணிலுள்ள அதே சூரியன் கண்ணாடியில் இருப்பதாக நாம் உருவக வடிவில் கூறும் அளவுக்கு அந்த கண்ணாடியில் அந்த சூரிய ஒளியின் பிரதிபிம்பம் படிந்து விடுகிறது. அவ்வாறே இறைவன் அப்படிப்பட்ட உள்ளங்களில் இறங்கி அதனை தனது அரியணையாக ஆக்கிக் கொள்கின்றான். இப்படிப்பட்ட நிலையைப் பெறுவதற்காகவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான்.”

(ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி என் 22 பக்கம் 64,65)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதிருந்த அன்பு, நேசம் ஆகியவற்றின் காரணமாக அல்லாஹ் அவர்களது தூய உள்ளத்தை தனது அர்ஷ் (அரியணை) ஆக ஆக்கிக் கொண்டான். ஒவ்வொருவருடைய தகுதிக்கேற்ப

இனி வரும் காலங்களிலும் அவன் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் இறங்கிக் கொண்டிருப்பான். ஆனால் இப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எங்களுக்கு அன்பு இருக்கிறது. அவர்களுக்கு முழுமையாக நாங்கள் கட்டுப்பட்டு நடக்கின்றோம் என்ற உங்களது வாதம் அவர்களது ஆன்மீக புதல்வருடன் அன்பு மற்றும் கட்டுப்படுதலுடன் கூடிய உறவை நிலைநாட்டுவதன் மூலமாகத்தான் உண்மையான வாதம் என்று நிரூபிக்கப்படும். எனவேதான் அவர்கள் எல்லா உறவுகளை விடவும் மிகுந்த அன்புடனும், கட்டுப்பட்டு நடப்பதிலும் என்னுடன் உள்ள உறவை நிலைபெறச் செய்யுங்கள். அதன் மூலமாகவே நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறு அல்லாஹ்வின் அன்பைப் பெறுவீர்கள் என்று கூறுகிறார்கள். அவர்கள் இந்த விசயத்தை தாமாகவே கூறவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மஸீஹ் மற்றும் மஹ்தியின் காலத்தை நீங்கள் அடைந்தால் பனி மலைகளில் தவழ்ந்து சென்றேனும் அவர்களுக்கு எனது ஸலாத்தை கூறுங்கள் என கூறியுள்ளார்கள். இந்த அளவு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இந்த அளவு உங்களை துன்பத்தில் ஆழ்த்தியவாறு தூதுச் செய்தியை அதாவது ஸலாத்தை அவர்களுக்கு எட்ட வைப்பதில் என்ன இரகசியம் அடங்கியுள்ளது? அது அவர் என் அன்பிற்குரியவர். நான் அவரது அன்பிற்குரியவன் என்பதை கூறவேயாகும். அன்பிற்குரியவர்கள் வரை சென்றடைவது அன்பிற்குரியவர்கள் மூலமாகத்தான் முடியும் என்பது வழிமுறையாகும். எனவே நீங்கள் என்னைப் பின்பற்றுவதாக இருந்தால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பின்பற்றுங்கள். அவரை இமாமாக ஏற்றுக் கொள்ளுங்கள். அவரது ஜமாஅத்தில் இணைந்து விடுங்கள் என்பதைத் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள். எனவேதான் ஒரு நபிமொழியில் இவ்வாறு வருகிறது.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“கவனமாக கேளுங்கள்! மர்யமின் மகன் ஈஸா (அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ்) அவர்களுக்கும் எனக்குமிடையில் எந்த நபியும் அல்லது ரஸூலும் இருக்கமாட்டார்கள். நன்றாக கேளுங்கள்! அவர் எனக்கு பிறகு எனது உம்மத்தில் என்னுடைய கலீஃபாவாக இருப்பார். அவர்



நிச்சயமாக தஜ்ஜாலை கொல்வார். சிலுவையை துண்டு துண்டாக்குவார். (அதாவது சிலுவைக் கொள்கையை தகர்ப்பார்). ஜிஸ்யாவை முடிவுக்கு கொண்டு வருவார். (அவர்களது காலகட்டத்தில் இந்த வழக்கம் இருக்காது. அக்காலத்தில் மார்க்கப் போர்கள் இருக்காது. எனவே, ஜிஸ்யாவும் இருக்காது) எவருக்கு அவரை சந்திக்கும் நற்பேறு கிடைக்குமோ அவர் எனது ஸலாத்தை கண்டிப்பாக அவருக்கு எட்ட வைக்க வேண்டும்.”

(திப்ரானி அல்அவ்ஸத் வஸ்ஸகீர்)

எவர்கள் இந்த நபிமொழியை கவனமாகச் சிந்திக்கின்றார்களோ அவர்கள் இதன் ஆழிய கருத்தைப் புரிந்து கொண்டார்கள். கூறுவதை புரிவதற்குப் பகரமாக இன்றைய காலத்தில் ஆலிம்கள் இந்த நபிமொழியின் வெளிப்படையான பொருளின் பக்கம் செல்கின்றனர். அதில் பிடிவாதமாக இருந்து சாதாரண அறிவுள்ள முஸ்லிம்களை தவறான வழிக்கு கொண்டு செல்கிறார்கள். அதன் விளைவாக குழப்பங்களின் புயலை உருவாக்கி விட்டார்கள். நாமோ இவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள அல்லாஹ்விடம் அடைக்கலம் கேட்கின்றோம். அவனே அவர்களை பார்த்துக் கொள்கிறான். மேலும் இன்சா அல்லாஹ் வருங்காலத்திலும் அவனே அவர்களை பார்த்துக் கொள்வான்.

இந்த நபிமொழியிலிருந்து தெளிவாக தெரியும் கருத்தாவது, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நீதியை நிலைநாட்டக்கூடிய இயல்பை தன்னகத்தே கொண்ட அரசராக விளங்குவார். அவர் நீதியைத் தவிர வேறு எதையும் பேசப்போவதில்லை. உலகில் நீதியை நிலைபெறச் செய்யும் இமாமாக அவர் இருப்பார். எனவே, அவருடன் தொடர்பை ஏற்படுத்துவதும், அவரது சட்டதிட்டத்தின்படி நடப்பதும், அவரது போதனைகளுக்கு ஏற்ப செயல்படுவதும் அவசியமானதாகும். ஏனென்றால் அவர் நீதியின் போதனைகளைத்தான் வழங்குவார். திருக்குர்ஆனின் போதனைகளை தவிர அவரிடத்தில் வேறு எதுவுமில்லை. இன்றைய காலத்தில் மஸீஹ் சுத்தியலுடன் வந்து சிலுவையை உடைப்பார் என்பதெல்லாம் வீணான விசயங்களாகும். வருகின்ற மஸீஹ் தனது எஜமானவரைப் பின்பற்றியவாறு மக்களை ஆதாரங்கள் மூலம் தன்னை ஏற்றுக் கொள்ள வைப்பார். ஆதாரங்கள் மூலமாகவே சிலுவைக் கொள்கையை தகர்த்தெறிவார்.

தஜ்ஜாலைக் கொலை செய்வார் என்பதன் கருத்தும் தஜ்ஜாலிய குழப்பங்களிலிருந்தும் இந்த உம்மத்தைக் காப்பாற்றுவார். மார்க்க போர்களுக்கான வழக்கமே இல்லாமல் இருக்கும் போது ஜிஸ்யாவும் இருக்காது. பிறகு இந்த நபிமொழியில் தனது ஸலாத்தை எட்ட வைக்கும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். முஸ்லிம்கள் ஸலாத்தை எட்ட வைப்பதற்குப் பகரமாக, வந்த மஸீஹை எதிர்ப்பதில் ஈடுபட்டுள்ளனர். அல்லாஹ்தான் அவர்களுக்கு அறிவை வழங்க வேண்டும்.

இன்னொரு நபிமொழி உள்ளது. அதிலிருந்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தகுதி பற்றியும் நாம் அவர்களுக்கு கட்டுப்படும் அளவுக்கு தொடர்பை வைப்பது ஏன் அவசியம் என்பதும் தெரிய வருகிறது.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“எதுவரை நீதியின் அரசராகவும் இமாமாகவும் இருக்கக்கூடிய மர்யத்தின் மகன் ஈஸா தோன்றவில்லையோ அதுவரை கியாமத் வராது. அவர் சிலுவையை முறிப்பார். பன்றியைக் கொல்வார். ஜிஸ்யாவை முடிவுக்கு கொண்டு வருவார். அவர் மக்களுக்கு செல்வத்தை வழங்குவார். ஆனால் மக்கள் அதனை பெற்றுக் கொள்ள மாட்டார்கள்.”

(சுனன் இப்னி மாஜா, கிதாபுல் ஃபிதன் அதிகாரம் ஃபித்னதுல் தஜ்ஜால் ஹுருஜ் ஈஸப்னு மர்யம் வ ஹுருஜ் யாஜூஜ் மாஜூஜ்)

இந்த நபிமொழியும் புரிய வேண்டிய ஒன்றாகும். குறைந்த அறிவுள்ள பாமர மக்கள் இதன் வெளிப்படையான பொருளின் பக்கம் செல்கின்றனர். எள்ளி நகையாட வைக்கின்ற நூதனமான விரிவுரைகளை வழங்கி வருகிறார்கள். பன்றியை கொல்லுதல் என்பதன் பொருள். பன்றியின் இயல்பை உடைய மக்களை அழிப்பதேயாகும். மற்ற மிருகங்களுக்கெதிரில் பன்றியின் தீமைகள் இப்போது மிகத் தெளிவாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. அதே தீமைகள் மனிதனிடம் உருவாகும் போது அப்படிப்பட்ட மக்கள் அழிய வேண்டியது மிகமிக அவசியமானது.

அடுத்து செல்வத்தை வழங்குவார் என்றுள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தானில் சில நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் என் நினைவிற்கு



வருகிறது. சில நாட்களுக்கு முன்னர் பாகிஸ்தானில் ஆலிம்கள் ஒரு மாநாடு நடத்தி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கெதிராகவும், ஜமாஅத்திற்கு எதிராகவும் மிகவும் கேவலமான இழிவான சொற்களை பயன்படுத்தினார்கள். அப்போது அவர்கள் மஸீஹ் வந்து மக்களுக்கு செல்வத்தை வழங்க வேண்டும். மக்களிடம் செல்வத்தை கேட்கக்கூடாது. ஆனால், காதியானிகள் சந்தா வசூல் செய்கின்றனர். எனவே இவர்கள் பொய்யர்கள் என்பது நிரூபணமாகி விட்டது என்று கூறினார்கள். மஸீஹ் வழங்கிக் கொண்டிருக்கின்ற ஆன்மீக கருவூலங்களை அறிவில் குருடர்களாக இருக்கும் இவர்கள் பெற்றுக் கொள்ள மறுக்கின்றார்கள் என்பதை இவர்களுக்கு எந்த அறிவுள்ள மனிதனாலும் புரிய வைக்க முடியாது.

உண்மை என்னவென்றால், உலகின் ஒரு கண் மாத்திரமே அவர்களுக்கு இருக்கின்றது. இதற்கு மேல் அவர்களால் முன்னேறி செல்ல முடியாது. அவர்களது வேலையே இப்படிப்பட்டதுதான். அவர்கள் அதனை செய்யட்டும். பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகள் அதிகம் கவலையடையக் கூடாது. அவர்களது இழிவான, வீணான சொற்களை கேட்டு விட்டு பொறுமையுடனும், சகிப்புத்தன்மையுடனும் முகத்தை திருப்பியவாறு சென்று விடுங்கள். அவர்களது இழிவான சொற்களுக்கு எதிரில் எங்களால் போட்டி போட முடியாது என்பதில் உண்மையிலேயே நாங்கள் எங்கள் தோல்வியை ஒப்புக் கொள்கிறோம். ஆனால், ஒரு விசயத்தை தெளிவாக கூற விரும்புகின்றேன். அடியான் பேசாமல் இருக்கும் போது இறைவன் பேசுவான். இறைவன் பேசுகின்ற போது எதிரிகளின் உடல் துண்டுகள் காற்றில் கலந்து சென்றதை நாம் கண்டுள்ளோம். இனியும் இப்படிப்பட்ட காட்சிகளை நாம் காண்போம். இன்சா அல்லாஹ்.

எனவே, அஹ்மதிகள் வாக்களிக்கப்பட்ட மஸீஹுடன் உண்மையான தொடர்பை நிலைநாட்ட வேண்டும். அதிகமாக துஆ செய்ய வேண்டும். ஒவ்வொரு நொடியும் துஆவில் ஈடுபட்டுக கொண்டிருக்க வேண்டும்.

எனவே, இந்த நபிமொழிகளிலிருந்து வர வேண்டிய மஸீஹ் இமாமாகவும் இருப்பார். நீதிபதியாகவும் இருப்பார். அரசராகவும் இருப்பார் என்று தெரிகிறது. எனவே, அவருடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அவர்

அரசராகவும், இமாமாகவும் இருக்கும் போது அந்த நிலையில் அவருக்கு கட்டுப்படுவது உங்கள் மீது அவசியமானதாகும். எனவே, உங்களது நன்மைக்காகவும் உங்களது நல்லொழுக்க பயிற்சிக்காகவும் கூறப்பட்டுள்ள இவ்விசயங்களை செயல்படுத்துங்கள். அதன் மூலமாக நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அன்பிற்குரியவர்களாக ஆகி விடுவீர்கள். மேலும், இறைவனின் நெருக்கத்தை பெற்றவர்களாகவும் ஆகி விடுவீர்கள்.

## எல்லா நிலையிலும் கட்டுப்படுதல் அவசியமானதாகும்

கட்டுப்பட்டு நடப்பது தொடர்பாக சில நபிமொழிகளை எடுத்துக் கூறுகிறேன். அதன் மூலமாக கட்டுப்படுதலின் முக்கியத்துவம் தொடர்பாக நீங்கள் அறியலாம். எல்லா நிலையிலும் கட்டுப்படுதல் அவசியமானதாகும்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

"வறுமையிலும், நல்ல நிலையிலும், மகிழ்ச்சியிலும், துன்பத்திலும், உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையிலும், தன்னை விட பிறருக்கு முன்னுரிமை வழங்கப்படும் போதும் ஆகிய இந்த எல்லா நிலைமைகளிலும் காலத்தின் அரசரின் கட்டளையை கேட்பதும் அதற்கு கட்டுப்பட்டு நடப்பதும் உங்கள் கடமையாகும்." (முஸ்லிம் கிதாபுல் இமாரத்)

**ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

"எந்த நபர் தனது தலைவரிடம் அல்லது அமீரிடம் அவருக்கு விருப்பமில்லாத ஒரு விசயத்தை காண்கின்றாரோ அவர் பொறுமையை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், எந்த நபர் ஜமாஅத்திலிருந்து ஒரு ஜான் அளவு விலகி நிற்பாரோ அவர் அறியாமையில் மரணிப்பார்."

(புகாரி-கிதாபுல் ஃபிதன்)

ஹஸ்ரத் அரப்ஜா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்** இவ்வாறு கூறுவதை நான் கேட்டேன்:



"நீங்கள் ஒரே கையின் கீழ் இணைந்திருக்கின்ற நிலையில் மேலும் உங்களுக்கு ஓர் அமீர் இருக்கின்ற நிலையில் எவராவது உங்களிடம் வந்து உங்கள் ஜமாஅத்தில் பிரிவினையை ஏற்படுத்துவதற்காக உங்கள் ஒற்றுமையை உடைக்க விரும்பினால் அவரை கொலை செய்து விடுங்கள். அதாவது, அவருடன் உள்ள தொடர்பை முறித்து விடுங்கள். அவர் கூறுவதை ஏற்றுக் கொள்ளாதீர்கள். (அவரது கட்டளைகளை கேட்டும் கேட்காதது போல் நடந்து கொள்ளுங்கள்)". (முஸ்லிம் கிதாபுல் இமாரத்)

**ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

"நாங்கள் விரும்பிய நிலையிலும், விரும்பாத நிலையிலும் நாங்கள் கேட்போம்; கட்டுப்படுவோம். நாங்கள் எங்கிருந்தாலும் எந்தவொரு விசயத்திற்கும் உரிமையுள்ளவருடன் சண்டையிட மாட்டோம். உண்மையில் நிலைத்திருப்போம் அல்லது உண்மையை கூறுவோம். அல்லாஹ்வின் விசயத்தில் பழித்துரைக்கின்ற எவரது பழிக்கும் நாங்கள் அஞ்சமாட்டோம் என்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் நாங்கள் பைஅத் செய்தோம்." (முஸ்லிம் கிதாபுல் இமாரத்)

**ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எவர் இறைவனுக்கு கட்டுப்பட்டுவதிலிருந்தும் தனது கைகளை விலக்கிக் கொள்வாரோ அவர் மறுமை நாளில் தன்னிடம் எவ்வித சான்றும், சாக்குப்போக்கும் எடுத்துகூற முடியாத நிலையில் அல்லாஹ்வை சந்திப்பார். எவர் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்யாத நிலையில் மரணிப்பாரோ அவர் அறியாமையிலும் வழிகேட்டிலும் மரணிப்பார். (முஸ்லிம் கிதாபுல் இமாரத்)

காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்ட நீங்கள் அவரது பைஅத்தில் நுழைந்து விட்டதால் நற்பாக்கியம் பெற்றவர்களாவீர்கள். இப்போது அல்லாஹ்விற்காக மட்டும் நீங்கள் அவருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவரது எல்லா கட்டளைகளையும் ஏற்று நடக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லையென்றால் நீங்கள் இறைவனுக்கு கட்டுப்படுவதிலிருந்தும் வெளியேறி விட்டவர்களாகி விடுவீர்கள். அல்லாஹ் கட்டுப்படுதலில் உயர்வான அளவுகோலின்படி செயல்படும் வாய்ப்பை ஒவ்வொரு

அஹ்மதிக்கும் வழங்குவானாக. இந்த உயர்வான அளவுகோலின்படி நாம் எப்படி செயல்பட வேண்டும்? இந்த தகுதியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனையின்படி செயல்படுவதன் மூலமே நாம் பெற முடியும்.

## ஜமாஅத்தில் இணைந்திருப்பவர் யார்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

"எனது போதனைகளை தனது செயலுக்குரிய வழிமுறையாக ஏற்று நடப்பவரும் தனது தைரியம் மற்றும் முயற்சிக்கேற்ப அதனை செயல்படுத்துபவருமே நம்முடைய ஜமாஅத்தில் இணைய முடியும். ஆனால், எவர் பெயரை மட்டும் எழுதி விட்டு எனது போதனைகளுக்கேற்ப செயல்படுவதில்லையோ அவர் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இறைவன் இந்த ஜமாஅத்தை ஒரு சிறப்பிற்குரிய ஜமாஅத்தாக உருவாக்க எண்ணியுள்ளான். எந்தவொரு நபரும் உண்மையாக ஜமாஅத்தில் இல்லாமல் பெயர் எழுதிவிட்டதன் காரணமாக மட்டும் ஜமாஅத்தில் இருக்க முடியாது. அப்படிப்பட்டவர் மீது ஏதாவது ஒரு சந்தர்ப்பம் வரும்போது அவர் தனியாக பிரிந்து சென்று விடுவார். எனவே, உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதனைகளுக்கேற்ப உங்களால் இயன்றவரை செயல்பட வேண்டும்."

தனது போதனைகளை எடுத்துக் கூறுகையில் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** கூறுகின்றார்கள்:

"குழப்பத்திற்குரிய விசயங்களைப் பேசாதீர்கள். தீமைகளைச் செய்யாதீர்கள். ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டால் பொறுமையை மேற்கொள்ளுங்கள். எதிர்க்கின்ற எவரையும் போட்டி போட்டுக் கொண்டு எதிர்க்க வேண்டாம். எதிர்த்துப் போட்டிப் போடுபவரிடம் நன்மையுடனும், நல்லவிதமாகவும் நடந்து கொள்ளுங்கள். இனிமையாகப் பேசுவதன் சிறந்த முன்மாதிரியைக் காட்டுங்கள். உண்மையான உள்ளத்துடன் ஒவ்வொரு கட்டளைக்கும் கட்டுப்பட்டு செயல்படுவதன் மூலம் இறைவன் உங்களிடம் திருப்தி அடைய வேண்டும். மேலும் இவர் பைஅத் செய்த பிறகு இதற்கு முன்பு இருந்தைப் போன்று இப்போது இவர் இல்லை என்பதை எதிரியும் புரிந்து



கொள்ள வேண்டும். வழக்குகளில் உண்மையான சாட்சியைக் கூறுங்கள். இந்த இயக்கத்தில் நுழைக்கின்றவர் முழுமையான உள்ளத்துடன் முழுமையான தைரியத்துடன், முழுமையான முயற்சியுடன் நேர்மையை கைக்கொள்ள வேண்டும். உலகம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது."

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 620, 621 புதிய பதிப்பு)

இங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குழப்பம் நிறைந்த விசயங்களைப் பேசாதீர்கள் என்று கூறியுள்ளார்கள். சிலரிடத்தில் இந்த பழக்கம் இருக்கின்றது. அவர்கள் இன்பத்தை பெறுவதற்காக மட்டும் ஓரிடத்தில் பேசப்பட்ட விசயத்தை இன்னொரு இடத்தில் சென்று கூறிவிடுவார்கள். அதனால் குழப்பங்கள் உருவாகும் அபாயம் இருக்கின்றது. பல்வேறு இயல்பைக் கொண்டவர்கள் இருக்கின்றார்கள். எவருக்கு முன்பாக பேசப்படுகிறதோ அந்த வி-யமும் அந்த நபரை குறித்ததாக இருந்தால் யார் அவ்விசயத்தைக் கூறியதாக கூறப்படுமோ அந்த நபர் மீது இயற்கையாக இவருக்கு தவறான காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. எனது பார்வையில் அந்த விசயம் அவருக்கு எட்டினால் அதை கேட்பவர், யார் அதனை கூறியதாக அவருக்கு கூறப்பட்டதோ அந்த நபர் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ளக் கூடாது. மாறாக, அதனை அவர் கூறினாரா இல்லையா என்பதை அவரிடமே கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். இந்த விசயம் எனது காதுகள் வரை இவ்வாறு எட்டியது என்று கூறும்போது அங்கேயே தெளிவு கிடைத்து விடும். பிறகு அப்படிப்பட்ட குழப்பத்தை ஏற்படுத்துபவர் சீர்திருந்தவும் செய்வார்.

சில நேரங்களில் இப்படிப்பட்ட குழப்பங்களை ஏற்படுத்துபவர் குடும்பங்களை குடும்பங்களுடன் சண்டையிட வைக்கின்றனர். அப்படிப்பட்ட குழப்பமான விசயங்களிலிருந்தும் குழப்பத்தை ஏற்படுத்துபவர் -களிடத்திலிருந்தும் நீங்கள் உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களால் முடிந்தால் அவர்கள் சீர்திருத்த முயற்சி செய்யுங்கள். அதற்கு பிறகு சண்டைகள் மற்றும் ஏச்சுப் பேச்சுகள் மூலம் தீமை உருவாகின்றது. அதனால் குழப்பமும் ஏற்படுகிறது. எனவேதான் உங்களுக்கு என்னுடன் தொடர்பு இருந்தால், எனக்கு நீங்கள் கட்டுப்பட்டு நடப்பதாக இருந்தால் எனது

போதனை என்னவென்றால் எல்லாவிதமான குழப்பம் மற்றும் தீமைகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளுங்கள். உங்களிடம் பொறுமையும், மனோதைரியமும் எந்த அளவு இருக்க வேண்டுமென்றால் எவராவது உங்களை ஏசிப்பேசினாலும் நீங்கள் பொறுமையை மேற்கொள்ள வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கட்டளையிட்டுள்ளார்கள். எனவே, இந்த போதனைகளின்படி செயல்பட்டால்தான் உங்களுக்கு இரட்சிப்பின் வழிகள் திறக்கும். நீங்கள் இறைவனின் நெருக்கத்தை பெற்றவர்களாக இருப்பீர்கள். எந்தவொரு பிரச்சனையிலும் போட்டி மனோபாவம் இருக்கக் கூடாது. உண்மையாளராக இருந்தும் பொய்யரை போன்று பணிவை மேற்கொள்ளுங்கள். உம்மை எவர் என்ன கூறினாலும் நீங்கள் அன்புடனும், நேசத்துடனும், மனத்தூய்மையுடனும் நடந்து கொள்ளுங்கள். தூய்மையான வார்த்தைகளை இனிமையாக பேசுங்கள். மக்கள் உங்கள் பக்கம் ஈர்க்கப்பட வேண்டுமளவுக்கு நல்லொழுக்கம் உங்களிடமிருந்து வெளிப்பட வேண்டும்.

உங்கள் சுற்றுப்புறத்தில் ஒவ்வொருவருக்கும் இவர் அஹ்மதியாவார். நல்லொழுக்கத்தை தவிர வேறு எதனையும் இவரிடமிருந்து எதிர்பார்க்கவே முடியாது என்பது தெரிய வர வேண்டும். உங்களின் இந்த நல்லொழுக்கமும் கூட மற்றவர்களை உங்கள் பக்கம் ஈர்த்து அவர்களது கவனம் உங்கள் பக்கம் திரும்ப காரணமாகி விடும். சிலர் வழக்குகளில் தங்கள் சொந்த நலனுக்காக பொய்சாட்சி கூறி விடுகின்றனர். தங்கள் தரப்பிலிருந்து பொய் வழக்கு தொடுக்கின்றார்கள். எனவேதான் உங்களுடைய சொந்த நலன்கள் கூட உங்களை உண்மையான சாட்சி கூறுவதிலிருந்தும் விலக்கி விடக் கூடாது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள கூறுகின்றார்கள். சிலர் இங்கு வேறு நாடுகளிலும் வெளிநாடு செல்ல வேண்டும் என்ற பேராசையில் தவறான வாக்குமூலம் கொடுக்கின்றார்கள். இப்படிப்பட்ட விசயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். உண்மையான நிலைமைகளுக்கு ஏற்றவாறு உங்களது வழக்கை தொடருங்கள. அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டால் நல்லது. இல்லையென்றால் திரும்பி சென்று விடுங்கள். ஏனென்றால், தவறான வாக்குமூலம் கொடுத்த பிறகும் கூட



சிலரது வழக்குகள் ரத்தாகி விடுகின்றன. எனவே, உண்மையில் நிலைத்து நின்று சோதனை செய்து பாருங்கள். நற்பலனே கிடைக்கும் இன்சா அல்லாஹ். ரத்து செய்யப்பட்டாலும் குறைந்தபட்சம் அல்லாஹ்வின் வெறுப்பிற்குரியவர்களாக ஆகமாட்டோம்.

## உங்களிடையே சகோதரத்துவத்தையும், அன்பையும், மேலும் அல்லாஹ்விடம் உண்மையான தொடர்பையும் உருவாக்குங்கள்

பிறகு உங்களிடையே அன்பையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்று போதனை செய்தவாறு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

“உங்களிடையே அன்பையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துங்கள். கொடூரமாக நடந்து கொள்வதையும், கருத்து வேறுபாடு கொள்வதையும் விட்டு விடுங்கள். எல்லா விதமான கேலி கிண்டல், எள்ளி நகையாடுதல் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் விலகிக் கொள்ளுங்கள். ஏனென்றால், கேலி மனிதனின் உள்ளத்தை உண்மையிலிருந்தும் விலக்கி வெகுதூரம் வரை கொண்டு சென்று விடும். உங்களிடையே ஒருவருக்கொருவர் கண்ணியத்துடன் பரிமாறுங்கள். ஒவ்வொருவரும் தனது சுகத்தை விட தனது சகோதரனின் சுகத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அல்லாஹ்விடத்தில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவனுக்கு கீழ்ப்படிந்து நடப்பதன் பக்கம் திரும்பி வாருங்கள். உங்களிடையே இருக்கின்ற சண்டை, விரோதம், காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றை ஒவ்வொருவரும் விட்டுவிட வேண்டும். இது, சின்னச்சின்ன வி-யங்களிலிருந்து நீங்கள் முகந்திருப்பி முக்கியமான மகத்தான பணிகளில் ஈடுபட வேண்டிய நேரமாகும்.” மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 266-267)

**தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள்:**

“நமது ஜமாஅத்திற்கு இறைவனிடம் உண்மையான தொடர்பு இருக்க வேண்டும். இறைவன் அவர்களை வெறுமனே விட்டுவிடவில்லை என்பதற்காக அவர்கள் நன்றி செலுத்த வேண்டும். மாறாக, அவன் அவர்களது நம்பிக்கையின் ஆற்றல்களை நிச்சய உறுதியின் உயர் தகுதி

வரை வளர்ச்சியடையச் செய்வதற்காக தனது வல்லமையின் நூற்றுக்கணக்கான அடையாளங்களைஅவர்களுக்கு காட்டினான்.”

நான் எவ்வித அடையாளத்தையும் காணவில்லை என்று கூறுகின்ற எவராவது உங்களில் இருக்கின்றாரா? என்னுடைய நட்பில் இருப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்து இறைவனுடைய புத்தம்புது அடையாளத்தை தனது கண்களால் காணாத ஒருவர் கூட உங்ளிடையே இருக்க முடியாது என்பது எனது உறுதியான வாதமாகும். நம்முடைய ஜமாஅத்திலுள்ளவர்களது ஈமான் வளர்ச்சியடைந்து இறைஞானமும் இறைவனைப் பற்றிய நிச்சய உறுதியும் ஏற்பட்டு நற்செயல்களில் சோம்பேறித்தனம் ஏற்படாமல் இருத்தல் மிக அவசியமானதாகும். ஏனென்றால் சோம்பேறித்தனம் ஏற்பட்டு விட்டால் உளூ செய்வது கூட ஒரு துன்பமாக தெரியும். அப்படிப்பட்டவர் எங்கிருந்து தஹஜ்ஜுத் தொழ முடியும்? நற்செயல்களில் ஆற்றலும், நன்மையான விசயங்களில் போட்டி போடும் உணர்வும் இல்லையென்றால் பிறகு நம்முடன் தொடர்பை ஏற்படுத்துவது பயனற்றதாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 710,711 புதிய பதிப்பு)

பைஅத்தின் இந்த பத்தாவது நிபந்தனையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடன் கொள்கின்ற தொடர்பு எந்த உலக உறவுகளிலும் பார்க்க முடியாத அளவில் இருக்க வேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ஏனென்றால் அதற்குரிய காரணம் முழுக்க முழுக்க நம் மீதுள்ள அனுதாபம் மட்டுமேயாகும். மேலும் நம்மை அழிந்து போவதிலிருந்தும் காப்பாற்றுவதற்காகவேயாகும். ஏனென்றால் உண்மையான இஸ்லாம் அவர்கள் மீது நம்பிக்கை கொள்வதால் மட்டுமே கிடைக்கும். எனவே, நம்மை நாமே மூழ்குவதிலிருந்தும் காப்பாற்றிக் கொள்வதற்காக கட்டாயமாக நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கப்பலில் பயணம் செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“என் பக்கம் ஓடி வாருங்கள். இதுதான் சரியான நேரமாகும். இந்த நேரத்தில் எவர் என் பக்கம் ஓடி வருகின்றாரோ நான் அவரை புயல் வீசுகின்ற



சமயத்தில் கப்பலில் அமர்ந்தவருடன் ஒப்பிட்டுக் கூறுகின்றேன். ஆனால், எவர் என்னை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர் தன்னை புயலில் சிக்க வைத்துக் கொண்டதை நான் பார்க்கின்றேன். தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கான எந்த வழியும் அவரிடம் இல்லை. நானே உண்மையான பரிந்துரை செய்பவனாவேன். எவரை இக்காலத்தில் குருடர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்தார்களோ, எவரை மிகவும் இழிவுபடுத்தினார்களோ அந்த கண்ணியத்திற்குரிய பரிந்துரைப்பவரின் நிழலாகவும், பிரதிபிம்பமாகவும் நான் இருக்கின்றேன். அதாவது, அவர்கள் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களேயாவார்கள்.”

(தாஃபிவுல் பலா. ரூஹானி கஸாயின் தொகுதி 18, பக்கம 233)

இவ்வாறு அவர்கள் கூறுவதற்கான காரணம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பிற்கேற்பவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதம் உள்ளது.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது கையில் பைஅத் செய்வதனாலுள்ள இரண்டு பலன்கள்

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“எனது கைகளில் செய்யப்படும் பைஅத் மூலமாக இரு பயன்கள் உள்ளன. ஒன்று, பாவங்கள் மன்னிக்கப்படும். மனிதன் இறைவனின் வாக்குறுதிக்கேற்ப அவனது மன்னிப்பை பெறும் தகுதியைப் பெற்று விடுகின்றான். இரண்டாவதாக, இறைவனால் அனுப்பப்பட்டவர் முன்னிலையில் தவ்பா செய்வதன் மூலம் ஆற்றல் கிடைக்கின்றது. மேலும், மனிதன் சய்த்தானிய தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொள்கின்றான்.

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இந்த இயக்கத்தில் இணைவதன் நோக்கம் உலகத்தைப் பெறுவதற்காக இருக்கக் கூடாது. மாறாக, இறைவனின் திருப்தி கிடைப்பது நோக்கமாக இருக்க வேண்டும். ஏனென்றால், உலகம் விட்டு செல்ல வேண்டிய இடமாகும். அது ஏதாவதொரு வகையில் நம்மை விட்டு சென்று விடும். உலகத்தையும் அதன்

நோக்கங்களையும் முற்றிலும் தனியாக வைத்து விடுங்கள். அவற்றை மார்க்கத்துடன் ஒருபோதும் கலக்காதீர்கள். ஏனென்றால், உலகம் அழியக்கூடிய பொருளாகும். மார்க்கமும் அதன் பயன்களும்தான் எஞ்சி நிற்கக்கூடியதாகும்.” (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 145)

## இக்காலத்தின் பாதுகாப்பு கோட்டை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களேயாவார்கள்

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“என்னுடைய நண்பர்களே! என் அன்பிற்குரிய தோழர்களே! நான் மரமாகவும் நீங்கள் அம்மரத்தின் பசுங்கனிகளாகவும் இருக்கிறீர்கள். நீங்கள் இறையோனின் அளப்பெருங்கருணையினால் பைஅத்தின் மூலம் என்னுடன் சேர்ந்து உங்கள் உயிரையும் ஓய்வு நேரத்தையும் உடைமைகளையும் இந்த நோக்கத்திற்காக அர்ப்பணிக்க ஆயத்தமாயிருக்கிறீர்கள். நான் உங்களிடம் கூறும் எந்த அளவு தியாகத்தையும் நீங்கள் உங்களது நற்பாக்கியமாக கருதி ஏற்றுக் கொண்டு உங்கள் சக்திக்கேற்ப அதை செய்ய தயங்கமாட்டீர்கள் என்பது எனக்கு தெரியும். இருப்பினும் என் விருப்பத்தின் பேரில் எதையும் நீங்கள் செய்யும்படி நான் குறிப்பிட விரும்பவில்லை. ஏனெனில், நீங்கள் செய்யும் தியாகங்கள் எந்த கட்டுப்பாடுமின்றி உங்களாலேயே மகிழ்ச்சியுடன் செய்யப்பட வேண்டும். எனது வேண்டுதலுக்காக செய்யப்படக்கூடாது.

என்னுடைய நண்பர் யார்? என்னிடத்தில் அன்பு கொண்டவர் யார்? என்னையும் என் பதவியையும் அறிந்தவரே! என்னுடைய பதவியை அறிந்தவர் யார்? நான் இறைவனால் அனுப்பப்பட்டிருக்கின்றேன் என்று உறுதியாக நம்புகிறவர்தான். அதாவது முன்பு இறைவனால் அனுப்பப்பட்டவர் எவ்வாறு விசுவாசிக்கப்பட்டார்களோ அவ்வாறே என்னையும் விசுவாசிப்பவரே என் பதவியை அறிந்தவர் ஆவார். இந்த உலகம் என்னை ஏற்றுக் கொள்ளாது. ஏனென்றால் நான் இந்த உலகைச் சார்ந்தவன் அல்லன். ஆனால் மறு உலகத்தோடு யாருடைய ஆன்மாக்கள் உறவு கொண்டுள்ளனவோ அவர்கள் என்னை ஏற்றுக் கொள்கிறார்கள்; ஏற்றுக்



கொள்ளவே செய்வார்கள். என்னை விட்டு விலகிச் செல்பவர் என்னை அனுப்பி வைத்திருப்பவனைத்தான் விட்டு விலகிச் செல்கின்றார். என்னுடன் சேர்ந்து கொள்பவர், நான் எவனிடமிருந்து வந்தேனோ அவனோடு தான் சேர்ந்து கொள்கிறார்.

நான் என் கையில் ஒரு விளக்கை ஏந்தியிருக்கிறேன். என்னிடம் வருகின்றவர்களுக்கு இவ்விளக்கின் ஒளியிலிருந்து அவர்களின் பங்கு அவர்களுக்கு கிடைக்கத்தான் வேண்டும். நிச்சயமாக அவர்களுக்குரிய பங்கு கிடைக்கும். ஆனால் பொய் தோற்றங்களால் கவரப்பட்டும், தப்பெண்ணம் கொண்டும் என்னை விட்டு தூரமாக விலகி ஓடுபவர்களோ இருளினுள்ளே நுழைந்து விடுவார்கள். இன்றைய தினம் உங்களுக்காக எழுப்பப்பட்டுள்ள பாதுகாக்கும் கோட்டையாக நான் இருக்கிறேன். எனக்குள்ளே நுழைகிறவன் திருடர்களிடமிருந்தும், கொள்ளைக்காரர்களிடமிருந்தும் கொடிய விலங்குகளிடமிருந்து தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்கிறான். ஆனால் எனது சுவர்களிலிருந்து தொலைவில் வாழ விரும்புகிறவனுக்கு எல்லா திசைகளிலிருந்தும் எல்லா இடங்களிலிருந்தும் மரணம் காத்திருக்கின்றது. உயிரற்ற அவனது சடலம் கூட மிஞ்சாது போகலாம்.

எனக்குள்ளே நுழைபவர் யார்? தீய வழிகளைக் கைவிட்டு நற்பண்புகளின் வழிமுறைகளைப் பின்பற்றுகிறவரும், கோணல் தன்மையைக் கைவிட்டு நேர்மையில் முன்னேறுபவரும், அதாவது சய்த்தானிடமிருந்து தன்னை தவிர்த்துக் கொண்டு இறைவனுக்கு கீழ்ப்படிந்துள்ள சேவகர்களில் ஒருவராக வல்லமைமிக்க இறைவனோடு சேர்ந்து கொள்பவருமே ஆவார். இவ்வாறு செய்பவர் ஒவ்வொருவரும் என்னைச் சேர்ந்தவர்; நானும் அவனைச் சேர்ந்தவனாவேன்.

இவ்வாறு செய்யும் ஆற்றல் பெற்றவர் யார்? எவருக்கு இறைவன் தூய்மையான ஆன்மாவை வழங்குகிறானோ அவருக்கு மட்டுமே இந்த ஆற்றல் கிடைக்கும். பிறகு அவன் அவரது நஃப்ஸின் நரகத்திற்குள் தனது காலை வைக்கின்றான். அப்போது அது எந்த அளவு குளிர்ந்து போகின்றதென்றால் அதில் ஒருபோதும் நெருப்பே இல்லாதது போல் தோன்றும். அவரே ஆன்மீக படித்தரத்தில் மென்மேலும் முன்னேறிச் செல்ல

தொடங்குகிறார். எதுவரையென்றால் இறையோனின் பரிசுத்த ஆவி அவரிடத்தில் வந்து தங்குகிறது. ஒரு விசேச தெய்வீக தோற்றத்தின் மூலமாக உலகங்களின் அதிபதியான இறைவன் அவர் உள்ளத்தில் அமர்ந்து விடுகின்றான். (அதாவது அல்லாஹ் அவரது உள்ளத்தில் தனது பிரதிபிம்பத்தை நிலைநாட்டுகின்றான்) அப்போது அவரது பழைய உள்ளம் அழிந்து ஒரு புதிய மனிதத்தன்மை அவருக்கு வழங்கப்படுகிறது. ஒரு புதிய இறைவன் – அவ்விறைவன் அவருடன் பழகும் முறையோ புத்தம் புதியது – இப்போது அவரை நெருங்கி விடுகின்றான். ஆதலால், அவர் இவ்வுலகிலேயே சுவர்க்க வாழ்விற்கான எல்லா தூய பொருள்களையும் பெற்றுக் கொள்கிறார்.”

(ஃபத்ஹே இஸ்லாம் ரூஹானி கஸாயின் தொகுதி 1, பக்கம் 34,35)

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நாம் செய்துள்ள எல்லா உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுவற்கான வாய்ப்பை வழங்குவானாக! அவர்கள் ஏற்படுத்திய எல்லா பைஅத் நிபந்தனைகளிலும் நாம் நிலைநிற்போமாக! அவர்களது போதனைப்படி செயலாற்றியவாறு நம்மையும் நமது வாழ்க்கையையும் சுவர்க்கத்திற்கு ஈடானதாக அல்லாஹ் ஆக்குவானாக! மறுமையில் கிடைக்கும் சுவர்க்கத்திற்கும் நம்மை வாரிசாக்குவானாக! அல்லாஹ் நமக்கு உதவுவானாக! ஆமீன்.

(2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ஆம் தேதி இலண்டனிலுள்ள ஃபஸ்ல் பள்ளிவாசலில் நிகழ்த்திய ஜுமுஆ உரையிலிருந்து)



**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு பைஅத் செய்தவர்களிடம் உருவாகியுள்ள ஆன்மீக மாற்றங்கள் தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களின் தொகுப்பு:**

## நீங்கள் எப்போதும் நல்ல தீர்மானங்களுக்குக் கீழ்தான் இருக்கின்றீர்கள் என்ற நற்செய்தி உங்களுக்கு கிடைத்திருக்கின்றது

“நபியே! நம்பிக்கை கொண்ட பெண்கள் தாங்கள் அல்லாஹ்வுக்கு எதனையும் இணையாக்கமாட்டார்; திருடமாட்டார்; விபச்சாரம் செய்யமாட்டார்; தங்கள் குழந்தைகளைக் கொலை செய்ய மாட்டார்; தாங்களாகவே வேண்டுமென்று புனைந்துரைக்கும் அவதூறான எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்தமாட்டார்; நல்லவற்றில் உமக்கு மாறு செய்யமாட்டார் என்று (உமது கைகளில்) நம்பிக்கை உடன்படிக்கை செய்து கொண்டு உங்களிடம் வரும்போது, நீர் அவர்களின் உடன்படிக்கை ஏற்றுக்கொண்டு, அவர்களை மன்னிக்குமாற அல்லாஹ்விடம் வேண்டுவீராக. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணைகாட்டுபவனுமாவான்.” (60:13)

சென்ற குத்பாவில் பைஅத் நிபந்தனைகளில் பத்தாவது நிபந்தனையைக் குறித்து விளக்கினேன். நல்ல விசயங்களில் கட்டுப்படுதல் குறித்து இன்னும் சிறிது விளக்க விரும்புகிறேன்.

## நல்ல வி-யங்களில் கட்டுப்படுதல் என்பதன் விளக்கம்

நான் ஓதிக் காண்பித்த வசனத்தில் பெண்களிடம், நாங்கள் இணை வைக்கமாட்டோம்; மேலும் நாங்கள் திருடமாட்டோம்; விபச்சாரம் செய்ய மாட்டோம்; குழந்தைகளை கொலை செய்ய மாட்டோம்; குழந்தைகளின் தர்பிய்யத்தை கவனத்தில் கொள்வோம்; பொய்யான பழித்துறைகளை எவர் மீதும் சுமத்தமாட்டோம்; நல்ல விசயங்களில் கட்டுப்படாமை காட்டமாட்டோம் என்று பைஅத் வாங்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்போது கேள்வி என்னவெனில், அல்லாஹ்விடமிருந்து நியமிக்கப்படுகிற ஒரு நபி நன்மையல்லாத கட்டளைகளையும் தர முடியுமா

என்ன? ஒரு நபி அவ்வாறு செய்ய முடியும் எனில் கலீஃபாக்களும் செய்ய முடியும். அவர்களும் கூட நன்மையல்லாத கட்டளைகளை தர முடியும் எனக் கூறலாம். ஆனால் ஒரு நபி ஒருபோதும் அத்தகைய கட்டளைகளை தர முடியாது என்பது தெளிவு. நபி எதனைக் கூறினாலும் நல்லதையே கூறுவார். இது தவிர வேறு ஏதும் கூறுவார் என்ற கேள்விக்கே இடமில்லை. எனவே திருக்குர்ஆனில் பல இடங்களில், அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கட்டளைகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்ற கட்டளை உள்ளது. அதனை கடைபிடிக்க வேண்டும். எந்த இடத்திலும் நல்லவற்றிற்கு மட்டும் கட்டுப்படுங்கள் என்று கூறப்படவில்லை. பிறகு இரண்டு முரண்பட்ட கட்டளைகள் ஏன்? உண்மையில் இது முரண்பட்ட கட்டளைகள் அன்று. (முரண்பாடு என்பது) புரிந்து கொள்வதில் ஏற்பட்ட தவறாகும். நான் முன்னரே கூறியது போன்று நபி என்ன கட்டளையிட்டாலும் அது நன்மையாகவே இருக்கும். நபி ஒருபோதும் அல்லாஹ்வின் கட்டளைக்கு எதிராக – சரீஅத்தின் கட்டளைகளுக்கு மாற்றமாக செய்யவே முடியாது. அவரே அதே வேலைக்காக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் எந்த பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளாரோ அதற்கு எதிராக அவரால் எப்படி செல்ல முடியும்? நீங்கள் நபியை ஏற்றுக் கொண்டு இறைவன் புறமிருந்து அனுப்பியவரை ஏற்றுக் கொண்டு, அவருடைய ஜமாஅத்தில் சேர்ந்து கொண்டு உங்களை பாதுகாத்துக் கொண்டிருக்கிறீர்கள்; பாதுகாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்ற நற்செய்தி உங்களுக்கு இருக்கிறது. உங்களுக்கு நன்மையைத் தராத எந்த கட்டளையும் இல்லை. என்ன கட்டளைகள் உங்களுக்கு உள்ளதோ அவை அல்லாஹ்வின் பார்வையில் திருப்தியைப் பெற்றவையே.

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அதனை விளக்கியவாறு கூறினார்கள்:**

“நல்ல கட்டளைகளுக்கு கட்டுப்படுதல் என்பதனைப் புரிந்து கொள்வதில் இன்னொரு தவறு ஏற்பட்டுள்ளது. அது என்னவென்றால், எந்தப் பணியை நாம் நன்மை என்று புரியவில்லையோ அதற்கு கட்டுப்படமாட்டோம் என்று கூறுவதாகும். இந்த வார்த்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காகவும் கூட வருகிறது. **வலா யஃஸீனக ஃபீ மஅரூஃப் (60:13)** நல்லவற்றில் உமக்கு மாறு செய்யமாட்டோம். இப்போது அம்மக்கள்



ஹஸ்ரத் முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பற்றி ஏதாவது குறைகள் அடங்கிய பட்டியலை எழுதி விட்டார்களா என்ன? இவ்வாறே ஹஸ்ரத் சாஹிப் அவர்களும் பைஅத் நிபந்தனையில் நல்லவற்றை பின்பற்றுதல் குறித்து எழுதியுள்ளார்கள். இதில் ஓர் இரகசியம் இருக்கிறது. நான் உங்களில் எவர் மீதும் தப்பெண்ணம் கொள்ளவில்லை. எவரும் தங்களுக்குள்ளே ஏமாந்து விடக்கூடாது என்பதற்காகவே இவ்வி–யங்களை திறந்து கூறுகிறேன்.”

(குத்பா ஈதுல் ஃபித்ர் 15.10.1909. குத்பாத்தே நூர் பக்கம் 420, 421)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** யஃமுருஹும் பில் மஃரூஃப் என்ற வசனத்திற்கு விளக்கமளித்தவாறு எழுதுகிறார்கள்:

“இந்த நபி கட்டளையிடுவதெல்லாம், எது அறிவுக்குப் புறம்பாக இல்லையோ அவற்றை தான். மேலும் எதனை அறிவு மறுக்கிறதோ அதனையே அவரும் தடுக்கிறார். தூயவற்றை அனுமதி அளிக்கிறார். தூய்மையில்லாதவற்றை ஹராமாக்குகிறார். மேலும் சமுதாயங்களின் தலையிலிருந்து ஒரு சுமையை இறக்கி வைத்துள்ளார். அவற்றின் கீழ் அவர்கள் அமுங்கிக்கிடந்தனர். அவர்களின் கழுத்திலிருந்த விலங்குகளிலிருந்து அவர் அவர்களுக்கு விடுதலை தந்தார். அதன் காரணமாக அவர்கள் தங்கள் கழுத்துக்களை நேராக வைக்க முடியாதிருந்தது. ஆகவே எந்த மக்கள் ஈமான் கொள்வார்களோ, தாங்கள் இணைப்பின் மூலம் அவருக்கு வலுவூட்டினார்களோ, அவருக்கு உதவி செய்தார்களோ அவரோடு இறங்கிய ஒளியைப் பின்பற்றினார்களோ அவர்கள் உலகம் மற்றும் மறுமையின் துன்பங்களிலிருந்து ஈடேற்றம் பெறுவர்.”

(பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, ரூஹானி கஸாயின் தொகுதி 21 பக்கம் 420)

நபி அல்லாஹ்வின் கட்டளைகளைப் பின்பற்றுகின்றார். மேலும் அறிவு ஏற்றுக் கொள்ளும் கட்டளைகளையே அவர் தருகின்றார். எனவே, நபி அல்லாஹ்வின் எந்தக் கட்டளைக்கு கட்டுப்படுகிறாரோ அதனையே (மக்களுக்கும்) தருகின்றார் என்று அறிவு ஒப்புக் கொள்கிறது. தீமைகளிலிருந்து தடுக்கின்றார்; நன்மைகளைக் கட்டளை இடுகின்றார். அவற்றிலிருந்து அவரே பின்வாங்க முடியாது. எனவே கலீஃபாவும் அந்த

நபிக்கு பிறகு அவரது இயக்கத்தை வழிநடத்துவதற்காக அல்லாஹ்விடமிருந்து மூஃமின்களின் ஓர் ஜமாஅத்தின் மூலம் நியமிக்கப்படுகிறார். அவரும், அந்த போதனைகளின்படி தொடர்ந்து வழிநடத்திக் கொண்டு செல்கிறார். அந்த போதனைகளோ அல்லாஹ்வுத்தஅலா நபியின் மூலம் நம்மை அடையச் செய்தவையாகும். மேலும் இக்காலத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பிற்கிணங்கவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அதனை தெளிவுபடுத்தினார்கள். ஆகவே இப்போது இந்த கிலாஃபத் அமைப்பு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் நிலைநிறுத்தப்பட்டு விட்டது. மேலும் இன்-ா அல்லாஹ்வுத்தஅலா கியாமத் வரை நிலைத்திருக்கும். அதில் சரீஅத் மற்றும் அறிவுற்கேற்பவே தீர்ப்பு செய்யப்படுகிறது. இன்சா அல்லாஹ். மேலும் அவ்வாறே செய்யப்பட்டு வரும். அதுவே நல்ல தீர்ப்பு ஆகும். ஏதாவது ஒரு நேரத்தில் காலத்தின் கலீஃபா தவறிழைத்தால் அல்லது தவறுதலாக புரிந்து கொண்டதால் ஏதாவது நஷ்டம் ஏற்படும் வாய்ப்புள்ள ஒரு தீர்ப்பை வழங்கி விட்டார் எனில் அல்லாஹ்வுத்தஅலா தானே. அதன் தீய விளைவு ஒருபோதும் ஏற்படாத அளவிற்கான ஏற்பாடுகளை செய்து விடுகிறான். இன்சா அல்லாஹ் ஒருபோதும் அதன் தீய விளைவு வெளிப்படாது.

**இது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

“சொந்த விவகாரத்தில் காலத்தின் கலீஃபாவிடமிருந்து ஏதாவது ஒரு தவறு ஏற்படலாம். ஆனால், ஜமாஅத்தின் பௌதீக மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கும் விவகாரங்களில் அவரிடமிருந்து ஏதாவது தவறு ஏற்பட்டாலும் கூட அல்லாஹ் தனது ஜமாஅத்தை பாதுகாப்பான். ஏதாவது ஒரு வகையில் அவருக்கு அவரது தவற்றைப் பற்றி தெரிவித்து விடுவான். சூஃபியாக்கள் இதனை இஸ்மத்தே ஸுகுரா – சிறிய களங்கமற்ற நிலை என்று கூறியுள்ளனர். நபிமார்களும் முற்றிலும் களங்கமற்றவர்களாக இருக்கும் நிலையை பெற்றுள்ளார்கள். ஆனால் கலீஃபாக்களுக்கு **இஸ்மத்தே ஸுகுரா** – சிறிய களங்கமற்ற நிலை கிடைக்கின்றது. ஜமாஅத்தின் அழிவிற்கு காரணமாக இருக்கும்



அப்படிப்பட்ட எந்த முக்கிய தவறையும் அல்லாஹ் அவர்களை செய்யவிடமாட்டான். அவர்களது தீர்ப்புகளில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட விசயத்தில் சாதாரண தவறுகள் ஏற்படலாம். ஆனால் இறுதி விளைவாக இஸ்லாத்திற்கே வெற்றி கிடைக்கும். மேலும் அவரது எதிரிகள் தோல்வியைத் தழுவுவார்கள். அவர்களுக்கு இஸ்மத்தே ஸுகுரா – சிறிய களங்கமற்ற நிலை கிடைத்தால் இறைவனது வழிமுறையும் அவர்களது வழிமுறையாகத்தான் இருக்கும். சந்தேகமின்றி பேசுபவர்கள் அவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களது நாவுகள்தான் அசையும். அவர்களது கைகள் வேலை செய்யும். அவர்களது மூளைதான் செயல்படும். ஆனால், இவை எல்லாவற்றிற்கும் பின்னால் இறைவனது கை இருக்கும். எனவே, சில குறிப்பிட்ட விசயங்களில் அவர்களிடமிருந்து சாதாரண தவறுகள் ஏற்படலாம். சில நேரங்களில் அக்கலீபாக்களின் ஆலோசகர் கூட அவருக்கு தவறான ஆலோசனையை வழங்கலாம். ஆனால்,இந்த இடைப்பட்ட தடைகளை கடந்து வெற்றி அவர்களுக்குத்தான் கிடைக்கும். எல்லா தொடர்களும் ஒன்று சேரும் போது அது சரியான வலுவான சங்கிலியாகிவிடும். எந்த சக்தியாலும் அதை உடைக்க முடியாது.” (தப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 376, 377)

பிறகு திருக்குர்ஆனில் வருகிறது. “மேலும் அவர்களுக்கு நீர் கட்டளையிட்டால் உடனே அவர்கள் வெளியேறி (யுத்தத்திற்காக) நிற்போம் என்று உறுதியாக சத்தியம் செய்கின்றனர். நீர் அவர்களிடம் கூறுவீராக: சத்தியம் செய்யாதீர்கள். (நல்ல முறையில்) பொதுவாகக் கட்டுப்பட்டு நடப்பதே போதுமானது. நிச்சயமாக அல்லாஹ் நீங்கள்செய்வதை நன்கறிவான்.” (24:54)

இந்த ஆயத்தின் முன்னுள்ள ஆயத்துகளிலும் கட்டுப்படுதல் என்ற கருத்தே கூறப்பட்டுள்ளது. முஃமின்கள் எப்போதும் நாங்கள் செவியுற்றோம். கட்டுப்பட்டோம்; ஈமான் கொண்டோம் என்றே கூறுகின்றனர். இந்த தக்வாவின் காரணத்தால் அவர்கள் அல்லாஹ்விற்கு நெருக்கமானவர் –களாகவும் ஆகி விடுகின்றனர். எனவே அவர்களே வெற்றி பெறுகின்றனர். எனவே, இந்த ஆயத்திலும் இதுவே கூறப்பட்டுள்ளது. நீங்கள் மூஃமின்களை போல செவியுறுங்கள்; கட்டுப்படுங்கள்; நல்ல முன்மாதிரியை காட்டுங்கள். நாங்கள் அப்படி செய்வோம்; இப்படி செய்வோம் என்று சத்தியம் செய்யாதீர்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்கு விளக்கமாக தஃப்ஸீரில் எழுதுகிறார்கள். நயவஞ்சகர்களும் அதிகம் வாதிடுகின்றனர். ஆனால் அசல் விசயம் செயல்ரீதியாக கட்டுபட வேண்டும் என்பதுதான். நயவஞ்சகர்களைப் போல பெரிய பெரிய வார்த்தைகளை கூறாதீர்கள். எனவே இங்கு அத்தகைய மக்களைப் பார்த்து கூறுகிறான். கட்டுப்படுதலே நல்ல வழிமுறையாகும். அது பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்படுதல் ஆகும். அத்தகைய கீழ்ப்படிதலில் நபி உங்களுக்கு சரீஅத்துக்கு மாற்றமான அறிவுக்கு மாற்றமான கட்டளைகளை நீங்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு பதிலாக தருவதில்லை. இதற்கு உதாரணம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். என்னுடன் பைஅத்தில் இணைந்து, என்னை நம்புபவராக இருப்பவர்கள் ஐவேளை தொழுகைகளை தொழும் வழக்கம் உள்ளவர் ஆகுங்கள். பொய்யை விட்டு விட்டு விடுங்கள். தற்பெருமையை விட்டு விடுங்கள். பிறர் உரிமையைப் பறித்தலை விட்டு விடுங்கள். ஒருவருக்கொருவர் அன்பு, நேசத்துடன் இருங்கள். இவையெல்லாம் அவருடைய நல்ல கட்டளைகளுக்கு கட்டுப்படுவோம் என்பதில் வருகிறது. இதனை அவர்கள் செய்யட்டும். அதுவன்றி அவர் இடுகின்ற கட்டளைகளையெல்லாம் சத்தியமிட்டுக் கொண்டு திரிவதன்று. அதே போன்று கலீஃபாக்களிடமிருந்தும் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு திட்டங்கள் உருவாகி வருகின்றன. மஸ்ஜிதுகள் மக்களால் நிரப்புதல் பற்றியும், தொழுகையை நிலைநாட்டுதல் பற்றியும் நமது நல்லொழுக்க நிலைகளை உயர்த்துவது பற்றியும், பரந்த ஓர் தைரியத்தை உருவாக்குவது பற்றியும், அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பது பற்றியும் ஆன்மீக முன்னேற்றங்களுக்கான திட்டங்கள் தரப்படுகின்றன. அல்லது பல்வேறு நிதித்திட்டங்கள் இருக்கின்றன. இவற்றில் அவருக்கு கட்டுபட வேண்டியது அவசியமாகும். மற்ற வார்த்தைகளில் கூறுவதானால் நல்ல விசயங்களில் கட்டுப்படுதல் என்ற வட்டத்தில் இந்த வி-யமும் வருகிறது. ஒரு நபி அல்லது கலீஃபா உங்களிடம் இறை கட்டளைக்கு மாற்றமான அறிவுக்குப்புறம்பான பணியை செய்யுமாறு கட்டளையிடமாட்டார். நீங்கள் நெருப்பில் குதியுங்கள் என்றோ கடலில் மூழ்கி விடுங்கள் என்றோ கூறமாட்டார். சென்ற குத்பாவில் ஒரு ஹதீஸில் நான் விளக்கியிருந்தேன். நெருப்பில் குதியுங்கள் என்று ஓர் படையின் தலைவர்



கூறினார். அது சம்பந்தமான தெளிவான இன்னொரு ரிவாயத் ஒன்று கிடைத்துள்ளது.

ஹஸ்ரத் அபூஸயீதுல் குத்ரி (ரலி) அவர்கள் ரிவாயத் செய்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்கமஹ் பின் முஜஸ்ஸிஸ் என்பவரை ஒரு யுத்தத்திற்கு புறப்படச் செய்தார்கள். அவர் தீர்மானிக்கப்பட்ட இடத்தை நெருங்கியதும் அல்லது வழியிலேயே அவர்களின் படையில் ஒரு பிரிவினர் (தனியாக செல்வதற்கு) அனுமதி வேண்டினர். அவர்களுக்கு அனுமதி வழங்கி விட்டு, அவர்களுக்கு அப்துல்லா பின் ஹுதாஃபா பின் கைஸ் அல்லஹ்மி என்பவரை அவர் அமீர் ஆக்கினார். (ரிவாயத் செய்பவர்) கூறுகிறார். நான் அவருடன் யுத்தத்திற்கு செல்பவர்களுடன் இருந்தேன். நான் வழியில் சென்று கொண்டிருந்து போது குளிர் காய்வதற்காக அல்லது சமைப்பதற்காக அம்மக்கள் நெருப்பு மூட்டினார்கள். அப்போது படையின் தலைவராக இருந்த அப்துல்லாஹ் என்பவர் (நகைச்சுவை உணர்வு உள்ளவர்) கூறினார். நீங்கள் எனது பேச்சை கேட்டு அதற்கு கட்டுப்படுவது உங்களுக்கு கடமையில்லையா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஏனில்லை? என்று கூறினர். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஹுதாஃபா அவர்கள் நான் உங்களுக்கு என்ன கட்டளையிட்டாலும் அதனை நிறைவேற்றுவீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஆம், நிறைவேற்றுவோம் என்று கூறினர்.

அப்துல்லாஹ் பின் ஹுதாஃபா கூறினார். நான் உங்களுக்கு கட்டளையிடுகிறேன். நீங்கள் இந்த நெருப்பில் குதியுங்கள். உடனே சிலர் எழுந்து குதிக்கத் தயாராகி விட்டனர். கிட்டத்தட்ட அவர்கள் நெருப்பில் குதிக்கத் தயாராகி விட்டதைப் பார்த்ததும், நில்லுங்கள் என்றார். (மக்கள் அதற்கும் மதிப்பளிக்கின்றனர் என்று தெரிந்ததும்) திரும்ப அவரே நில்லுங்கள் எனக் கூற வேண்டியதாயிற்று. பிறகு நாங்கள் அந்த யுத்தத்திலிருந்து திரும்பியதும், சஹாபாக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் இவ்விசயத்தைக் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அமீர்களில் எவர் அல்லாஹ்வுடைய கட்டளையை மீறுமாறு உங்களுக்கு கட்டளையிட்டாரோ அதற்கு நீங்கள் கட்டுப்பட வேண்டாம்.

(சுனன் இப்னிமாஜா கிதாபுல் ஜிஹாது பாப் லாதஅதி ஃபீ மஅஸியதில்லாஹ்)

நபி அல்லது கலீஃபா எப்போதாவது நகைச்சுவைக்காகக் கூட இதுபோன்ற விசயங்களை கூற முடியாது என்று இதிலிருந்து தெளிவாகிறது. எனவேதான் அல்லாஹ் கூறினான். தெளிவான கட்டளைக்கு மாற்றமான செயலை அமீரிடம் பார்த்தால் நீங்கள் அல்லாஹ் மற்றும் அவனுடைய ரஸூலின் பக்கம் திரும்புங்கள். இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பிறகு நேர்வழியில் நிற்கும் கிலாஃபத் அமைந்து விட்டது. எனவே காலத்தின் கலீஃபாவை சென்றடையுங்கள். அவரது தீர்ப்பு எப்போதும் மஃரூஃபான (நல்ல) தீர்ப்பாகவே இருக்கும் இன்சா அல்லாஹ். மேலும் அத்தீர்ப்பு அல்லாஹ் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கு ஏற்பவே இருக்கும். நான் முன்னரே கூறியது போன்று, நீங்கள் எப்போதும் நல்ல தீர்ப்பின் கீழேயே இருக்கிறீர்கள் என்ற நற்செய்தி தருகிறேன். உங்களுக்கு நன்மையற்ற எந்த தீர்ப்பும் செய்யப்படாது இன்சா அல்லாஹ்.

## பைஅத் செய்தவர்களிடம் ஏற்பட்டுள்ள ஆன்மீக மாற்றங்கள்

இதற்கு பிறகு நான் இன்னொரு விசயத்தை விளக்க விரும்புகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் சேர்ந்து, அவர்களிடம் பைஅத் செய்து, பைஅத்தின் பத்து நிபந்தனைகளின்படி பேணி நடப்பதாக உடன்படிக்கை செய்து அந்த நிபந்தனைகளின்படி செயல்படுத்தியும் காட்டப்பட்டு விட்டதா? கட்டுப்படுதலின் முன்மாதிரியும் காட்டப்பட்டு விட்டதா? அல்லது நாம் பைஅத் செய்கிறோம் என்று வெறும் வாய் சொல்லை செலவழித்தது மட்டும்தானா? பைஅத் செய்தவர்களிடம் என்ன ஆன்மீகப் புரட்சிகள் ஏற்பட்டன? என்பது, நான் எடுத்து வைக்கின்ற சில முன்னுதாரணங்களின் மூலம் தெரிய வரும். இந்த மாற்றங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலும் இக்காலத்திலும் கூட தென்படுகின்றன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“நான் ஆணையிட்டுக் கூறுகிறேன். என் மீது உண்மையான உள்ளத்துடன் ஈமான் கொண்டுள்ள குறைந்தபட்சம் ஒரு லட்சம் பேர் எனது



ஜமாஅத்தில் இருக்கின்றார்கள். அவர்கள் நற்செயல்களைச் செய்கின்றனர். விசயங்களைக் கேட்கும்போது அவர்கள் எந்த அளவு அழுகின்றனர் என்றால் அவர்களது கழுத்துக்கூட (கண்ணீரால்) நனைந்து விடுகின்றது.”

(சீரத்துல் மஹ்தி தொகுதி 1 பக்கம் 146)

## ஷிர்க்கிலிருந்து விடுபடுதல்

ஒரு நிபந்தனை, நாங்கள் ஷிர்க்கிலிருந்து விலகி இருப்போம். நமது ஆண்கள் மட்டுமல்ல, நமது பெண்களும் கூட அத்தகைய உயர்வான தகுதியை நிலைநிறுத்தியுள்ளனர். மேலும் மேலான முன்மாதிரியைக் காட்டுகின்றனர். அவர்களைப் பார்த்து நமது உள்ளம் (நன்றிப் பெருக்கில் இறைவனைப்) புகழ்வதால் நிறைந்து விடுகிறது. எத்தகயை புரட்சி வந்துள்ளது என்பதைப் பார்த்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்காக துஆ வெளிப்படுகிறது.

ஹஸ்ரத் சவுத்ரி முஹம்மத் ஸஃபருல்லாஹ் சாஹிப் உடைய தாயாருக்கு ஷிர்க்கின் மீது எத்தகைய வெறுப்பு இருந்தது என்று காட்டுகின்ற முன்மாதிரியான ஒரு சம்பவம். அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னாருடைய ஆண் குழந்தைகள் அடுத்தடுத்து இறந்து கொண்டிருந்தன. ஒருமுறை அவர்களுடைய ஓர் ஆண் குழந்தை நோயுற்றிருந்த போது குழந்தைக்கு சிகிச்சை செய்யப்பட்டது. ஒரு மனிதன் தஃவீஸைக் கொடுத்து விட்டு சென்றார். இன்னொரு பெண் ஒரு தஃவீஸை குழந்தையின் கழுத்தில் கட்டிவிட விரும்பினாள். குழந்தைகயின் தாயார் தஃவீஸை பிடுங்கி அடுப்பிலிருந்த நெருப்பில் வீசி விட்டு, என்னைப் படைத்தவனும், அரசனுமாகிய இறைவனிடமே நான் நம்பிக்கை வைத்துள்ளேன். நான் இந்த தஃவீஸுக்கு எந்த முக்கியத்துவமும் அளிக்கப்போவதில்லை என்று கூறினார். குழந்தைக்கு இரண்டு மாதமானபோது, அதே பெண் மீண்டும் சந்திக்க வந்தாள். குழந்தையை சிறிது அன்போடு விசாரித்து விட்டு அவர்களிடம் சிறிது துணிகளும், பொருளும் வேண்டினாள். அதன் மூலம் ஸஃபருக்கு ஏற்பட்டுள்ள கெடுதிகளை நீக்கி விடுவதாகவும் கூறினாள். அன்னார் பதில் கூறினார்கள். நீங்கள் ஏழை விதவைப் பெண்ணாக இருக்கிறீர்கள். நீங்கள் ஸதகாவாக – தர்மமாக ஏதேனும் கேட்டால் என் வசதிற்கேற்ப ஏதாவது

உங்களுக்கு தர தயாராக இருக்கிறேன். ஆனால் நான் இந்த மாந்திரீக வேலைகளை நம்புபவள் அல்ல.

நான் அல்லாஹ்வை மட்டுமே மரணம் மற்றும் வாழ்வின் அதிபதியாக நம்புகிறேன். வேறு எவருக்கும் இவ்விசயங்களில் எந்தவொரு அதிகாரமும் இருக்கின்றது என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே இவ்விசயத்திற்காக நான் உங்களுக்கு எதுவும் தர தயாராக இல்லை. இதைக் கேட்டு அந்தப் பெண் கூறினாள். சரி, யோசித்துக் கொள்ளுங்கள். குழந்தை உயிரோடு இருக்க வேண்டும் என்று விரும்பினால், எனது வேண்டுகோளை நிறைவேற்றி ஆக வேண்டும்.

சில நாட்களுக்கு பிறகு அன்னார் தமது குழந்தையான ஸஃபரை குளிப்பாட்டிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த மந்திரவாதிப் பெண் வந்தாள். குழந்தையைச் சுட்டிக்காட்டி விசாரித்தாள். இவர்தானா? அன்னார் ஆம் என்றார்கள். பிறகு அப்பெண் மீண்டும் முன்னர் வைத்த அதே வேண்டுகோளை வைத்தாள். அன்னார் அப்போதும் முன்பு கூறிய அதே பதிலையே தந்தனர். இதனால் அவள் சற்று தடுமாறிக் கூறினாள். சரி, குழந்தையை உயிரோடு வீட்டிற்கு எடுத்துச் சென்று விட்டீர்கள் எனில், நான் பொய் சொல்லி இருந்தேன் என்று கருதிக் கொள்ளுங்கள். அன்னார் அதற்குப் பதிலாக கூறினார்கள். இறை விருப்பம் எதுவோ அதுவே நடக்கும். அப்பெண் வீட்டை விட்டு வெளிவாசல் வரை செல்லுமுன், குளிப்பாட்டிக் கொண்டிருக்கும்போதே ஸஃபருக்கு இரத்த வாந்தி வந்தது. அத்துடன் மலமும் இரத்தமாக வந்தது. சில நிமிடங்களில் குழந்தையின் நிலை மிகவும் கவலைக்கிடமாயிற்று. சில மணி நேரத்திற்குப் பிறகு அது இறந்தும் போயிற்று. அன்னார் அல்லாஹ்வுடைய சமூகத்தில் துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! நீயே தந்தாய். நீயே எடுத்துக் கொண்டாய். உனது விருப்பத்திற்கு கட்டுப்படுகிறேன். நீயே எனக்கு பொறுமையை வழங்குவாயாக. அதற்குப் பிறகு அந்த பழைய ஆடைகளுடன் திரும்பி வந்து விட்டார். (அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 11, பக்கம் 15, 16)

பாருங்கள்! இதற்குப் பிறகு அல்லாஹ்வுத்தஅலா எந்த அளவுக்கு அருட்களை வழங்கினான். பிறகு அவர்களுக்கு மகனாக சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்களைத் தந்தான். அவர்கள் நீண்ட



ஆயுளைப் பெற்றவராகவும் உலகில் ஒரு பெயரை உருவாக்கியவராகவும் இருந்தார்கள்.

## மன உணர்ச்சிகளிலிருந்து பாதுகாப்பை பெறுதல்

பிறகு பைஅத் செய்த பிறகு மன விருப்பங்களிலிருந்து மக்கள் எந்த அளவு பாதுகாப்பைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதற்கு நான் அக்காலத்தில் இருந்ததல்ல. இக்காலத்தின் உதாரணத்தை தருகிறேன். அது ஆப்பிரிக்கா மக்களின் உதாரணம். ஆப்பிரிக்காவில் பேகன் என்ற ஒருவகை மக்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் அசுத்தமான தீய சடங்குகளும், பழக்கவழக்கங்களும் காணப்படுகின்றன. ஆனால் அஹ்மதிய்யத்தில் நுழைந்ததும் அவர்கள் எந்த அளவுக்கு அவற்றிலிருந்து முற்றிலும் திரும்பி விடுகின்றனர் என்றால் – தமக்குள் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்றால் – ஒருபோதும் தங்களிடம் அத்தீமைகள் இருந்ததே இல்லை என்று நினைக்கும் அளவுக்கு மாறி விடுகின்றனர். குடிகாரர்கள் ஒரேடியாக தமது போதை பொருட்களை வெறுத்து ஒதுக்கத் தொடங்கி விட்டனர் என்ற தகவல்களும் வருகின்றன. மற்றவர்கள் மீதும் அதன் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இவ்வி–யங்களை மவ்லவிமார்களிடம் கூறும்போது அஹ்மதிய்யத் இவர்கள் மீது சூனியம் செய்து விட்டது. எனவே தான் இவர்கள் குடியை விட்டு விட்டார்கள் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இன்னொரு சம்பவம் எனக்கு ஞாபகம் வருகிறது. ஒரு கொள்கை பரப்புநர் என்னிடம் கூறினார். கானாவிலும் ஓர் அஹ்மதி இருக்கிறார். அவர் மீது எல்லா வகை தவறுகளும் காணப்பட்டன. குடி, விபச்சாரம் எல்லா வகையான தவறுகளும் இருந்தன. அங்குள்ள ஒரு வழக்கம் என்னவென்றால், வறுமையின் காரணத்தால் பொருளாதார குறைவினால் பெரிய பெரிய வீடுகளில் ஒரே ஓர் அறையை மட்டும் வாடகைக்கு எடுத்துக் கொள்கின்றனர். இவ்வாறு தங்குகிற வழக்கம் உள்ளது. இம்மனிதரும் அத்தகைய ஒரு சூழலில் வசிப்பவர்தான். பெண் சிநேகிதம் இருந்தது. ஆனால் அஹ்மதிய்யத்தை ஒப்புக்கொண்டதும் அவர்கள் எல்லோரிடமும், எந்த ஒரு தவறான வேலைக்காகவும் என்னிடம் வராதீர்கள் என்று கூறி விட்டார். ஆனால் ஒரு பெண் மட்டும் அவரை விடத் தயாராக இல்லை.

எனவே (அவளிடம் இருந்து தப்ப) அவர் ஒரு வழியைக் கையாண்டார். அவளை தூரத்தில் வருவதைப் பார்த்ததும் கதவை தாழிட்டுக் கொண்டு நஃபில் தொழ ஆரம்பித்து விடுகிறார். அல்லது குர்ஆன் ஓதத் தொடங்கி விடுகிறார். இவ்வாறு அவர் தன்னைத்தானே பாதுகாத்துக் கொண்டார். இந்த புரட்சியைத்தான் அஹ்மதிய்யத் கொண்டு வந்துள்ளது.

பிறகு நமது ஒரு முபல்லிக் மவ்லானா பஷீர் அஹ்மத் சாஹிப் கமர். அவர் கூறிகிறார். நான் கானா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆட்களுடன் ஓர் ஈத் தொழுகைக்குப் பிறகு பேராமவுண்ட் chief ஐ சந்திக்கச் சென்றேன். அவர் தனது ஆட்களுடன் என்னை எதிர்பார்த்து இருந்தார். நாங்கள் உள்ளே நுழைந்ததும் அஹ்மதி நண்பர்கள், chief-கள் மற்றும் அவர்களுடன் இருந்தவர்கள் முன்னிலையில் உணர்வுடன் பாடத் தொடங்கினர். ஒரு வயதான அஹ்மதி ஒருவர் chief-ற்கு அருகில் அமர்ந்திருந்தார். அவர் மிகவும் ரசனையுடன் பாடிக்கொண்டிருந்தார். அவருடன் அமர்ந்திருந்த ஏறக்குறைய 300 மற்ற அஹ்மதி நண்பர்களும் அவர்கள் பாடிய அதே வரிகளை மீண்டும் திரும்பப் பாடினர். நான் இந்த பாட்டின் பொருளை மொழிபெயர்ப்பாளரிடம் விசாரித்த போது அவர் கூறினார். இதில் அல்லாஹ்வின் அருளையும் அஹ்மதிய்யத்தின் பரக்கத்துகளையும் பற்றியும் பாடுகிறார்கள். அவர்கள் (இப்பாட்டில்) கூறுகின்றனர். நாங்கள் இணை வைப்பவர்களாகவும் சிலை வணங்கிகளாகவும் இருந்தோம். எங்களுக்கு ஹலால்-ஹராம் நன்மை-தீமை குறித்த எந்த அறிவும் இருந்ததில்லை. எங்கள் வாழ்வு முற்றிலும் மிருகத்தனமாக இருந்தது. நாங்கள் காட்டுமிராண்டிகளாக இருந்தோம். மதுவை தண்ணீரைப் போல அருந்தினோம். அஹ்மதிய்யத் எங்களுக்கு நேர்வழியைக் காட்டியது. எங்கள் தீமைகள் எங்களிடம் இருந்து மறைந்து விட்டன. நாங்கள் மனிதனாகி விட்டோம். இவர்களின் முந்தைய பழக்கவழக்கங்கள் பற்றியும் நடவடிக்கைகள் பற்றியும் நன்கு அறிந்திருந்த தங்களது நகரத்தை சார்ந்திருந்த தமது பேராமவுண்ட் chief மற்றும் மற்ற பெரியவர்களின் முன்னால் இம்மக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள மாற்றத்தை மிகவும் தைரியத்துடன் விளக்கிக் கூறி அவற்றை ஜமாஅத்தின் உண்மைக்கு ஆதரவாக எடுத்து வைத்தனர்.

(மாஹ்னாமா அன்ஸாருல்லாஹ் ஜனவரி 1984 பக்கம் 30)



## தொழுகையைப் பேணுவதிலும் தஹஜ்ஜுத் தொழுவதிலும் உள்ள ஆர்வம்

பிறகு தொழுகைகளை பேணுதல், தஹஜ்ஜுத் தொழுது வருதல் பற்றி கூட பைஅத் நிபந்தனைகளில் கட்டளை உள்ளது. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“என்னிடம் பைஅத் செய்தவர்கள் சீர்திருத்தம் மற்றும் தக்வாவில் நாளுக்கு நாள் முன்னேறுவதை நான் பார்க்கிறேன். மேலும் முபாஹலாவின் நாட்களுக்குப் பிறகு நம்முடைய ஜமாஅத்தில்ஒரு புதிய உலகம் உருவாகி விட்டது. பெரும்பாலானவர்கள் சஜ்தாவில் அழுபவர்களாகவும் தஹஜ்ஜுத் தொழுகைகளில் இறைவனிடம் மனமுருகி மன்றாடிப் பிரார்த்திப்பவர்களாகவும் இருக்கின்றனர். தூய்மையற்ற உள்ளத்தை கொண்ட மக்கள் அவர்களை காஃபிர்கள் என்கின்றனர். ஆனால் அம்மக்களே இஸ்லாத்தின் உயிர் துடிப்பும், இதயமும் ஆக இருக்கின்றனர்.”

(அன்ஜாமே ஆத்தம், ரூஹானி கஸாயின் தொகுதி 11 பக்கம் 315)

இங்கு நான் கானாவின் ஓர் உதாரணத்தை தருகிறேன். இங்குள்ள மக்கள் எத்தகைய மாற்றங்களை தமக்குள் ஏற்படுத்தி இருக்கின்றனர் எனில், நான் எனது அனுபத்திலேயே பார்த்துள்ளேன். நீண்ட பயணம் செய்து வந்தனர். இரவில் தாமதமாக சென்று அடைகின்றனர். 12.00 மணி வாக்கில் தூங்குவதற்கு வாய்ப்பு கிடைத்தது. இரவில் கண் விழித்து பார்த்த போது ஒன்றரை அல்லது இரண்டு மணி இருக்கும் மஸ்ஜிதில் உட்கார்ந்திருந்தனர். சஜ்தா செய்பவர்களாக இருக்கின்றனர்.

பிறகு ஒரு ரிவாயத் வருகிறது. ஹஸ்ரத் முன்ஷி முஹம்மத் இஸ்மாயில் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “எனக்கு ஒரே ஒரு தொழுகையை மட்டும் நான் ஜமாஅத்தோடு தொழ முடியாமல் போய் விட்டதாக நினைவில் இருக்கிறது. அதுவும் கூட ஓர் அவசிய தேவைக்காக பைத்துல் திக்ர்-ல் இருந்து எனக்கு திரும்பி வர வேண்டியதாயிற்று.”

(அஸ்ஹாபே அஹ்மத் பாகம் 7, பக்கம் 196)

பிறகு ஹஸ்ரத் முன்ஷி முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் பற்றிய வி-யம் தான். “ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத்

செய்து விட்டு தன்னுடைய சியால்கோட் நகருக்கு திரும்பினார்கள். திரும்பியதிலிருந்து அவரது தீய பழக்கங்களான சீட்டு விளையாடுதல், கடை வீதியில் அமர்ந்து வம்பளத்தல் போன்ற எல்லாவற்றையும் விட்டு விட்டதாக மக்கள் பார்த்தனர். தஹஜ்ஜுத் முறைப்படி தொழத் தொடங்கினார். அவர்களின் நிலையில் ஏற்பட்ட அசாதாரண மாற்றம் கண்டு மக்கள் வியந்தனர்.” (அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 1 பக்கம் 200)

காதியானில் தொழுகைகள் மற்றும் தஹஜ்ஜுத் தொழுகைகள் முறையாக பேணப்படுவது தொடர்பாக ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலிகான் சாஹிப் கூறுகிறார்கள்:

“நான் காதியானில் சூரிய கிரகணம் ஏற்பட்ட நாளில் தொழுகையில் கலந்து கொண்டேன். மவ்லவி முஹம்மது அஹ்ஸன் சாஹிப் அம்ரூஹி தொழுகை நடத்தினார்கள். தொழுகையில் கலந்து கொண்டவர்கள் அதிகமாக அழுது கொண்டிருந்தனர். அந்த ரமலானின் நிலை எப்படியிருந்தது எனில், அதிகாலை இரண்டு மணியில் இருந்து அஹ்மதிய்யா வட்டாரம் பரபரப்பாக காணப்பட்டது. பெரும்பாலோர் வீடுகளில், சிலர் மஸ்ஜித் முபாரக்கிலும் தஹஜ்ஜுத் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். ஸஹர் உணவு உண்ணப்பட்டன. சுபுஹின் ஆரம்ப வேளையில் சுபுஹ் தொழுகை நடந்தது. அதன் பிறகு சிறிது நேரம் திருக்குர்ஆன் திலாவத் செய்யப்பட்டது. ஓர் எட்டு மணிக்கு பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நடப்பதற்காக வெளியில் வந்தார்கள். எல்லா இளைஞர்களும் கூட சென்றனர். இது பதினொன்று பன்னிரெண்டு மணி வாக்கில் முடிந்தது. அதற்குப் பிறகு ளுஹர் தொழுகை முடிந்தது. அதற்குப் பிறகு ளுஹர் பாங்கு சொல்லப்பட்டது. மதியம் ஒரு மணிக்குள் ளுஹர் தொழுகை முடிந்தது. பிறகு அஸர் தொழுகையும் அதன் ஆரம்ப வேளையிலேயே தொழப்பட்டது. அஸருக்கும் மக்ரிபுக்கும் இடையில் ஓய்வுக்கான நேரம் கிடைத்தது. மக்ரிபுக்குப் பிறகு உணவு உண்டு முடித்து விட்டு எட்டு எட்டரை மணி வாக்கில் இசா தொழுகை முடிந்தது. பிறகு அங்கு வீடுகளே இல்லாதது போன்ற ஒரு நிசப்தம் ஆகி விடும். ஆனால் இரவு இரண்டு மணி வாக்கில் எல்லோரும் விழித்துக் கொள்கின்றனர். ஒர பரபரப்பு ஏற்பட்டு விடுகிறது.” (அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 2 பக்கம் 77)



பிறகு நவாப் முஹம்மத் அப்துல்லாஹ் கான் சாஹிப் பற்றி ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒரு விசயத்தை எழுதுகிறார்கள்:

“அவர் தொழுகையை மிகவும் விரும்பக்கூடியவர்களாக இருந்தார்கள். குறிப்பாக, தொழுகையை ஜமாஅத்துடன் நிலைநாட்டுவதில் அவருக்கிருந்த உணர்வும் முயற்சியும் குறிப்பிடத்தக்கது. ஐவேளையிலும் மஸ்ஜிதுக்கு செல்லக் கூடியவர். அன்னார் இதய நோயால் படுக்கையில் இருக்க வேண்டிய நிலையில் வந்தபோதும் கூட அதான் (பாங்கு) சப்தம் கேட்டு விட்டால், நேசிப்பவர் ஒருவர் தனது நேசத்திற்குரியவரின் குரலை கேட்பது போல் அதனைக் கேட்டு வந்தார்கள். சிறிதளவு நடக்க முடிந்தால் சில நேரங்களில் வீட்டிலுள்ள சிறுவர்களில் எவரையாவது பிடித்து முன்னால் (இமாமாக) நிற்க வைத்து ஜமாஅத்தாக தொழுது அதன் மூலம் மன அமைதி பெறுவார்கள். அல்லது ரத்தன் பாசிலுள்ள தொழுகைக்கான அறைக்கு அருகிலேயே தனது நாற்காலியை இழுத்துக் கொண்டு சென்று அதில் அமர்ந்தவாறு ஜமாஅத்தான தொழுகைகளில் கலந்து கொள்வார்கள். மாடல் டவுணிலுள்ள தங்களது பெரிய வீட்டிற்குச் சென்ற போது ஐவேளை தொழுகையையும் அங்கேயே ஜமாஅத்தாக தொழுவதற்கு ஏற்பாடு செய்து வீட்டேயே ஒரு பள்ளியாக்கி விட்டார்கள். ஐந்து வேளையும் அதானும் கொடுத்தார். தட்பவெப்ப நிலையைப் பொறுத்து சில வேளைகளில் வெளியில் புல்வெளியிலும், சில நேரங்களில் அறைக்குள் பாய்களை விரித்தும் தொழுகைக்கு ஏற்பாடு செய்து கொண்டார்கள். பெரும்பாலான நேரங்களில் பள்ளிவாசலுக்கு வரும் முதல் தொழுகையாளியாக அவர் இருப்பார். மற்ற தொழுகையாளிகளை எதிர்பார்த்து காத்திருப்பவராக விளங்கினார். பலதரப்பட்ட மக்களுக்காகவும் தங்களது தங்கும் இடத்தை ஐவேளை மக்கள் வந்து போகக்கூடிய இடமாக ஆக்குவது ஒரு சாதாரண நற்செயல் அன்று. சிறப்பாக, வீட்டின் வாழ்வாதாரம் உயர்ந்ததாகவும் அவருடைய சமூகத் தொடர்பின் வட்டம் மிகப் பரந்ததாகவும் இருக்கும் நிலையில் அன்னாரின் இந்த நற்செயல் இன்னும் அதிக மதிப்பை பெற்றது.”

(அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 12 பக்கம் 152-153)

ஐவேளை தொழுகையை முறையாகப் பேணுதல் தொடர்பாக ஹஸ்ரத மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஹஸ்ரத் சைக் ஹாமித் அலி சாஹிப் (ரலி) அவர்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்:

“சைக் ஹாமித் அலி அவர்களிடம் நான் அல்லாஹ்வுக்காக நேசம் வைத்துள்ளேன். இவர் ஸாலிஹான இளைஞராவார். ஸாலிஹான குடும்பத்தைச் சேர்ந்தவருமாக இருந்தார். கிட்டத்தட்ட ஏழு எட்டு வருடம் எனக்கு பணிவிடை செய்து வருகிறார். என்னுடன் கலப்பற்ற தன்மையும், பிரியமும் கொண்டுள்ளார் என்று உறுதியாக நான் அறிகறேன். தக்வாவின் நுட்பமான பகுதி வரை சென்றடைதல் இறைஞானிகள், ஸாலிஹீன்களின் வேலையாகும். ஆனால் சுன்னத்தை பின்பற்றுதல் மற்றும் மென்மை, தக்வாவில் எந்த அளவுக்கு அவர் மூழ்கி இருந்தார் எனில், நான் அவரை பார்க்கிறேன். கடுமையான மரண நோய் அவரைப் பிடித்திருப்பதாக தெரிந்த வேளையிலும் கூட அவர் பலஹீனமாகி, மெலிந்து மய்யித்தைப் போன்று ஆகி விட்டிருந்த அந்த நிலையிலும் கூட ஐவேளை தொழுகைகளை முறையாக பேணுவதில் அவர் எவ்வளவு வேகமாக இருந்தார் என்றால், மயக்கமுற்ற நிலையிலும் மிகவும் இக்கட்டான சங்கடமான நிலையிலும் எவ்வாறு முடியுமோ அவ்வாறு அவர் தொழுது வந்தார். மனிதனுடைய இறை உணர்வைப் புரிந்து கொள்வதற்கு, அவர் எந்த அளவு தொழுகையை முறையாக பேணுகின்றார் என்று பார்ப்பது போதுமானதாகும் என்பதை நான் அறிவேன். எவர் முழுக்கவனத்துடன் தொழுகையை நிறைவேற்றுகின்றாரோ அவரது தொழுகையை பயம், நோய், குழப்பம் ஆகியவை கூட தடுக்க முடியவில்லையெனில், அவர் இறைவன் மீது உண்மையான ஈமான் வைத்துள்ளார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் இந்த ஈமான் ஏழைகளுக்கு தரப்படுகிறது. செல்வந்தர்களில் இந்த நிஃமத்தை பெற்றவர்கள் மிகக் குறைவானவர்களே.”

(இஸாலா அவ்ஹாம் ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 540)

பிறகு தொழுகையை இறைவன் மற்றும் அவனது ரஸூலின் கட்டளைக்கேற்ப ஐவேளையும் விடாமல் தொழுது வருவேன் என்று ஒரு நிபந்தனை இருக்கிறது. (இதுபற்றி மிர்ஸா அய்யூப் சாஹிப் (ரலி) அவர்களின் முன்னுதாரணம் இவ்வி-யத்தில் எப்படி இருந்தது என்பதைப் பற்றி மவ்லவி ஃபஸ்லே இலாஹி சாஹிப் என்ற ஒரு பெரியவர் இவ்வாறு விளக்குகிறார்கள்.



“ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் அய்யூப் பேக் சாஹிப் அவர்கள் மீது மிகுந்த அன்பு இருந்தது. ஒருநாள் நான் மக்ரிப் தொழுகையை மிர்ஸா அய்யூப் பேக் சாஹிபுடைய கூடாரத்தில் தொழுதேன். ஹஸ்ரத் முஃப்தி முஹம்மத் சாதிக் சாஹிப் (ரலி) அவர்களும் அங்கு இருந்தார்கள். மிர்ஸா அய்யூப் பேக் சாஹிபுடைய தொழுகை அஸ்ஸலாத்து மிஃராஜில் மூஃமினீன (தொழுகை மூஃமின்களின் மிஃராஜ்) என்பதற்கு ஏற்ப இருந்தது. தொழும்போது உலக எண்ணங்களை விட்டு விடுவார்கள். அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருக்கும். அன்று அவர்கள் வழக்கத்துக்கு மாறாக நீளமாக தொழுதார்கள். தொழுகை முடிந்து மக்கள் அனைவரும் அமர்ந்ததும் மிர்ஸா (அய்யூப்) சாஹிபிடம் மக்கள், தொழுகையை தாங்கள் மிகவும் நீட்டி விட்டீர்களே, என்ன காரணம்? என்று கேட்ட போது, முதலில் அவர்கள் எதுவும் கூறவில்லை. மீண்டும் வற்புறுத்தப்பட்ட போது கூறினார்கள். நான் தரூத் ஓதும்போது எனக்கு கஷ்ஃப் (ஆன்மீகக் காட்சி) ஒன்று காட்டப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பிளாட்பாரத்தில் இங்குமங்கும் நடந்தவாறு துஆ செய்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் (மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப்) அந்த துஆவின் அரபு சொற்களையும் கூறி அதன் பொருளையும் கூறினார்கள். அதன் பொருள்: என் இறைவா! என் உம்மத்தை வழிகேட்டில் இருந்து காப்பாற்றுவாயாக! இந்தக் கப்பலை கரை சேர்ப்பாயாக! என்பதாகும். நான் இந்த துஆவுக்கு ஆமீன் கூறிக் கொண்டிருந்தேன். பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களைப் பார்த்தேன். என் இறைவா! முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய துஆவை ஒப்புக் கொள்வாயாக! அவர்களின் உம்மத்தை வழிகேட்டின் வெள்ளத்தின் சுழற்சியிலிருந்து பாதுகாப்பாயாக என்று அவர்கள் துஆ கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இந்த துஆவை முடித்தபோது நானும் எனது தொழுகையை முடித்தேன்.”

(அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 1, பக்கம் 194,195)

விழித்திருக்கும் போதும் இந்த தரிசனங்கள் கிடைத்தது ஒரு புரட்சியாகும். பிறகு ஹஸ்ரத் டாக்டர் மிர்ஸா யாகூப் பேக் சாஹிப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அய்யூப் பேக் ஸாஹிப்இருவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது

(அலை) அவர்களிடம் பைஅத் செய்ததனால் என்ன தாக்கம் ஏற்பட்டது? இதுபற்றி ஒரு ரிவாயத் உள்ளது. அதாவது அவர்களே கூறுகின்றனர்.

“எங்களது தந்தை தனது நண்பர்களிடம் கூறினார். எனது இரு மகன்கள் 1892 மற்றும் 1893 ஆண்டுகளில் கோடை விடுமுறைக்காக முல்தான் மாவட்டத்திலுள்ள கக்கர்ஹடா என்ற இடத்திலுள்ள என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களுடைய நிலைமையில் ஒரு மிகப்பெரிய மாற்றம் இருந்ததை நான் கண்டேன். அதைக் கண்டு எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டது. நான் வியப்பில் கூறினேன். இறைவா! இவர்களுடைய உள்ளங்களில் இத்தனை மாற்றங்கள் ஏற்படும் அளவிற்கு என்ன ஒரு காரணியை இவர்களுக்கு நீ ஆயத்தம் செய்து தந்து விட்டாய்? இவர்கள் நூருன் அலா நூர் (ஒளிக்கு மேல் ஒளியாக) ஆகிவிட்டார்களே! எல்லா தொழுகைகளையும் தொழுகிறார்கள் அதுவும் சரியான நேரத்தில், ரசனையுடனும், பிரியத்துடனும் , உருக்கத்துடன் கண்ணீர் வழிய லயித்துப் போய் தொழுகிறார்கள். பெரும்பாலும் அவர்கள் முகத்தை கண்ணீர் வழியும் நிலையிலேயே பார்க்கிறேன். இறையச்சத்தின் அறிகுறிகள் அவர்களின் முகத்தில் வெளிப்படுகின்றன. அவ்வேளையில் எனது மகன்கள் மிகவும் சிறிய வயதை உடையவர்கள். தாடியே அப்போது தான் முளைக்கத் தொடங்கி இருந்தது. இந்த வயதில் அவர்களை இந்த நிலையில் கண்டு நான் சோர்வு அடையவில்லை. மாறாக நன்றி ஸஜ்தாக்கள் செய்தேன். முன்பிருந்த அவர்களின் ஆன்மீக நிலையின் பலஹீனம் கண்டு என் உள்ளத்தில் ஏறியிருந்த சுமை இறங்கி விட்டது.

பிறகு என் தந்தையார் அந்த நண்பரிடம் கூறினார்கள். இவர்களுக்கு இந்த சின்னஞ்சிறிய வயதிலேயே இத்தகை அருளும் ஆன்மீக பரக்கத்தும் இவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது. இந்த உயர் தர மாற்றம் எப்படி உருவானது என்ற ரகசியம் எனக்கு திறக்கவில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு தான் அவர்கள் இந்த நேர்வழியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததன் மூலம் பெற்றனர் என்பது தெரிய வந்தது. மேலும் எங்கள் தந்தையார் ஹஸ்ரத் சாஹிபிடம் பைஅத் செய்ததற்கு முக்கியமான ஒரு காரணம் எங்களிடம் ஏற்பட்டிருந்த தூய மாற்றமேயாகும். (அதாவது குழந்தைகளிடம் ஏற்பட்ட தூய மாற்றம்



தந்தையை அஹ்மதியாக்கியது– ஹுஸூர் அவர்கள் (சிறுவர்கள்) அவருக்கு (தந்தைக்கு) ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் தூய்மை, பரிசுத்த உள்ளம் குறித்து மதிப்பீடு செய்வதற்கான வாய்ப்பைத் தந்தனர்.”

(அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 1 பக்கம் 186)

ஹஸ்ரத் சவுத்ரி நஸ்ருல்லா கான் சாஹிப் அவர்கள் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் தந்தையாவார். அவர்களுடைய ஒரு முன்மாதிரியை அவர்களின் ஒரு மகன் கூறுகிறார்:

“என் தந்தை சவுத்ரி நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் தொழுகையை மிகவும் கவனத்துடன் நிலை நிறுத்தி வந்தது சிறு வயதிலேயே என் இயல்பில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. மேலும் தஹஜ்ஜுத்தும் தொடர்ச்சியாக தொழுது வந்தார்கள். பெரும்பாலும் எனது தந்தையின் தொழுகையும் குர்ஆன் ஓதுதலும் ஆன தோற்றமும் எப்போது என் நினைவில் வருகிறது. மஸ்ஜித் எங்கள் இடத்தில் இருந்து மிகத் தூரத்தில் இருந்தது. எனவே சுபுஹ் வேளையில் எனது தந்தை கடும் இருட்டிலேயே வீட்டில் இருந்து புறப்பட்டு விடுபவராக இருந்தார்கள்.” (அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 1 பக்கம் 163)

பிறகு தொழுகையை விடாமல் நிறைவேற்றுதல் குறித்து ஒரு முன்மாதிரியை எடுத்து வைக்கிறேன். இது ஹஸ்ரத் பாபுஃபகீர் அலி சாஹிப் (ரலி) அவர்களுடைய சம்பவமாகும். கைகள் வேலை செய்து கொண்டிருந்தாலும் உள்ளம் தனது அன்பான நண்பனாகிய இறைவனை நினைவு கூர்கிறது என்பதற்கிணங்க அவர்கள் செயல்பட்டார்கள். எம். பஷீர் அஹ்மத் சாஹிப் விளக்குகிறார்கள்:

“அக்காலம் ஆங்கிலேயே ஆதிக்கம் அதிகமாக இருந்த காலம் ஆகும். ஓர் அதிகாரி அவர்களிடம் கூறினார். மவ்லவி சாஹிப் எப்பொதும் தொழுது கொண்டேயிருக்கிறீர்கள். எதுவும் நடவடிக்கை எடுக்க வைத்து விடாதீர்கள். அவரது இந்த வார்த்தைகளால் அவர்களுக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. ஒருநாள் (அலுவலகத்தின்) கதவு, ஜன்னல்களை மூடினார்கள். அவர் அருகே சென்று கூறத் தொடங்கினார்கள். அந்த அதிகாரி பயந்து என்னை தாக்கி விடாதீர்கள் என்று கூறினார். எனது நோக்கமும் அதுவல்ல என்று அவருக்கு நம்பிக்கை ஊட்டிவிட்டு உங்களிடம் நான் தனியாக சில விசயங்களை கூற விரும்புகிறேன் என்று கூறி விட்டு, தாங்கள்

அலுவலகத்தில் கழிப்பிடம் செல்வதற்கென்று நேரத்தை செலவிடுகின்றீர்கள். இவ்வாறே தேனீர் குடிப்பதற்கும், சிகரெட் பிடிப்பதற்கும் நேரத்தை செலவிடுகின்றீர்கள். பிறகு என்மீது ஏன் குற்றம் சாட்டுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் அதெல்லாம் உடல்கூறின் தேவையாகும் என்றார். அவர்கள் கூறினார்கள். நான் தங்களின் கீழ் பணியாற்றுகிறேன். உங்களுக்கு கீழ்படிந்து நடப்பேன். ஆனால் அதெல்லாம் தங்களுக்கு கட்டுப்பட வேண்டிய வேலை சம்பந்தமான விசயத்தில் மட்டும்தான். மற்ற விசயங்களில் கட்டுப்படுவது எனக்கு கடமை அல்ல. எனவே நீர் கூறுவதனால் என்னால் தொழுகையை நிறுத்தி விட முடியாது. எனது கவனமின்மையால் பணியில் எதுவும் தாமதம் ஏற்படும் என்றால் சந்தேகமின்றி என்னுடன் மென்மையுடன் நடந்து கொள்ளவே வேண்டாம். இதைக் கூறிவிட்டு அவர் கதவையும் ஜன்னல்களையும் திறந்து விட்டார். அவர் அன்னாரின் கருத்துக்களை கேட்டு மிகவும் வியந்தார். அவர்களது இந்த வார்த்தை அவ்வதிகாரியிடம் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர்கள் ஒளு செய்வதற்காக கலயத்தில் கை வைத்ததுமே அவர் கூறினார். மவ்லவி சாஹிப், தாங்கள் நிம்மதியாக தொழுங்கள். நான் உங்கள் வேலையை கவனித்து கொள்வேன். ஒரு நாள் அவர்களின் காய்ந்து உலர்ந்த உணவுகளைப் பார்த்து அன்னாரது நிலைமையைப் பார்த்து மிகுந்த தாக்த்திறகு உள்ளானார்.” (அஸ்ஹாபே அஹ்மத தொகுதி 3 பக்கம் 55)

இங்கு பிரிட்டனில் நமது பழைய அஹ்மதி ஒருவர் இருந்தார். அவர் பெயர் பிலால் நடல் சாஹிப். அவர் அஹ்மதியானதும் தனக்கு பிலால் என்ற பெயரை சூட்டிக் கொண்டார். பிறகு ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைப் பின்பற்றி இவருக்கும் தொழுகைக்காக அழைப்பதில் – அதான் கூறுவதில் ஒரு தனிப்பட்ட ஆர்வம் இருந்தது. அதான் கூறுவதில் ஒரு சிறப்பான பெயரைப் பெற்றிருந்தார். உண்மையிலேயே தொழுகைக்காக அழைப்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. (மாஹ்னாமா அன்சாருல்லாஹ் ஜீன் 1965 பக்கம் 36)

பிறகு நிபந்தனையில் மன உணர்ச்சிகளை அடக்குவதும் ஒன்று. இதற்கு என்ன உதாரணங்கள் உள்ளன (என்று பார்ப்போம்).



## மன உணர்ச்சிகளை அடக்குதல்

இந்துக்களும் கலந்து கொண்ட ஒரு மாநாட்டில் சண்டைகள் ஏற்பட்ட சமயத்தில் ஜமாஅத் காட்டிய உயர்வான நல்லொழுக்கம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

“தூய இயல்புள்ள முஸ்லிம்கள் தமது நாகரீகத்தை கவனத்தில் கொள்ளாவிட்டால், குர்ஆனின் போதனைகளுக்கேற்ப பொறுமை செய்யவில்லை என்றால், தமது கோபத்தைக் கட்டுப்படுத்தவில்லை யென்றால் தீய எண்ணம் கொண்ட இந்த மக்கள் எந்த அளவு குழப்பத்தை தூண்டி விட்டனர் என்றால் அதனால் மாநாட்டுத் திடலே இரத்தத்தால் நிறைந்திருக்கும். ஆனால் நமது ஜமாஅத்தின்மீது ஆயிரக்கணக்கான அருள்கள் இறங்கட்டும். ஜமாஅத்திலுள்ளவர்கள் பொறுமை, சகிப்புத்தன்மையின் மிகச் சிறந்த முன்மாதிரியைக் காட்டினர். துப்பாக்கியால் சுடுவதைவிட கொடுமையான ஆர்யர்களின் அவ்வார்த்தைகளைக் கேட்டு மவுனமாக இருந்து விட்டார்கள்.”

இதுபோன்று இன்னொரு இடத்தில் கூறுகின்றார்கள்:

“என்னிடமிருந்து நமது ஜமாஅத்திற்கு பொறுமை பற்றிய போதனை செய்யப்படவில்லையெனில், நான் முன்னரே எனது ஜமாஅத்தை எப்போதும் தீய வார்த்தைகளுக்கு எதிரில் பொறுமை செய்வதற்கு தயார் செய்திருக்க வில்லையெனில் மாநாட்டுத் திடல் இரத்தத்தால் நிறைந்திருக்கும். ஆனால் அவர்களுக்கு பொறுமை போதிக்கப்பட்டிருந்தது. அதுதான் அவர்களது உணர்வுகளை தடுத்து நிறுத்தியது.” (ஹயாத்தே நூர் தொகுதி 4 பக்கம் 309,310)

மன உணர்வுகளை அடக்குதல் குறித்து ஹஸ்ரத் அப்துஸ் ஸத்தார் –ஹ் சாஹிப் (ரலி) அவர்களுடைய ஓர் உதாரணம் ஆச்சரியமான முன்னுதாரணமாகும். அறிவிப்பில் வருகிறது:

“ஒருநாள் ஹஸ்ரத் சாஹ் சாஹிப் தொழுவதற்காக அருகிலிருந்து பள்ளிக்கு சென்றார்கள். அந்நேரம் ஒரு மனிதர் அஹ்மதிய்யத்தின் கடும் எதிரியான ரஹீம் பக்ஷ் சாஹிப் அவர் உளூ செய்வதற்காக மண் கலயத்தை கையில் ஏந்தியவாறு அங்கு இருந்தார். ஹஸ்ரத் டாக்டர் சாஹிபை பார்த்ததும் (டாக்டர் சாஹிப் அரசு மருத்துவராக இருந்தார். அரசு

மருத்துவமனையில் பணியாற்றி வந்தார்) மார்க்க சம்பந்தமாக பேசத் தொடங்கினார். டாக்டர் சாஹிபின் ஏதோ ஒரு வார்த்தையில் சவுத்ரி ரஹீம் பக்ஷ் சாஹிப் கடும் கோபம் கொண்டு மண் கலயத்தைத் தூக்கி அவரது நெற்றியில் அடித்து விட்டார். கலயம் நெற்றியில் பட்டு உடைந்து விட்டது. நெற்றி எலும்பு வரை காயம் ஏற்பட்டு வேகமாக இரத்தம் வெளியேற ஆரம்பித்தது. டாக்டர் சாஹிபின் ஆடைகள் இரத்தத்தால் நனைந்து போயிற்று. அன்னார் காயப்பட்ட இடத்தை கையால் மூடிக் கொண்டு உடனே மருந்து வைத்து கட்டுவதற்காக மருத்துவமனைக்குச் சென்றார். அவர் திரும்பிச் சென்றதும் இப்போது என்ன ஆகப்போகிறதோ என்று சவுத்ரி ரஹீம் பக்ஷ் மிகவும் பயந்து விட்டார். அவர் ஓர் அரசு மருத்துவர். அவர் கூறுவதைத்தான் மேலதிகாரிகளும் கேட்பார்கள். அவருடன் மோதி விட்டோம். இப்போது என்னைக் காப்பாற்ற எந்த வழியும் இல்லையே? நான் எங்கு போவேன்? என்ன செய்வேன்? என்ற எண்ணத்தில் மஸ்ஜிதிலேயே நடுங்கிக் கொண்டு இருந்தார். இங்கே டாக்டர் சாஹிப் மருத்துவமனைக்கு சென்று காயத்திற்கு மருந்து வைத்து கட்டிக் கொண்டு மருந்தும் தடவிக் கொண்டு இரத்தத்தில் நனைந்த துணியையும் மாற்றிக் கொண்டு மீண்டும் தொழுகைக்காக இதே மஸ்ஜிதிற்கு வந்தார். டாக்டர் செய்வது அப்துஸ் ஸத்தார் சாஹ் சாஹிப் இரண்டாவது முறை மஸ்ஜிதில் நுழைந்ததும் சவுத்ரி ரஹீம் பக்ஷ் சாஹிபை அங்கு பார்த்தார். பார்த்ததுமே சிரித்தார்கள். சிரித்துக் கொண்டே கேட்டார்கள். சவுத்ரி ரஹீம் பக்சே! இப்போது உங்கள் கோபம் தணிந்ததா? இல்லையா?

இந்த வார்த்தையைக் கேட்டதும் சவுத்ரி ரஹீம் பக்ஷ் உடைய நிலை மாறி விட்டது. உடனே இரு கைகளையும் ஒன்றாக சேர்த்தவாறு ஹஸ்ரத் ஸய்யத் அப்துல் ஸத்தார் சா சாஹிப் (ரலி) அவர்களிடம் அவர் மன்னிப்புக் கேட்டார். பிறகு சாஹ் சாஹிப் எனது பைஅத் கடிதத்தை எழுதி விடுங்கள். இந்த உயர்ந்த பொறுமையின் முன்மாதிரியை – மென்மையான பரிமாற்றத்தை தவறுகளை மன்னித்து விடுகின்ற செயலை இறை இயக்கத்திலுள்ள மனிதர்களைத் தவிர மற்றெவரும் வெளிப்படுத்த இயலாது என்று கூறினார். இவ்வாறு சவுத்ரி சாஹிப் அஹ்மதியாகி விட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு அவருடைய வீட்டிலுள்ள மற்றவர்களும் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விட்டனர்.



நான் எடுத்து வைத்துள்ளஇநத சில முன்னுதாரணங்கள் பைஅத்தில் உள்ள முதல் மூன்று நான்கு நிபந்தனைகளுடன் தொடர்புடையவை. மக்கள் ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைந்த பிறகு என்னென்ன புரட்சிகர மாற்றங்கள் அவர்களிடம் ஏற்பட்டன என்பதற்கு இன்னும் சில முன்மாதிரிகளை இன்சா அல்லாஹ் வரக்கூடிய காலங்களில் எடுத்து வைப்பேன். இதனால் புதிதாக இணைபவர்களுக்கும் வரக்கூடிய சந்ததிகளுக்கும்கூட இவ்விசயங்கள் புரிய வரும். அவர்களும் தங்களுக்குள் அத்தகைய தூய மாற்றத்தை உருவாக்கட்டும். ஒருபோதும் அவர்களிடம் தஜ்ஜாலின் பயம் வராதிருக்கட்டுமாக! ஆமீன்.

(26.09.2003 அன்று ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள் இலண்டனிலுள்ள ஃபஸ்ல் பள்ளிவாசலில் நிகழ்த்திய ஜுமுஆ உரையிலிருந்து)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் இணைவதற்கான பத்து நிபந்தனைகளைச் செயல்படுத்துவதாக உறுதிமொழி எடுத்து பைஅத்தில் இணைந்த பிறகு அஹ்மதிகளிடம் என்ன மாற்றங்கள் ஏற்பட்டன என்று சென்ற ஜுமுஆவிற்கு முந்தைய ஜுமுஆ குத்பாவில் விளக்கியிருந்தேன். சில சம்பவங்கள் எடுத்து வைக்கப்பட்டன. இப்போது இதே கருத்தை மேலும் சிறிது கூற விரும்புகிறேன்.

## இறைவனது திருப்தியில் திருப்தி அடைய வேண்டும்

பைஅத்தின் ஐந்தாவது நிபந்தனையில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் உறுதிமொழி வாங்கினார்கள். அது உங்கள் மீது கஷ்டங்கள், வறுமை, சோதனை, துயரம், அவமானம், இழிவு போன்ற நிலைகள் எவற்றிலும், அல்லாஹ்விடம் குறைபட்டுக் கொள்ளக் கூடாது. மாறாக, அவனது அருளை வேண்டிக் கொண்டிருக்க வேண்டும். அதுவும் அவனது திருப்தியின் மீது திருப்தி அடைந்தவனாய் இருப்பேன் என்று வாக்களித்தவாறு அவனது அருளை வேண்ட வேண்டும் என்பதாகும். இவ்விசயம் குறித்து சில செயல்ரீதியான முன்னுதாரணங்களை நான் எடுத்து வைக்கிறேன்.

எல்லாவற்றிற்கும் முதலில் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் முன்மாதிரியாகும். ஆகஸ்டு 1905 –ல் அன்னாரின் மகன் அப்துல் கய்யூம், சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து வஃபாத் ஆகி விட்டார்.

அப்போது அவருக்கு சுமார் 2 வயது ஆக இருந்தது. அன்னார், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்தைப் பின்பற்றி முதலில் சிறுவனை முத்தமிட்டார்கள். அப்போது அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. கூறினார்கள்: எனக்கு (பிரிவினால்) அதிர்ச்சி ஏற்பட்டு அதனால் எனது குழந்தையைப் போர்த்திய துணியை விலக்கிப் பார்க்கவில்லை. மாறாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது மகன் இப்ராஹீம் வஃபாத் ஆனபோது, தமது கண்களிலிருந்து கண்ணீர் வழிய மகனின் முகத்தில் முத்தமிட்டார்கள். பிறகு அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள். பிறகு கூறினார்கள்: பிரிவு என்பது சிறிது நேரத்துக்குக் கூட விருப்பமானதன்று. ஆனால் நாம் இறை அருளின்மீது திருப்தி கொள்கிறோம் என்று கூறுகிறோம். இந்த சுன்னத்தை நிறைவேற்றுவதற்காகவே நானும் குழந்தையை மூடியிருந்த துணியை விலக்கி முத்தமிட்டேன். இது அல்லாஹ்வுடைய அருளாகும். மகிழ்ச்சிக்குரிய இடமும் ஆகும். அவன் ஒரு சுன்னத்தை நிறைவேற்றும் வாய்ப்பளித்தான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும், தீனின் ஒளியாகி விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ஒவ்வொரு உள்ளமும் நிச்சய உறுதி என்ற ஒளியால் நிறையும் போது தான் அது நடக்க முடியும் என்று எவரைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்களோ அந்த நபரின் செயல்தான் இவ்வாறு அமைந்தது.

இன்னொரு உதாரணம் ஹஸ்ரத் சவுத்ரி நஸ்ருல்லாஹ் கான் சாஹிப் (ரலி) அவர்களுடையதாகும். அவர்களைப் பற்றி ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எங்களுடைய ஒரு சகோதரர், மர்ஹூம் சவுத்ரி சுகுருல்லாஹ் கான் சாஹிபுக்கு இளையவரும், மர்ஹூம் சவுத்ரி அப்துல்லாஹ் கான் சாஹிபை விட மூத்தவரும் ஆக இருந்தார். அவரது பெயர் ஹமீதுல்லாஹ் கான் ஆகும். அவர் எட்டு, ஒன்பது வயதில் சில நாட்கள் நோய்வாய்ப்பட்டு பிறகு வஃபாத் ஆகி விட்டார். அவருடைய வஃபாத் அதிகாலை வேளையில் நடந்தது. தந்தையார் இரவு முழுவதும் நோயாளிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தார். அவர் வஃபாத் ஆனதும் மகனின் உடலை குளிப்பாட்டி



கஃபன் செய்து, ஜனாஸா தொழுகை நடத்தி, நல்லடக்கம் செய்து விட்டு, வழக்கம்போல் நீதிமன்றத்தின் வேலைக்கும் போய் விட்டார். அவர் தனது ஒரு மகனை மண்ணுக்குள் வைத்து மூடிவிட்டு தனது எஜமானரின் திருப்தியின் மீது திருப்தி கொண்டவாறு தனது கடமையை நிறைவேற்ற வழக்கம்போல் ஆயத்தமாகி விட்டார் என்பது, அவருடன் பணியாற்றும் வக்கீல்களுக்கோ, நீதிமன்றத்தில் உள்ள அதிகாரிக்கோ, தமது நண்பர்களுக்கோ எவருக்கும் தெரியாது.

(அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 11 பக்கம் 165,166)

ஹஸ்ரத் காஸி ஷியாவுத்தீன் சாஹிப் எழுதுகிறார்கள்: மனைவி மற்றும் மூன்று குழந்தைகளின் மரணம், ஒருபுறம் எதிரிகளின் கூக்குரல்கள். அத்துடன் எதிரிகள் கண்ணியக்குறைவையும், பல்வேறு பொருள் நஷ்டங்களையும் ஏற்படுத்துவதற்கு ஒவ்வொரு நொடியும் முயற்சி செய்தனர். ஏழையின் வீட்டின் சுவரை இடிக்கும் வேலையும் நடந்தது. இப்போது இந்த எல்லா முஸீபத்துகளையும் ஒன்றிணைத்து பார்க்கும் போது இந்த எளியவன் எவ்வளவு அசுத்தமான உள்ளம் கொண்டவர்களால் சோதனைக்கு ஆளானேன் என்று புரிய முடியும். இவை அனைத்தையும் குறித்து இந்த சோதனைகள் வெளிப்படும் முன்னரே ஹுஸுர் (அலை) அவர்கள் அழகிய முறையில் எனக்கு தெரிவித்து இருந்தார்கள். இதற்கிடையே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எனக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் ஒரு கடிதம் அனுப்பினார்கள். அதுவும் ஒரு முன்னறிவிப்பை கொண்டதாக இருந்தது. நிறைவேறியும் விட்டது. அவர்கள் எழுதியிருந்தார்கள். தங்களுக்கு கடும் சோதனை வந்துள்ளது! இது தனது நேர்வழியில் நிலைத்து நிற்கும் அடியார்களின் இஸ்திகாமத்தை மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்காக – பொறுமை செய்வதனால் பெரும் பெரும் நற்கூலியை அல்லாஹ் வழங்குகிறான் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்காக நிகழ்கிற சுன்னத்துல்லாஹ் – அல்லாஹ் நடைமுறை ஆகும்.

இறைவன் எல்லா துன்பங்களிலிருந்தும் இரட்சிப்பை வழங்குவான். எதிரிகள் இழிவடைவார்கள். சஹாபாக்களின் காலத்தில் எவ்வாறு சஹாபிகளின் மூழ்கும் கப்பலை இறைவன் தன் கரத்தால் பிடித்துக் கரையேற்றினானோ அதே போன்று இப்போதும் நடக்கும். அவர்களின் தீய

துஆக்கள் இறுதியில் அவர்கள் மீதே விழும். 100 முறை அல்ஹம்துலில்லாஹ் (கூறுகிறேன்). ஹுஸுர் (அலை) அவர்களின் துஆவின் மூலம் அவ்வாறே நடந்தது. இந்த எளியவன் ஒவ்வொரு நிலையிலும், இஸ்திகாமத் மற்றும் பொறுமையில் வளர்ந்து சென்றேன்.

(அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 6 பக்கம் 12, 13)

ஹஸ்ரத் மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் ஒரு முன்னுதாரணம். ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சியால்கோட் சென்ற போது, ஹுஸுர் (அலை) அவர்கள் சொற்பொழிவாற்றுவதற்காக ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். மற்ற சகோதரர்களும் ஹுஸுர் (அலை) அவர்களுடன் சென்றார்கள். தெருவுக்குள் அவர்கள் சென்று கொண்டிருக்கும்போது எவரோ தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் மாடியிலிருந்து சாம்பல் வைக்கப்பட்ட கூடையை வீசினர். ஹுஸுர் (அலை) அவர்கள் வீசப்பட்ட இடத்தை விட்டு கடந்து சென்று விட்டதால் இறைவனின் அருளால் தப்பி விட்டார்கள். (இதனை அவரது மகன் விவரிக்கிறார் – ஹுஸுர்). சாம்பல் கூடை எனது தந்தையின் தலையின் மீது விழுந்தது. அந்த வயோதிகரின் வெள்ளைத் தாடி மக்களின் நகைப்பிற்குரியதாயிற்று. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது அவர் அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார். அவர்கள் அதே இடத்தில் நின்றார்கள். மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக, தாயே! இங்கே கொட்டுங்கள். இறைவனுக்கு நன்றி! ஹஸ்ரத் சாஹிப் மூலமாகவே எனக்கு இந்த பரிசு கிடைத்தது என்று கூறினார்கள்.

இதுபோன்று இன்னொரு சம்பவம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சியால்கோட்டில் இருந்து திரும்புவதற்காக குத்தாம்கள் அவர்களை வண்டியில் ஏற்றி விட்டு விட்டு வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். எனது தந்தையார் புர்ஹானுத்தீன் சாஹிப் ஏதோ ஒரு காரணத்தால் பின்தங்கி விட்டனர். எதிரிகள் அவரை பிடித்து மிகவும் இழிவுபடுத்தும் வேலைகளைச் செய்யத் தொடங்கினர். எந்த அளவுக்கெனில் அவர்களின் வாயில் சானத்தை போட்டனர். ஆனால் எனது தந்தையார் இதே



இழிவில் கண்ணியத்தையும், இதே துக்கத்தில் நிம்மதியையும் உணர்ந்தனர். மீண்டும் மீண்டும் கூறினர். புர்ஹானுத்தீனே, இந்த நிஃமத்துகள் உனக்கு எங்கு கிடைக்கும்? அதாவது மார்க்கத்திற்காக ஒருவருக்கு துன்பம் தருகிறார்கள் எனில் அது அவருடைய நற்பேறு ஆகும்.

(மாஹ்னமாஹ் அன்ஸாருல்லாஹ், ரப்வா செப்டம்பர் 1977 பக்கம் 14, 15)

ஹஸ்ரத் மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் பற்றி ஹஸ்ரத் மவ்லவி அப்துல் முக்னீ சாஹிப் (அதாவது அவரது மகன்) எழுதுகிறார்கள்.

அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட பிறகு எங்கள் பொருளாதார நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. பல மாதங்களாக வீட்டினர் வெண்ணேயின் வடிவத்தை கூட கண்டதில்லை. விறகு வாங்குவதற்கு பதில், காய்ந்த சுள்ளிகளை எரிக்க பயன்படுத்தினார்கள். ஆனால் மண்பானைகள் காய்ந்த சிறு சுள்ளிகளால் சூடாவதில்லை. பருப்பை சிறிது சூடாக்கி எடுத்து வருவார்கள். மண் பானையில் நீர் உப்பு மிளகாய் இவற்றை போட்டு கீழே சுள்ளிகளை எரிப்பார்கள். தண்ணீர் சூடானதும் அத்துடன் சிறிது வேக வைக்கப்பட்ட பருப்பை அதில் போடுவார். இதுவே எங்களது குழம்பாக இருந்தது. அதனைக் கொண்டே நாங்கள் ரொட்டியை உண்டோம். வெண்ணெய்க்குப் பதில் எண்ணெய்யை பயன்படுத்தினர். காய்கறிகளுக்குப் பதில் கொளுந்துக் கீரைகளைக் கொண்டு குழம்பு சமைத்தார்கள். பழைய காலங்களில் அவர்களின் உடை மவ்லவிகளின் உடையைப் போன்று இருந்ததில்லை. ஒரு பெரிய நிலக்கிழாரின் உடையை உடுத்தினர். உண்மையில் எனது தந்தைக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் ஓர் ஆழமான அன்பும், பிரியமும் உருவாகி விட்டிருந்தது. அந்த பிரியத்தின் காரணத்தால் அவர்களுக்கு தங்களது சுகங்களை, சொகுசுகளை அசாதாரனமான முறையில் துண்டித்துக் கொள்ள முடிந்தது. பொருட்படுத்ததக்கதாக அவை இருந்ததில்லை. ஒரே ஓர் ஆசை அவர்கள் உள்ளத்தில் இருந்தது. தமது உள்ளத்தில் இருந்த இறை நேசம் என்ற நெருப்பை, ரஸூலின் மீது பிரியம், ஹஸ்ரத் சாஹிபின் மீதுள்ள பிரியம் என்ற நெருப்பை மக்களில் உள்ளங்களிலும் ஏற்படுத்த வேண்டும் என்பதே அந்த ஆசை. ஒவ்வொரு நேரத்திலும், இந்த சிந்தனையும் உணர்வும், பேரார்வமும்,

துயரமும், கவலையும்தான்! எவ்வாறு இந்த அஹ்மதிய்யத்தை பரப்புவோம்? என்பதுதான் அவர்களது கவலையாக இருந்தது. உண்ணல், குடித்தல், உடை அணிதல் இவை எதையும் அவர்கள் பொருட்படுத்தியதில்லை. நானும், எனது தாயாரும் அந்நிலையில் எவ்வாறு பொழுதை கழித்தோம் என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். கடும் வறுமையிலும் ஏழ்மையிலும் பொறுமை உறுதித்தன்மையில் ஓர் வலுவான பாறையைப் போன்று அவர்கள் இருந்தார்கள். மார்க்க விசயத்தில் எத்தகு தன்மான உணர்வுமிக்கவராக அவர்கள் இருந்தார்கள் என்றால் எந்த பேராசையும், எவ்வகை நட்பும் உறவும் முறையிலுள்ள தொடர்புகளும் அதற்கு குறுக்கே வரமுடிந்ததில்லை. அல்ஹம்துலில்லாஹ். ஸும்ம அல்ஹம்துலில்லாஹ்.

உலகமும் அவற்றில் உள்ளவையும் எங்கள் பார்வையில் ஒன்றுமே இல்லை என்ற சூழ்நிலையில் தான் நாங்கள் கூட வளர்க்கப்பட்டோம். இந்த தன்னிறைவான எங்கள் நிலையைக் கண்டு மக்கள், மிர்ஸா சாஹிப், மவ்லவி சாஹிபுக்கு சம்பளம் கொடுக்கிறார் என்று கூறத் தொடங்கினார்.

(மாஹ்னாமஹ் அன்சாருல்லாஹ் ரப்வா செப்டம்பர் 1977 பக்கம் 11,12)

ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் ஒப்புமையற்ற பொறுமைக்கு ஈடான ஓர் உதாரணம் நமக்கு கிடைக்கவில்லை.ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்வின் கடைசி நிமிடங்களில் சாதாரண உலகப் பெண்களைப் போன்று, அழுகை, பொறுமையற்ற வார்த்தைகளை வாயிலிருந்த வெளிப்படுத்தவதற்கு பதில், அல்லாஹ்வின் சமூகத்தில் சஜ்தாவில், மிக எளிமையும், உருக்கமும் ஆன துஆவைக் கேட்கக் கூடிய தூய முன்மாதிரியை காட்டினார்கள். யாஸீன் ஓதப்பட்டது. அப்போது ஹுஸூர் (அலை) அவர்களின் தூய ஆவி அவர்களின் திரு உடலை விட்டு, அவர்களின் உண்மையான பிரியத்திற்குரியவனின் சமூகத்தில் சென்றடைந்து விட்டது. ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் கூறினார்கள்: இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். பிறகு மவுனமாக இருந்து விட்டார்கள். எந்த வகை அழுகலும், புலம்பலும் அவர்கள் செய்ததில்லை. உள்ளே சில பெண்கள் அழத் தொடங்கிய போது அன்னார் அப்பெண்களை கடுமையாக கண்டித்தார்கள். அவர்களிடம் கூறினார்கள். அவர்கள் எனது கணவர். நான் அழவில்லை. நீங்கள் யார் இவ்வாறு செய்வதற்கு? ஓர் ஆன்மீக அரசரும்,



பெருமைக்குரியவருமான ஒரு கணவரின் மரணத்தில், வசதியாக வாழ்ந்து வந்த ஒரு பெண் காட்டிய இந்த பொறுமையும் உறுதிப்பாடும் ஒரு வலுவான அற்புதமாகும். (தாரிகே அஹ்மதிய்யத் தொகுதி 2 பக்கம் 547)

பிறகு குழந்தைகளுக்கும் இதே அறிவுரையை கூறினார்கள். உங்கள் தந்தையார், உங்களுக்காக எதையும் விட்டுச் செல்லவில்லை என்று நினைக்காதீர்கள். மாறாக அவர்கள் துஆக்களின் மகத்தான கருவூலத்தை விட்டுச் சென்றுள்ளார்கள். அது உரிய நேரத்தில் உங்களுக்கு பயனளித்துக் கொண்டிருக்கும்.

## தீய சடங்குகளை வெறுத்தல்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், தமது ஜமாஅத்தில் சேர்கின்ற ஒவ்வொருவரும் குர்ஆன் கரீமின் கட்டளைகளின்படி, அமல் செய்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். குறைந்தபட்சம் அமல் செய்ய முயற்சி செய்பவர்களாக அதனை நம்புபவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஒருவர் அதன் ஒரு கட்டளையைக்கூட நம்பவில்லையெனில் அவருக்கு என்னுடன் எந்த தொடர்பும் இல்லை என்று அவர்கள் கூறியுள்ளார்கள். தம்மை நம்புபவர்கள், உலகின் தீய பழக்கவழக்கங்களில் இருந்து அகன்று உயர்வு பெற்றவர்களாக, உலக பேராசை, வீணான சம்பிரதாயங்களிலிருந்து தப்பி இருப்பவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அல்லாஹ்வும் அவனது ரஸூலும் (ஸல்) இட்ட கட்டளையின்படி அமல் செய்ய முயற்சி செய்ய வேண்டும். இறைவனின் குர்ஆன் என்ன கட்டளையிடுகிறதோ, இறைவனின் ரஸூலும் அதே கட்டளையை இட்டார்கள். ஒருவர் ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்களிடம், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நற்குணங்களைப் பற்றி எங்களுக்கு கூறுங்கள் என்று கேட்ட போது, அன்னார் பதிலளித்தார்கள். என்ன! நீங்கள் குர்ஆன் படிக்கவில்லையா? குர்ஆனில் என்ன நற்குணங்கள் விளக்கப்பட்டுள்ளனவோ, அதுவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நற்குணங்களாக இருந்தன. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். நான் எனது எஜமானரும் வழிகாட்டியுமாக இருப்பவரை பின்பற்றுகிறேன். மேலும்

குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையையும் செயல்படுத்தத்தக்கதாக உறுதி கொண்டுள்ளேன். நீங்களும் அவ்வாறு பின்பற்ற முயற்சி செய்வீர்கள் எனில் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களாக கருதப்படுவீர்கள் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். பைஅத் செய்த பிறகு இந்த முன்மாதிரியையும் ஜமாஅத் செயல்படுத்திக் காட்டியுள்ளது.

எல்லாவற்றிற்கும் முதலில் ஒரு பெண்மணியின் உதாரணத்தை இங்கு எடுத்து வைக்க விரும்புகிறேன். அவர் ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் தாயார். அவர்களின் மருமகன் (துங்கையின் மகன்) சவுத்ரி பஷீர் அஹ்மத் சாஹிப் விளக்குகிறார்கள். அவர்கள், சவுத்ரி சாஹிபிடம் கூறினார்கள். அதைப்பற்றி சவுத்ரி சாஹிப் எழுதுகிறார்கள். எனது தாயாருக்கு தீய சடங்குகளில் எந்த அளவுக்கு வெறுப்பு இருந்தது எனில் அதனை இதை வைத்து மதிப்பிடலாம். அவர்கள் கூறுகிறார்கள். எனது திருமண நிகழ்ச்சி நடந்தத. (சவுத்ரி பஷீர் அஹ்மத் சாஹிபின் திருமண நிகழ்ச்சி) திருமணத்திற்கு பிறகு நான் பெண்கள் பகுதிக்கு அழைக்கப்பட்டேன். அங்கு வழக்கமாக திருமண வீடுகளில் நடைபெறும் சடங்கை நிறைவேற்றுவதற்காக அழைக்கப்பட்டிருந்ததை பார்த்தேன். இரண்டு நாற்காலிகளை எதிரும் புதிருமாக போட்டிருந்தார்கள். என்னை ஒன்றில் உட்காரும்படி கூறினார்கள். இன்னொரு நாற்காலியில் மணமகள் உட்கார வைக்கப்பட வேண்டும். பிறகு சில சடங்குகள் செய்யப்படும். அதற்கு பஞ்சாபியில் பேடோ கோடி விளையாட்டு எனப்படும்.எனக்கு உள்ளத்தில் ஒரு பயம் ஏற்பட்டது. ஆனால் இந்நேரத்தில் பெண்களுடன் வீணான சர்ச்சை, எதிர்ப்பு காட்டுவதும் பொருத்தமாக தெரியவில்லை. எனக்காக திட்டமிடப்பட்ட இடத்தில் அமர்த்தப்பட்டேன். ஆயத்தம் செய்யப்பட்ட சடங்கிற்காக வாங்கப்பட்ட பொருட்களின் பக்கம் நான் என் கைகளை நீட்டியபோது, எனது மாமி அவர்கள் (சவுத்ரி சாஹிபின் தாயார்) எனது கைகளை கெட்டியாகப் பிடித்து பின்னுக்கு இழுத்து விட்டு கூறினார்கள். வேண்டாம் மகனே! இவை ஷிர்க்கான விசயங்கள். உடனே எனக்கு தைரியம் ஏற்பட்டது. நான் அந்தப் பொருள்களை எனது கையிலிருந்து உதறிவிட்டு எழுந்து நின்று, நான் இந்த சடங்கில் சேரப்போவதில்லை என்று கூறினேன். இவ்வாறு எனது காரியங்கள் களங்கமற்றதாகி விட்டன.



இன்றைய காலத்திலும் கூட பெண்கள் இவ்விசயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். உங்கள் பகுதியின் அல்லது நாட்டின் சடங்குகளுக்கு பின்னால் செல்லாதீர்கள். எங்கு இந்த சடங்குகள் நடைபெறுமோ அங்கு ஷிர்க் ஏற்படலாம் என்று சிறதளவு ஐயத்திற்கு இடமிருந்தாலும் அதிலிருந்து தப்ப முயற்சி செய்ய வேண்டும். எல்லா அஹ்மதி பெண்களையும் இதே உணர்வுடன் தமது சந்ததிகளுக்கு தர்பிய்யத் வழங்குபவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக. நம்முடைய நாடுகளில் இந்தியா பாகிஸ்தான் போன்றவற்றில் முஸ்லிம்களிடம் கூட பெண்களுக்கு முழுமையாக அவர்களின் சொத்துக்களை தராமல் இருக்கும் பழக்கம் இருக்கிறது. முழுமையாக என்ன, அறவே தருவதில்லை. குறிப்பாக நிலக்கிழார்கள், நாட்டுப்புறத்து -வாசிகளிடம் இந்த வழக்கம் காணப்படுகிறது. இவ்விசயத்திலும் சவுத்ரி நஸ்ருல்லாஹ் கான் சாஹிபின் ஓர் முன்னுதாரணம் இருக்கிறது. சவுத்ரி சாஹிப் எழுதுகிறார்கள். எங்களுடைய பால்குடி சகோதரி மர்ஹூமாவுக்கு அக்கால வழக்கப்படி அவர்களது திருமணத்தின் போது தந்தையார் நிறைய சீதனங்கள் கொடுத்தார்கள். சரீஅத்தின்படி அவர்களது ஆண் குழந்தைகளுக்கு பெண் குழந்தைகளுக்கும் வாரிசுரிமையாக கிடைக்க வேண்டியதையும் முறைப்படி பகிர்ந்தளிக்க வேண்டும் என்று வஸிய்யத்தும் செய்திருந்தார்கள். இந்த வகையில் அவ்வஸிய்யத்தின்படி அவர்களின் மரணத்திற்கு பிறகு அவர்களின் மகளுக்கும் சரீஅத்தின்படி பங்கு தரப்பட்டது.

## சிகரெட் பிடிப்பதனால் ஏற்படும் தீய தாக்கங்கள்

ஒரு சம்பவம். ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் 1892-ல் ஜலந்தர் சென்றார்கள். ஹுஸுர் (அலை) அவர்களது தங்குமிடம் மேல் மாடியில் இருந்தது. ஒரு பணிப்பெண் வீட்டில் ஹுக்காவை வைத்து விட்டு சென்று விட்டாள். அவ்வேளையில் அது கீழே விழுந்து விட்டது. சில பொருட்கள் நெருப்பில் எரிந்து போய் விட்டன. ஹுஸுர் (அலை) அவர்கள் இவ்விசயத்தில் ஹுக்கா குடிப்பவர்களிடம் ஹுக்கா குடிக்கும் பழக்கம் பற்றிய தமது வெறுப்பை வெளிப்படுத்தினார்கள். இத கீழே இருந்த அஹ்மதிகள் வரை சென்றடைந்தது. அவர்களிலும் பலர் ஹக்கா குடிப்பவர்களாக இருந்தனர். அவர்களின் ஹுக்காவும் அங்கு இருந்தது. ஹுஸுர் (அலை) அவர்களின் கோபத்தைப் பற்றி தெரிய வந்ததும், ஹக்கா குடிப்பவர்கள்

அனைவரும் தமது ஹுக்காவை உடைத்தனர். மேலும் அதனை குடிப்பதையும் விட்டு விட்டனர். ஹுஸுர் (அலை) அவர்கள் ஹுக்கா குடிப்பதை விரும்பவில்லை என்பதை அறிந்ததும் முழு ஜமாஅத்திற்கும் பல தைரியமுள்ள அஹ்மதிகள் ஹுக்காவை விட்டு விட்டார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத் பாகம் 10 பக்கம் 57)

மிர்ஸா அஹ்மத் பேக் சாஹிப் சாஹேவால் அறிவிக்கின்றனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒருமுறை எனது மாமா மிர்ஸா குலாமுல்லாஹ் சாஹிபிடம் கூறினார்கள். மிர்ஸா சாஹிப் நண்பர்களிடம் ஹுக்காவை விட்டு விடுமாறு கூறுங்கள். மாமா, தானே ஹுக்கா குடிப்பவராக இருந்தார். அவர் ஹுஸுர் அவர்களிடம் நல்லது ஹுஸுர்! (அப்படியே செய்கிறேன்) என்றார். வீட்டிற்கு வந்து சுவரோடு ஒட்டி நிறுத்தியிருந்த தனது ஹுக்காவை உடைத்தார்கள். இன்று ஹுக்கா வெயியில் கிடந்து விட்டதால் கோபமடைந்து தனது வெறுப்பை வெளிப்படுத்துவதற்காகத்தான் இவ்வாறு செய்தார்கள் என்று மாமி புரிந்து கொண்டார்கள். ஆனால் அதற்குப் பிறகும் மாமா யாரிடமும் எதுவும் கூறவில்லை. எனவே இன்று ஹுக்காவுடன் என்ன கோபம்? என்று மாமி கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹுக்கா குடிப்பதிலிருந்து மக்களை விலகியிருக்குமாறு கூறும்படி எனக்கு வழிகாட்டினார்கள். ஆனால் நானே ஹுக்கா குடிக்கிறேன். எனவே நான் முதலில் எனத ஹுக்காவை உடைத்து விட்டேன் என்று அப்போது அவர்கள் கூறினார்கள். இந்த வகையில் மாமா மரணவேளை வரை ஹுக்காவை கையால் தொடவில்லை. மற்றவர்களையும் ஹுக்காவை விடுவதற்கு அறிவுறுத்தினார்கள். (சவானஹ் ஃபஸ்ல் உமர் தொகுதி 2 பக்கம் 34)

இக்காலத்திலும் இதே ஹுக்காவின் தீமை சிகரெட்டின் வடிவில் தொடர்கிறது. சிகரெட் குடிப்பவர்கள், சிகரெட்டை விடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் இளம் வயதினரை இந்த நோய் குறிப்பாக பற்றுகிறது. சிகரெட்டில் பல வகைகள் இப்போது வந்து விட்டன. அத்துடன் போதைப் பொருட்களையும் கலந்து குடிக்கின்றனர். இது இளைஞர்களின் வாழ்வை அழிவை நோக்கி இட்டுச் செல்லும் ஒரு நடவடிக்கையாகும். இது தஜ்ஜாலினால் பரப்பப்படுகிறது. ஆனால் துரதிஷ்டவசமாக முஸ்லிம் நாடுகளும் இதில் அடங்கும். எவ்வாறிருந்தபோதிலும் சிகரெட் குடிக்கும் பழக்கத்தை விட்டு விடுவதற்கு நம்முடைய இளைஞர்கள் முயற்சி செய்ய வேண்டும்.



## லாட்டரி வாங்குவது ஆகுமானதல்ல

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் முன்ஷி பரக்கத் அலி கான் சாஹிப் (ரலி) அவர்கள் சிம்லாவில் பணியாற்றி வந்தார்கள். அஹ்மதியாவதற்கு முன்னால் அவருக்கு லாட்டரியில் 7500 ரூபாய் கிடைத்தது. அவர் ஹுஸுர் அவர்களிடம் இதைப் பற்றி கூறினார்கள். அதற்கு ஹுஸுர் (அலை) அவர்கள் அதனை சூதாட்டம் என்று குறிப்பிட்டார்கள். மேலும் இந்தப் பயணத்திலிருந்து உங்களுடைய சொந்த உபயோகத்திற்காக ஒரு பைசா கூட செலவழிக்கக் கூடாது என்றும் கூறினார்கள். ஹஸ்ரத் முன்ஷி சாஹிப் அவர்கள் முழுப்பணத்தையும் ஏழைகள், வறியவர்களுக்கு பகிர்ந்தளித்து விட்டார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத் பாகம் 3 பக்கம் 22)

இன்று இந்த (லாட்டரி) பழக்கம் ஐரோப்பாவிலும் காணப்படுகிறது. ஒருவர் லாட்டரி எடுக்கிறார் எனில் அதிலிருந்து அவருக்கு பணம் வந்தால் அந்த பணம் கண்டிப்பாக அவருக்கு அனுமதிக்கப்பட்டதன்று. மாறாக சூதாட்டத்தில் வரும் பணம் எப்படி ஹராமோ அதைப் போன்று ஹராம் ஆகும். முதலில் லாட்டரி வாங்கக் கூடாது. அப்படியே தவறாக வாங்கி அதில் பணம் கிடைத்துவிட்டாலும் சொந்த உபயோகத்திற்கு அதனைப் பயன்படுத்தக் கூடாது.

இன்னொரு சம்பவம் இங்கிலாந்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய பஷீர் ஆர்சர்ட் சாஹிப் உடையது. அவர்கள் அஹ்மதிய்யத்தில் பைஅத் செய்த பிறகு தமக்குள் எந்த அளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்தினார் எனில், முதலில் தனது வாழ்வை வக்ஃப் செய்தார். 1944-ல் அஹ்மதியானார். காதியானில் சில காலம் மார்க்கக் கல்வி கற்றார். அவர் தனது வாழ்வை வக்ஃப் செய்திருந்தார் என்று கூறினேன். அதற்கு பிறகு அவரது வாழ்வில் ஒரு மகத்தான புரட்சி உருவானது. இறைவணக்கம் மற்றும் துஆக்களில் அளவற்ற அன்பு உருவாகி விட்டது. காதியானில் முதல் பயணத்தில் முதல் கனியே மது குடிப்பதை விடுதலாகவே இருந்தது. அதிகமாக குடித்து வந்தார். உடனடியாக முதலில் குடியை விட்டு விட்டார். அவர்கள் சூதாட்டம், குடி,போதையிலிருந்து தவ்பா செய்து வந்தார். இந்த இரண்டையும் நிரந்தரமாக விட்டு விட்டார்.

(அல்ஃபஸ்ல் 10 ஜனவரி 1978; அஸீம் ஸின்தகி பக்கம் 8, 9)

## மதுவுக்குத் தடை

இக்காலத்திலும் கூட சில ஆண்டுகளுக்கு முன்னால் இங்கும் ஜெர்மனியிலும் மற்ற நாடுகளிலும், மது வகைகள் விற்கப்படுகிற ரெஸ்டாரண்டுகள், ஹோட்டல்களில் அஹ்மதிகள் வேலை செய்தனர். ஹதீஸ் அடிப்படையில் மதுவை தயாரிப்பவர், குடிக்கத்தருபவர், மதுவை விற்பவர், மதுவை வைத்திருப்பவர் என மதுவுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் நரகவாசிகள் என்று கூறப்பட்டுள்ளது. எந்த அஹ்மதிகள் இதுபோன்ற இடங்களில் வேலை செய்கிறார்களோ அவர்கள் உடனே அவ்வேலையை விட்டு விட வேண்டும். இல்லையெனில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். பிறகு ஹுஸுர் (ரஹி) அவர்கள் தாமே கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் பெருமளவு எண்ணிக்கையிலான அஹ்மதிகள் அந்த தொழிலை விட்டு விட்டார்கள். அவர்களில் சிலருக்கு அல்லாஹ்வுத்தஆலா உடனேயே அதனை விட சிறந்த தொழில்களை வழங்கினான். மேலும் சிலரை சோதனையிலும் போட்டுள்ளான். அவர்கள் நீண்ட காலம் தொழில் இல்லாமல் இருந்தார்கள். ஆனால் உறுதியாக தமது முடிவில் நிலைநின்றனர். அந்த அசுத்தமான தொழிலில் கை வைப்பதற்கு முயற்சி செய்யவில்லை.

## திருக்குர்ஆனின் மீது அன்பு

அமிர்தசரஸை சார்ந்த ஓர் அஹ்மதி அல்லாதவர் மியான் முஹம்மது அஸ்லம் சாஹிப் மார்ச் 1913-ல் காதியான் வந்தார். அவர் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பற்றி எழுதுகிறார். மவ்லவி நூருத்தீன் சாஹிப் மிர்ஸா சாஹிபின் கலீஃபாவாக இருப்பதால், அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஒருமித்த தலைவராக விளங்குகின்றார். நான் இரண்டு நாள்கள் அவர்களது குர்ஆன் தர்ஸ், போதனைகளின் மஜ்லிஸுகளில் அமர்ந்து கவனமாக அவரது பணிகளைப் பார்த்துள்ளேன். அவர் மிகத் தூய மனிதராகவும் அல்லாஹ்வுக்காக மட்டுமே பணிகளைச் செய்யும் கொள்கையுடையவர் என்பதும் எனக்கு புலப்பட்டது. ஏனெனில் மவ்லவி சாஹிபின் செயல்முறை முற்றிலும் வெளிவேசம், நயவஞ்சகம்



ஆகியவற்றிலிருந்து தூய்மையாக இருக்கிறது. அவர்களது உள்ளத்துக் கண்ணாடியில் இஸ்லாத்தின் உண்மை பற்றிய ஒரு வலுவான உத்வேகம் இருக்கிறது. அது தவ்ஹீதின் இறைஞானம் என்ற தூய நீரூற்றிலிருந்து வந்ததாகும். திருக்குர்ஆன் வசனங்களுக்கு அவர்கள் வழங்கிய விளக்கத்தின் மூலம் ஒவ்வொரு நொடியும் அவர்களது காட்டுதல் இல்லாத தூய உள்ளத்திலிருந்து இறைஞானங்கள் பொங்கி வந்து தவ்ஹீதின் இறைஞான தாகமுடையவர்களது தாகத்தை அது தணிக்கின்றது. உண்மையான இஸ்லாம் திருக்குர்ஆனில் இருக்கிறதென்றால் திருக்குர்ஆன் மீது உண்மையான அன்பு மவ்லவி சாஹிபிடம் இருப்பது போன்று வேறு எவரிடமும் இருப்பதாக நான் பார்ப்பதில்லை. ஒன்றைத் தொடர்ந்து செய்த வர வேண்டும் என்ற கட்டாயத்தில் அவர்கள் இதனை செய்யவில்லை. மாறாக அவர் ஒரு வலுவான அறிவு ஆதாரமுள்ள மனிதராக இருக்கின்றார். மிக உயர்ந்த தத்வார்த்த சிந்தனைகள் மூலம் திருக்குர்ஆன் மீதுள்ள பிரியத்தால் வசப்படுத்தப்பட்டவராகி விட்டார். ஏனெனில் அவரிடம் நான் எவ்வகை உறுதியான தத்துவார்த்த விளக்கங்களை குர்ஆன் தர்ஸுகளில் கேட்டேனோ அந்த அளவுக்கு விளக்கங்களை தர தகுதியானவர்கள் உலகில் மிகக் குறைந்தவர்களே இருப்பார்கள். (ஹயாத்துந் நூர் பக்கம் 611, 612)

பிறகு இன்னொரு வஸிய்யத் ஹஸ்ரத் டாக்டர் அப்துஸ் ஸத்தார் சாஹ் சாஹிப் அவர்கள் தமது குழந்தைகளுக்கு செய்ததாகும். கூறினார்கள்: திருக்குர்ஆனை உங்களது செயல் நூலாக ஆக்குங்கள். சுன்னத்தான நடைமுறைகளைப் பின்பற்றுங்கள். அஹ்மதிய்யா இயக்கத்தின் முன்னேற்றம், இஸ்லாத்தைப் பரப்புதல் ஆகியவற்றில் முழுக்கவனம் உடையவர்களாக இருங்கள். உங்களது வருங்கால தலைமுறையினரையும் அவற்றை பின்பற்றத்தக்கவர்களாக ஆயத்தம் செய்யுங்கள். (சீரத் சையித் அப்துஸ் ஸத்தார் சாஹ் சாஹிப் பக்கம் 193) இப்போதனையை ஒவ்வோர் அஹ்மதியும் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மலிக் மவ்லா பக்ஸ் சாஹிப் (ரலி) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா அப்துல் ஹக் சாஹிப் இவ்வாறு எழுதுகிறார்கள். அவர்களுக்கு திருக்குர்அன் மீது சிறப்பான ஒரு பிரியம் இருந்தது.

குர்ஆனில் ஞானம் மற்றும் உண்மைகளை கேட்பதற்காக நோயும் பலவீனமும் ஆக இருந்தபோதிலும் கூட கவனம் செலுத்தி வந்தார்கள். இந்த வகையில் ஒருமுறை குளிர்காலத்தில் பல மாதங்களாக தாருல் பஸ்ல் மஹல்லாவிலிருந்து தாருர் ரஹ்மத் மஹல்லா வரை சென்று சுபுஹ் தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். காரணம் மவ்லானா குலாம் ரஸூல் ராஜேகி (ரலி) அவர்கள் அப்பள்ளியில் குர்ஆன் தர்ஸ் தந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் தர்ஸ் இறைஞானம் நிறைந்ததாக இருக்கும். பிறகு ரமலான் மாதத்தில் மஸ்ஜித் அக்ஸாவில் தர்ஸ் நடக்கும். இதிலும் ஒழுங்காக பங்கு பெறுவார்கள். குர்ஆன் கரீம் அதிகமாக படித்தல், சிந்தித்து கவனமாக ஓதுதல், அதிலிருந்து பயனடைதல் போன்றவற்றில் ஈடுபட்டார்கள். மற்றவர்களையும் அதில் இணைத்தார்கள். அவர்களின் கடைசி காலத்தில் பெரும்பாலும் பகல் பொழுதில் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் அவர்கள் திருக்குர்ஆனை பலமுறை ஓதிக்கொண்டிருப்பதை பார்க்க முடிந்தது. தம்மிடம் ஒரு நோட்டும் பேனாவும் வைத்திருப்பார்கள். ஓர் வசனத்திற்கு நுட்பமான விளக்கம் ஏதும் அவர்களுக்கு புரிய வந்தால் உடனே அதனை குறித்துக் கொள்வார்கள். பிறகு தமது வீட்டினருக்கும் அதை கூறி வந்தனர். அதைக் கூறும்போது, அவர்களின் உள்ளத்தில் தமது பிள்ளைகளும் திருக்குர்ஆன் மீது பேரார்வம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்ற ஓர் ஆசை இருந்ததை அவர்களின் முகத்திலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. (அஸ்ஹாபே அஹ்மத் பாகம் 1, பக்கம் 124, 125)

கேம்பியாவில் ஒரு கிறித்தவ இளைஞர் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டதனால் அவருடைய தாயார் கடும் எதிர்ப்பு காட்டத் தொடங்கினார். அவ்விளைஞர் முதலில் சகித்துக் கொண்டு இருந்தார். பிறகு அவர் தாயார் குர்ஆன் கரீமை இழிவுபடுத்தத் தொடங்கியதும் வீட்டை விட்டு வெளியேறி விட்டார். மீண்டும் அவ்வீட்டுக்கு செல்லவில்லை.

(ஸமிமஹ் மாஹ்னாமஹ் அன்ஸாருல்லாஹ் செப்டம்பர் 1987 பக்கம் 6)

இக்காலத்தில் ஆப்பிரிக்காவின் தூர தூர நாடுகளிலும் கூட இந்த அற்புதம் நடந்து கொண்டிருக்கிறது.

இஸ்லாத்தின் நான்கு திருமணங்கள் வரை செய்ய அனுமதி உண்டு. சிலர் அதனை கட்டளையைப் போல் நினைக்கின்றனர். ஆனால் அது ஓர்



அனுமதிதான். ஆப்பிரிக்காவில் ஒரு வழக்கம் இருக்கிறது. அங்கு சில சமயங்களில் சில கோத்திரங்களைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் அல்லது பணம் படைத்தவர்கள் Chief –கள் நான்கை விட அதிகமாக ஒன்பது அல்லது பத்து திருமணங்கள் வரை செய்கின்றனர். சிராலியோனின் அலிரோஜ் ரஸ் சாஹிப் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தபோது அவ்வேளையில் அவர் இளைஞராக இருந்தார். அவருக்கு 12 மனைவிகள் இருந்தனர். ஜமாஅத்தின் கொள்கைப் பரப்புநர் மவ்லானா நதீர் அஹ்மத் சாஹிப் அலி அவரிடம் கூறினார்கள். இப்போது நீங்கள் அஹ்மதி ஆகி விட்டீர்கள். எனவே குர்ஆனின் போதனைக்கேற்ப நான்கு மனைவிகளை வைத்துக் கொள்ளலாம். மற்றவர்களை தலாக் கொடுத்து, உணவு உடைகளுக்குத் தேவையான பொருட்களையும் கொடுத்து விடுதலை அளித்து விடுங்கள். அவரோ அவ்வழிகாட்டலின்படி உடனே செயல்பட்டது மட்டுமின்றி, முதல் நான்கு மனைவிகளை வைத்துக் கொண்டு அதற்குப் பிறகு கட்டிய இளம் மனைவிகளை மண விடுதலை செய்து விட்டார். இது ஒரு புரட்சிக்குரிய மாற்றமாகும்.

பிறகு நமது ஒரு கொள்கை பரப்புநர் யூனுஸ் காலித் சாஹிப் எழுதுகிறார்கள். வீ வீ காஹ்லூ சாஹிப் என்பவர் கஷ்ஃபின் மூலம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். மவ்லானா முஹம்மத ஸித்தீக் சாஹிப் அமிர்தசரஸி அவர்கள் அங்கு பிரச்சாரகராக பணியாற்றிய காலத்தில் அவர் பைஅத் செய்தார். பிறகு அவர் சிராலியோன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமீராகவும் இருந்தார். அஹ்மதியாவதற்கு முன்னால் முற்றிலும் சுதந்திரமான சூழ்நிலை இருந்தது. எந்த அளவுக்கெனில், அவர் ஓர் டான்சர் ஆக இருந்தார். ஆனால் பைஅத்திற்குப் பிறகு உடனேயே தனக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டார். தக்வா, தூய்மை, இறையச்சம், நேர்மை ஆகியவற்றின் ஒரு சிறந்த இடத்தை தனக்கென உருவாக்கிக் கொண்டார். அல்லாஹ்வுத்தஅலா அவருக்கு பெரும் முன்னேற்றங்களை வழங்கினான். அவர் அப்பகுதியின் Parmont Chief ஆகவும் இருந்தார். அங்கு வைரச் சுரங்கங்கள் இருந்தன. அன்னார் அப்பகுதியின் Chief ஆக இருந்ததால் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி (சம்பாதிப்பதற்கு) போதிய வாய்ப்புகள் இருந்தன. அவர்கள்

இலட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் சம்பாதித்திருக்க முடியும். ஆனால் அஹ்மதிய்யத்தின் அழகிய தூய போதனைகளின் காரணத்தால் அந்த செல்வத்தை தனக்கு ஹராம் என்று கருதினார். சாதாரண எளிய வாழ்க்கை நடத்தி வந்தார். மிஸ்டர் விவி காஹ்லூ மிக உயர்ந்த நேர்மையான பேராமவுண்ட் Chief என்பது அப்பகுதியின் மேல்மட்டத்தில் உள்ளவர்கள் வரை பிரபல்யமாக இருந்தது. அவர் தானும் கையூட்டு பெறுவதில்லை. மற்றவர்களையும் பெற விடுவதில்லை. ஒருமுறை அவர் நோயுற்றிருந்த போது அன்னாரை விசாரிக்க சென்ற போது என்னை கூப்பிட்டுக் கூறினார். யூனுஸ், எனது கண்களுக்கு அருகில் எப்போதும் பச்சை நிறத்தில் கலீமா தய்யிபா எழுதப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? நான் அவரிடம் கூறினேன். ..........தங்களுக்கு அல்லாஹ் மற்றும் அவனது ரஸுலிடம் இருந்த பிரியத்தின் விளைவால் அவ்வாறு இருக்கிறது. அம்மனிதர் (யூனுஸ்) கூறினார். நான் இரு மாதங்களாக அங்கு சென்று கொண்டிருக்கிறேன். அவர் கலீமா தய்யிபா பச்சை நிறத்தில் ஒளியினால் எழுதப்பட்டிருப்பதை நான் எப்போதும் காண்கின்றேன் என்றே கூறிக் கொண்டிருந்தார்.

அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மரணவேளை நெருங்கிய போது ஓர் அஹ்மதி டாக்டர் மிஸ்டர் கோஜி அவரது கையைப் பிடித்து Chief லாயிலாஹ இல்லல்லாஹ் கூறுங்கள் என்றதும் லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறினார். பிறகு மிஸ்டர் கோஜி முஹம்மத் ரஸுலுல்லாஹ் என்றதும் அவரும் முஹம்மத் ரஸுலுல்லாஹ் என்று கூறினார். உடனே தலை சரிந்து விட்டது.

ஏழாவது நிபந்தனை எளிமை, நல்லொழுக்கம், பணிவு இவற்றின் பக்கம் கவனம் செலுத்துவது பற்றியதாகும். எளியவர்கள், பொருளாதார ரீதியில் குறைந்த வசதிகளைக் கொண்டவர்கள்தான் அதிக அளவில் நபிமார்களை நம்புகின்றனர். ஏழைகள், பணக்காரர்களை விட அதிகமாக தைரியத்துடன் பொருள் தியாகம் செய்கின்றனர். உயிர் தியாகம் செய்ய வேண்டியது ஏற்பட்டாலும் தயங்குவதில்லை. அவர்கள் ஒருபோதும் தமது பெருமையைக் காட்டுபவர்களாக கர்வம் காட்டுபவர்களாக இருப்பதில்லை. மாறாக, ஒவ்வொரு பெரியவர் சிறியவர் முன்னிலையிலும் மிகவும் எளிமையுடனும் தாழ்மையுடனும் அவர்கள் இருப்பர். பணிவு தாழ்மை



ஆகியவற்றை கடைபிடிப்பதில் மிக உயர்ந்த தகுதியை அவர்கள் நிலைநிறுத்துகின்றனர். எத்தனை அதிகமாக பணிவு தாழ்மை ஆகியவற்றின் உயரிய முன்மாதிரியைக் காட்டுகின்ற எளிய மக்கள் இருப்பார்களோ அதைப் பொறுத்தே ஓர் இறை இயக்கத்தின் வெற்றி அமைகிறது. அதன் மூலமாக அதன் முன்னேற்றத்தின் வேகமும் அதிகரிக்கும். நபிமார்களை ஒப்புக் கொள்பவர்கள் அத்தகைய மக்களேயாவர். நபிமார்களின் பார்வை அத்தகைய உள்ளங்களின் மீது படும்போது அவை மேலும் பிரகாசிக்கின்றன. அவர்கள் பணிவைக் காட்டும் மக்களாக இருக்கின்றனர். அடுத்தவர்களுக்காக தமது இடத்தை விட்டு விட்டு செருப்புகளின் மீது உட்கார வேண்டியது வந்தால் அவ்வாறு உட்காருகின்றனர். இறைவனால் நியமிக்கப்பட்டவரின் பார்வை இத்தகைய மக்களை கண்டுணரத்தக்க அளவில் நுட்பமானதாக இருக்கிறது. எனது ஜமாஅத்தில் எளிய வறியவர்களுக்குரிய இடம்தான் எல்லாவற்றிலும் உயர்ந்தது என்று தனது ஜமாஅத்திற்குப் புரிய வைப்பதற்காகவும் அந்த எளியவருக்கு கூலி தருவதற்காகவும் நபிமார்கள் அத்தகு எளிய மனிதர்களை அங்கிருந்து தூக்கி தனது அருகில் வைத்துக் கொள்கின்றனர். உணவு வேளையில் அவர்களை அழைத்து தனது தட்டிலிருந்து அவர்களையும் உண்ண வைக்கின்றனர். நபிமார்கள் இத்தகைய மக்களுக்கு கண்ணியம் அளிப்பதற்கு காரணம் அந்த எளிமையின் காரணத்தால் அத்தகைய மக்கள் மார்க்கத்தை விரைவாக ஒப்புக் கொள்கின்றனர். மேலும் மார்க்கப் போதனைகளுக்கு ஏற்ப முழுமையாக செயலாற்றுகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஏழைகள் பெருமையடிப்பதில்லை. முழுமையான பணிவுடன் உண்மையை ஒப்புக் கொள்கின்றனர். நான் உண்மையாகக் கூறுகிறேன். ஏழை மக்கள் முழுமையாகப் பெறும் அந்த நன்மையில் பத்தில் ஒரு சதவீதம் பங்கை பெரும் செல்வந்தர்கள் பெறுவது மிகக் குறைவுதான். எனவேதான் ஜமாஅத்தில் சேர்வதற்கு எளிமை நிபந்தனையாகும் என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். அதன் மூலமே மார்க்கத்தை சரியாக புரிய முடியும். அதன்படி அமல் செய்ய முடியும். இப்போது இந்த

மாற்றங்கள் எவ்வாறு நடக்கின்ற என்பதற்கு நான் சில முன்மாதிரிகளை எடுத்து வைக்கிறேன்.

ஹஸ்ரத் சையத் சர்வர் சாஹ் (ரலி) அவர்கள் ஒரு பெரிய ஆலிமாகவும் செல்வச் சிறப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவருமாக இருந்தார். அவ்வாறிருந்த போதிலும், அவரது தூய்மை, உருக்கம், எளிமை ஒரு முன்னுதாரணமாக இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நெருக்கமான தொடர்பு வைத்துக் கொண்டு, அவர்களின் அடிமையாக இருப்பதை தமது கழுத்தில் போடப்பட்ட பொறுப்பாக ஆக்கிக் கொண்டு முற்றிலும் உலக விருப்பங்களை தமது உள்ளத்திலிருந்து வெளியேற்றினார். உண்மையிலேயே தெரு பெருக்குகின்ற ஒருவர் கூட வாழ்வதற்கு தகுதியற்ற ஒரு குறுகிய வீட்டில்தான் மத்ரஸா அஹ்மதிய்யாவில் பணியாற்றிய காலம் வரை அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஹுஸுர் (அலை) அவர்களின் அடிமையாக அவர்கள் இருந்ததினால் உலகத்தை அன்னார் விட்டு விட்ட பிறகு, உலகப் பொருட்களில் நிம்மதியைப் பெறுதல் என்ற கேள்விக்கே இடமில்லாமற் போனது.

(அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 5, பாகம் 3, பக்கம் 9)

மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிபின் இன்னொரு உதாரணம். அதுவும் எளிமையைப் பற்றியதுதான். ஒருமுறை ஹுஸுர் அவர்களுடைய சமூகத்தில் வந்து அழத் தொடங்கினார். மவ்லவி சாஹிப், நலமாக இருக்கிறீர்களா? என ஹுஸுர் (அலை) அவர்கள் மிகவும் அன்புடன் கேட்டார்கள். அதற்கு அவர்கள் இவ்வாறு பதில் கூறினார்கள். கோட்டி ஆனேன். பிறகு போலி ஆனேன். பிறகு கஸ்னீ ஆனேன். இப்போது மிர்ஸாயி ஆகி உள்ளேன். என் வயதும் கடைசி ஆகி விட்டது. நான் அப்படியே இருந்து விட்டேன். அதாவது முதலில் நான் கோட்லாவைச் சேர்ந்த பீர் சாஹிபின் கால்களை முத்தமிட்டுக் கொண்டிருந்தேன். அதற்குப் பிறகு பாவ்லி என்ற பெரியவருக்கு சேவை செய்து வந்தேன். அதற்குப் பிறகு மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் கஸ்னவி அவர்களின் சமூகத்தில் வந்தடைந்தேன். இப்போது நான் ஹுஸுருடைய சேவைக்கு வந்துள்ளேன். நான் எத்துணை தகுதியற்றவனினும் தகுதியற்றவனாக இருந்துள்ளேன் என்பதை நினைத்து அழுகிறேன். அப்போது ஹுஸுர் அவர்கள் மவ்லவி சாஹிபிடம் மிகவும்



அன்பு காட்டினார்கள். அவருக்கு ஆறுதல் அளித்தார்கள். கூறினார்கள். மவ்லவி சாஹிப் கலங்க வேண்டாம். எங்கு தாங்கள் வந்துசேர வேண்டி இருந்ததோ அங்கு வந்து சேர்ந்து விட்டீர்கள். இப்போது கலக்கமடைய வேண்டிய அவசியமே இல்லை என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய பிறகுதான் அவர்கள் நிம்மதியடைந்தார்கள்.

(மாஹ்னாஹ் அன்ஸாருல்லாஹ் ரப்வா செப்டம்பர் 1977 பக்கம் 14)

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் நேசர் சையித் ஃபஸ்ல் சாஹ் சாஹிப் லாஹுரி உன்னதமான அகத்தூய்மை பிரியம் மற்றும் களங்கமற்ற தன்மையினால் நிறைந்த முழுமையான கொள்கைப் பிடிப்பினால் ஒளியூட்டப்பட்டவராக இருக்கிறார்கள். பொருள் மற்றும் உயிரை தருவதற்கு தயாராக இருக்கிறார். இவ்வழியில் செயல்படுவதற்கு தேவையான ஒழுக்கம், மற்றும் நல்லெண்ணம் ஆகியவை இவரிடம் வியக்கத்தக்க பணிவுடன் காணப்படுகின்றன. அல்லாஹ்வுக்காக என்னுடன் தொடர்பு வைத்து என் மீது நேசம் வைப்பதில் உயர் நிலையை அவர் பெற்றுள்ளார். என்னுடன் ஒன்றி விடுதல், நன்றி உணர்வு ஆகிய பண்புகளில் அவர் முன்னேறி விட்டார். அவருடைய சகோதரர் நாஸிர் சாஹ் –வும் இந்த எளியவனுடன் பைஅத் செய்து தொடர்பு வைத்துள்ளார். அவர்களின் மாமா முன்ஷி கரம் இலாஹி சாஹிப் கூட இந்த எளியவனின் தூய நண்பராக இருந்தார்.

(இஸாலா அவ்ஹாம் ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 532)

**பிறகு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் நேசர் முன்ஷி ரஸ்தும் அலி ரயில்வே போலீசின் டெபுடி இன்ஸ்பெக்டராக இருக்கிறார். (நம்முடைய நாடுகளில் போலீஸ்காரர்களில் நேர்மை குறித்து மிகவும் கெட்ட பெயரே நிலவுகிறது. இந்தக் கோணத்தில் இதனைப் பார்க்கும் போது பிறகு புரிய வருகிறது - ஹுஸுர்.)

இந்த இளைஞர் ஒரு சாலிஹான களங்கமற்றவர் ஆவார். எனது முதல் தரமான நண்பர்களில் உள்ளவர் ஆவார். அவரது முகத்திலேயே

ஏழ்மை, சுயநலமின்மை, களங்கமின்மை வெளிப்படுகிறது. எந்த சோதனையின் வேளையிலும் இந்த நண்பரை நான் அதிர்ந்து பார்க்கவில்லை. பிரியத்துடன் எப்போது அவர் என் பக்கம் திரும்பினாரோ அது குறையவில்லை. மாறாக, நாள்தோறும் வளர்ந்தது. அதாவது அவர் முன்னேற்றத்தை நோக்கியே வளர்ந்து சென்றார்.

(இஸாலா அவ்ஹாம் ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 532)

பிறகு அதில் (பைஅத் நிபந்தனையில்) கர்வத்திலிருந்து விலகியிருப்போம் என்று வந்தது. இதுபற்றி ஹஸ்ரத் சையத் முஹம்மத் சர்வர் சாஹ் சாஹிப் (ரலி) அவர்களுடைய உதாரணத்தை தருகிறேன்.

அறிவிலும், இல்மிலும், அருட்களிலும் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தும் கூட இக்காலத்தின் பெயர்தாங்கி ஆலிம்களுக்கு நேர் எதிராக அவர்களின் தோற்றத்தில் ஓர் எளிமையும் பணிவும் இருந்தது. அது எந்த அளவு இருந்ததென்றால், எந்த நேரத்திலும் ஒரு சிறு குழந்தைகூட அவர்களிடம் பேச விரும்பினால், கூச்சமின்றி ஒன்றாக அமர்ந்து அவர்களுடன் பேச முடியும். அவர்கள் அன்புடன் அவர்களின் பேச்சைக் கேட்பார்கள். அவர்கள் திருப்தி அடையும் வகையில் அவர்களின் கேள்விக்கு பதில் தருவார்கள். மவ்லவி முஹம்மது ஹஃபீஸ் பகாபூரி தனது சிறு வயது சம்பவத்தை கூறுகிறார்கள். இந்த எளியவனின் ஒரு நெருங்கிய உறவினருக்கு குழந்தை பிறந்த போது கடிதத்தின் மூலம் எனக்கு செய்தி கிடைத்தது. நான் ஹஸ்ரத் மவ்லவி சாஹிபிடம் புதிதாக பிறந்த குழந்தைக்கு பெயர் சூட்டுமாறு கேட்க விரும்பினேன். அன்னார் மஸ்ஜித் அக்ஸாவுக்கு தர்ஸ் கொடுப்பதற்காக சென்று கொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு முன்னால் வந்தேன். தன் பக்கம் இந்த எளியவன் வருவதைப் பார்த்து அவர்கள் உடனே நின்றார்கள். மிகப் பிரியத்துடன் நான் கூறுவதைக் கேட்டார்கள். எனது வேண்டுகோளுக்கிணங்க பிறந்த குழந்தைக்கு பெயரும் தந்து அக்குழந்தைக்காக துஆவும் செய்தார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 5 அத்தியாயம் 3 பக்கம் 35)

பிறகு இதுபற்றி ஹஸ்ரத் மவ்லவி புர்கானுத்தீன் சாஹிப் உடைய ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். முதலிலேயே உதாரணங்களின் மூலம் அவர்கள் பெயர் விரும்பியாகவோ, காட்டுதல், கடின உள்ளம் உள்ளவராகவோ சிறிதும்



இருந்ததில்லை என்று தெளிவாகியுள்ளது. அவர்கள் ஒரு பெரிய ஆலிமாக இருந்தும் கூட அறிவில் பெருமை கொள்வது, கர்வம் ஒருபோதும் அவர்களிடம் இருந்ததில்லை. அவர்கள் ஒரு பெரிய ஆலிமாக இருந்தார்கள். காதியானில் அவர்கள் தங்கியிருந்த காலத்தில் எவராவது மவ்லவி சாஹிப் என்று அழைத்தால் உடனே நின்று என்னை மவ்லவி என்று கூறாதீர்கள் என்று கூறி அவ்வாறு கூறுவதை தடை செய்து விட்டு நான் இப்போது தான் மிர்ஸா சாஹிபிடம் அப்ஜத் அதாவது அலிஃப், பே (ஆரம்பப் பாடம் படிக்க ஆரம்பித்துள்ளேன் என்று கூறுவார்கள்.

(மாஹ்னமாஹ் அன்ஸாருல்லாஹ் ரப்வா செப்டம்பர் 1977 பக்கம் 12)

எளிமை, பணிவு ஆகியவற்றின் எல்லா முன்மாதிரிகளைக் காட்டிலும் மிகப்பெரும் ஓர் முன்மாதிரியை உங்கள் முன் வைக்கிறேன். ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சஹீத் (ரலி) அவர்களைப் பற்றி கூறுகிறார்கள். தன்னலமின்மை, அடக்கம் ஆகியவற்றில் அவர்கள் அடைந்திருந்த படித்தரத்தை ஒரு மனிதன் ஃபனாஃபில்லாஹ் (அல்லாஹ்விடம் தன்னை மாய்த்து விடுதல்) ஆகாதவரை பெற முடியாது. ஒவ்வொரு நபரும் ஓரளவு அறிவையும், புகழையும் பெறுவதில் பிரியமுள்ளவராகத்தான் இருக்கின்றார். மேலும் தன்னை ஒரு பொருட்டாகக் கருத ஆரம்பித்து விடுகின்றார். மேலும் அதே அறிவும், புகழும்தான் அவர் உண்மையைப் பெறுவதிலிருந்து அவருக்கு தடையாக இருக்கின்றது. (அதாவது உண்மையை அறிவதில் தடையாக ஆகி விடுகின்றன - ஹுஸூர்) ஆனால் அம்மனிதர் எவ்வளவு தன்னலமற்றவராக இருந்தார் எனில் அன்னார், அருட்களின் ஒரு தொகுப்பாக இருந்தபோதிலும் உண்மையை ஒப்புக் கொள்வதில் அவரது அறிவோ, செயலோ, குடும்ப கௌரவமோ தடையாக இருந்ததில்லை. இறுதியில் உண்மைக்காக அவர்கள் தமது உயிரை அர்ப்பணம் செய்தார்கள். நம்முடைய ஜமாஅத்திற்காக எத்தகைய முன்மாதிரியை விட்டுச் சென்றுள்ளார்கள் என்றால் அதனை கடைபிடிப்பதே இறைவிருப்பமாகும்.

(தஸ்கிரதுஷ் சஹாதத்தைன் - ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 47)

## தியாகத்தின் உயர்வான அளவுகோல்

பிறகு பைஅத்தின் எட்டாவது நிபந்தனையில், தனது உயிர், பொருள், கண்ணியம் மற்றும் அனைத்துப் பொருட்களையும் தியாகம் செய்தல், மற்றும் மார்க்கத்திற்கு உலகத்தை விட முக்கியத்துவம் தர வேண்டியது பற்றியும் வருகிறது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் அல்லாஹ்வின் அருளால் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை தருபவர்கள் எப்போதுமே காணப்படுகின்றனர். தாய்மார்கள் தமது குழந்தைகளை வழங்குகின்றனர். தந்தைமார்கள், இப்ராஹீம் (அலை) அவர்களின் சுன்னத்தைப் பின்பற்றியவாறு, இப்போது இக்குழந்தை ஜமாஅத்திற்குரியது, ஜமாஅத் எங்கு விரும்புகிறதோ அங்கு (இதனை பயன்படுத்திக் கொண்டு) தியாகத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று குழந்தையின் விரலைப் பிடித்துக் கூட்டி வருகின்றனர். குழந்தைகளும் ஹஸ்ரத் இஸ்மாயில் (அலை) அவர்களைப் போன்று நாம் எம் உயிரை அர்ப்பணிக்கத் தயார் என்று தங்களை ஜமாஅத்திற்கு அர்ப்பணித்து விடுகின்றன. இக்காட்சி முன்னாலும் இருந்தது. இப்போதும் அக்காட்சி நிலைபெற்றுள்ளது என்பதற்கு நாம் ஒரு உதாரணம் தருகிறோம்.

1923 –ல் இந்துக்கள் ஸுத்தி திட்டம் (தூய்மைப்படுத்தும் திட்டம்) என்ற பெயரில் முஸ்லிம்களை இந்துக்களாக மாற்றும் திட்டம் ஒன்றை ஆரம்பித்தனர். இதற்கு எதிராக அஹ்மதிய்யா ஜமாஅத் செய்த முயற்சிகளில் சிறுவர்களோ பெரியவர்களோ பின்வாங்கவில்லை. ஐந்து வயது சிறுவர்கள் கூட முஸ்லிம்களின் பகுதிக்கு செல்ல தயாராகி விட்டனர். ஒரு 12 வயது சிறுவன் தனது தந்தைக்கு இவ்வாறு எழுதினார். மார்க்கத்திற்குத் தொண்டு செய்வது பெரியவர்களுக்கு மட்டும் அன்றி எங்களுக்கும் கடமையாகும். எனவே தாங்கள் இறைவன்பால் அழைப்பதற்காக சென்றால் நானும் செல்வேன். நீங்கள் செல்லவில்லையென்றால் கண்டிப்பாக என்னை அனுப்புங்கள். (தாரிகே அஹ்மதிய்யத் தொகுதி 5 பக்கம் 336)

நான் முன்னரே கூறியது போன்று இது பழைய கதை அன்று. இக்காட்சி இப்போதும்கூட தென்படுகிறது. இன்னும் கூட வக்ஃபே நவ் குழந்தைகள் என்னை சந்திக்க வருகின்றனர். இந்த சூழ்நிலையில் கூட அவர்களிடம் நீங்கள் பெரியவரான பிறகு, என்ன செய்யப் போகிறீர்கள் என்று



கேட்கப்படும் போது, தாங்கள் என்ன செய்ய சொல்கிறீர்களோ அதனையே செய்ய முயற்சி செய்வோம். நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஜமாஅத் கூறட்டும் என்பதே அவர்களின் பதிலாக இருக்கும். இதே உணர்வுதான் அஹ்மதி சிறுவர்களுக்குமுரியதாகும். எதுவரை இந்த உணர்வு இருக்குமோ – இன்சா அல்லாஹ் கியாமத் வரை இந்த உணர்வு இருக்கும். அதுவரை ஜமாஅத்தின் ஒரு முடியைக் கூட எவரும் அசைக்க முடியாது.

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்கி தன்னை வறியவர்களாக ஆக்கிக் கொண்டு, தமது சொந்த நாட்டை விட்டு விட்டு ஹிஜ்ரத் செய்து, பழைய நண்பர்கள் உறவினர்களைப் பிரிந்து தனித்து நிரந்தரமாக எனது அண்மையில் வந்து குடியேறிவிட்ட ஒரு ஜமாஅத் இப்போது என்னுடன் இருக்கின்றது. (அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 5 அத்தியாயம் 3 பக்கம் 130)

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மவ்லவி ஹகீம் நூருத்தீன் சாஹிப் தனது செல்வம் மூலம் எனக்கு எந்த அளவுக்கு உதவி புரிந்தார் எனில், அதற்கு இணையான ஒன்றைப் பார்க்க முடியவில்லை. அவரது தியாகத்திற்கு இணையான ஒன்றைக் காட்ட முடியாது. அவர்களை இயல்பாகவே தாராள மனத்துடன் மார்க்கத் தொண்டிற்கு வாழ்வை அர்ப்பணிப்பவர்களாக காண்கிறேன். எல்லா வகையிலும் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் உண்மையான தொண்டனாக இருக்கும் வகையில் அவர்கள் தமது அன்றாட வாழ்க்கையை இறைவழியில் அர்ப்பணம் செய்திருந்தும்கூட இவ்வியக்கத்திற்கு உதவி செய்பவர்களில் அவர்கள் முதலிடத்தைப் பெற்றவர்களாக இருக்கின்றார்கள். ஒவ்வொரு கோணத்திலும் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் உண்மையான ஊழியராக விளங்குவதற்காகவே தம் வாழ்வை வக்ஃப் செய்துள்ளார். இவ்வியக்கத்திற்கு உதவி செய்பவர்களில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (இஸாலா அவ்ஹாம் ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 520)

பிறகு ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களைப் பற்றி **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** இவ்வாறு கூறுகின்றார்கள்:

அவர்களின் வாழ்வு களங்மற்ற நிலையில் கழிந்தது. உலக சுகபோகங்களில் எவ்வகையிலும் அவர்கள் பங்கெடுக்கவில்லை. மார்க்கத்திற்கு இழிவு ஏற்படுகிறது என்ற காரணத்தினாலேயே அவர்கள் தமது வேலையை விட்டு விட்டார்கள். சில நாட்களுக்கு முன்னர் 200 ரூபாய் மாத சம்பளம் கிடைக்கக்கூடிய வேலை கிடைத்தது. ஆனால் அவர்கள் தெளிவாக அதனை மறுத்து விட்டார்கள். எளிமையுடன் தனது வாழ்வை கழித்தார்கள். அரபு நூல்களை பார்ப்பதில் மட்டும் அவர்களுக்கு அதிக ஆர்வம் இருந்தது. உட்புறத்திலிருந்தும் வெளிப்புறத்திலிருந்தும் இஸ்லாத்தின் மீது நடத்தப்படும் தாக்குதல்களிலிருந்து தற்காப்பு செய்வதில் வாழ்வைக் கழித்தார். அவர்கள் நோயுற்றும் பலவீனமாகவும் இருந்தும் கூட எப்போதும் அவர்களின் பேனா வேலை செய்து கொண்டே இருந்தது.

(சீரத் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி (ரலி) பக்கம் 108)

மாலிர் கோட்லாவின் தலைவர் ஹஸ்ரத் நவாப் முஹம்மத் அலி கான் சாஹிப் (ரலி) அவர்கள் தனது சகோதரருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள். நான் காதியானில் வந்து தங்குவதை ஏன் தேர்ந்தெடுத்துள்ளேன் என்பதை மிகத் தெளிவாக வெளிப்படுத்த விரும்புகிறேன். நான் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன. நான் எனது துர்பாக்கிய நிலையின் காரணமாக பன்னிரண்டு ஆண்டுகள் வீட்டிலேயே இருந்து விட்டேன். காதியானிலிருந்து விலகியிருந்தேன். சில நாட்களுக்காக மட்டும் இங்கு (காதியானுக்கு) வந்து செல்வேன். உலக சுகபோகங்களில் சுற்றி சுழன்று வாழ்வின் பெரும் பகுதியை வீணாக்கி விட்டேன். கடைசியில் வாழ்வு காற்றைப் போன்று அடித்துச் செல்லப்பட்டு விட்டதையும் நாம் மார்க்கத்திற்காக எதையும் செய்யவில்லை. உலகத்திற்காகவும் எதையும் உண்டாக்கவில்லை என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

இங்கு (காதியானுக்கு) நான் ஆறு மாதங்கள் வரை தங்கியிருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் வந்தேன். ஆனால் இங்கு வந்த பிறகு எனது எல்லா விவகாரங்களையும் கவனித்துப் பார்த்தேன். உலகப் பணிகள் மார்க்கத்தைப் பின்பற்றிச் செல்லும்போதும் நிறைவேறி விடுகின்றன.



ஆனால் உலகின் பின்னாலே மனிதன் சென்று கொண்டிருந்தால் உலகமும் கிடைக்காது; மார்க்கமும் அழிந்து விடும் என இறுதியில் எனது உள்ளம் தீர்ப்பு வழங்கியது. மேலும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்த போது இந்த பதினோரு வருடங்களில் நானும் எதனையும் சம்பாதிக்கவில்லை; எனது சகோதரர்களும் எதனையும் சம்பாதிக்கவில்லை. நாளுக்கு நாள் விரக்தி அடைந்து கொண்டிருக்கும் நிலைமைகளிலும் நாம் நமது மார்க்கத்தையும் அழித்துக் கொண்டிருக்கின்றோம். இறுதியில் உலக வேலைகளில் முழுமையாக மூழ்கி விட வேண்டாம் என்று கருதி கோட்லாவுக்கு பிரியா விடை கொடுத்தேன். நான் ஹிஜ்ரத் செய்ய வேண்டும் என்று உறுதியாக எண்ணம் கொண்டு விட்டேன். எனவே அல்ஹம்துலில்லாஹ். நான் கோட்லாவில் இருந்து ஹிஜ்ரத் செய்து விட்டேன் என்பதை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துகிறேன். சரீஅத்தின்படி ஒரு ஹிஜ்ரத் செய்தவர் தனது நாட்டிற்கு தனது சொந்த விருப்பப்படி வர முடியாது. அதாவது அதனை வீடாக ஆக்க முடியாது. பயணியைப் போன்று வந்தால் உண்டு. ஆனால் இந்த நிலைமையில் நான் அங்கு வருவது சாத்தியமற்றதாகும். நான் மிகவும் மகிழ்ச்சியுடன் சிறந்த நிலையில் இருக்கின்றேன். நாங்கள் எந்த ஒளியைச் சுற்றியுள்ள மின்மினிப் பூச்சிக்களாக இருக்கின்றோமோ அதை விட்டு எவ்வாறு பிரிந்து வர முடியும்?

எனது அன்பான கண்ணியத்திற்குரிய சகோதரரே! நான் இங்கு இறைவனுக்காகவே வந்துள்ளேன். எனது நட்பு, பிரியம் எல்லாம் இறைவனுக்காகவே தான் இருக்கின்றன. நான் கோட்லாவை விட்டுப் பிரிந்து இருக்கிறேன். ஆனால் கோட்லாவின் அவலநிலையை நினைத்து எனக்கு மிகவும் துயரம் ஏற்படுகிறது. இறைவன் உங்களுக்கும் நமது சகோதரர்கள் அனைவருக்கும் கோட்லாக்காரர்கள் அனைவருக்கு அறிவை வழங்குவானாக. நீங்கள் அனைவரும் இஸ்லாத்திற்கு முழுமையாக தொண்டு செய்பவர்களாக ஆகி விடுங்கள். நம் எல்லாரது வாழ்வும் மரணமும் அல்லாஹ்விற்காக மட்டும் இருக்கட்டும். நாம் இறைவனுக்கு முழுமையாக கட்டுப்படக்கூடிய முஸ்லிம்களாக ஆகி விடுவோம். மார்க்கத்திற்கு உலகத்தை விட முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் நம்முடைய கருணைமிக்க அரசுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்க

வேண்டும் என்பதும் அதற்கு முழுமையாக கட்டுப்பட வேண்டும் என்பதும், பைஅத் நிபந்தனையில் இருக்கின்றது. இவ்விசயங்கள்தான் என்னை இங்கு வைத்துக் கொண்டிருக்கின்றது. எனது ஈமான் எந்த அளவு வளர்ச்சி அடைகிறதோ அதே அளவு இவ்வுலகம் அற்பமானதாகவும் மார்க்கம் முதன்மையானதாகவும் எனக்கு தெரிகிறது. இறைவன் மற்றும் மனிதனின் நன்மைகளைப் புரிந்து கொள்ளும் நன்றியுணர்வு அவற்றால் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. அதே போன்று அரசிற்கு கட்டுப்படுதலும், நன்றி காட்டலும் உள்ளத்தில் முழுமையாக இடம் பிடித்துக் கொள்கிறது.

(அஸ்ஹாபே அஹ்மத் தொகுதி 2 பக்கம் 126-129)

பிறகு ஹக்கீம் ஃபஸ்லுத்தீன் சாஹிப் இஸ்லாத்தின் மீது அவருக்கு இருந்த பரிவில் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அவரைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹக்கீம் ஃபஸ்லுத்தீன் சாஹிப் பேரூவி. இவர் எனது சகோதரர் மவ்லவி ஹக்கீம் நூருத்தீன் சாஹிபின் நண்பர்களில் ஒருவரும் நல்லொழுக்கத்தில் அவர்களின் நிறத்தைப் பெற்ற மாசற்ற மனிதரும் ஆவார். அவருக்கு அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர் மீதும் உண்மையான அன்பு இருந்ததை நான் அறிவேன். இந்த காரணத்தினாலேயே இந்த எளியவனை மார்க்கத் தொண்டனாக பார்த்து அல்லாஹ்வுக்காக அன்பு செலுத்துதல் என்ற நிபந்தனையை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார். தொடக்க நாட்களிலிருந்தே இஸ்லாத்தின் உண்மைகளைப் பரப்புவதில் எனது பிரியத்திற்குரிய சகோதரர் மவ்லவி ஹக்கீம் நூருத்தீன் சாஹிபுக்கு கொடுக்கப்பட்டிருந்த அதே ஆர்வத்திலிருந்து பெரும் பங்கு இருவருக்கும் கிடைத்திருப்பதாகத் தெரிகிறது. அவர் இந்த இயக்கத்திற்கு ஏற்படும் மார்க்க செலவுகளை கவனமாகச் சிந்தித்துப் பார்த்து விட்டு சந்தாவின் வடிவில் ஏதேனும் சிறந்த ஏற்பாடு இருக்க வேண்டும் என்ற கவலையில் எப்போதும் இருக்கின்றார். (இஸாலா அவ்ஹாம் - ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 522)

1923 -ம் ஆண்டில் முஸ்லிம்களை இந்துக்களாக மாற்றும் ஸுத்தி திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்ட போது பிரச்சாரத்திற்காக அஹ்மதி கொள்கைப் பரப்புநர்கள் கடும் வெயியில் நாள்தோறும் பலப்பல மைல்கள் கால்நடையாக பயணம் செய்தனர். பல வேளைகளில் உணவு என்ன?



தண்ணீர் கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பல வேளைகளில் சரியாக வேகாத பழைய உணவுகளை அவர்கள் உண்டனர். அல்லது பொரித்த கடலையை சாப்பிட்டு விட்டு தண்ணீரைக் குடித்து பொழுதைக் கழித்தனர். சில வேளைகளில் அவர்கள் வைத்திருந்த அவலை மட்டும் உண்டு வந்தனர். ஒரு நாளைக்கு 16 மைல் செல்ல வேண்டும் என்ற கணக்கில் நாற்பது கிராமங்களில் அவர்கள் பயணம் செய்து வந்தனர் என்று சூஃபி அப்துல் கதீர் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள். (தாரிகே அஹ்மதிய்யத் தொகுதி 4 பக்கம் 354)

அமெரிக்காவில் ஒருவர் அஹ்மதியானார். அவர் பெரிய இசை வல்லுனராகத் திகழ்ந்தார். தனது காலத்தில் அவர் மியூசிக்கில் எந்த அளவு மிகச் சிறந்த முன்னேற்றத்தை அடைந்தார் என்றால் மிக விரைவாக முழு அமெரிக்காவிலும் அவர் பிரபல்யமானார். இவர் தமது காலத்தில் மிகப்பெரும் இசை வல்லுநராக இருந்தார் என்று அவர் நினைவு கூறப்படும் அளவில் அவர் மகத்தான இசை வல்லுநராகி விடுவார் என அவர் தொடர்பாக வல்லுநர்கள் கருத்து தெரிவித்தனர். அஹ்மதியானவுடன் அவர் மியூசிக்கையும் பொருட்படுத்தவில்லை. அதன் மூலம் கிடைக்கும் செல்வத்தின் மீதும் பேராசை வைக்கவில்லை. இப்போது அவர் ஓர் எளிய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் முறைப்படி தஹஜ்ஜுத் தொழுது கொண்டிருக்கிறார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய பெயரை கூறியவுடன் அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிகிறது.

(மாஹ்னமாஹ் காலித் ஜனவரி 1988)

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தனது கிலாஃபத்திற்கு முன்னுள்ள சம்பவத்தை இவ்வாறு எழுதுகிறார்கள்:**

நான் இங்கு (காதியான்) ஏன் வந்தேன்? பேராவில் எனக்கு வசதியான வீடு இருக்கிறது. இங்கு நான் சிறிய வீடொன்றை கட்டினேன். எல்லா விதமான வசதிகளும் இங்கு இருப்பதை விட அங்குதான் எனக்கு அதிகமாக கிடைத்திருக்கும். ஆனால் நான் நோயுற்று இருப்பதை கண்டேன். மிகவும் நோயுற்றிருக்கிறேன். தேவை உடையவனாக இருக்கின்றேன். மிகவும் தேவை உடையவனாக இருக்கின்றேன். நான் வழியற்றவனாக இருக்கின்றேன். மிகவும் வழியற்றவனாக இருக்கின்றேன். எனவே நான் எனது இந்த துக்கங்களை அகற்றுவதற்காகத்தான் இங்கு வந்துள்ளேன்.

எவராவது எனது முன்மாதிரியைப் பார்க்க வேண்டும் என்பதற்காக காதியான் வருகின்றார் அல்லது இங்கு வந்து சிறிது காலம் தங்கியிருந்து இங்குள்ள மக்களைப் பற்றி முறையீடுகள் செய்ய வேண்டும் என எண்ணுகிறார் என்றால் அப்படிப்பட்டவர்களின் பார்வை அவர்களை ஏமாற்றி விடும். அவர்கள் நோயாளிகளை ஆரோக்கியமுள்ளவர்கள் என்று கருதி அவர்களை சோதித்துப் பார்க்கின்றார்கள். இங்குள்ள நட்பும் தொடர்புகளும் இங்கு வருவதும் செல்வதும் தங்குவதும் எல்லாம் லாயிலாஹ இல்லல்லாஹ்வின் கீழ் இருக்க வேண்டும். ரொட்டிகளுக்காகவும், கட்டில்களுக்காகவும் இங்கு வருவதாய் இருந்தால் அவை பெரும்பாலும் உங்கள் வீடுகளில் இருக்கும்போது இங்கு வரவேண்டிய அவசியம் என்ன? உங்களது எல்லா பணிகளும் இறைவனுக்காகவே ஆகிவிடும்போதுதான் நீங்கள் செய்துள்ள உறுதிமொழியை ஏற்று நடப்பவர்களாக நீங்கள் ஆக முடியும். (குத்பா ஜுமுஆ ஜனவரி 22, 1904)

**ஹஸ்ரத் சாஹிப் சாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் சஹீது (ரலி) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:**

இந்த மர்ஹூம் அவர்களிடம் பெருமை கொள்ளத்தக்க பண்பு என்னவெனில் உண்மையில் அவர் மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை தருபவராக இருந்தார். இறைவனுக்குப் பயந்து தனது தக்வா மற்றும் இறைவனுக்கு கட்டுப்படுதலை அதன் இறுதி எல்லை வரை கொண்டு செல்லக்கூடிய நேர்மையாளர்களைச் சார்ந்தவராக இருந்தார். இறைவனை மகிழ்விப்பதற்காகவும் அவனது திருப்தியைப் பெறுவதற்காகவும் தனது உயிரையும், பொருளையும், கண்ணியத்தையும், பயனற்ற புற்பூண்டுகளைப் போன்றும் கைவிடுவதற்கு அவர் ஆயத்தமாக இருந்தார். அவர்களுடைய ஈமானிய ஆற்றல் எத்துணை பெரியது எனில், அதற்கு உதாரணமாக நான் ஒரு பெரும் மலையைக் குறிப்பிட்டால் அவ்வுதாரணம் சற்று குறைவானதாக ஆகிவிடக் கூடாதே என்று நான் அஞ்சுகிறேன். பெரும்பாலான மக்கள் பைஅத் செய்து எனது அழைப்பை உண்மைப்படுத்திய பிறகும் உலகிற்கு மார்க்கத்தை விட முன்னுரிமை தரும் விசக்கருவில் இருந்து முற்றாக விடுதலை பெறாமல் இருக்கின்றனர்.



கொஞ்சம் அவை அவர்களிடம் எஞ்சி உள்ளன. ஒரு மறைமுகமான கருமித்தனம், அவர்கள் உயிரைக் குறித்தோ, பொருளைக் குறித்தோ, கண்ணியத்தைக் குறித்தோ, நல்லொழுக்க நிலைகளிலோ அவர்களின் முழுமை பெறாத நஃப்ஸ்களில் காணப்படுகிறது. அத்தகைய மக்கள் தொடர்பாக எப்போதும் எனது நிலை எவ்வாறு இருந்து வருகின்றதென்றால் நான் அவர்களிடம் ஏதாவது மார்க்கத் தொண்டு செய்யும்படி கூறும்போதெல்லாம் அவர்களுக்கு சோதனை வந்து விடக் கூடாதே என்றும் இந்தப் பணியை அவர்கள் தங்கள் மீது சுமத்தப்பட்ட ஒரு சுமையாகக் கருதி பைஅத்திற்கு பிரியா விடை கொடுத்து விடக்கூடாதே என்றும் நான் அஞ்சுகின்றேன். ஆனால் இந்த கண்ணியத்திற்குரிய மர்ஹூம் அவர்களை நான் எந்த சொற்களால் புகழ்வேன்? அவர் ஒரு விலக்கப்பட்ட பொருளை தூக்கி எறிவது போன்று தனது பொருளையும் கௌரவத்தையும் உயிரையும் என்னைப் பின்பற்றி நடந்தவாறு தூக்கி எறிந்து விட்டார். பெரும்பாலான மக்களை நான் பார்த்துள்ளேன். அவர்களின் ஆரம்பமும் முடிவும் ஒன்றாக இருந்ததில்லை. ஒரு சிறிய தடுமாற்றம், சய்த்தானிய சலனங்கள் அல்லது தீய நட்பினால் அவர்கள் விழுந்து விடுகின்றனர். ஆனால் இந்த வீரம் மிக்க மர்ஹூமின் நிலைத்து நிற்றலை நான் எந்த வார்த்தைகளில் விளக்குவேன்? நிச்சய உறுதியின் ஒளியில் மூச்சுக்கு மூச்சு அவர் முன்னேற்றம் அடைந்து கொண்டேயிருந்தார்.

(தஸ்கிரத்துஷ் சஹாததைன், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 10)

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: சஹீத் மர்ஹூம் தாம் மரணித்து ஜமாஅத்திற்கு ஒரு முன்மாதிரியை தந்துள்ளார்கள். உண்மையில் எனது ஜமாஅத்திற்கு ஒரு பெரிய முன்மாதிரியின் தேவை இருந்தது. இப்போது மக்களில் சிலர் இருக்கின்றனர். ஒரு சிறிய வேலையைச் செய்து விட்டு தாங்கள் பெரிதாக சாதித்து விட்டதாக கருதுகின்றனர். எனக்கு பெரிய நன்மை செய்ததாக நினைக்கின்றனர். ஆனால் அந்த சேவையை செய்வதற்கு அவர்களுக்கு வாய்பளித்தது இறைவன் அவர்களுக்கு செய்த நன்மையாகும். சிலர் இருக்கின்றனர். அவர்கள் முழுமையான ஆர்வத்துடனோ உண்மையுடனோ இங்கு வரவில்லை. ஈமானின் வலு, உயரிய உண்மை, பண்புகளைப் பெற்றதாக அவர்கள் எந்த அளவு

வாதிக்கின்றனரோ அந்த அளவுக்கு கடைசி வரை அதில் நிலைத்து நிற்பதில்லை. உலக விருப்பத்திற்காக மார்க்கத்தை விட்டு விடுகின்றனர். ஒரு சிறிய சோதனையைக் கூட சகித்துக் கொள்ள முடிவதில்லை. இறைவனுடைய மார்க்கத்தில் நுழைந்த பிறகும் கூட அவர்களின் உலக விருப்பங்கள் குறையவில்லை. ஆனால் இறைவனுக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகள். இன்னும் ஒரு சிலர் இருக்கின்றனர். உண்மையான உள்ளத்துடன் ஈமான் கொண்டனர். விரும்பினர். இவ்வழியில் எல்லா துன்பங்களையும் சகிப்பதற்கு ஆயத்தமாக இருந்தனர். ஆனால் எந்த முன்னுதாரணத்தை இந்த வீரமிக்க ஆண் மகன் வெளிப்படுத்திக் காட்டினாரோ அந்த ஆற்றல்கள் இப்போது வரை இந்த ஜமாஅத்தில் மறைந்து இருக்கின்றன. சஹீத் மர்ஹூம் வெளிப்படுத்திக் காட்டிய முன்மாதிரிக்கேற்ப இறைவன் எல்லாருக்கும் அந்த ஈமானை கற்றுத் தருவானாக. எல்லாருக்கும் அந்த உறுதியான நிலைத்து நிற்கும் தன்மையை வழங்குவானாக. எந்த உலக வாழ்கையானது சய்த்தானிய தாக்குதல்களுடன் கலந்து இருக்கின்றதோ அது ஒருவரை முழுமைபெற்ற மனிதனாவதிலிருந்தும் தடுக்கின்றது. இவ்வியக்கத்தில் அதிமானவர்கள் இணைவார்கள். ஆனால் பரிதாபம்! மிகச் சிலரே இத்தகைய முன்மாதிரியைக் காட்டுவார்.

(தஸ்கிரதுஷ் சஹாததைன்-ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 57,58)

**பிறகு அன்னார் கூறுகிறார்கள்:**

சாஹிப் சாதா அப்துல் லத்தீஃப் சாஹிபிற்காக தீர்மானிக்கப்பட்ட சஹாதத் கிடைத்து விட்டது. இப்போது அநீதி இழைத்தவர்களின் அழிவு மட்டும் எஞ்சி உள்ளது. **இன்னஹூமன் யஃதி ரப்பஹூ முஜிரிமன் ஃபஇன்ன லஹூ ஜஹன்னம லாயமூத்து ஃபீஹா வலா யஹ்யா** (சூரா தாஹா:75). நிச்சயமாக தம் இறைவனிடம் குற்றவாளியாக வருபவருக்கு கிடைப்பது நரகம் தான். அவர் அதில் மரணமடைவதுமில்லை. வாழ்வதுமில்லை. இந்த (ஆப்கானிஸ்தானின்) அமீர் மன்யக்தல் முஃமினன் முதஅம்மிதன் (அந்நிஸா:94) ஒருவன் ஒரு நம்பிக்கை கொண்டவரை வேண்டுமென்றே கொலை செய்து விட்டால்....... என்ற ஆயத்தின் கீழ் வந்து விட்டார். அணு அளவும் இறையச்சம் கொள்ளவில்லை. மேலும் அவர்



எத்தகைய முஃமின் என்றால் காபுல் என்ற தலைநகர் முழுவதும் தேடினாலும் இவரைப் போன்ற ஒரு மனிதரை அவர்கள் பெற்றிருக்க முடியாது. அவர் உண்மையான உள்ளத்துடன் உண்மைக்காக உயிரை அர்ப்பணிக்கின்றார். மனைவி மக்களை சிறிதும் பொருட்படுத்தவில்லை. அப்துல் லத்தீஃபே! உமக்கு ஆயிரக்கணக்கான அருட்கள் உண்டாகட்டும்! நீர் எனது வாழ்விலேயே உமது உண்மைக்கு முன்னுதாரணம் காட்டினீர். எனது ஜமாஅத்தில் எனது மரணத்திற்குப் பிறகு இருக்கக் கூடிய மக்கள் என்ன வேலைகள் செய்வார்கள் என்று எனக்கு தெரியாது.

(தஸ்கிரத்துஷ் சஹாததைன்-ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 60)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: சாஹிப் சாதா மவ்லவி முஹம்மத் அப்துல் லத்தீஃப் சாஹிபிடமிருந்து வெளிப்பட்ட இந்த உறுதியான நிலைநிற்கும் தன்மையையும் உயிரை அர்ப்பணிக்கும் தன்மையையும் பார்க்கும்போது எனக்கு எனது ஜமாஅத் தொடர்பான நம்பிக்கை வளர்கிறது. ஏனெனில் இறைவன் இந்த ஜமாஅத்தைச் சார்ந்த சிலருக்கு வெறும் பொருளை மட்டுமின்றி உயிரை இவ்வழியில் தியாகம் செய்யும் வாய்ப்பை வழங்கியுள்ளான். இதிலிருந்து இறைவனது தெளிவான விருப்பம் என்னவென்றால் அவன்இந்த ஜமாஅத்தில் அதிகமாக சாஹிப் சாதா மவ்லவி அப்துல் லத்தீஃப் சாஹிபின் ரூஹைப் பெற்றிருக்கும் இதுபோன்ற மக்களை உருவாக்குவான் என்பது தெரிய வருகிறது. அவர்கள் அவரது ஆன்மீகத்தின் ஒரு புதிய செடியாகத் திகழ்வார்கள்.

(தஸ்கிரத்துஷ் சஹாததைன்-ரூஹானி கஸாயின்
தொகுதி 20 லண்டன் பதிப்பு பக்கம் 75)

இன்றிலிருந்து சரியாக நூறாண்டுகளுக்கு முன்பு ஹஸ்ரத் சாஹிப் சாதா அப்துல் லத்தீஃப் சஹீத் ஆக்கப்பட்டனர்.

கடைசி காலத்தின் மஸீஹே! உங்களுக்கு நல்வாழ்த்துக்கள்! உமது அன்பிற்குரிய ஜமாஅத், உங்கள் ஜமாஅத் பற்றிய உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி விட்டது. பொருள், நேரம், உயிர் ஆகியவற்றின் தியாகத்தில் ஒருபோதும் பின்தங்கவில்லை. அத்தகைய காட்சிகள் இப்போதும் நமது கண்ணில் தென்படுகின்றன. தங்களுக்கு பிறகும்

ஜமாஅத்தில் அத்தகைய மக்கள் உருவாகியுள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு தமக்கு பிறகு என்ன நடக்கும்? என்ற கவலை இருந்தது. அவர்களுக்குப் பிறகும் அத்தகைய மக்கள் பிறந்தார்கள்; பிறந்து கொண்டிருக்கிறார்கள் என்று நாம் சாட்சி கூறுகிறோம். அவர்கள் உலக ஆசைகளை பொருட்படுத்தவில்லை. தங்கள் உயிர்களை அர்ப்பணிப்பதில் தயக்கம் காட்டவில்லை. தந்தை தமது கண்களுக்கு முன்னால் மகன் சஹீதாவதைக் கண்டனர். மகன் தமது கண்களுக்கு முன்னால் தந்தை சஹீதாவதைக் கண்டார். ஆனால் அவர்களின் உறுதிமிக்க பாதங்களில் தடுமாற்றம் ஏற்படவில்லை. பிறகு அவர்களும் தமது உயிரை தியாகம் செய்து விட்டனர்.

தூய மஸீஹே! தங்களுக்கு வாழ்த்துக்கள்! உங்களது சந்ததிகளில் இருந்தும் கூட உங்களது இரத்தத்திலிருந்து வந்தவர்கள் கூட உயிர்த்தியாகம் செய்தவாறு ஜமாஅத்தை மிகப்பெரிய குழப்பங்களிலிருந்து காப்பாற்றியுள்ளார்கள். அல்லாஹ்வுத்தஅலா அந்த அனைத்து உயிர்த்தியாகிகளின் தகுதிகளையும் உயர்த்திக் கொண்டே செல்வானாக! அல்லாஹ்வுத்தஅலா நமக்கும் அத்தகைய வாய்ப்பை தருவானாக! உலகின் மீது மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவர்களாகவும், எல்லா வகை குர்பானிகளுக்காகவும் எப்போதும் ஆயத்தமாக இருப்பவர்களாக நம்மை ஆக்குவானாக! நமது சந்ததிகளிலும் அந்த உணர்வு உயிரோடு இருக்கும்படியும் செய்வானாக! அல்லாஹ் நமக்கும் எப்போதும் அந்த வாய்ப்பை தந்து கொண்டிருப்பானாக!

(10.10.2003 அன்று இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள்
நிகழ்த்திய ஜுமுஆ பேருரையிலிருந்து)



## மனித இனத்திற்குத் தொண்டாற்றுதல் மற்றும் மனத்தூய்மை, நன்றியுணர்வு ஆகியவற்றின் ஈடிணையற்ற முன்மாதிரிகள்

ஜமாஅத்திடம் பொதுத் தொண்டு தொடர்பாகவும் மனித இனத்திற்கு தொண்டு செய்வது தொடர்பாகவும் எந்த அளவுக்கு வலியுறுத்தி கூறப்பட்டுள்ளதென்றால் ஒவ்வொரு செல்வந்தரும் ஏழையும் தனது சக்திக்கேற்ப இவ்வழியில் முயற்சி செய்கிறார்கள். இறைவனின் திருப்தியை பெறுவதற்காக பொதுத் தொண்டுகளை முழுமையாக நிறைவேற்ற எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என எதிர்பார்த்திருக்கின்றார்கள். பொதுத் தொண்டுகளில் ஈடுபட இந்த அளவில் ஒவ்வோர் அஹ்மதியின் உள்ளமும் ஏன் திறந்துள்ளது? ஏனெனில், இஸ்லாத்தின் எந்த அழகிய போதனையை நாம் மறந்து விட்டோமோ அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத்தின் பத்து நிபந்தனைகளில் ஓர் அடிப்படை நிபந்தனையாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது அல்லாஹ்வின் அன்பைப் பெற வேண்டுமென்றால் அவனது படைப்பினங்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் தனது நெருக்கத்தை உங்களுக்கு வழங்குவதற்கு இதுவும் ஒரு மிகப்பெரிய வழியாக அமைந்திருக்கின்றது. இந்த அழகிய போதனையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது பைஅத் நிபந்தனைகளில் ஒரு அடிப்படை நிபந்தனையாக வைத்துள்ளார்கள். அதாவது என்னுடன் இணைந்த பிறகு ஒருவர் தனது எல்லா ஆற்றல்கள் மூலமாகவும் அருள்கள் மூலமாகவும் அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் கருணையுடன் நடந்து கொள்வது மட்டுமில்லாமல் அவர்களுக்கு நன்மையும் செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். எனவேதான் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய தேவை ஏற்படும் போது அஹ்மதிகள் முன்னே நிற்கின்றனர். வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய தேவை ஏற்படும் போது அஹ்மதிகள் முன்னே நிற்கின்றனர். சில நேரங்களில் தண்ணீரின் வேகமான சுழற்சியில் சிக்கிய நமது இளைஞர்கள் தங்களது உயிர்களை தியாகம் செய்தனர். ஆனால், அதே சமயத்தில் மூழ்கியவர்களை காப்பாற்றி அவர்களை கரை வரை கொண்டு வந்தார்கள். காலத்தின் கலீஃபா

ஆப்பிரிக்காவிலுள்ள ஏழை குழந்தைகளின் கல்விக்காகவும், சிகிச்சைக்கான வசதியின்றி நோயால் துன்புறும் மனித இனத்திற்கு மருத்துவமனைகளை திறப்பதற்காகவும், பள்ளிக்கூடங்களை நிறுவுவதற்காகவும் எனக்கு இவ்வளவு தொகை தேவை என்று அறிவித்தார்கள். மேலும் துக்கத்திலிருக்கின்ற மனித இனத்திற்காக ஓர் அஹ்மதியின் உள்ளத்தில் எந்த அளவு உணர்வு இருக்க வேண்டுமோ அந்த உணர்வுக்கு ஏற்ப தொகைகளை வழங்க வேண்டும் என காலத்தின் கலீஃபா அறிவித்த போது, இந்த அன்பான ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் காலத்தின் கலீஃபாவின் வேண்டுகோளுக்கு செவி சாய்த்தேன் என்று கூறியவாறு அவர்கள் கேட்டதை விட பல மடங்கு அதிகமான தொகையை கலீஃபாவின் முன்னால் சமர்ப்பித்து விட்டார்கள். அதற்குப் பிறகு காலத்தின் கலீஃபாவுக்கு தேவையான தொகை கிடைத்து விட்டது. இப்போது இந்த பள்ளிக்கூடங்களையும் மருத்துவமனைகளையும் நடத்துவதற்கு ஆட்கள் தேவை என்று கூறிய போது ஜமாஅத்திலுள்ள மருத்துவர்களும் ஆசிரியர்களும் முழுமையான தூய உள்ளத்துடன் இவ்வழியில் தங்களை அர்ப்பணிக்க முன் வந்தார்கள்.

இப்போதுள்ள ஆப்பிரிக்காவின் நிலை முன்பு இருந்ததை விட சிறந்ததாக இருக்கின்றது. 1970 ஆம் ஆண்டில் நுஸ்ரத் ஜஹான் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது மிகவும் கஷ்டமான நிலைமை இருந்தது. அந்த கஷ்டமான நிலைமையிலும் கூட அம்மக்கள் தங்கள் காலத்தை கழித்தனர். சில மருத்துவர்களும், ஆசிரியர்களும் நல்ல தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் தங்களை இவ்வழியில் அர்ப்பணித்த பிறகு கிராமங்களில் சென்று அவர்கள் வாழ்கை நடத்தினார்கள். ஏனெனில், அதிகமான மருத்துவமனைகளும், பள்ளிக்கூடங்களும் கிராமங்களில் இருந்தன. அந்த கிராமங்களில் மின்சார வசதியும் இருக்கவில்லை. தண்ணீர் வசசியும் இல்லை. ஆனால் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மனித இனத்திற்கு தொண்டு செய்வதாக பைஅத்தின்போது செய்த உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டியிருந்தது. எனவே, எந்த தடையையும் வசதியின்மையும் பற்றி சிறிதளவு கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை. துவக்க நாட்களில் மருத்துவமனைகளில் நிலைமை



எவ்வாறிருந்ததென்றால் மரத்தாலான மேஜைகளில் நோயாளிகளை படுக்க வைத்தார்கள். ஒளி குறைவாக இருந்தது. நிறவு விளக்குகள் போன்றவற்றின் மூலம் அந்தக் குறை நீக்கப்பட்டது. கத்திகள், கத்திரிக்கோல் போன்ற எந்த பொருள் கிடைக்கின்றதோ அவையே அறுவை சிகிச்சைக்குரிய பொருள்களாக பயன்படுத்தப்பட்டன. அதன் மூலமாக நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்த பிறகு மருத்துவர்கள் துஆவில் ஆழ்ந்து விடுவார்கள். இறைவா! என்னிடம் இருப்பதைக் கொண்டு நான் சிகிச்சை செய்கின்றேன். என்னுடைய கலீஃபா என்னிடம் துஆவின் மூலமாக சிகிச்சை செய்யுங்கள். அல்லாஹ் உங்கள் கைகளில் அதிகமாக குணமளிக்கும் தன்மையை வைப்பான் என்று கூறியுள்ளார்கள். எனவே இறைவா! நீயே இவர்களுக்கு குணமளிப்பாயாக! என அவர்கள் துஆ செய்தனர். அல்லாஹ்வும் இவ்வாறு தியாகங்கள் செய்த மருத்துவர்களுக்கு கண்ணியமளித்தான். சிகிச்சையே இவர்களுக்கு கிடையாது என்று கூறப்பட்ட பலருக்கு முழுமையான குணம் கிடைத்ததைக் கண்டு உலகமே வியந்தது. பிறகு பொருளாதார தேவைகளை அல்லாஹ் எவ்வாறு நிறைவேற்றினான் என்றால், பெரும் பெரும் செல்வந்தர்கள் கூட நகரத்திலுள்ள பெரிய மருத்துவமனைகளை விட்டுவிட்டு சிறிய கிராமங்களிலுள்ள நமது மருத்துவமனைகளுக்கு வந்து சிகிச்சை செய்வதற்கு முன்னுரிமை வழங்கினார்கள். இவ்வாறே, ஆசிரியர்களும் மனித இனத்திற்கு தொண்டு செய்யும் உணர்வில் மூழ்கியவர்களாக ஏழைக் குழந்தைகளை கல்வி என்னும் நகைகளால் அலங்கரித்தார்கள். மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் தொண்டு இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அல்லாஹ் தொடர்ந்து இதனை நிலைநாட்டு வானாக! மேலும், இந்த எல்லா தொண்டு செய்பவர்களுக்கும் சிறந்த நற்கூலியை வழங்கிக் கொண்டிருப்பானாக!

## அஹ்மதி மருத்துவர்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும்

மாநாட்டின் போது நம்முடைய ஆப்பிரிக்காவிலுள்ள மருத்துவமனைகளுக்கு நமது மருத்துவர்களும் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்று

கூறியிருந்தேன். இப்போது அல்லாஹ்வின் அருளால் அங்கு நிலைமைகள் மிகவும் சிறந்த நிலையில் உள்ளது. மேலும், எல்லா வசதிகளும் கிடைக்கின்றன. துவக்க நாட்களில் தங்களை இவ்வழியில் அர்ப்பணித்தவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் இப்போது அங்கில்லை. ஒரு சில துன்பங்கள் இருந்தாலும் அல்லாஹ்வுக்காக, அல்லாஹ் வழங்கியுள்ள சக்திக்கேற்ப, மனித இனத்திற்கு நன்மை செய்வேன் என்ற பைஅத் உடன்படிக்கையை கண்முன் நிறுத்தி செயல்படுங்கள். முன்னே வாருங்கள். காலத்தின் மஸீஹுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். அவர்களது துஆவுக்கு வாரிசாகுங்கள். இவ்வாறே, ரப்வாவிலுள்ள ஃபஸ்லே உமர் மருத்துவமனைக்கு மருத்துவர்கள் தேவைப்படுகின்றார்கள். அங்கும்கூட மருத்துவர்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

பாகிஸ்தானிலும் மற்ற நாடுகளிலும் குழந்தைகளின் கல்விக்காகவும் நோயாளிகளின் சிகிச்சைக்காகவும் நிரந்தரமாக சகோதரர்கள் ஜமாஅத் அமைப்பின் கீழ் பொருளுதவி செய்கின்றார்கள். மேலும் ஏழ்மை அதிகமாக இருக்கின்ற இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இந்த நோக்கத்திற்காக பொருளுதவி செய்கின்றவர்கள் இந்த தொண்டின் காரணமாக நோயாளிகளின் துஆக்களை பெறுகின்றார்கள். எனவே, இந்த நல்ல பணியை ஜமாஅத் சகோதரர்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும். முன்பை விட அதிகமாக செய்ய வேண்டும். ஏனென்றால், துக்கங்களும் மிக விரைவாக அதிகரித்து வருகிறது.

பொதுத் தொண்டின் உணர்வில் மூழ்கியவாறு மனித இனத்திற்கு சேவை செய்துள்ள சில பெரியவர்களின் சம்பவங்களை இப்போது நான் உங்கள் முன் வைக்கின்றேன்.

**ஹஸ்ரத் மிர்ஸா அய்யூப் பேக் சாஹிப் (ரலி) அவர்களின் முன்மாதிரி தொடர்பாக அதனை அறிவிப்பவர் இவ்வாறு எழுதியுள்ளார்.**

மர்ஹூமும், தனக்காக விரும்புவதையே தனது சகோதரனுக்காகவும் விரும்ப வேண்டும்; தான் விரும்பாத பரிமாற்றத்தை தனது சகோதரரிடம் காட்டக் கூடாது என்ற நபிமொழிக்கு உயிருள்ள உதாரணமாக திகழ்ந்தார். தனது சகோதரனுக்கு உதவி செய்யக்கூடிய



ஏதாவது சந்தர்ப்பம் தனக்கு கிடைக்காதா என எப்போதும் தேடிக் கொண்டிருப்பார்கள். அவர் கல்லூரியில் படிக்கும் நாட்களில் ஜமாஅத் சொற்பொழிவுகள் நடக்கும்போது அங்கு வந்து ஒவ்வொர் அஹ்மதியையும் சந்திப்பார்கள். மேலும் ஏதாவதொரு சகோதரர் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவரது வீட்டிற்கு செல்வார்கள். அவரது உடல்நலம் விசாரிப்பார்கள். மேலும் சில நாட்களில் ஏறக்குறைய எல்லா நாட்களும் இந்த நோயாளிகளை தொடர்ந்து பார்க்க செல்வார்கள். ஒருமுறை ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். அப்போது மர்ஹூம் பல நாட்களாக முஃப்தி சாஹிபை கவனித்துக் கொள்வதற்காக அவர்களது வீட்டிலேயே தங்கி வந்தார்கள். இரவு பகலாக முஃப்தி சாஹிபுக்கு தொண்டு செய்து வந்தார்கள். அவர் நோய்வாய்ப் –பட்டிருந்த காலத்தில் சில நேரங்களில் அசுத்தங்களை அகற்ற வேண்டியது வந்தாலும் அதனையும் தனது கைகளால் செய்து வந்தார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத் பாகம் 1, பக்கம் 199,200)

**ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் (ரலி) அவர்கள் தனது தாயார் தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்:**

எனது தாயார், அல்லாஹ் எவருடைய எதிரியாகவும் இல்லாமல் இருக்கும்போது எந்த எதிரியாலும் என்ன சீர்குலைவை ஏற்படுத்த முடியும்? இவ்வகையில் நான் எவரையுமே எதிரியாகக் கருதுவதில்லை என்று கூறுவார்கள். மேலும், எதிரிகளுடன் எனது தாயார் மிகவும் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். மேலும் எவரிடத்தில் உள்ளம் மகிழ்ச்சியடைகின்றதோ அவருடன் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு உள்ளம் தானாகவே விரும்பும்போது இதில் நற்கூலி என்ன உள்ளது? மனிதன் அல்லாஹ்வை மகிழ்விப்பதற்காக தனது உள்ளம் திருப்தி அடையாத ஒருவரிடம்கூட கருணை யோடும், நன்மையோடும் நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுவார்கள்.

சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: எனது தாயார் டஸ்கா என்ற ஊரில் இருந்த சமயத்தில் அங்குள்ள மக்களுடன் மிகவும் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்வார்கள். மக்களும் கூட அவர்களை மிகவும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் பார்ப்பார்கள். அஹ்ராரிகளின் சண்டை துவங்கிய போது அதன் பாதிப்பு, இவர்கள் இருந்த

பகுதியிலும் இருந்தது. எந்த மக்கள் உதவி பெற்று வந்தார்களோ அதே மக்கள் எதிர்க்கத் தொடங்கினார்கள். ஆனால், இந்த எதிர்ப்பின் எவ்வித பாதிப்பும் எனது தாயாரிடம் ஏற்படவில்லை. அவர்களின் உறவினர்களில் யாராவது அவர்களிடம், நம்முடைய எதிரியாக இருக்கின்ற அஹ்ராரிகளுடன் சேர்ந்திருக்கின்ற இந்த நபருக்கு நீங்கள் ஏன் உதவி செய்கின்றீர்கள் என்று கேட்டால், என்னை தொண்டு செய்வதிலிருந்தும் ஏன் தடை செய்கின்றீர்கள்? என்று கூறி மிக அதிகமாக எடுத்துக்கூறி தனது கருத்தை அவர் சம்மதிக்கும்படி செய்வார்கள்.

ஒருமுறை சவுத்ரி சாஹிப் அவர்களின் தாயார் சில புத்தாடைகளை தைத்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நபர் அவர்களிடம் இந்த ஆடைகளை நீங்கள் யாருக்காக தயார் செய்கின்றீர்கள்? என்று கேட்ட போது, இது இந்த நபரின் குழந்தைகளுக்காக நான் தயார் செய்து கொண்டிருக்கிறேன் என்று அவர்கள் பதில் கூறினார்கள். அதைக் கேட்ட அந்த நபர் நீங்கள் நூதனமானவர்கள் தான். அவர் அஹ்ராரி ஆவார். ஜமாஅத்தை கடுமையாக எதிர்ப்பவர். அவருக்காகவா நீங்கள் இந்த ஆடைகளை தயார் செய்கின்றீர்கள்? எனக் கேட்டார். அதற்கு சவுத்ரி சாஹிப் அவர்களின் தாயார் அவர்கள் தீமை செய்தால் அல்லாஹ் நம்மை பாதுகாக்கின்றான். அவன் நம்முடன் இருக்கும் வரை எதிரிகளின் தீங்கு நமக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. ஆனால், இந்த நபர் ஏழ்மையில் இருப்பவர். இவரது பிள்ளைகளுக்கும் பேரக்குழந்தைகளுக்கும் உடலை மறைப்பதற்கு ஆடை வாங்கி கொடுப்பதற்கு இவரிடம் எதுவும் இல்லை. எனவே, அவர் தேவையுடையவர் என்பதை கருத்தில் கொண்டே நான் அவருக்காக ஆடை தயார் செய்கின்றேன் என்றார்கள். மேலும் ஆட்சேபனை செய்கின்ற உமக்குரிய தண்டனை என்னவென்றால், நான் இந்த ஆடைகளை தயார் செய்த பிறகு அதனை நீர்தான் அந்த நபரின் வீட்டிற்கு எடுத்து செல்லவேண்டும் என்று சவுத்ரி சாஹிபின் தாயார் கூறினார்கள். ஆனால் அத்துடன் இவர் அஹ்ராரியாவார். இவர் மீது மற்ற அஹ்மதிகளிடமிருந்து ஏன் ஆடைகளை பெற்றீர் என்று கூறி தொந்தரவு செய்யக் கூடாது. எனவே, எவரும் காணாத வகையில் இரவு நேரத்தில் அங்கு செல்ல வேண்டும் என்று கூறினார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத் பாகம் 11 பக்கம் 175,176)



விதவைகள், அநாதைகளை கண்காணிப்பது அவர்கள் உள்ளம் விரும்பிய பணியாக இருந்தது. எழுதுகின்றவர் குறிப்பிடுவதாவது: பெண் பிள்ளைகளின் சீதனத்திற்காக பொருட்களை தயார் செய்கின்ற போது மிகவும் ஈடுபாட்டுடன் எல்லா பொருட்களையும் தனது கைகளாலேயே அவர்கள் தயார் செய்வார்கள். அவர்களுக்காக ஆடைகளையும் தயார் செய்வார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத் பாகம் 11 பக்கம் 186)

ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிப் (ரலி) அவர்களும் அநாதைகளை கவனிப்பதில் அதிக ஈடுபாட்டுடன் செயல்பட்டார்கள். தாருல் யதாமாவில் (அநாதை இல்லத்தில்) எந்த அளவு அநாதைகள் இருந்தார்கள் என்றால் அது தாருஷ்ஷுயூஹ் (முதியோர் இல்லம்) என்றே அழைக்கப்பட்டது. அவர்கள் தொடர்பான அறிவிப்பில் இவ்வாறு வருகிறது.

ஒருமுறை காய்ச்சல் காரணமாக அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். கடுமையான காய்ச்சல் இருந்தது. உடலில் பலவீனம் அதிகமாக இருந்தது. பணியாளர் ஒருவர் வந்து அநாதைகளுக்கான உணவுப் பொருட்கள் குறைவாகவே உள்ளது. எங்கிருந்தும் அதற்கான ஏற்பாடு செய்ய முடியவில்லை என்று கூறினார். சிறுவர்கள் காலையிலிருந்தே காலை உணவு சாப்பிடவில்லை என்று கூறினார். இதனைக் கேட்ட அவர்கள் உடனடியாக குதிரை வண்டியில் அமர்ந்தவாறு செல்வந்தர்கள் வீட்டிற்கு சென்று உணவுப் பொருட்களை ஒன்றுசேர்த்து அந்த குழந்தைகளின் உணவிற்கான ஏற்பாட்டை செய்தார்கள். இதுதான் நமது பெரியவர்களின் உணர்வாகும். காய்ச்சல் ஏற்பட்ட நிலையிலும் கூட தனது ஓய்வை தியாகம் செய்து அநாதை குழந்தைகளுக்காக வீட்டிலிருந்து வெளியே சென்றார்கள். அவர்கள் ஏன் அவ்வாறு செய்யமாட்டார்கள்? ஏனெனில் நானும் அநாதைகளைப் பராமரிப்பவரும் இரண்டு விரல்கள் ஒன்றியிருப்பது போல் இணைந்திருப்போம் என்று கூறி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் ஒன்றாக இணைத்துக் காட்டினார்கள்.

தங்கள் எஜமானரின் இந்த நற்செய்தி நமது பெரியோர்களின் கண்முன் இருந்தது. மிக உயர்ந்த முன்மாதிரியை அவர்கள் நிலைநாட்டி சென்றுள்ளார்கள்.

**ஹாபிஸ் முயினுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் தொடர்பாக அறிவிப்பில் வருகின்றது:**

“அவர்களுக்கு கண் பார்வை இல்லை. ஒரு நாள் இரவில் கடுங்குளிரில் காதியானில் சகதி நிறைந்த தெருக்களில் மிகவும் கஷ்டப்பட்டு தட்டுத் தடுமாறி விழுகின்ற நிலையில் அவர்கள் எங்கோ சென்று கொண்டிருந்தார்கள். ஒரு நண்பர் அவர்களிடம் விசாரித்த போது சகோதரரே! இங்கு ஒரு நாய் குட்டி போட்டுள்ளது. என்னிடம் ஒரு ரொட்டி இருந்தது. மழைக் காலமாக இருப்பதால் அதனை அவற்றிற்கு போடவே வந்தேன் என்று அவர்கள் பதில் கூறினார்கள்.”

இதனையும் சுன்னத்தைப் பின்பற்றியவாறே அவர்கள் செய்துள்ளார்கள். அதாவது விலங்குகள் மீதும் கருணை காட்ட வேண்டும் என்ற கட்டளையுள்ளது. ஒரு பெண் ஒரு கிணற்றில் இறங்கி, தனது காலணிகளில் தண்ணீரை நிரப்பி அதனை தாகத்திலிருந்த ஒரு நாயிற்கு குடிக்கக் கொடுத்தாள். அவள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவளது இந்த நன்மைக்குப் பகரமாக அல்லாஹ் அவளை மன்னித்தான் என்று கூறினார்கள். இதனைக் கேட்ட நபித்தோழர்கள் மிகவும் வியப்படைந்து விலங்குகள் காரணமாகவும் நற்கூலி கிடைக்குமா? என்று கேட்டதற்கு ஒவ்வொரு உயிருள்ள படைப்பினத்திற்கும் நன்மை செய்து அருள் செய்வதற்கான நற்கூலி கிடைக்கும் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**இன்னொர் அஹ்மதி சகோதரர் நூர் முஹம்மத் சாஹிபின் சம்பவம் இவ்வாறு வருகிறது:**

“கடுமையான குளிர் காலத்தில் அவரிடத்தில் அணிவதற்கு கோட் இல்லை. போர்த்த கம்பளியும் இல்லை. மேலும் கீழும் இரண்டு ஆடைகளை அணிந்திருந்தார்கள். வண்டியில் சென்று கொண்டிருந்தார்கள். ஓர் ஊனமுற்ற முதியவர் வெற்றுடலுடன் நடுங்கிக் கொண்டிருப்பதை அவர் பார்த்தார். உடனே தான் அணிந்திருந்த ஆடையை கழற்றி அதனை அந்த முதியவருக்கு அவர்கள் அணிவித்தார்கள். அவர்களுடன் ஒரு சீக்கிய சகோதரரும் வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் அந்த முதியவரை பார்த்து, சகோதரரே! நீங்கள் கடந்து செல்ல வேண்டிய இடத்திற்கு



சென்று விட்டீர்கள். எங்களுக்கு என்ன நேரும் என்று தெரியாது என்று கூறினார். பிறகு சில நாட்கள் கழிந்த பிறகு ஒரு புதிய கம்பளியை போர்த்தியவாறு முகல்பூராவிலுள்ள பைத்துத்திக்ரில் ஃபஜ்ர் தொழுகையை தொழ வந்தார். அப்போது ஃபதஹுத்தீன் என்பவரைப் பார்த்தார். ஒரு காலத்தில் செல்வந்தராக இருந்த அவர் இப்போது ஏழ்மையின் காரணமாக போர்த்துவதற்கு எதுவுமேயில்லாமல் நடுங்கிக் கொண்டிருப்பதை கண்ட நூர் முஹம்மத் சாஹிப் அவர்கள் உடனடியாக தனது கம்பளியை எடுத்து அவருக்கு போர்த்தி விட்டார். (ரூஹ் பர்வர் யாதேன் பக்கம் 287)

1947 ஆம் ஆண்டு பாகிஸ்தான் உருவான காலத்தில் இலட்சக்கணக்கான ஒன்றுமில்லாத முஹாஜிர்கள் (இடம் பெயர்ந்து வந்தவர்கள்) பல்வேறு குழுக்களாக காதியானை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் மிகவும் மோசமான நிலை இருந்தது. முஸ்லிம் பெண்களின் கண்ணியத்தையும், மரியாதையையும் காப்பாற்றுவதற்கான எந்த உத்திரவாதமும் இல்லாமலிருந்தது. நாம் காதியான் சென்று சேர்ந்தால்தான் பாதுகாப்பாக இருப்போம் என எல்லா முஸ்லிம்களும் கருதினார்கள். அந்த சமயத்தில் வந்தவர்களை கவனிக்கும் பொறுப்பில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் நியமனம் செய்திருந்தார்கள். வந்தவர்கள் அனைவரும் மிகவும் இக்கட்டான துன்பம் நிறைந்த, ஏழ்மையான சூழ்நிலையில் அங்கு வந்து சேர்ந்தார்கள். சிலருக்கு ஆடைகள் இல்லாமல் இருந்தது. அப்போது ஹுஸூர் அவர்கள் முதலில் தனது குடும்பத்தை சார்ந்தவர்களின் ஆடைகளைப் பெட்டியிலிருந்து எடுக்கும்படி கூறினார்கள். அதனை அந்த வறியவர்களுக்கு வழங்கினார்கள். பிறகு இடம்பெயர்ந்து வந்தவர்கள் குழுக்களாக ஓர் அமைப்பின் கீழ் செல்ல ஆரம்பித்தார்கள். பாகிஸ்தான் போய் சேர்ந்து கொண்டேயிருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் மிகவும் பாதுகாப்பான வழிகள் மூலமாக அவர்கள் அங்கு போய் சேர்ந்தார்கள். மேலும் அஹ்மதிகள் தங்கள் உயிரை தியாகம் செய்தவாறு அந்த மக்களை பாதுகாக்கும் பொறுப்பை நிறைவேற்றினார்கள். பைஅத் செய்த பிறகு எங்களுக்கென்று எதுவும் இருக்காது. இப்போது எல்லா உறவுகளும், தொடர்புகளும் ஜமாஅத்தின்

அமைப்பு மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொடர்புள்ளதாக இருக்கும் வரைதான் நாங்கள் அவற்றுடன் தொடர்புள்ளவர்களாக இருப்போம். எந்த உறவும், எந்த தொடர்பும் எங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து விலக்கி தொலைவில் கொண்டு செல்ல முடியாது. நாங்கள் இந்த வீட்டின் பிச்சைக்காரர்கள் ஆவோம். இதற்கே நாங்கள் முன்னுரிமை வழங்குவோம் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நாம் செய்த பைஅத்தில் உடன்படிக்கை செய்தவாறே ஜமாஅத்தில் நுழைகின்றோம். இதுவும் பைஅத் நிபந்தனைகளில் ஒன்றாக இருக்கின்றது. பிறகு இந்த உடன்படிக்கையை அஹ்மதிகள் சிறப்பாக நிறைவேற்றினார்கள். இதன் சில உதாரணங்களையும் உங்கள் முன் வைக்கின்றேன். இவர்களில் பெரும்பாலானவர்களை காலத்தின் இமாமே (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே) தனது சொற்களிலேயே சிறப்பான அழகிய பாராட்டை வழங்கியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

“அவ்வாறே நமது உள்ளம் நேசிக்கின்ற மவ்லவி முஹம்மத் அஹ்ஸன் சாஹிப் அம்ரோஹி அவர்கள் இந்த இயக்கத்திற்காக மிக சிறந்த விசயங்கள் எழுதுவதில் ஈடுபட்டுள்ளார்கள். மேலும் சாஹிப் சாதா பீர் சிராஜுல் ஹக் சாஹிப் அவர்கள் ஆயிரக்கணக்கிலுள்ள தமது முரீதுகளிடமிருந்த தனது உறவை துண்டித்துக் கொண்டு இந்த இடத்தின் ஏழ்மையான வாழ்வை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் மியான் அப்துல்லாஹ் சாஹிப் சனவ்ரி, மவ்லவி புர்ஹானுத்தீன் சாஹிப் ஜெஹ்லமி, மவ்லவி முபாரக் அலி சாஹிப் சியால்கோட்டி, காஸி ஸியாவுத்தீன் சாஹிப் காஸிகோட்டி, குர்தாஸ்பூர் ஜில்லாவிலுள்ள பட்டாலாவை சார்ந்த சவ்திரி நபி பக்ஸ் சாஹிப், முன்ஷி ஜலாலுத்தீன் சாஹிப் யலானி ஆகியோர் தங்களது சக்திக்கேற்றவாறு தொண்டு செய்வதில் ஈடுபட்டுள்ளனர். நான் எனது ஜமாஅத்தின் அன்பின் மீதும், மனத்தூய்மையின் மீதும் வியப்படைகின்றேன். அவர்களில் மிக குறைந்த வருமானமுள்ளவர்களும் உள்ளனர். உதாரணமாக, எனது கிராமத்திற்கு அருகிலுள்ள காஷ்மீரைச் சார்ந்த மியான் ஜலாலுத்தீன், இமாதுத்தீன் ஆகியோரை கூறலாம். இவர்கள் மொத்தம் மூன்று



சகோதரர்களாவர். கூலி வேலை செய்து தினமும் மூன்று அனா அல்லது நான்கு அனாவே இவர்கள் சம்பாதிப்பார்கள். தங்களது மாத சந்தாக்களை மிகவும் உணர்வோடு செலுத்தி வருகின்றார்கள். இவர்களின் நண்பராக இருக்கும் மியான் அப்துல் அஸீஸ் பட்வாரி அவர்களின் மனத்தூய்மையை கண்டு நான் வியப்படைகின்றேன். அவருக்கு மிகவும் குறைந்த வருமானம் இருந்தும் கூட ஒரு நாள் நூறு ரூபாயை என்னிடம் தந்து இறைவழியில் இது செலவு செய்யப்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என்று என்னிடம் கூறினார். அந்த நூறு ரூபாயை அந்த ஏழை பல வருடங்களாக சேமித்து இருப்பார். ஆனால், இறைவனுக்காக அவரிடமிருந்த உணர்வு இறைவனின் திருப்தியை பெறுவதற்கான உணர்வை அவருக்கு ஏற்படுத்தியது.”

(அன்ஜாமே ஆத்தம், ரூஹானி கஸாயின் பாகம் 11 பக்கம் 213, 214)

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அதிகமாக செல்வத்தை உடையவர்கள் அதிலிருந்தும் கொஞ்சம் இறை வழியில் வழங்குவர். இப்படிப்பட்ட பலரையும் நாம் பார்த்துள்ளோம். ஆனால், தான் பசியாக, தாகமாக இருக்கின்ற போது தனது அன்புக்குரிய செல்வத்தை தனது எஜமானனின் திருப்திக்காக வழங்குவது, உலகில் தனக்கென்று எதையும் உண்டாக்காமல் இருப்பது போன்ற பண்புகள் முழுமையாக மவ்லவி சாஹிபிடத்தில் தான் இருக்கின்றது என்பதை நான் காண்கின்றேன். அவரது செல்வத்தின் மூலமாக எந்த அளவு எனக்கு உதவி கிடைத்துள்ளதோ அதற்கு இணையாக என் பார்வையில் வேறு எவரும் இல்லை. (பி-ஈனே ஆஸ்மானி ரூஹானி கஸாயின் பாகம் 4 பக்கம் 407)

**ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் மவ்லானா நூருத்தீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:**

தாங்கள் காட்டும் வழியில் என்னை அர்ப்பணித்துக் கொள்வேனாக! என்னிடமுள்ள எதுவும் என்னுடையதல்ல ; அது தங்களுடையதே.

மதிப்பிற்குரிய தலைவரே! வழிகாட்டியே! மார்க்கத்தைப் பரப்புவதற்காக என்னுடைய எல்லா செல்வமும் சம்பாத்தியமும்

செலவிடப்படுமானால் எனது வாழ்வின் குறிக்கோள் நிறைவேறி விட்டதாக நான் கருதுவேன் என்று நான் உண்மையாகக் கூறுகின்றேன்.

(ஃபத்ஹே இஸ்லாம் ரூஹானி கஸாயின் பாகம் 2 பக்கம் 26)

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் முன்ஷி ஸஃபர் அஹ்மத் சாஹிப் தொடர்பாக எழுதுகிறார்கள்:**

இறைவனுக்காக நான் நேசிக்கும் முன்ஷி ஸஃபர் அஹ்மத் சாஹிப் அவர்கள் நல்ல இளைஞரும், குறைவாக பேசுபவரும், மனத்தூய்மையால் நிறைந்துள்ள நுட்பமான அறிவுடைய மனிதருமாவார். அதாவது மிக நுட்பமான பார்வையுடன் அவர் பார்ப்பவராவார். உறுதியாக நிலைநிற்பதின் அடையாளங்களும், ஒளிகளும் அவரிடத்தில் தென்படுகின்றன. நம்பிக்கைக்குரியவராக செயல்படுதலின் அடையாளங்கள் போன்றவற்றில் அவர் நற்பாக்கியம் பெற்றவராவார். நிரூபிக்கப்பட்ட உண்மைகளை அவர் நன்றாக புரிந்திருந்தார். அதிலிருந்தும் இன்பத்தை பெற்றார். அல்லாஹ்வின் மீதும், தூதரின் மீதும் உண்மையான அன்பு வைத்திருந்தார். மேலும் மரியாதையும் வைத்திருந்தார். அதன் அடிப்படையிலேயே அனைத்து அருள்களையும் பெற்றார். இவ்வழியில் இணைந்திருக்க வேண்டிய நல்லெண்ணமும் அவரிடம் இருந்தது. இந்த இரண்டு நற்பண்புகளும் அவரது வாழ்வில் இருந்தன. அதாவது, இறையருள்களை பெறுதல், நல்லெண்ணம் கொள்ளுதல் ஆகியவற்றின் தொகுப்பாக அவர் விளங்கினார். இந்த இரண்டு நற்பண்புகளும் அவரிடமிருந்தது. அல்லாஹ் அவருக்கு சிறந்து நற்கூலியை வழங்குவானாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் மியான் அப்துல்லாஹ் சனவ்ரி (ரலி) அவர்கள் தொடர்பாக கூறுகின்றார்கள்:**

இறைவனுக்காக நான் நேசிக்கும் மியான் அப்துல்லாஹ் சனவ்ரி (ரலி) அவர்கள் நல்ல இளைஞரும் தனது தூய்மையான இயல்பின் காரணமாக என் பால் ஈர்க்கப்பட்டவருமாவார். எந்த சோதனையும் எவ்வித அசைவையும் ஏற்படுத்த முடியாத எனது நம்பிக்கைக்குரிய தோழர்களில் அவரும் ஒருவராவார் என்று நான் உறுதி கொள்கின்றேன். அவர் பல்வேறு சமயங்களில் இரண்டு இரண்டு மூன்று மூன்று மாதங்கள் அல்லது அதைவிட



அதிகமாக என்னுடன் எனது அருகில் இருந்தார். நான் எப்போதும் மிக கவனமாக அவரது அந்தரங்க நிலையை கவனித்து வந்தேன். எனது தொலைநோக்குப் பார்வை அதன் ஆழம் வரை எட்டிய பிறகு நான் அறிந்தவையெல்லாம் இந்த இளைஞரிடம் உண்மையிலேயே அல்லாஹ்வின் மீதும், தூதரின் மீதும் கொண்ட அன்பில் ஒரு சிறப்பான வேகம் காணப்படுகிறது. என்னுடன் அவர் இந்த அளவு அன்பின் தொடர்பை ஏற்படுத்துவதற்கு அவரது உள்ளத்தில் என்னைப் பற்றி இந்த நபர் அல்லாஹ்வையும், தூதரையும் மிகவும் நேசிப்பவர் என்ற உறுதி ஏற்பட்டு விட்டதை தவிர வேறு எந்த காரணமும் இருக்க முடியாது.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானி கஸாயின் பாகம் 2 பக்கம் 521)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் முன்ஷி அரோடே கான் சாஹிப் (ரலி) அவர்கள் தொடர்பாக கூறுகின்றார்கள்:**

இறைவனுக்காக நான் நேசிக்கின்ற முன்ஷி சாஹிப் அன்பிலும், மனத்தூய்மையிலும் எதையும் தாங்கும் உயிருள்ள இதயம் படைத்த மனிதராவார். உண்மையை நேசிக்கக் கூடியவராகவும் அதனை விரைவில் புரிந்து கொள்ளக்கூடியவராகவும் அவர் இருந்தார். தொண்டு செய்வதில் சுறுசுறுப்புடன் செயல்படுவார். மிகவும் மகிழ்ச்சியுடன் அவற்றை நிறைவேற்றுவார். என்னால் ஏதாவது ஊழியம் செய்ய முடியாதா என்ற கவலைதான் இரவு பகலாக அவருக்கு இருந்தது. அன்புக்குரிய இவர் உண்மையை திறந்த உள்ளத்துடன் ஏற்றுக் கொள்பவராகவும் அவ்வழியில் உயிரை தியாகம் செய்யத் தயாராகவும் இருந்தார். என்னுடன் அவருக்கு அளவு கடந்த நேசம் இருந்தது என்று நான் எண்ணுகின்றேன். தனது ஆற்றல்களாலும், செல்வத்தாலும், தனக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு நற்பேறுகள் மூலமாகவும் ஏதாவது ஓர் ஊழியம் செய்வதை விட அதிகமான மகிழ்ச்சி ஒரு வேளை வேறு எதிலும் அவருக்கு இருந்திருக்காது. உள்ளத்தாலும் உயிராலும் நம்பிக்கைக்குரியவராகவும், வீரமிக்க மனிதராகவும் இருந்தார். அல்லாஹ் அவருக்கு நற்கூலி வழங்குவானாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இ றைவனுக்காக நான் நேசிக்கும் மியான் முஹம்மது கான் சாஹிப் அவர்கள் கபூர்தலா பிரதேசத்தில் வேலையாளாக பணிபுரிந்து வந்தார்.

மிகவும் அதிகமாக எளிய இயல்பை உடையவராகவும், தூய்மையான உள்ளத்தை உடையவராகவும், நுட்பமான உண்மைகளை புரிந்து கொள்ளக் கூடியவராகவும், உண்மையை விரும்பக் கூடியவராகவும் அவர் இருந்தார். என்னிடம் எந்த அளவு அவருக்கு அன்பும், பற்றுதலும், நல்லெண்ணமும் இருந்ததென்றால் என்னால் அதனை கணித்துப் பார்க்க முடியவில்லை. அவர்களது இந்த அன்பில் கேள்வி எழும் வகையில் ஒருபோதும் எனக்கு சிறிதளவு சலனம் கூட ஏற்படவில்லை. மாறாக, இவரது அன்பு அதன் எல்லையையும் கடந்து அதிகமாகி விடக் கூடாதே என்ற எண்ணம் தான் இருந்தது. அவர் உண்மையான நம்பிக்கைக்குரியவரும், உயிரை இவ்வழியில் அர்ப்பணிப்பவராகவும், தனது நிலைகளில் நேர்மையானவராகவும் அவர் இருந்தார். இறைவன் அவர்களுடன் இருப்பானாக. அவரது இளம் வயது சகோதரரான சர்தார் அலி கான் என்பவரும் என்னிடம் பைஅத் செய்தவர்களுடன் இணைந்துள்ளார். இந்த சிறுவனும் தனது சகோதரரை போன்றே மிக நல்ல இயல்புடையவரும். நேர்மைமிக்கவரும் ஆவார். அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக!.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானி கஸாயின் பாகம் 1 பக்கம் 522)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இத்தகைய நண்பர்களில் இன்னொருவர் மிகுந்த அன்புக்குரிய சகோதரர் மிர்ஸா அஸீம் பேக் ஆவார். பாட்டியாலா பிரதேசத்திலுள்ள சாமான என்ற பகுதியின் தலைவரான இவரது பிரிவு நம்மீது இருளை பரப்பியுள்ளது. இப்போது அன்னார் இறையோனின் அருளையும் கருணையையும் மன்னிப்பையையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். அவர் ஹிஜ்ரி 1308 ரபியுஸ்ஸானி பிறை 2ல் காலமானார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். (அல்லாஹ்வுக்காக நாம் வாழ்கின்றோம். அவனிடமே நாம் அனைவரும் திரும்புகின்றோம்).

நமது கண்கள் பனிக்கின்றன. நமது இருதயம் துக்கிக்கின்றது. அவரது பிரிவுக்காக நாம் துயரம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அல்லாஹ்வுக்காக மட்டும் என்னிடத்தில் மிர்ஸா அஸீம் பேக் சாஹிப் மர்ஹூம் எவ்வளவு பெரும் பாசம் கொண்டிருந்தார்! என் பொருட்டு அவர் எவ்வாறு தம்மையே அர்ப்பணித்து விட விரும்பினார்! அவரது தகுதியை



விளக்குவதற்குரிய சொற்களை நான் எங்கிருந்து கொண்டு வருவேன்? கடந்த காலங்களில் எவருடைய மரணத்தாலும் நான் அனுபவித்திராத அளவுக்குத் துயரத்தை அவருடைய அகால மரணம் எனக்கு தந்திருக்கிறது. நமது பார்வையில் அவருக்கு உயர்ந்த இடமுள்ளது. அவர் நம்மில் ஒருவர். மிகவும் நல்ல முறையில் முன்னேறி சென்றவர். அவரிடத்தில் ஒரு தலைவருக்குரிய தகுதிகள் இருந்தன. நாம் பார்த்துக் கொண்டிக்கும்போதே அவர் நம்மை விட்டும் பிரிந்து விட்டார். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலமெல்லாம் அவரை பிரிந்ததனாலுள்ள துயரம் நம்மோடு இருக்கும்.

அவரது ஞாபகம் மன வருத்தத்தை தருகிறது. மனத்துயரம் நம்மை திணறடித்து வேதனையை தருகிறது. மனது துயருற்று கண்களிலிருந்து கண்ணீர் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது. மர்ஹூம் மிர்ஸா அஸீம் பேக் சாஹிப் அன்பு நிறைந்தவர். அந்த அன்பை வெளியிடுவதிலே துணிச்சல் மிக்கவர். (பதஹ் இஸ்லாம், ரூஹானி கஸாயின் பாகம் 2 பக்கம் 29)

**ஹஸ்ரத் காஸி ஸியாவுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்னிலையில் இவ்வாறு கூறினார்கள்:**

எனது எஜமானரே! நான் எனது உள்ளத்தில் இரண்டு வெவ்வேறான எண்ணங்கள்அலை பாய்வதை உணர்கின்றேன். ஒருபுறம் மிகுந்த மனத்தூய்மையுடன் ஹுஸுர் (அலை) அவர்களின் உண்மை, ஆன்மீக ஒளி, ஆகியவற்றை வெளியுலகம் மிக விரைவில் அறிந்து கொள்ள வேண்டும் என ஆசைப்படுகின்றேன். எல்லா சமுதாயத்தினரும் பல்வேறு கொள்கையுடைய மக்களும் வர வேண்டும். அல்லாஹ் இங்கே ஓடச் செய்துள்ள நீரூற்றிலிருந்து நீர் அருந்த வேண்டும் என விரும்புகின்றேன். ஆனால், மறுபுறம் எனது இந்த ஆசையுடன் இணைந்தே மற்ற மக்களும் ஹுஸுர் அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளும்போது, அதிக எண்ணிக்கையில் இங்கு வரும்போது இப்போது எவ்வாறு அவர்களது நெருக்கமும், நட்பும் எனக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றதோ அதிலுள்ள இன்பத்தை பெறுவதிலிருந்தும் அப்போது எனக்கு இழப்பு ஏற்பட்டு விடுமோ என்ற எண்ணத்தால் எனது உள்ளம் வேதனையடைகிறது.

எனது அன்பான எஜமானரின் அருகில் அமர்ந்தவாறு அவர்களுடன் பேசுகின்ற போது எனக்கு சிறப்புமிக்க இன்பம் கிடைக்கின்றது.

இதிலிருந்தும் நான் புறக்கணிக்கப்பட்டு விடக்கூடாதே! இவ்வாறு வெவ்வேறான விருப்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக எனது உள்ளத்தில் எழுகிறது.

காஸி சாஹிப் கூறுகின்றார்கள்: நான் கூறியவற்றை கேட்டு விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் புன்னகை பூத்தார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத் பாகம் 2 பக்கம் 10)

காஸி ஸியாவுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் ஒரு சம்பவத்தை அவர்களது மகன் காஸி அப்துர் ரஹீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்:

ஒருமுறை எனது தந்தை மிகவும் மகிழ்ச்சியுடன் இவ்வாறு கூறினார்கள். நான் உளூ செய்து கொண்டிருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடத்தில் அவர்களது ஊழியர் ஹஸ்ரத் ஹாஃபிஸ் ஹாமித் அலி சாஹிப் (ரலி) அவர்கள் என்னைப் பற்றி இவர் யார்? என்று கேட்டார். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் எனது பெயரையும் என்னைப் பற்றியும் அவரிடம் கூறி விட்டு இந்த நபருக்கு என் மீது அளவு கடந்த அன்பு இருக்கின்றது என்று கூறினார்கள்.

காஸி சாஹிப் அவர்கள் இதனை பெருமையாக கூறுவார்கள். ஹுஸூர் (அலை) அவர்களுக்கு எனது உள்ளத்தின் நிலைமை எவ்வாறு தெரிந்தது என்று கூறிக் கொண்டிருப்பார்கள். இந்த அவர்களது அளவு கடந்த அன்பின் விளைவாகவே ஹஸ்ரத் காஸி சாஹிப் (ரலி) அவர்கள் தமது மரணத்தின் போது தனது சந்ததிகளிடம் நான் மிகவும் கஷ்டப்பட்டு உங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வீட்டில் கொண்டு வந்து சேர்த்துள்ளேன். இப்போது எனக்குப் பிறகு நீங்கள் ஒருபோதும் இந்த வீட்டை விட்டு விடக் கூடாது என்று வஸிய்யத் செய்தார்கள். அவர்களது சந்ததிகளும் அவர்கள் கூறியதற்கிணங்க முழுமையாக செயல்பட்டார்கள்.

(அஸ்ஹாபே அஹ்மத் பாகம் 6, பக்கம் 8,9)

ஹஸ்ரத் மவ்லவி நிஃமத்துல்லாஹ் சாஹிப் அவர்களை காபூலில் 1924 ஆம் ஆண்டு எதிரிகள் சஹீதாக்கினார்கள். சஹீதாவதற்கு முன்னர் சிறைச்சாலையிலிருந்து அவர் தனது அஹ்மதி நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், நான் ஒவ்வொரு சமயமும் இறைவனிடம் இவ்வாறு துஆ செய்கின்றேன். என் இறைவா! இந்த தகுதியற்ற அடியானை மார்க்க



தொண்டில் வெற்றி பெறச் செய்வாயாக! நான் சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று விரும்பவில்லை. மாறாக, என் இறைவா! நான் வேண்டுவதெல்லாம் இந்த தகுதியற்றவனின் ஒவ்வொர் அணுக்களும் அஹ்மதிய்யத்திற்காக அர்ப்பணமாகி விட வேண்டும் என்பதுதான் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (தாரிஹே அஹ்மதிய்யத் பாகம் 5)

## காலத்து மஸீஹுடன் உள்ள உறவு

உலக உறவுகளில் காண முடியாத அளவில் ஈடு இணையற்ற ஓர் உறவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் ஏற்படுத்திக் கொள்வேன் என்ற பைஅத்தின் பத்தாவது நிபந்தனை தொடர்பாக ஹஸ்ரத் ஸய்யத் அப்துஸ் ஸத்தார் சா சாஹிப் (ரலி) அவர்களின் ஒரு சம்பவம் உள்ளது.

1907 ஆம் ஆண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சிறிய மகன் சாஹிப் ஸாதா மிர்ஸா முபாரக் அஹ்மத் நோய்வாய்ப்பட்டார். மிக கடுமையான டைஃபாய்டு காய்ச்சல் ஏற்பட்டது. அவர் நோய்வாய்ப் -பட்டிருந்த நாட்களில் முபாரக் அஹ்மதின் திருமணம் நடைபெறுவதாக ஒரு நபர் கனவில் கண்டார். கனவிற்கு விளக்கம் எழுதுபவர்கள் திருமணம் தனக்கு தெரியாத ஒரு பெண்ணுடன் நடைபெறுவதாக கனவில் கண்டால் அதன் விளக்கம் மரணமாகும் என எழுதியுள்ளனர். ஆனால் விளக்கம் கூறுபவர்களில் சிலர் அந்த கனவை வெளிப்படையாக அப்படியே நிறைவேற்றினால் சில நேரங்களில் அதன் விளக்கம் இல்லாமல் போய் விடும் என்ற கருத்தையும் எழுதியுள்ளார்கள். கனவை கண்டவர் அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கூறிய போது அவர்களும் கூட இதன் விளக்கம் மரணமாகும். ஆனால், அதனை வெளிப்படையாக நிறைவேற்றினால் சில நேரங்களில் அதன் விளக்கம் இல்லாமல் போய்விடும். எனவே, வாருங்கள். முபாரக் அஹ்மதிற்கு திருமணம் செய்து வைப்போம் என்று கூறினார்கள். அதாவது, எந்த சிறுவனுக்கு திருமணம் பற்றி தெரியாதோ அவர்களது திருமணம் தொடர்பான கவலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வி-யங்கள் பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது

திடீரென்று அவர்களது வீட்டிற்கு விருந்தாளியாக வந்திருந்த டாக்டர் ஸய்யத் அப்துஸ் ஸத்தார் சா ஸாஹிபின் மனைவி செய்யதா சயீதத்துன்னீஸா பேகம் சாஹிபா அவர்கள் வராந்தாவில் தென்பட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அழைத்து நாம் முபாரக் அஹ்மதின் திருமணத்தை நடத்த எண்ணியுள்ளோம். உங்கள் மகள் மர்யம் இருக்கின்றார். நீங்கள் விரும்பினால் அவளை முபாரக் அஹ்மதிற்கு திருமணம் செய்து வைக்கலாம் என்று கூறினார்கள். அதற்கு ஹுஸூர் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை. ஆனால், ஹுஸூர் எனக்கு சற்று கால அவகாசம் வழங்கினால் இது பற்றி டாக்டர் சாஹிபிடமும் கேட்டுவிடுவேன் என்று பதில் கூறினார்கள். அந்நாட்களில் டாக்டர் சாஹிபும் அவரது மனைவியும் கோல் கம்ரா (வட்ட அறை)யில் தங்கி வந்தார்கள். அப்போது டாக்டர் சாஹிப் அங்கிருக்கவில்லை. எங்கோ வெளியில் சென்றிருந்தார்கள். அவருக்காக அவர்கள் சிறிது நேரம் காத்திருந்த போது அவர்களும் வந்து விட்டார்கள். அவர்கள் வந்ததும் அவர்களது மனைவி இவ்வாறு பேச்சை துவக்கினார்கள். அல்லாஹ்வின் மார்க்கத்தில் ஒருவர் நுழைகின்ற போது சில சமயங்களில் அவரது ஈமானிற்கு சோதனை ஏற்படும். அல்லாஹ் உங்களது ஈமானை சோதித்தால் நீங்கள் அதில் உறுதியாக இருப்பீர்களா? என்று கேட்டார்கள்.

அந்த சமயத்தில் டாக்டர் சாஹிபின் மனைவிக்கு ஒரு வேளை தம் கணவர் இந்த திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்க தயக்கம் ஏற்படலாம் என்று எண்ணுவதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம், இதற்கு முன்பு அவர்களது குடும்பத்தில் எந்த பெண்ணுக்கும் செய்யது குடும்பத்தை சாராத எவருடனும் திருமணம் செய்து தரப்படவில்லை. இரண்டாவது காரணம், முபாரக் அஹ்மத் உயிர்போகும் அளவிலுள்ள ஒரு நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். டாக்டர் சாஹிப்தான் அவருக்கு சிகிச்சை செய்து வந்தார். எனவே, இந்த திருமணம் 99 சதவிகிதம் ஆபத்தால் நிரம்பியுள்ளது என்று டாக்டர் சாஹிப் எண்ணுவார். இதன் மூலமாக தனது பெண்ணின் நெற்றியில் விரைவில் விதவை கோலம் போட வேண்டிய நிலை ஏற்படும் என்ற அச்சம் இருந்தது. இந்த காரணங்களால் டாக்டர் சாஹிப் இவ்விசயத்தில் பலவீனமாக இருந்து விடக்கூடாதே என்ற எண்ணமும் அவரது ஈமான் வீணாகிவிடக்கூடாதே என்ற எண்ணமும் அவருடைய



மனைவிக்கு இருந்தது. எனவேதான் அல்லாஹ் உங்கள் ஈமானை சோதித்தால் நீங்கள் அதில் உறுதியாக இருப்பீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு டாக்டர் சாஹிப் அவர்கள், அல்லாஹ் எனக்கு உறுதியாக நிலைநிற்கும் தன்மையை வழங்குவான் என்று நான் நம்புகிறேன் என்று கூறினார்கள். இதனைக் கேட்டதும் மர்ஹூமா மர்யம் பேகமின் தாயார் நடந்தவற்றை டாக்டர் சாஹிபிடம் கூறினார்கள். இதனைக் கேட்டதும் டாக்டர் சாஹிப் அவர்கள், நல்லது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இதில் விருப்பம் இருக்கிறதென்றால் நமக்கு அதன்மீது என்ன ஆட்சேபனை இருக்க முடியும்? என்று கூறினார்கள். அவர்களது இந்த பதிலைக் கேட்டதும் மர்ஹூமா மர்யம் பேகமின் தாயார் (அல்லாஹ் அவர்களது தகுதியை உயர்த்திக் கொண்டே இருப்பானாக) அழத்தொடங்கினார்கள். கட்டுப்படுத்த முடியாத அளவில் அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் வடிய ஆரம்பித்தது. இதனைப் பார்த்ததும் டாக்டர் சாஹிப் அவர்கள் உனக்கு இந்த உறவில் விருப்பம் இல்லையா? என்று கேட்டார்கள். அதற்கு எனக்கு விருப்பம் இருக்கின்றது. விசயம் என்னவென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருமணம் தொடர்பாக எனக்கு கட்டளையிட்டபோது எனது இதயம் துடித்துக் கொண்டிருந்தது. உங்களது ஈமான் வீணாகி விடக்கூடாதே என நான் அஞ்சினேன். இப்போது உங்கள் பதில் பதிலை கேட்ட பிறகு மகிழ்ச்சியால் பெருக்கெடுத்த ஆனந்தக்கண்ணீரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை என்று கூறினார்கள். அதன் பிறகு அந்த திருமணம் நடந்தது. சில நாட்கள் கழிந்த பிறகு நோய் கடுமையானதால் சாஹிப் ஸாதா மிர்ஸா முபாரக் அஹ்மதின் மறைவால் அந்த பெண்ணும் விதவையானார்.

பாருங்கள்! அல்லாஹ் டாக்டர் சாஹிபின் மனத்தூய்மையை வீணாக்கவில்லை. அவர்களின் மகளை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பின்னர் மறுமணம் செய்து கொண்டார்கள். அவர்கள்தான் ஹஸ்ரத் உம்மே தாஹிர் ( ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தாயார்) மர்யம் சித்தீக்கா (ரலியல்லாஹூ அன்ஹா).

(அல்ஃபஸல் பத்திரிகை காதியான் ஆகஸ்ட் 1, 1944 சீரத்து செய்யது அப்துஸ் ஸத்தார் சா ஸாஹிப் பக்கம் 122லிருந்து 124 வரை)

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ஸாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் சஹீது தொடர்பாக எழுதுகின்றார்கள்:**

இந்த நாட்களில்தான் இறைவனின் வஹி தொடர்ந்து என் மீது இறங்கிக் கொண்டிருந்தது. மிகவும் வலுவான சக்திமிக்க அடையாளங்கள் வெளிப்பட்டன. நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன் என்ற எனது வாதம் ஆதாரங்களுடன் உலகில் பரப்பப்பட்டது. ஆஃப்கானிஸ்தான் நாட்டில் கோஸ்து என்னும் பகுதியை சார்ந்த ஒரு பெரியவர் இருந்தார். அவர் பெயர் மவ்லவி அப்துல் லத்தீஃப். இவருக்கும் தற்செயலாக எனது புத்தகங்கள் கிடைத்தன. அறிவுப்பூர்வமான, எழுத்துப்பூர்வமான அனைத்து ஆதாரங்களையும் அல்லாஹ்வின் உதவியால் நான் எனது புத்தகங்களில் எழுதியிருந்தேன். அந்த எல்லா ஆதாரங்களையும் அவர் படித்தார். அந்த பெரியவர் தூய உள்ளத்தையும், நல்ல அறிவையும், தொலைநோக்குப் பார்வையையும், இறையச்சத்தையும் பெற்றிருந்ததால் அவரது உள்ளத்தில் இந்த ஆதாரங்கள் வலுவான நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் அவருக்கு என்னுடைய வாதத்தை உண்மை என்று ஏற்றுக் கொள்வதில் எந்த கஷ்டமும் ஏற்படவில்லை. அவருடைய தூய மனசாட்சி இவர் இறைவன் புறமிருந்து வந்த நபர் என்பதை சிறிதும் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டது. அப்போது அவர் எனது நூல்களை மிகுந்த அன்புடன் படிக்க ஆரம்பித்தார். மேலும் தயார் நிலையிலிருந்த, மிகவும் தூய்மையான நிலையிலிருந்த அவரது ஆன்மா என்பால் ஈர்க்கப்பட்டது. எதுவரையென்றால், என்னை சந்திக்காமல் தூரத்தில் அமர்ந்திருப்பது அவருக்கு மிகுந்த துயரத்தை தரக்கூடியதாகி விட்டது. இறுதியில் அந்த வலுமிக்க ஈர்ப்பு, அன்பு, மனத்தூய்மை ஆகியவற்றின் விளைவாக இந்த நோக்கத்தை நிறைவேற்ற காபூல் பிரதேசத்திலிருந்து அனுமதி பெற்று ஹஜ் செய்வதற்கான உறுதியான எண்ணத்தை அவர் மேற்கொண்டார். மேலும் காபூலின் அமீரிடத்தில் இந்த பயணத்திற்காக அனுமதி கேட்டார். அவர் காபூலின் அமீரின் பார்வையில் ஒருதூய்மையான ஆலிமாகவும், எல்லா ஆலிம்களின் தலைவராகவும் இருந்ததால் அவர் அன்னாருக்கு அனுமதி வழங்கியதுடன் நின்று விடாமல் அவருக்கு உதவும் வகையில் கொஞ்சம் பணமும் கொடுத்தார். அவர் அனுமதி பெற்றதும் காதியான் வந்து சேர்ந்தார்.



எந்த இறைவன் கையில் என் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். நான் அவரைச் சந்தித்த போது அவர் என்னை ஏற்றுக் கொள்வதிலும் என் வாதங்களுக்குச் சான்று பகர்வதிலும் தம்மை மாய்த்துக் கொண்டவராகவே நான் அவரைக் கண்டேன். அதைவிட சிறப்பாக எவரும் என்னை ஏற்றிருக்க இயலாது. அவ்வாறே ஒரு புட்டி, நறுமண திரவத்தால் நிரம்பியிருப்பது போன்று என் மீது நிரம்ப அன்பு கொண்டவராக அவரைக் கண்டேன். அவருடைய முகம் ஒளிமிக்கதாக இருந்ததைப் போன்றே அவருடைய உள்ளமும் ஒளிமிக்கதாக இருந்தது.

(தஸ்கிரதுஷ் சஹாததைன் ரூஹானீ கஸாயின் தொகுதி பாகம் 20, பக்கம் 9,10)

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவனுடைய அருளினாலும், கருணையினாலும் நான் தனித்து விடப்படவில்லை என்பதை இவ்விடத்தில் கூறிக் கொள்கிறேன். அத்துடன் இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்வதையும் என்னால் விட்டுவிட முடியாது. என்னுடன் சகோதர உறவை உருவாக்கிக் கொண்டு சர்வ வல்லமையுள்ள இறைவனால் அவனது கரங்களாலேயே உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில் நுழைந்து விட்டவர்கள் என் மீது ஓர் அபூர்வமான நேசத்தையும் உறுதியான பற்றையும் தம் மனதில் நிரப்பி வைத்திருக்கின்றார்கள். இந்தத் தகுதியை பெறுவதற்கு நான் செய்திருப்பது ஒன்றுமில்லை. வல்லமைமிக்க இறைவன் தனது நல்லருளினால் எனக்கு இத்தகு உண்மையால் நிரம்பப் பெற்ற ஆன்மீக தோழர்களை அருளியிருக்கின்றான்.

அவர்கள் அனைவரிலும் முதன்மையானவராக, என்னுடைய ஆன்மீக சகோதரர் ஒருவரை இங்கு குறிப்பிடும்போது என் மனம் பெரிதும் நெகிழ்ந்து விடுகிறது. அவருடைய நேர்மையில் நூரைப் (ஒளியை) போலவே அவருடைய பெயரும் நூருத்தீன் (மார்க்கத்தின் ஒளி) என்பதாகும். இஸ்லாத்தை பரப்பும் பணிக்காக தாம் சம்பாதித்த தூய்மையான பணத்தைக் கொண்டு அவர் செய்ய முடியாதிருப்பதை எண்ணி ஏங்க வேண்டியதாய் இருக்கிறது. அத்தகைய சேவைகளை என்னாலும் செய்ய முடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அவருடைய உள்ளத்தில் மார்க்கத்திற்கு உதவி

புரிவதற்கான உணர்வு நிரம்பியருப்பதை காணும் போது இறைவனின் வல்லமையின் தோற்றம் என் கண்களுக்கு முன்னால் வருகிறது. இறைவன் தனது உண்மையான அடியார்களை தன் பக்கம் ஈர்க்கின்றான்.

இறைவனுக்கும் அவனது தூதருக்கும் அடிபணிவதன் மூலம் எவையெல்லாம் செய்ய வேண்டுமோ அவையெல்லாம் செய்வதற்கு எல்லா வேளைகளிலும் தனது சேமிப்புத் தொகை அனைத்தையும் செலவிட்டுத் தனது உடல் வலிமை, வகை, வளம் ஆகியவற்றையும் அர்ப்பணிக்க அவர் ஆயத்தமாயிருக்கின்றார். என் வழியில் செல்வத்தை மட்டுமல்லாமல் அவரது உயிரையும் செல்வாக்கையும் சுய கவுரவத்தையும் கூட என் பொருட்டு தியாகம் செய்வதற்கு அவர் தயங்க மாட்டார் என்ற விசயம் எனக்கு நன்றாக தெரியும். அவர் மீதுள்ள நல்லெண்ணத்தினால் மட்டும் நான் இதைக் கூறவில்லை. மாறாக, அவரைப் பற்றிய எனது அனுபத்திலிருந்து இதனை நான் கூறுகின்றேன். நான் மட்டும் ஒப்புக்கொண்டிருந்தால் அவர் தன்னிடமுள்ள ஒவ்வொரு பொருளையும் கைவிட்டு விட்டு இங்கு என்னோடு வாழ்வதற்கு வந்திருப்பார். அதாவது, ஏற்கனவே ஆன்மீக ரீதியில் எனக்கருகே இருப்பதைப் போன்று உடலாலும் அவர் எனக்கருகே வந்திருப்பார்.

அவரது கடிதத்திலிருந்து சில வரிகளை என் வாசகர்களுக்காக நான் எடுத்துத் தருகிறேன். பேரா என்ற ஊரைச் சேர்ந்த எனது அன்பிற்குரிய சகோதரர், ஜம்மு காஷ்மீர் அரசின் மருத்துவர் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் எவ்வளவு தூரம் நேசத்திலும் வாய்மை தவறாத பண்பிலும் முன்னேறி இருக்கிறார் என்பதை அதன் மூலம் அவர்கள் முடிவு செய்து கொள்ள இயலும். இதோ அந்த வரிகள்:

எனது எஜமானரே! வழிகாட்டியும், தலைவருமானவரே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு. அன்புள்ள வழிகாட்டியே! என்னுடைய பிரார்த்தனை என்னவென்றால் நான் தங்களுடைய முன்னிலையில் எப்போதும் இருந்து வர வேண்டும். இக்காலத்தின் சீர்த்திருத்தவாதி எவற்றைக் கற்பிப்பதற்காக நியமிக்கப் -பட்டிருக்கிறாரோ அவை ஒவ்வொன்றையும் நான் கற்றுக் கொள்ள வேண்டும். எனக்கு அனுமதி தந்தால் நான் என்னுடைய பதவியை ராஜினாமா செய்து விட்டு இரவும் பகலும் தங்களின் குரலுக்குச் செவிசாய்ப்பவனாக இருப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றேன். அல்லது எனக்கு தாங்கள் கட்டளையிட்டால் உலக தொடர்பை விட்டு விட்டு நான் உலகம் முழுவதும் சுற்றி வந்து மக்களை உண்மையான மார்க்கத்தின்பால் அழைப்பேன். என்னுடைய உயிரை விடும் வரையில் நான் இவ்வாறே தொடர்ந்து செய்து வருவேன். தாங்கள் காட்டும் வழியில் என்னை நானே அர்ப்பணிக்கின்றேன். என்னிடமுள்ள எதுவும் என்னுடையதல்ல. அது தங்களுடையதே.

மதிப்பிற்குரிய தலைவரே! வழிகாட்டியே! மார்க்கத்தைப் பரப்புவதற்காக என்னுடைய முயற்சியிலான எல்லா சம்பாத்தியமும் செலவிடப்படுமானால் எனது வாழ்வின் குறிக்கோள் நிறைவேறிவிட்டதாக நான் கருதுவேன் என்று நான் உண்மையாக கூறுகின்றேன்......

தங்களின் மீது நான் கொண்டுள்ள மதிப்பு ஃபாரூக்குடைய மதிப்பை ஒத்ததாகும். இந்நோக்கத்திற்காக என்னிடமுள்ள யாவற்றையும் தந்து விடுவதற்கு நான் ஆயத்தமாயிருக்கிறேன். என்னுடைய மரணம் உண்மையான விசுவாசம் மிக்க நம்பிக்கைக்குரிய நல்லடியார்களின் மரணமாக இருக்க தாங்கள் துஆ செய்யுங்கள்.

மவ்லவி சாஹிப் அவர்களின் உண்மையும் தைரியமும் கருணையுடன் நடந்து கொள்வதும் நேர்மையும் அவரது பேச்சில் இருந்து வெளிப்படுவதை விட அவரது செயல்களிலிருந்தும் மனத்தூய்மை மிக்க தொண்டுகளிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அன்பு மற்றும் உளத்தூய்மை ஆகியவற்றின் முழுமையான உணர்வுடனுன் தனது அனைத்தையும் இவ்வழியில் அர்ப்பணம் செய்து விடுவதையே அவர் விரும்புகின்றார். தேவையான அவசியமான பொருட்களைக் கூட இதே வழியில் அர்ப்பணிப்பதற்கு அவர் விரும்புகின்றார். அவரது ஆன்மாவில் உள்ள அன்பின் வேகமானது அவரது சக்தியை விட அதிகமாக செயலாற்றும்படி அவருக்கு போதிக்கின்றது. அவர் எல்லா நேரமும் ஒவ்வொரு நொடியும் தொண்டு செய்வதில் ஈடுபட்டுள்ளார்.

(ஃபதஹ் இஸ்லாம் ரூஹானி கஸாயின் பாகம் 2, பக்கம் 25,27)

**ஆட்சேபனை செய்த ஒருவரின் கூற்றுக்கு பதில் கூறும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:**

செயலளவில் இந்த ஜமாஅத்தில் இருப்பவர் ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் ஒருவர் மட்டும் தான் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். மற்றவர்களிடம் இந்த இந்த குறைகள் உள்ளன என்று அஹ்மதிகளின் எதிரியாகிய நீங்கள் கூறுகின்றீர்கள். இந்த இட்டுகட்டிற்கு நீங்கள் என்ன பதில் கூறப்போகிறீர்கள் என்பது எனக்கு தெரியாது. குறைந்தபட்சம் ஒரு லட்சம் பேர் உண்மையான உள்ளத்துடன் என் மீது ஈமான் கொண்டவர்களாக எனது ஜமாஅத்தில் உள்ளனர் என்பதை இறைவன் மீது ஆணையிட்டு என்னால் கூற முடியும். அவர்கள் நற்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். விசயங்களைக் கேட்கும் போது அவர்கள் எந்த அளவு அழுகின்றனரென்றால் அதனால் அவர்களது கழுத்து நனைந்து விடுகிறது. என்னிடம் பைஅத் செய்த ஆயிரக்கணக்கான மக்களிடம் நான் எப்படிப்பட்ட மாற்றத்தை காண்கின்றேனென்றால் அவர்களை மூஸா நபி உயிருடன் உள்ள காலத்தில் அவர் மீது ஈமான் கொண்டவர்களை விட ஆயிரம் மடங்கு சிறப்புமிக்கவர்களாக கருதுகின்றேன். அவர்களது முகங்களில் சஹாபாக்களின் பற்றையும் நன்மையின் ஒளியையும் காண்கின்றேன். எங்காவது ஒரு சிலர் இயல்பாகவே அவரிடம் உள்ள குறைபாட்டின் காரணமாக நன்மை செய்வதில் குறைவானவாராக இருந்தால் அப்படிப்பட்டவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர்.

**தொடர்ந்து கூறுகிறார்கள்:**

என்னுடைய ஜமாஅத்திலுள்ளவர்கள் நன்மையில் எந்த அளவு முன்னேறியுள்ளனர் என்றால் அதை கூட ஒரு அற்புதமாகவே நான் காண்கின்றேன். ஆயிரக்கணக்கான மக்கள் உள்ளத்தால் இவ்வழியில் தங்களை அர்ப்பணித்துள்ளனர். இன்று அவர்களிடம் உங்களது எல்லா செல்வங்களை விட்டும் நீங்கள் அகன்று விடுங்கள் என்று கூறப்பட்டால் அவற்றை கைவிட அவர்கள் ஆயத்தமாயிருக்கின்றார்கள். அவ்வாறிருந்தும் நான் எப்போதும் மற்ற நன்மைகளிலும் அவர்களை முன்னேற்றமடையச் செய்ய விரும்புகின்றேன். மேலும், அவர்களது நன்மைகளை அவர்களிடம் கூறவில்லையென்றாலும் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. (*சீரத்துல் மஹ்தி, தொகுதி 1 பக்கம் 125*)



## தூய நல்லடியார்களின் சந்ததிகளின் பொறுப்பு

இவை நான் எடுத்து வைத்த சில நல்ல முன்மாதிரிகளாகும். ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது அன்பான ஜமாஅத்தில் அப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான முன்மாதிரிகள் சிதறிக் கிடக்கின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது காலத்தில் இப்படிப்பட்ட நபர்கள் இலட்சக்கணக்கில் இருப்பதை குறிப்பிட்டிருந்தார்கள். இப்போது இவர்கள் இன்னும் பெருகி விட்டனர். இவர்கள் தங்களது மனத்தூய்மை, தியாகம் ஆகியவற்றின் மிக உயர்வான அளவுகோலை நிலைநிறுத்தியுள்ளனர். இன்னும் பலர் இருக்கின்றனர். இவர்களின் நம்பிக்கை, மனத்தூய்மை, உறுதியான தொடர்பு, நேசம், கட்டுப்படுதல் ஆகியவை தொடர்பான சம்பவங்கள் நம் முன்னால் வரவில்லை. இவர்கள் அமைதியாக வந்தனர். அன்பு, உறுதியான தொடர்பு, கட்டுப்படுதல் ஆகிவற்றின் முன்னுதாரணங்களை பதிவு செய்து விட்டு அமைதியாக சென்று விட்டனர். அப்படிப்பட்ட தூய்மையானவர்களின் சந்ததிகள் தங்களுடைய முன்னோர்களின் அப்படிப்பட்ட சம்பவங்களை எழுதி ஜமாஅத்திடம் பாதுகாப்பாக வைக்க வேண்டும். தங்களது குடும்பங்களிலும் கூட இந்த சந்ததிகளிடமும் நமது பெரியோர்கள் இப்படிப்பட்ட நல்லுதாரணங்களை நிலைநாட்டியுள்ளனர் என்பதை கூறிக் கொண்டிருங்கள். இவற்றை நாமும் தொடர்ந்து நிலைநாட்ட வேண்டும் என்று கூறுங்கள். எவ்வாறு நமது முன்னோர்கள் தொடர்பாக நாம் அவர்கள் எவ்வாறெல்லாம் தியாகங்கள் செய்து காலத்தின் இமாமின் துஆக்களுக்கு வாரிசாகி விட்டார்கள் என்பதில் பெருமை கொள்கின்றோமோ அவ்வாறே இன்னும் அந்த துஆக்களை அள்ளிச் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

வாருங்கள்! இந்த நம்பிக்கைகள், மனத்தூய்மை, கட்டுப்படுதல், நேசம் ஆகியவற்றின் நல்லுதாரணங்களை நிலைநாட்டியவாறு செல்லுங்கள். அல்லாஹ்வின் அருள்களின் வாரிசாகிக் கொண்டே செல்லுங்கள்.

நன்றாக நினைவில் கொள்ளுங்கள்! இந்த நல்லுதாரணங்களை நிலைநாட்டப்படும் வரை பூமியின் எதிர்ப்புகள் நமக்கு எவ்வித சீர்குலைவையும் ஏற்படுத்த முடியாது. விண்ணுடன் உங்களுக்கு உறுதியான

தொடர்பு ஏற்பட்டு விட்டால் பூமியிலுள்ளவர்களால் உங்களை ஒன்றும் செய்ய முடியாது என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சொற்றொடரை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

**அஹ்மதிய்யத் ஏற்படுத்தியுள்ள ஆன்மீக மாற்றங்கள் தொடர்பாக அஹ்மதியல்லாதரவர்களின் ஒப்புதல் வாக்குமூலம்:**

இந்த மாற்றங்களை மற்றவர்களும் கண்டு அவற்றை ஏற்றுக் கொள்ளவும் செய்தனர். எவ்வளவு தெளிவான மாற்றங்களாக அவை இருந்தனவென்றால் அவற்றை ஏற்றுக் கொள்ளும் கட்டாயத்தில் அவர்கள் இருந்தனர். காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்ட அஹ்மதிகளிடம் பல மாற்றங்கள் உருவாகியுள்ளன என்பதை ஏற்றுக் கொண்டனர். நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று திரும்ப திரும்ப கூறுவது அவர்களது நடைமுறையாகி விட்டது. எவ்வாறிருப்பினும் அவர்கள் ஏற்றுக் கூறியுள்ள சில நல்லுதாரணங்களை உங்கள் முன் வைக்கிறேன்.

**அல்லாமா இக்பால் எழுதுகின்றார்:**

பஞ்சாபில் இஸ்லாமிய வாழ்க்கையின் சரியான முன்னுதாரணம் காதியானி பிரிவு என்று அழைக்கப்படும் இந்த ஜமாஅத்தின் வடிவத்தில் வெளிப்பட்டுள்ளது.

(கவ்மி ஸிந்தகீ அவ்ர் மில்லதே ஃபெய்ஸா பர் எக் உம்ரானி நஸர் பக்கம் 84)

**அல்லாமா நியாஸ் ஃபதஹ்பூரி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாக எழுதுகின்றார்கள்:**

அவர் இஸ்லாமிய நல்லொழுக்கத்திற்கு மீண்டும் உயிரூட்டினார் என்பதை எவரும் மறுக்க முடியாது. அவர் எப்படிப்பட்ட ஜமாஅத்தை உருவாக்கிக் காட்டினாரென்றால் அவர்களது வாழ்கையை நாம் நிச்சயமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் நிழல் என்று கூறலாம்?

(முலாஹிஸாத்தே நியாஸ் ஃபதஹ்பூரி பக்கம் 29)

**தில்லியிலிருந்து வெளிவரும் STATESMAN பத்திரிகையின் ஆசிரியர் எழுதுகின்றார்:**

காதியானின் புனித நகரில் ஒரு இந்திய தூதர் பிறந்தார். அவர் தனது சுற்றுப்புறத்தை நன்மையாலும், உயர்வான நல்லொழுக்கத்தாலும் நிரப்பி



விட்டார். இந்த நற்பண்புகள் அவரை ஏற்றுக் கொண்ட, இலட்சக்கணக்கான மக்களின் வாழ்விலும் பிரதிபலித்திருக்கின்றது.

***(Statesman-Delhi, February 12, 1949)***

**அப்துர் ரஹீம் அஷ்ரப் ஆஸாத் அவர்கள் அஹ்மதிய்யா இயக்கத்தில் ஏற்பட்டுள்ள புரட்சி தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்.**

இந்த புதிய மார்க்கத்திற்காக தனது சகோதரர்களை விட்டும் பிரிந்துள்ள ஆயிரக்கணக்கானோர் உள்ளனர். இவர்கள் உலக இழப்புகளை சகித்துக் கொண்டார்கள். மேலும் பொருளையும், உயிரையும் தியாகம் செய்தனர். காதியானிகளில் பெரும்பாலார் மனத்தூய்மையுடன் அதனை உண்மை என்று கருதி அதற்காக உயிர், பொருள், உலக வசதிகள், உலக தொடர்புகள் அனைத்தையும் தியாகம் செய்துள்ளனர் என்பதை நாங்கள் திறந்த உள்ளத்துடன் ஏற்றுக் கொள்கிறோம். இந்த மக்களில் சிலர்தான் காபூலின் மரண தண்டனையை லப்பைக் (ஆஜரானேன்) என்று கூறி ஏற்றுக் கொண்டனர். வெளிநாடுகளிலும் மிக தொலைவிலுள்ள பகுதிகளுக்கும் சென்று ஏழ்மையில் தங்கள் வாழ்க்கையை கழித்தனர்.

(அல்மன்பர் லானல்பூர் வார இதழ் 2, மார்ச் 1952 பக்கம் 10)

இவ்வாறெல்லாம் இருந்தும் கூட இந்த மக்களுக்கு இந்த ஜமாஅத்தை ஏற்றுக் கொள்ளும் பாக்கியம் கிடைக்காதது அவர்களது துர்பாக்கியமாகும். அவர்கள் இவ்வாறு ஏற்றுக் கூறியிருப்பது நமது நம்பிக்கையை வலுவூட்டுகிறது. அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ் நமது ஈமானிலும், உறுதியிலும் மேலும் வளர்ச்சியை ஏற்படுத்துவானாக! அவற்றை அதிகமாக்குவானாக! மேலும் பைஅத் உடன்படிக்கையிலுள்ள மகிழ்ச்சியுடன் தனது, கடமை என்று கருதி அதனை நிறைவேற்றுபவர்களாக இறைவன் நம்மை ஆக்குவானாக!. அல்லாஹ் நம்மை அவனது திருப்தியின் வாரிசாக்குவானாக! ஆமீன்.

(17.10.2003 அன்று இலண்டனிலுள்ள மஸ்ஜித் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள்
நிகழ்த்திய ஜுமுஆ பேருரையிலிருந்து)